ஸ்ரீ:

# ஸ்ரீ வரமங்கைக் கலம்பகம்.

(குறிப்புரையுடன்)

927

ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து ஹைஸ்கூல்
தமிழ்த்தலைமையுபாத்தியாயரும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்தினங்கத்தினருளொருவரும்,
சேற்றூர் சம்ஸ்தான வித்துவானும்
அப்புவையங்காரென்று பெயர்விளங்குகின்றவருமாகிய

கவிபூஷணம்

## நரசிம்மாசாரியார்

இயற்றியது.

ஸ்ரீ வானமாமலை மடத்தினது
பொருளுதவியால்

MADURAI UNIVERSITY LIBRARY
9 OCT 1967

மதுரை ஹரிஸமய திவாகரம் பிர...
பதிப்பிக்கப்பெற்ற...

1933

ஸ்ரீ:



ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
சின்னக்கலியன் ராமாநுஜ ஸ்வாமி.
(ஸ்ரீ வானமாமலை மடம் 25-வது பட்டம்)

MADURA
MADURA

ஸ்ரீ:



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# உரிமையுரை.

திருவளர்தாமரைத் திருமுகமங்கையர்
கருவிழிகளைக்கடப் பருங்கரும்வலையென
இகன்மிகுவாளை யகம்மிகவெருவிப்
புகலரும்பெருஞ்சீ ரகல்வான்பாய
ஆகந்தகர்ந்துதண் மாகமதிசிந்தும்
அமிழ்ததாரையை விமிதமுற்றருந்தி
நளினமெல்லமளியில் வெளியசிறையன்னம்
கண்டுயில்கொள்ள வண்டுதாலாட்டுஞ்
சேற்றுத்தாமரையெனச் சாற்றுந்தடாகமும்
அற்பகலில்லாக் கற்பகநாட்டின்
மேவாதிதேயர் மூவாமருந்தினும்
இன்சுவைத்தென்ன நன்குமதித்தருந்தி
யொண்மனங்களிக்க விண்வரைநிவந்த
கிளைகளிலிருந்து வளைவெரிந்மந்தி
தீம்பழமுதிர்க்கு மாம்பொழிற்றொகுதியும்
சூழ்ந்துவிளங்கவிண் போழ்ந்துயர்ந்தோங்கும்
மாடமாளிகைகள்பொற் கூடமாமேரு
ஒன்றெனல்பொய்யே யென்றுகண்டோர்சொலப்
பொன்னினுநவமணி தன்னினும்புனைந்து
பற்பலபொலியும் பொற்பமைந்துளதும்

பொன்னகரத்தோர் பொன்னும்வெள்ளியும்
மன்னிவாழ்கின்றனர் நன்னிரிந்நகரினிற்
பற்பலரென்ன விற்பனமிகுந்த
மந்திரவேள்விசெ யந்தணர்வாழ்வதும்
வாயிசையாற்றிசை போயதுமாகிய
வரமங்கைநகரினைச் சிரமங்கைகோயிலாக்
கொண்டருள்பொழியுங் கொண்டல்வண்ணனும்
தெய்வநாயகன்றன் செய்யதாண்மலர்மேல்
நலம்பலமதிக்கக் கலம்பகமாலை
வனைந்தன்பினோடு புனைந்தருள்பெறுகெனக்
கடையனேனைக் கடைக்கணித்தருளி
நயமிகுகருணையா னியமித்தருளினோன்
அவ்வியன்பதியிற் செவ்வியமடத்தில்
அவ்விராமாநுஜன் றிவ்வியவருளே
ஒருருப்பெற்றுச் சீருற்றிருந்தென
இலகுறுமுனிவர்க டிலகமாகிக்
கலிநலியாவணங் கலிநீருலகை
வலியிற்புரத்தலிற் கலியனிராமாநுஜன்
என்னுநாமம் மன்னுந்தவத்தோன்
ஆதலிலந்த மேதகவோர்க்கே
உரிமையாக் கினனுவந்து
நலம்பலமேவவிக் கலம்பகநூலையே. (க)

MADURAI.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வானமாமலை ஸ்வாமி
ஸாதித்தருளிய ஸ்ரீமுகம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய பூர்வாஸ்ரய வேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யரான், ஸ்ரீமத் ரம்யஜாமாத்ரு யதிவர சரணாம்பு ஸ்ரீவரமங்காஸமேத ஸ்ரீதேவநாயக ஸந்நிதி கைங்கர்ய துரந்தரரான், அகண்ட மஹீமண்டல மஹீபால கோடீரகோடிகடித மணி கிரணகலித பாதபீடயுக்தாசார்யரான், பரம பாஷண்ட ரூக்ஷண விசக்ஷண ராமாநுஜ ப்ரயோஜநாய ஸம்ப்ரதாய நிர்வாஹக ஸ்ரீமத் அஷ்டாக்ஷராதி ரஹஸ்யத்ரய ஜகதுஜ்ஜீவநாசார்யரான், ஸகலவேதாந்த ஸாரார்த்த ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷக ஸம்ரக்ஷித ஸ்ரீராஜஹம்ஸாவதாரரான், ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரகாசார்ய ஸார்வபௌமரான், ஸ்வதந்த்ர ஸ்வதந்த்ரரான், எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வானமாமலை ராமாநுஜஜீயர்.

ஸகலஸத்குண ஸம்பந்நரான ஸ்ரீ. உ.வே. தமிழ் வித்வான் ஸ்ரீவிஷ்ணுவாஸியாருக்கு அநேகமங்களாஸாஸநம்.

உம்முடைய வரமங்கைக் கலம்பகமென்ற ப்ரபந்தத்திலுள்ள ஶப்தார்த்த ரஸாலங்காரங்கள், ரஸபாவங்கள், வ்ருத்த பேதங்கள், முதலான எல்லாவற்றையும் கேட்டு சந்தோஷித்து “ கவிபூஷணம் ” என்ற பெயரால் உம்மை அலங்கரிக்கிறோம்.

இன்னமும் இதுமாதிரியாக ப்ரபந்தங்கள் விண்ணப்பித்துக் கொண்டு பல்லாண்டுபல்லாண்டாக இருக்கவேணுமென்று நம்முடைய அரங்கநகரப்பன் ஸந்நிதியில் ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம்.

1106-ஞ வைகாசிமீ 10உ ஸ்ரீராமாநுஜ.

ஸ்ரீ:

மதுரைச்செந்தமிழ்க்கலாசாலைத் தலைமையுபாத்தியாயரும்
செந்தமிழ்ப்பத்திரிகையாசிரியரும்
மதுரைத்தமிழ்ச்சங்கத்தினங்கத்தினருளொருவருமாகிய

# திருநாராயணையங்கார்

செய்தருளியது

---

## சிறப்புப்பாயிரம்.

### நேரிசையாசிரியப்பா.

சீர்வளர்செய்வள ரேர்வளர்கன்னலின்
ஓங்கிடுஞ்செந்நெலின் வாங்கிடுமொண்கதிர்
பொன்னுலகத்தொளிர் நன்னகரடைந்துநம்
நன்னலமெவைக்கும் மன்னியகாரணம்
கருவிமாமழையெனக் கருதியதற்கு
வேந்தனும்விண்ணக ரேந்தலுக்கன்பொடு
கவரியிரட்டுதல் சிவணநின் றசையும்
நீர்வளநிலவளஞ் சேர்வானமாமலை
யென்னயாவரும் பன்னவிளங்கும்
சிரமங்கையார்வாழ் வரமங்கைநகரில்
திரத்தினகரன்கு ழிரத்தினசாத்துவிற்
பொன்மயமாகிய நன்மணியிழைத்த
பாயிருள்பருகுங் கோயிலினடுவில்
திருமலர்தாமரை மருமலர்மங்கையும்
பொறையுங்கருணையு நிறைநிலமடந்தையும்
வந்திருளோட்டுஞ் சந்திராதித்தரும்
காமரமிசைக்குஞ் சாமரமாதரும்
வானத்தனியாள் சேனைத்தலைவரும்
சுவணவண்ணத் துவணவண்ணனும்
பெருகுபத்திகொள் பிருகுமார்க்கண்டரும்

ஏகாசனத்தினில் வாகாவிருக்க
ஏற்றினன்போற்ற வீற்றிருந்தருளும்
தேவநாயகன்றன் சேவடிமலர்மேற்
குணமுமணியுமாம் மணமுமதுவுங்கொளுங்
கலம்பகமென்னு மிலம்பகம்புனைந்தனன்
அவன்யாரென்னி னவில்வல்கேண்மோ
மல்லிநாட்டினிலவிர் வில்லிபுத்தூரினில்
வந்தவதரித்த வந்தணர்திலகன்
அணிமிகுபுகழ்க்கௌண் டினியகோத்திரத்தான்
உலகினிலுயர்வுற் றிலகிடும்வைணவன்
அருங்கலையனைத்து மொருங்குணர்ந்துரைப்போன்
இரகுநாதாரிய னுரனருள்புதல்வன்
பொன்னிநன்னதியிடை மன்னியகோயிற்
கந்தாடையண்ணன் செந்தாமரைபுரை
இணையடிகளேயே துணையெனவடைந்துளோன்
வடமொழிதென்மொழி திடமுறப்பயின்றுசேர்
செயற்கையறிவோ டியற்கையறிவும்
உலகியலறிவு மிலகுமுளத்தினன்
ஏற்குமுறைப்படி நாற்கவிநவில்வோன்
வில்லிபுத்தூரினில் நல்லிசைமேவிய
ஹிந்துஹைஸ்கூலினிற் செந்தமிழ்த்தலைமை
யுபாத்தியாய னுயர்மதுரைத்தமிழ்ச்
சங்கத்திலகு மங்கத்தினரு
ளொருவன் சேற்றூர் மருவுமாஸ்தான
பண்டிதன்பண்டைநூல் கண்டிதனுரைப்போன்
மதுவைப்பெய்தெனப் புதுவைப்புராணமும்
இதன்முதனூற்குச் சிதகறுதமிழாற்
பொழிப்புரையும்மதன் பழிப்பறுசுருக்கமும்
மீதாந்தகைமைசேர் வேதாந்ததேசிகன்
ஓதாவருளிய கோதாத்துதியின்

நற்பொருளுணர்ந்து பொற்புலஞ்சேர
அத்துவாவாகுந் தத்துவார்த்ததீபிகை
யென்னுமோருரையும் மன்னுமத்துதிக்கு
மொழிபெயர்ப்பெனச்சொலும்வழிநூலாகிய
தோத்திரமாலையு மேத்ததனுரையும்
ஒருதுறைக்கோவையு மருவதன்குறிப்பும்
சித்திரகூடத் துத்திரமுறஞ்சீர்க்
குருமணிதுயிற்றிய திருமணிமன்றெனும்
பேரம்பலத்தில் வீரம்பலமுயர்
எழுதலையரவின் முழுதுலகளிப்பான்
அறிதுயிலமர்ந்தருள் பொறிவாழ்மார்பன்
மாவிந்தைதோய்புயன் கோவிந்தராஜன்
கலம்பகமாலையும் பொலம்பணைப்புதுவைச்
சிலேடைவெண்பாவுஞ் சொலேயந்தாதியும்
பதிற்றுப்பத்தெனத் துதிக்குமந்தாதியும்
செஞ்சொற்பொலியும் பஞ்சரத்தினங்களும்
அதிககம்பீரமாம் பதிகம்பலவும்
முதலாம்பலநூ லிதமாவுரைத்தோன்
உளமுறும்பொறையில் வளமலிகொடையில்
ஒப்புவையங்கா ரொன்றும்,
அப்புவையங்கா ராளரியேறே. (க)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வானமாமலை வித்வான்,

# ஸ்ரீ. உப. வே. சடகோபாசார்யர், அருளிச்செய்தவை.

——(✳)——

ஸ்ரீயத்வி நவ்யவராவபு நிவாஸிநாயதே
ஸ்ரீமந்ந்ருஸிம்ஹவித்வர்ஷாக்ருத வக்த்ருவாக்குள
ஸக்த்யாக்ஷயம்பக்ஷவேதி ருதிரொக்ஷீர்வவ:
ஸ்ருத்வாவிநந்தி தராம்யதிஸாவஹ்ஸள: (௧)

ந்ருஸிம்ஹார்ய க்ருதம் வித்ரும் வரஶம்கா க்ஷயம்பக்ஷ: ।
வித்வர்ஷாம் ஸாநஸாம் ஸொஜெ ஸக்த்யா ஶோதம்வ்ருப ஸ்ருதி ॥ (௨)

ஸத்வத்தாகுணகும்ஹிதா ஸர்வஜ்ஞிதாயம் காரஶயத்ருஹி: ।
திஷ்டாஶெஷ: வதவிஸ்ருஷெர ஸ்வஸரஸெஸாநந்தோத்வநதி ।
ஸஷ்ட்யாஷிதே வ்ருஹவெவபஸ்ய கவிதாஸவத்தாநு ஸகோஷஷ்டதி ।
ஸஷாதஸ்ய ந்ருஸிம்ஹவயவித்வர்ஷ: ஜீபாதேக்ருதிர்த்ராவிஶ ॥ (௩)

வாநாத்ரி ஸ்யவாக்தஸ்ய ஶம்கொவெந யீதா ।
ஸிவிதா வத்யர்ஷ்வேயம் ஹ்ருஷ்யாஶ்ஶாவநவதிகா ॥ (௪)

---

MADURAI UNIVERSITY LIB
MADURAI.

ஸ்ரீ:

# ஸ்ரீவரமங்கைக் கலம்பகம்.

## காப்பு.

### நம்மாழ்வார்.

சீரார்ந்ததென்குருகூர்ச்சிந்தகத்திடைச்சேர்ந்தருளிப்
பேரார்ந்தமுச்சுடர்க்கும்பெயராவகப்பேரிருளோட்
டோரார்ந்தவாய்மொழியாங்கதிராயிரமேய்வகுளத்
தாரார்ந்தபாற்கரன்வந்துவந்தென் னுள்ளஞ்சார்ந்தனனே (௧)

### ஆழ்வார்கள்

பொய்கைக்குரிசின் முதன்மூவர் மாறன்புதுவையர்கோன்
மெய்கைக் கொடொண்டரடிப் பொடிபாணன் வியன்மழிசை
மய்கைக்கும்வஞ்சிமன்மங்கைமன்கோதைமதுரகவி
யுய்கைக்குயர்நெறிகாட்டிவர்தாளெற்குறுந்துணையே (௨)

### எம்பெருமானர்

மயக்குமயன்மதமாமதமாவின்மதமடங்க
நயக்குநியாயமுழக்குறுங்கோளரிநாவலவர்
வியக்கும்வயிணவப்பைங்கூழ்வளர்த்திடுமேகமுல
குயக்குளிர்பூம்பொழிற்பூதூரில்வந்தருளுத்தமனே (௩)

### மணவாளமாமுனிவன்.

குணவாளராகுமெதிராசர் தாண்மிசைக்கொண்டபத்தி
தணவாதவுள்ளத்தன்மாறன்மறைப்பொருடண்ணரங்கர்
பணவாளரவணைநின்றுற்றுக்கேட்கப்பணித்தவத்தன்
மணவாளமாமுனிவன்மலர்ப்பாதம்வணங்குதுமே (௪,

## ஸ்ரீவரமங்கைமா முனிவன்

சீர்கொள்வரமங்கைவாழ்தெய்வநாயகன்சேவடிமேல்
நார்கொள்கலம்பகமென் னும்ப னுவனவில்வதற்குப்
பேர்கொள்பெருந்துணையாகவென்னெஞ்சிற்பிறங்கிடுமால்
ஏர்கொள்கலியனிராமா நுசன் றனிணையடியே (௫)

## ஆசார்யன்

நந்தாமனவிருள் பாற்றும் பொலஞ்சுடர் நன்மைமிக
வந்தாதரிக்குந்தனித் துணை யெம்முத்தமாங்கம்புனை
யந்தாதிவருமலர் மாலிகையருளே வடிவாஞ்
செந்தாமரைக்கண்ணன் கந்தாடையண்ணன்றிருவடியே (௬)

## கலைமகள்

எள்ளிய மறுவற்றின்பமுமதனோடியையுமுப்பயனையும்பயக்கும்
ஒள்ளிய கலைகளெவையுமுற்றென்று மோங்கிநம்மதி நலம் பெ
[றுவான்
தெள்ளிய கவிஞரினந்தினந்துதிக்கத்தேவரும் யாவரும்மதிக்க
வெள்ளிய கமலமலரில் விற்றிருக்கும் விமலையைவிருப்போடும்
[பணிவாம் (௭)

## அவையடக்கம்

தாமரைமங்கைதரைமங்கைமாரொடுதன்மருங்கில்
சாமரைமங்கையரையுங்கொள்வானசயிலத்திறன்
மாமறையாம் மகிழ்மாறன்புனை கவிமாலையுடன்
தோமறையாவென்கவிமாலையும்புயஞ்சூடினனே (௮)

---

## நூல்

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

#### தரவு

திருமருவுமருமலர்வாழ்செவ்வியசெங்காலனமும் (1)
மருமருவுகுழற்பொழிலாம்வண்ணப்பசுங்கிளியும்
கார்கண்டமஞ்ஞையெனக்கண்ணுமனமுங்களித்துச்
சீர்கண்டமுகமலர்ந்துதிகழவிருமருங்கிருப்ப
மலர்தலைமாநிலம் படைப்பான் மலரயனைத்தோற்றுவிக்க
அலர்தலையுற்றவிருந்தியரவிந்தமணிகிளர
பொருமலையடர்த்துவெற்றிப்பூந்தெரியல்புனையுரத்துக்
கருமலைமேற்செங்கதிர்போற்கௌத்துவமாமணிபுனைந்தோய் (க)

செம்பவள மணிவாயிற்சிறுமுறுவனில வெறிப்ப
விம்பவளமுழுமதியில் வீறுதிருமுகம் விளங்க
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் வேறெவர்க்கும் வேந்திவனே
திண்ணமென மணியிழைத்த செம்பொனினீண்முடி துலங்க
வந்தமரர் தொழுதேத்தவரமங்கை நகரிலவிர்
நந்தவர்த்தனம்மென்று நவமணிவிமானத்துள்
பன்னருஞ்சீராழி சங்கிற்பானுமதிபாலொளிர
மின்னணிகொண்மேகமென மேவிவீற்றிருந்தருள்வோய் (உ)

#### ஈரடித்தாழிசை.

ஆக்குமழிக்குந்தொழில்கட்கயனரனையாக்கிநிலங்
காக்குறுநீகூனிசொல்லாற்கானகங்கடந்தனையே (க)

அகிலவுலகுக்குமரசாகிமுடிபுனையுன்முடி
விகிதமெனமுனிமனைக்குவிறகுசுமந்ததுவியப்பே (உ)

சுகன்முன்னும்முனிவரர்க்குந்தோன்றாநீதொடுகழற்காற்
குகன் முன்னுமுனந்தோன்றிக் கொண்டனை தோழமை
[மகிழ்ந்தே (௩)

பத்திரமாகும்பரமபதமதில்வீற்றிருந்தருணீ
சித்திரகூடத்திளவல்செய்குடிலைவிரும்பினையே (௪)

அனைவருக்கும் புகலிடமா யபயதானஞ்செயுநீ
முனைவருணனருள்வேண்டிமுளிபுல்லிற்கிடந்தனையே (௫)

வையகமும்வானகமும் மலர்ந்தளக்குந்திருவடியென்
மையகத்து வாழ்ந்தருளும் மாண்புநுவலற்பாற்றே (௬)

## ஈரடியராகங்கள்

சதபதிமகவொரு சரமதிலொழிதர
நிசிதொலைகதிர்மகனிலைபெறவருளினை (௧)

விதிமுதலியவுயர் விபுதருமுறலருங்
கதியினையுறவொருகழுகினையருளினை (௨)

மொழிதரு பொருளவைமுழுவதுமுடைமையி
னொழிவினைவிழைவினையொழியுயர்நிலையினை (௩)

எவர்களுநலமுற விருமுதுகுரவரில்
அவரவர்கருதியவவையருளுரிமையை (௪)

## ஈரடித்தாழிசைகள்.

குரக்கரசாதியர்கூற்றுங்கொள்ளாதருள்சுரந்தவ்
வரக்கரரசுக்கபயமளித்தருகிருத்தினையே (௧)

பத்தவிலோசனத்தாயர் பலொராடுங்கூண்டுண்டு
பத்தவிலோசனங்களிக்கும்படிய வருட்டிளைத்தனையே (௨)

உலகமெலாநின் னுடைமைநீயுடையோனெ னுமுறைமை
இலகவிகல்கடிந்துநலமிழைத்தவற்றைப்புரந்தனையே (௩)

காரியமாய்க்காரணமாய்க் கரந்தெங்கும் பரந்துளநீ
பாரிலெவருங்காணப்பார்த்தன்றேருர்ந்தனையே (ச

நாற்சீரடி யம்போதரங்கங்கள்

(பேரெண்)

சங்கொடுசக்கரந்தாங்குகையினை
மங்குலைநிகர்த்தொளிவாய்ந்தமெய்யினை (க)

அன்றமுதத்தொடுமார்ந்தநெய்யினை
குன்றலில்பத்திமைகொண்டமொய்யினை (உ)

முச்சீரோரடி யம்போதரங்கங்கள்

(இடையெண்)

விரைகமழ்துளவமிலைந்தனை (க)
வெகுள்களிறருளமலைந்தனை (உ)
தரைபுகழ்புதுவையிவர்ந்தனை (ங)
தருவரிறுறவிகவர்ந்தனை (ச

இருசீரோரடி யம்போதரங்கங்கள்

(சிற்றெண்)

(க) மறையமறைந்தனை (உ) பொறைநிறைந்தனை
(ங) வரையெடுத்தனை (ச) திரைதடுத்தனை
(ரு) நிறைகொழித்தனை (சு) குறையொழித்தனை
(எ) நிரைபுரந்தனை (அ) தரைகரந்தனை

எனவாங்கு (தனிச்சொல்)

இவை முப்பத்து மூன்றடியாசிரியச்சுரிதகம்

அறைகடலெசுளித்தவவுணனைமாய்த்து (1)
மறைகொணர்ந்தயற்கருண்மச்சரூப (2)

அடைதருமமருக்கமுதளிப்பதற்காக் (3)
கடைவரை சுமந்தகமடவடிவ (4)
கடல்புகுங்கனகக்கண்ணனை வீட்டிப் (5)
புடவியையிடந்தபுனிதவராக (6)
பொன்னனுரத்தையும் பொருசரபத்தையும் (7)
கொன்னகத்தால் வகிர்கோளரியுருவ (8)
சேவடிசிவக்க மாவலிபாற்போய் (9)
மூவடியேற்ற முகில்புரைவாமன (10)
மூடாமரசரை மூவெழுதலைமுறை (11)
கோடரிகொடுதடி குரோதமார்பார்க்கவ (12)
நலங்கிளர்ந்தோங்கி நானிலந்தழைக்க (13)
இலங்கையையழித்த விருஞ்சிலையிராகவ (14)
சங்கையில் வன்கணர்த்தடிந்துலகோம்ப (15)
அங்கையிலலங்கொள்சங்கவண்ண (16)
தனையே பரமெனச்சகலருமுணர்ந்துய (17)
வினைதீர் கீதையைவிரித்தருள்கண்ண (18)
துட்டரையழித்துச் சிட்டரையளித்துக் (19)
கட்டறனிறுவியகற்கி மூர்த்தி (20)
ஆரியவெந்தமை யாட்கொண்டருளெனச் (21)
சீரியர் போற்றிடுந்தெய்வநாயக (22)
வாழிவாழி மாதவ வாழி (23)
பூவடிவாகின் சேவடியிணைக்குத் (24)
தாளுந்தடக்கையுந்தகவுறக்கூப்பித் (25)
திக்குநோக்கித் தெண்டனிட்டு (26)
வினையினேன் வேண்டிடும்மெய்வரம் யாதெனிற் (27)
பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமெவ் (28)
வழுக்களுங்குழூஉக்கொளுமிழுக்குடையாக்கையு (29)
மினியானுரும்நின்னிணையடிகளுக்கே (30)
தொண்டுசெய் தொண்டர்தந்தொண்டனா வாக்கித் (31)
தொல்லைவினைகளைப்போக்கிக் (32)
குற்றேவல்கொண்டருள் கூறென்பதுவே (33)

## வெண்பா

பதுமாதனத்தன்பதுமாதனத்தன்
மதுமாதனத்தன்வனத்தன்—விதுமான்
சிரமங்கைக்கொண்டலைநோய்தீர்த்தவன்னென்று
வரமங்கைக்கொண்டலையோர்வார் (உ)

## கட்டளைக்கலித்துறை

ஓராயிரந்தமிடைகான் சென்றென்னச்செலும்பர்க்கிறை
சீராயிரந்தமில்பேரின்பவீட்டினிற் சேர்த்தருளும்
பேராயிரந்தமிலொன்றேனு மன்போடுபேசுகிலீர்
ஊராயிரந்தமிழ்துக்குழல்வீரெங்ஙனுய்குவிரே (௩)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

குவிதனத்தாராயிருந்துங்கொடுத்துண்ணுமாக்கடமைக்குறித்துப்பாடி
யவிதனத்தாராய்வின்றியழியாமலுன்றனிணையடிகட்கேதுங்
கவிதனத்தாராவன்பாற்கவிபாடியுய்யவருள்கமலப்பூமின்
புவிதனத்தாரார்மன்றல்கமழ்புயத்தாய் வரமங்கைப்புனிதமாலே (௪)

## எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்த விருத்தம்

புனிதருணயக்குமொருகருமமு முயற்றிலன்மெய்புகலு மறையுட்
பொருள்கொளேன்
துனிதருதனத்தி விளமகளிர்கடனத்தின்மிகு சுகமுளதென்க்
கருதினேன்
கனிதருமுளத்தொடுணையொருபொழுது நத்திலனுய்கதிநினகடைக்க
ணருளே
இனிதருளிநற்புகழ்கொள்ககனசயிலத்தலைவவெவர்களும் வியப்
படையவே (ரு)

## எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்த விருத்தம்

வியப்புற்றபோதனரியெழிற்பற்பபாதமென மிகப்பத்தியோடுகழுநீர்
பெயப்பெற்ற வேணியவளிடத்துற்ற வேணிதுதிபெறச் சக்ரபாணி
யுறையூர்

நயப்புற்றநாகர்நகரிதற்கொக்குமோவிலெனநகைத்திட்டதோ
வெனமினர்
செயப்பொற்பதாகைபொலிபொருப்பொத்தமாடமலிதிருப்பெற்ற
நாகநகமே (சு)

### வெண்பா (திருவடி வகுப்பு)

நகமடர்கானின்னடந்தநாகநடித்த
செகமளந்தவென்சிந்தைசேர்ந்த—சுகமலிதோ
தாத்திரியார்திருத்தாள்வினையார்ந்தார்மா
தாத்திரியார்திருத்தாள் (எ)

### கட்டளைக்கலித்துறை

திருத்தியருக்கும்பொருளுக்கும்பூமிக்குந்தீயவஞ்சக்
கருத்தியருக்குமலைந்துமலைந்துகடுஞ்சினங்கொண்
டருத்தியருக்கும் வினைசெய்தருநரகம்மடைவீர்
இருத்தியருக்கும்வான்மலைமாலையெண்ணீரிதென்னே (அ)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்

### (குருகுவிடு தூது)

என்கண்மிகவன்புடையபெண்கண்மனமுந்தளரவென்
பகைவர்கண் குளிரவே
மன்கவலைவிஞ்சியனைநொந்தழலவிந்தவிதம்வன்கண்மதனன்கணைகளாற்
புன்கணுறும்வன்கொடுமையென்செயலைமின்குலவுபொன்சிறைய
வெண்குருகுகாள்
பொன்கலையர்தண்டுளவர்விண்சபிலவண்புரியர்பொன்செவி
சொலுந் தொழுதபோ (கூ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தொழுங்குலவேதியர்க்கருளாற்கோடிசூரியர்களைப்போற்றுலங்கி
விண்ணின்
ஒழுங்குறவேய்பேரொளியைத்தோதாத்ரிநாயகனையும்பர்கோனை

யழுங்குபிறவிக்கடனின்றெழுந்துவரவழிதெரியாதழுந்துநாயேன்
மழுங்குமனத்திடைகண்டேன்மகிழ்கொண்டேன்துயர்விண்டேன்
வணங்கிமாதோ (ம)

## முப்பத்திரண்டுசீ ராசிரியவண்ண விருத்தம்

### (புயவகுப்பு) முதலடி

மாதங்கனுதியர்தமாதங்கமோடிவிட
மாவம்புராசிவரையிட்டுக்கடைந்தன
மாமைந்தனுரைநலிவோன்விந்தநாகநிகர்
மார்பந்தனுதுகிரைநட்டுப்பிளந்தன
மாமங்கையார்நுதலேயேயுங்கோலொவிதென
மாதங்கனுர்சிலேயொடித்துக்கிளர்ந்தன
வாய்தந்தவார்சிலேயிலேவொன்றையேவியெதிர்
வாதஞ்செய்தோன்செயறமுற்றக்கவர்ந்தன.

### இரண்டாமடி

ஏதங்களேபுரியமேலுந்துமால்கரியி
னேரொன்றுகோடுகடிருக்கிப்பிடுங்கின
ஈரங்கொளாதமலர்பேரங்கமாமலேயை
யீரென்றெணுநனிமுறுக்கிப்பிழிந்தன
ஈடெங்குமோதரியவீரங்கொளோர்குருகி
னேசுண்டவாயதுகிழித்துத்திகழ்ந்தன
ஏர்கொண்டவாயர்மகளார்கொங்கைமேவவெரு
தேழ்முநிந்தியேதழுவிமிக்குப்பொலிந்தன.

### மூன்றாமடி

சீதங்கொள்பாதமலர்சேர்தம்பிநோசெய்யொழி
தேசொன்றுபாதுகமளித்துக்குழைந்தன
தேரொன்றிலேறிவருவானென்றின்மாமதலே
சீர்விஞ்சமாமுடிகவித்துச்சிறந்தன

தேமுந்துகூனியதுகூனந்தவாரருள்செய்
  தேயந்தமான்முலைதிளைத்துப்பிறங்கின
தேனுந்துதார்விசயனேருந்துதேரிவுளி
  சேணிந்துநேருறமினிக்கிச்சிவந்தன.

### நான்காமடி

கோதங்கடாவிடையர்மாமங்கைமார்முலைகொள்
  கோமன்றவார்களபமுற்றுக்கமழ்ந்தன
கோவிண்குலாமலரும்வேதங்களானகுரு
  கூரன்சொலாம்மலருமொக்கப்புனைந்தன
கோலஞ்செயாழிவளைமேலொன்றலாலொளிசெய்
  கோடங்குமால்வரைகளொத்துத்துலங்கின
கோவிந்தன்மாகமலைமேவுந்தயாவுததி
  கூறும்பர்நாதனதுகொற்றப்புயங்களே. (௰௧)

### நேரிசை வெண்பா (பூவைவிடு தூது)

புயங்கநகநாகமனையான்பொற்பார்ந்து
வயங்கநகநாகமலையான் — முயங்கச்
சுவாகதமேநீதூதுசொல்லவவன்பாற்செல்
சுவாகதமேயென்றருளுஞ்சேர்ந்து (௰௨)

### கட்டளைக்கலித்துறை

சோராதவரையரைமாய்ப்பதற்குத் திகிரியினுற்
தேராதவரையரைநொடிக்குண்மறைசேண்சயிலன்
சீராதவரையரைதெய்வநாயகன்சேவடியை
யோராதவரையரையனெஞ்சேதுன்பொருவிலையே (௰௩)

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

பொருமலைவென்றானுந் திருமலைநின்றானும்
போதநிறைந்தானும் வேதமுறைந்தானும்
பெருமலைமத்தானுங் கருமலையொத்தானும்
பீதகவுடையானும் மேதகவுடையானும்

கருணைதழைந்தானு மருணைவிழைந்தானும்
காவினைநட்டானும் மாவினையட்டானும்
வருணனையேற்றானு மருணனைகூற்றானும்
மான்மலைவற்றானும் வான்மலையுற்றானே (௰௪)

## முதன்மூன்றடி நாற்சீராயேனை யடியெண்சீராய்வந்த கலித்தாழிசை

(அம்மானை)

வான்மலையில்வாழ் தெய்வநாயனை வையகத்தை
மான்மழையிற்றண்ணளியால்வாழ்விக்குமம்மானை
மான்மழையிற்றண்ணளியால்வாழ்விக்குமாமாயின்
ஏன்பசியன்பாலனம்போலேற்றுண்டானம்மானை
ஏற்றுணலும்பாலனமே வியம்புவதெனம்மானை (௰௫)

## நேரிசை வெண்பா

அங்கமலக்களைநேரங்கிரிகளைத்தொழுதிவ்
வங்கமலங்களைநேராய்நெஞ்சே—துங்கமலர்
மாதாத்திரியைவலமிடங்கொண்மாயவனைத்
தோதாத்திரியைச்சேர்ந்து (௰௬)

## பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியச்சந்த விருத்தம்

(தவம்)

சேரவரிகாமடவிமேவியிலைகாய்கனிகள்
சேர்சருகயின்றவையொரீஇத்
தீரமொடுதீயினிடையேயுமொருகாலின்விரல்
சேயதரையொன்றிடநிலாக்
கோரமிகவேபுரியுமாதவமதேகவம
கோதவமயர்ந்துழலுவீர்
கோசயிலமாநகரமேவியவிர்வானவர்கள்
கோனடியிறைஞ்சுமினவண்
சாரமுடியாதெனிலுளார்வமொடுவாழுநம
சார்பினிவிருந்துவரதா

தாமரசலோசனதயாசலதிதாசரதி
தானவபுயங்ககருடா
வீரவசுதேவகுமராவிமலகேசவக
வீசபுசரஞ்சனவெனு
வீறுபெறவோதுமியலாதெனினனுனடியை
மேவநினையுங்கடுகவே (௰எ)

சுட்டளைக்கலிப்பா (மடக்கு)

வேயன்மார்பிற்கொண்டாடிருப்பாவையே
மேய்த்ததுந்தண்வளந்திருப்பாவையே
தாயளந்ததமர்மண்டலத்தையே
தளிர்க்கைகொண்டதமர்மண்டலத்தையே
தீயச்சுட்டதொருதரங்கத்தையே
சிதைத்ததேற்றநிருதரங்கத்தையே
மேயதேம்பொற்கவானத்திகிரியே
மேவிடந்துங்கவானத்திகிரியே (௰அ)

வஞ்சிவிருத்தம்

துங்கவான்மலேச்செங்கண்மால்
பங்கயப்பதம்பாடினர்
அங்கண்வானத்தவர்தொழ
எங்கும்வாழ்குவரென்பவே (௰கூ)

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்)

என்றுமதியுடுநிரைகளென்றுமதியணிமணியி
லிந்திரவிலெனவொளிருமா
மன்றுமதில்களையுடையவிண்சயிலபுரமதிலு
வந்தருளிநெடுமருவுவார்
ஒன்றுமதிதவளவளைசெந்திகிரிநிலவுகர
ருந்தியினிலயனையருள்வோர்
குன்றுமதிம்ருவுமெனையும்பிரியமுடனடிமை
கொண்டனர்தணளிதிகழவே (உ௰)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மடக்கு (வறும்புனங்கண் வேருந்தல்)

திகழுமஞ்சக்கரப்படையார்
சேர்ந்தாரஞ்சக்கரப்படையார்
சேர்வான்பொருப்பமருந்தினையே
தீர்ந்தேன்தெவிட்டாமருந்தினையே
புகழுந்தளிர்கோதஞ்சுகமே
புகலுங்கணப்போதஞ்சுகமே
புனத்துக்கணியாங்கணியாரே
போந்திங்குகடைக்கணியாரே
அகழுங்குழியவிருந்தேனே
யழகிங்கொழியவிருந்தேனே
அகவுங்கரியகணமயிலே
யரியபெரியகணமயிலே
நிகழும்பொருவிலருவிகளே
நேர்வார்பொருவிலருவிகளே
நிகரிலசோகத்தின்றழையே
நீண்டசோகத்தின்றழையே (உக)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இன்பமுறமலியினுந்துன்பமுறநலியினும்
இளையரெனைமருவினுங்கிளைஞரெனையொருவினும்
வன்பகையிணங்கினும்மன்பர்கள்பிணங்கினும்
மன்பிறவிபெறினுமடியென்மறவியுறவஞ்சேன்
அன்பர்கரமங்கையார்முன்பர்வரமங்கையார்
அணியவிருதாள்களுந்திணியவிருதோள்களும்
பொன்பழகுசதனமும்முன்பழகுவதனமும்
பொருள்பொழியுமொழியுமோருள்வழியும்விழியுமே (உஉ)

### நேரிசைவெண்பா

(இருளை ஆற்றுததன்மையாற்றக்கூறல்)

விழிநீரிறைக்கும்விழுமழுமெழுந்தென்
மொழிநீரிறைக்குமொழியும்—எழின்மாடச்
சென்னிகருமங்குறவழ்சேண்மலைசெலும்மெனுமான்
சென்னிகருமங்கதயைசெய் (உ௩)

### கட்டளைக்கலித்துறை

செய்யவனாகதங்கின்முத்தொளிதிகழ்சேண்சயிலத்
துய்யவனாகதந்தம்பறித்தோன்றிருத்தொண்டனுக்கா
வெய்யவனாகதடம்பகக்கிண்டவண்வேண்டடியேன்
உய்யவனாகதத்தாகதனுய்மகிழ்ந்தொன்றினனே (உ௪)

### (கலிவிருத்தம்)

ஒன்றுகேளென்றன்விண்ணப்பமொண்குணக்
குன்றமேயொண்விண்மாவெற்பிற்கொண்டலே
இன்றுதாழெனயாட்கொள்கவில்லையேல்
சென்றதாமுன்றன்சீர்முற்றுஞ்சித்தமே (உ௫)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

(இருளையிரங்கல்)

சித்தசனம்பர்வையிணையாச்சிறியுடனுழையத்தியங்கியேத
வித்தசனம்பரவையிடையுறுதூதசமுதமென்றுளவியன்முத்தஞ்சோ
தித்தசனம்பரவையிணைவிழிமயினின்மோகவலைசிக்கினளாள்
சித்தசனம்பரவையியைவரமங்கைத்கிரியங்கைச்செங்கண்மாலே (உ௬)

### மருட்பா (கைக்கிளை) தெளிதல்

செங்கண்மலரின்மைக்குந்தேகங்கோதைவண்டிவரும்
நங்கண்மயக்குமிவர்நன்னெஞ்சேஇங்கிவற்றால்
வரமங்கைநாதர்வரைபில்
பரவங்குறிஞ்சிபடர்பூக்கொடியே (உ௭)

## அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

### விண்டுவேடு தூது

பூத்தேன்மேலாசையுள்ளார்பூவைமருவும்விருப்பர்புளினமேவுந்
தேத்தேவந்துவந்திருப்பார்சேருமன்பராகத்துந்திளைத்துவாழ்வார்
காத்தேறல்லரைவதற்காவான்வரையின்மேலிருப்பார்கடுப்பார்நும்மை
மாத்தேவுக்கென்னிலைமைசொல்லுவீர்வண்டினங்காள் செல்லுவீரே (உஅ)

## எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

### (பாணனை முனிதல்)

வீரநேமியங்கையார்வியோமவெற்பின்வேதியர்
வேதகீதமேயகாதில்வேறுகீதமேயுமோ
நாரதாதியோருநாரிஞடுபாதபாணஞர்
ஞானசாரமானபாடஞஞுமோதுவீறுளேம்
கூரமானபஞ்சபாணர்கூடவஞ்சிஞரிவண்
கூடவேகபாணநெஞ்சகூசலின்றிமேவிஞய்
சாரமேயவீணையோடிவ்வீணையும்மிசைப்பது
சாரமோபரத்தைமேவுவீடுசேருசாலனே (உகூ)

## (பதிஞன்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

### (சம்பிரதம்)

சாலமலவெழுகடலையொருகைகொண்டுட்கொள்வோர்ந்
தாரணியையேந்திமறைவோம்
தரையிலிரவியைநின்றுகிலவிடப்பண்ணுவோஞ்
சசியினைவிளக்காக்கொள்வோம்
பாலவிழியினனைநகுதாணுவெனநாட்டுவோம்
பங்கயனையுந்தியிடுவோம்
பகர்ந்ததும்பிகளைமாதங்கமாமாற்றுவோம்
பரியைக்கொக்காப்பணிப்போம்
தாலமதனைப்புவனமாக்குவோம்முளரியைத்
தகனஞகச்சமைப்போம்

சாற்றுமிவையத்தனையும்வித்தையோவரமங்கை
தன்னினும்மென்னுளத்தும்
ஆலமவிர்கண்டனெடுமண்டர்தொழவீற்றிருந்
தருடருந்தேவநாதன்
அன்றுலகளந்ததிருவடிபடாமுடியுடைய
வவரையும்முன்விடுவனே (௩௰)

பதினறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

(கொற்றியார்)

விட்டிலங்குமணிமாடவரமங்கைக்கு
வேந்தர்வார்சிலையினுவிலங்கைசெற்ற
வெற்றியார்புகழ்பாடும்பெற்றியார்ந்த
வெண்பிறைநேர்நெற்றியார்கொற்றியாரே
கட்டெழிலார்வளையாழிகரம்புனைந்து
கவின்றளசிமணிமாலையுரம்வளைந்து
கருணைமிகுமால்போன்றீர்கலங்குமென்னைக்
கடைக்கண்ணுனெக்கிமாலாக்கிவிட்டீர்
திட்டமதனேடுவேதனையும்பெற்றேன்
சீர்கொணுமக்குத்துணையாச்செயவிரும்பிற்
செய்யவேண்டியவைசிலவுண்டவற்றைச்
செப்புகின்றேன்றிருச்செவிசாய்த்தருளல்வேண்டும்
இட்டமிகுந்துளமுருகுமென்பாலன்பால்
இட்டிடைநுடங்கவந்தாங்கருடனேடும்
எயவரவணையுநும்பாலின்பவாரிதியும்
இனிதுவந்துதந்தருளுமின்னேயின்னே (௩௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இதனிலக்கண மூன் சொல்லப்பட்டது

இன்னலென்பவையெவையவையனைத்தையுமெய்தினேனினியெய்த
என்னவின்னலுண்டொன்றிலையிருவினையேற்கிதுதகவேகாண்

பின்னையாற்றெனுதெதுவெனின்விண்மலைப்பெருமநின்னடியாரேன்
துன்னிவன்றுயர்துடைத்திலனெனநினைச்சொற்றிடுங்குறை
யொன்றே (௩௨)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

குறையொன்றுமில்லாதவரமங்கைநாத
கொடும்பிறவிப்பெருங்கடலுணெடுங்காலாழ்ந்தேயான்
தறையொன்றுங்காணுது தவித்தின்றேயுன்றன்
சரணசரோருகமென்னும்புணையையணைந்துய்ந்தேன்
மறையென்றவவையெவையுமிறையுமறியாமன்
வயங்குமிருங்குணக்கடலுள்வயங்குகருணைக்கும்
பொறையென்றவதற்குமிலக்காம்பொருளைத்தேடிப்
பூமியிலென்றனைக்கூடிநீயுமகிழ்ந்தனையே (௩௩)

### நேரிசை வெண்பா (இருளையியம்பல்)

மகிழ்ந்தணைவாயெந்தம்மடமயிலையுள்ளம்
நெகிழ்ந்தணைவாய்நித்திரையுமின்றிப்-புகழ்விண்மலைக்
கோவிந்தவென்றுகுழையுங்கைகூப்புமிந்து
வோவிந்தவென்றுரையென்னும் (௩௪)

### கட்டளைக்கலித்துறை

உந்தியங்கஞ்சமனையான்படைப்பிலுற்றேமினிநெஞ்
சந்தியங்கஞ்சமனையாமெதிரினிற்சந்திக்கினும்
வந்தியங்கஞ்சமனையாரைப்போற்பொழில்வாழிளைய
மந்தியங்கஞ்சமனைப்பாடும்வான்மலைமாறணையே (௩௫)

### கலிநிலைவண்ணத்துறை

துணையெனவணைமலரிணைநினதிணையடிதொழுவேன்மேல்
இணைவிழிபொழியருண்மழையினிலொருதுளியினைவீசில்
எணையொழிதுயர்தருமிருவினையொருவிடுமெழில்வீடாம்
திணையறிவுயர்மறையவர்திகழநபவரைநெடுமாலே (௩௬)

பதினுன்கு சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்

(மதங்கு)

மாமதங்கியுடலாமதங்கிநிகர்வான்மதங்கிலமதாகவே
மாமதங்கயநடாவுமண்டலிகர்மாளவென்றுபுகழசூடிய
சாமதங்கியுருவானவெங்கடிருமாலனந்தவரைவீதியில்
தாமதங்கினருவார்மனஞ்சுழலவேய்மதங்கியுரையீதுகேள்
காமதங்கநிகரானநின்றனுமுனமுனம்பினடையார்களார்
காமனுந்தளரும்வேலிரண்டொடிருநேமியுங்குலவுபாவமும்
ஏமமுந்துன்வயமாயிருந்துமெனையோவுனங்கைகளிலவாளொடா
வேரரும்பநடமாடுகின்றவிதெனேகிலென்பணிகொளாசையே (௩௭)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

ஆசைமேலடாவாசைமேவிடாவாசைதோறுமேயாசைமேவினேன்
பாசமூடுமாபாசநெஞ்சிலேபாசமார்கிருபாசமேதனுய்
வாசமேவநீவாசநாதனுவாசமாலையார்வாசவாநுசா
காசகல்பிரகாசமேவுமாகாசபூதராகாசவாசனே (௩௮)

காசம் பொன். வாசம்—பீதாம்பரம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்

வாசநறுங்குழலார்பாசமெனுஞ்சுழிவாய்
வாவிவிழுந்துழலாவாவியுநைந்தழலாழ்
நீசனெனன்பிதமாந்தேசவிருன்பதமாம்
நீடுறுலன்புணைமேய்நாடுறலென்றுகொலோ
மேசகசுந்தரனேயாசகலந்தரனே
வேயிசைபங்கயனே பூமிசைதங்கயனே
மாசறுசந்திரனே தேசுறுமந்திரனே
மாமரைநங்கையனே சீவரமங்கையனே (௩௯)

நேரிசை வெண்பா

(இறைவி இகுளைக்கியம்பல்)

மங்குல்வரைமான்மான்மருமருந்தந்தார்தந்தார்
கொங்குந்தேர்த்தேர்வந்தார்வந்தாரேல்—செங்கரும்பாம்
வில்லைவில்லையாய்ந்துக்கிமெல்லமெல்லம்பாம்பூவில்
வல்லைவல்லையென்றசொல்லைவாய் (சமு)

கட்டளைக்கலித்துறை (உற்றதுரைத்தல்)

சொல்லுவல்கேளன்பதுமணிமாடச்சுடர்ப்பிழம்பே
அல்லலுறுமற்செய்வான்மலைநாதர்தமங்கிரியில்
செல்லவில்லாமற்செலுமென்மனமெனுஞ்சிந்துரத்தை
வல்லமைபங்குசத்தாலேயொருபிணைவஞ்சித்ததே (சக)

பதினறு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(சித்து)

சித்தகணந்தொழுமெல்லாம்வல்லசித்தர்
தினந்தெரிசித்துய்யவருடழைத்தசித்தர்
சித்திதரும்வான்வரைவாழ்செகப்ரசித்தர்
திருவருள்பெற்றிடுமெங்கள்விண்டுசித்தர்
பத்தரெனுஞ்சித்தரிலோர்சித்தராணும்
யணிரதபாதம்மருந்துபலகாந்தேர்ந்தோம்
பகர்ந்திடுவோம்மாற்றுரையாற்குறைவுறுது
பார்புடத்திற்சிறையிருந்தையென்றுற்போதும்
வித்தகனுங்கண்ணனிடம்மெய்தராவை
விளங்கிடுமாடகமாகப்புரிந்தோமப்பா
விண்ணவர்க்குநாகத்தைப்பொன்னுச்செய்தோம்
விரும்பில்வங்கந்தங்கமாம்பங்கமில்லை
வைத்திருக்குமிருப்பையிவண்கொணர்ந்தீவீரேன்
மாட்சிபெற்றவீகையெனவழங்குவோம்பின்
வன்மைமிகும்வேங்கையுமாதங்கமாகும்
மைந்தவின்றுபாலனத்தைவிழைந்தோம்யாமே (சஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

யாஞ்சித்தமகிழ்ந்திடரற்றிடவும்மிதமுற்றிடவும்மிரவும்பகலும்
வாஞ்சிப்பனவுந்துதிசெய்வனவும்வந்திப்பனவும்வளையாழியினார்
நாஞ்சிற்படையார்துளவத்தொடையார்நாகக்குடையார்நமையா
ருடையார்
காஞ்சிக்குரியார்தோதாத்திரியார்கழலார்கழலாங்கடிமாமலரே (சங)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(மறம்)

கடிபொழில்சூழ்வரமங்கைத்தேவநாதன்
கழல்புகழுங்கறைகெழுவேற்பரகாலன்றன்
அடிபரவுமமைச்சர்குலத்தவதரித்த
வடல்வென்றிமறவரெனவறியாய்போலும்
முடியரசர்தூதமணவோலையாயின்
முடிமணமாகும்மணப்பத்திரிகையென்னின்
மடிவரகுதிரித்திடலாங்கொடுபோபெண்ணை
மருவிடலாநடுநாட்டைமருவுவாயே (சச)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்

(காட்சி)

மருவொன்றுமங்குல்சிலையம்பிலங்குமதிதங்குசங்குகிளர்வே
யுருவொன்றுகஞ்சமுறெறும்பொழுங்கொடொளிருந்தரங்க
முடனே
தருவொன்றுசெங்கைவரமங்கைமஞ்சுதழையம்பொதும்ப
ரிடையே
திருவொன்றுகொம்பர்மகிழ்விஞ்சவின்றுதிகழ்கின்றதென்ற
னெதிரே (சரு)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### மடக்கு (கார்காலம்) தலைவி

திரளெழிலியெழிலிவரவெதிர்பார்க்குங்காலம்
சேண்வரைவாணுதிவரவெதிர்பார்க்குங்காலம்
கரளமெனவில்லைக்கொண்டம்பெய்யுங்காலம்
காமனங்கைவில்லைக்கொண்டம்பெய்யுங்காலம்
புரளவெழுவாரிமணிவாரிவருங்காலம்
புலம்புமென்கண்வாரிமணிவாரிவருங்காலம்
தரளநகையார்நகையிற்றளவலரேய்காலம்
தாயருந்தாதியும்பகையிற்றளவலரேய்காலம் (சசு)

வாரி—வெள்ளம்;நீர். ஏய்தல்—பொருந்தல்;வருதல்.

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### (செவிலிநற்றுய்க்கறத்தோடு நிற்றல்)

காலனைகாலகண்டனைக்கண்டகமலனைக்கமலமேற்றுயில்கொள்
ஆலனையாலவரவனைபரவயலையனையலையனையகருங்
கோலனைக்கோலக்குழையனைக்குழைவிற்குழகனைக்குழகவிண்சயில
பாலனைப்பாலமதிநுதன்மதியிற்பதித்தனள்பதியெனத்திருவே (சஎ)

### கட்டளைக்கலித்துறை

### (தழைநயப்புரைத்தல்)

திருவார்தருதிருமார்பன்வியொமச்சிலம்பிலன்ப
தருவார்தழையைவிழியில்விழைவுதழையவொற்றி
மருவார்முலைவைத்திருகைகளாலுமகிழ்ந்தணைத்துக்
குருவார்பவழத்தின்முத்தமுந்தந்தனள்கோற்றொடியே (சஅ)

### நேரிசை வெண்பா. (தலைவியிரங்கல்)

கோற்றொடியார்கைவிட்டார்தென்றற்கொடுவரிபி
னேற்றொடியார்நிற்பாரெதிர்மனமே-தோற்றுகிலார்

பங்காம்புயர்பதுமப்பாவைவரமங்கைகொங்கைக்
கொங்காம்புயரென்செய்கோ (சகூ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

#### தலைவியிரங்கல்

செய்யபங்காம்புயவேரிசூழ்சேண்சயிலத்தினைமேவியே
வையமும்வானமுமுய்யவாழ்வண்புயலைவணங்காரென
நையவெனைத்தனிதள்ளியிந்நாடுகடந்தவர்நங்கைமீர்
மையமழைமுகில்வந்ததுவந்திலர்நுங்குறிப்போதுமே (ருய)

### எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

#### குறம்

குறித்தகுறிசொலுந்திறத்திகுறத்தியானே
குலவங்கைகொங்கைமுகக்குறிநலங்காண்
நெறித்தகுழல்குறித்தபொருட்குறிநினக்கு
நிகழ்த்திடுவேனதுமறைவாயிருப்பதொன்று
நிறத்தினின்மங்குலைநிகர்க்குநிறத்திற்பொன்றும்
நிழன்மணியுமணிமறுவுமருவிவீறும்
செறித்தகயிற்றின்றழும்புமிடையிலுண்டு
சேண்மலையைமருவிலுனைமருவுமம்மே (ருக)

### நேரிசை வெண்பா

அம்பொன்னிலங்களுஞ்சீராரருளாரந்தணரும்
செம்பொன்னிலங்கடுக்குஞ்சேண்மலையே-யம்பொன்
மறையினந்தத்திருப்பார்மாணடிசேர்ந்தாரைத்
தறையினந்தத்திருப்பார்சார்பு (ருஉ)

### கட்டளைக்கலித்துறை

சாரங்கபாணிசதுமுகன்றந்தைதயாதன்சேய்
சீரங்கநாயகன்றேவர்கணுதன்றிருமகள்கோன்

காரங்கவண்ணல்வியோமகிரீசன்கழலிணையில்
வாரங்கலந்தவர்க்குண்டோபிறப்பிந்தமண்ணிடையே (௫௩)

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஊசல்.

மண்ணிடையேபலவடிவாய்மாறிமாறி
வந்துவந்துபரனிவனேவவனேதானென்
றெண்ணியெண்ணியுழலுமதியூசன்மண்ணி
பெழிலாகவதுதனையேயூசலாக்கி
தண்ணளியோடொண்பொறையைவடமாப்பூட்டி
சந்ததமும்வரமங்கையொடுமிருந்து
பண்ணளிசேர்தாராடவாடீரூசல்
பகர்தேவராஜரேயாடீரூசல் (௫௪)

### கலிநிலைத்துறை

ஊசலசைக்கும்பாசநிகர்த்துள்ளுழலாதுன்
வாசமலர்த்தாணேசநிலைக்கும்வழிகூறித்
தாசனயக்குந்தேசமதைத்தந்தருள்வாயோ
கேசவவிட்டோவீசமறைக்குட்கிளர்தேவே (௫௫)

### வேற்றொலிவெண்டுறை

(தலைவியிரங்கல்)

கிளரிசைவேயினர்நபமலைபேயினர்கிரிபோல
வளரிருதோளிவர்மலர்பொருதாளிணைமருவாரில்
தளர்வுறச்சாந்தென்றுதழலையப்பிணீர்
இளமுலைமிசையெனதிகுளீமீரன்றே (௫௬)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்

(உற்றதுரைத்தல்)

அன்றுலகளந்தபதபங்கயரிலங்கயரையங்கடுவிலங்கையுடையார்
என்றுமதியென்றுமதிபொன்றிகிரிசங்குகளிலங்கிரு
மருங்கரிசைசீர்

நன்றுதிகழ்விண்சயிலவண்புரியர்தண்டலையினன்குபடர்
பொன்கொடியிலே
யொன்றுமலரொன்றதிலிரண்டுவரிவண்டுளனவுண்டவவை
நெஞ்சமதுவே (ருஎ)

ஆசிரியத்துறை

(இரவுவரல்விலக்கல்)

நெஞ்சிலெமருள்ளிநிசிவரிற்கல்லதர்நீள்விண்குன்றர்
செஞ்சரண்மேவியசெல்வர்கட்கஞ்சிடுந்தீமையைப்போற்
குஞ்சரம்வேங்கைநுங்கூர்ங்கணைக்கஞ்சிறும்
மஞ்சரமங்கையர்க்கஞ்சுதும்வாரலெம்மன்னவனே (ருஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மன்னவர்கண்மன்னனெனமருவலர்களடிபரவமணிமுடிக
வித்துவிடினும்
இன்னலெனவுள்ளவையனைத்தையுமிழைத்துடலை
யிருபிளவுபடவகிரினும்
பொன்னவிரிருஞ்சடையர்புரிதவமதைக்கண்டு
புன்முறுவல்கொண்டருளிய
பன்னபநகத்துறுபரம்பொருளையன்றியடிபரவுகிலனிது
திடமரோ (ருகூ)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(பிச்சியார்)

திடம்படுநெஞ்சொடுசெங்கற்பொடிக்கூறைமருங்கசைத்துச்
செய்யமேனி
திகழதரவெண்ணீறணிந்துதிரிசூலங்கபாலமிவை செங்கையேந்தி
இடம்படுமூர்தொறுஞ்சென்றுதிரிந்திரந்துண்டுவந்தொளிர்
வாளிரவியெய்தி
எழில்வளர்பொன்பூமியிருசுடரோடுக்கமஞ்சூன்மஞ்சிருந்த
தென்ன

சடம்படுமேகாசனத்தில்வீற்றிருக்குந்தனிமுதலைத்
தனித்துப்பாடிச்
சவியபிச்சியாரேசீர்நவியபிச்சர்போன்றீரித்தன்மையாலே
யுடம்படுவீரென்றுன்னிப்பின்னடைந்தேனுளமுருகமூரலுற்றீர்
உந்திருக்காணேக்கியெய்வேளேயுமிவ்வேளேயிலொறுத்தனு
சிதஞ்சூழே (கூ௰)

### கோச்சகம்

### (தன்றுயர்தலைவர்க்குரைத்தல் வேண்டல்)

சூழுமுலகம்படைத்தார்தோன்றியிலகம்படைத்தார்
ஏழுமரனெய்திடத்தாரேயுமரனெய்திடத்தார்
வீழுவனப்பாலடையார்வீணமனப்பாலடையார்
வாழிடந்தோதாத்திரியேமால்சொலெய்தோதாத்திரியே. (கூக)

### கலித்துறை (தலைவிமறுத்தல்)

எய்திலரென்னேவென்னுயிரன்னுரெழின்மானே
செய்திகழ்வேள்விமொய்புகையென்னின்னிழன்மின்னும்
பெய்மழையும்வில்லும்முறுமோபார்பினும்பீலி
மைமயிலாலுங்கொல்விண்வெற்பார்மலைமீதே. (கூஉ)

### கலிவிருத்தம்

### (தலைவியிரங்கல்)

மீதிலகுசோதிமதிவீசுதழலாலும்
கூதிரெனவோதிடுகொடுங்கடுவினாலும்
பாதியுயிராகுமெனுபாதியறியாத
வாதிநபநாகரளியுமமளியதாமே. (கூஙு)

### ஆசிரிய விருத்தம் (களி)

அளிதழையுங்கட்கடையினேக்கிக்குந்தி
யளித்தமைந்த்ரைவரையுமமரிலோம்பி
யன்றிடங்கர்வாய்ப்படுமாம்பலையளித்திட்
டயனரணுதியர்க்கிறும்பூதடையச்செய்து

களிதழையுமாலிதனைக்களஞ்செறித்துக்
கவின்மதுரையார்பவர்கட்கொருவேந்தாகிக்
கமழ்தருமுண்டகவிருப்பார்தமைத்தனக்குச்
காதலன்காதலிமருகிகளாக்கிக்கொண்ட

ஒளிதழையும்வானமலைமாதவன்றன்
உபயவடிகளைத்தினமுமுட்கொண்டுய்ந்த
உண்மையுறுகளியேம்யாமுரிமைமக்காள்
உரைக்குதுஞ்சாலியின்வசிட்டனுயர்வையுற்றான்

தெளிதழையும்மறையவர்கண்மேதையாலே
சிறப்புற்றூர்சுரர்களினுஞ்சிறப்பிதேயால்
தேசுமிகுஞ்சான்றோர்கள்செவியினல்குந்
திறங்கொடிருமந்திரத்தைத்தேர்ந்துய்வீரே (௬௪)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

(தலைவியிரங்கல்)

தன்னுட்கையாறெய் திடுங்கிளவி.

வீரநேமிவலங்கொண்டகொண்டலின்
விளங்குவிண்மலைசூழ்ந்திடுமாம்பொழில்
சேரெழின்முலைப்பூங்கொடிகாளெனைச்
சிவணவேசிறுகாலினலைகின்றீர்
கூரமாமலர்கொண்டுகண்ணீரினைக்
கொட்டுகின்றிரணிவண்டுவீழ்ந்திடப்
போரவாகமெலியனுற்றீர்பிரி
பொறற்பரீகம்விரும்பினீர்போலுமே. (௬௫)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

(நீடுநினைந்திரங்கல்)

மேலவர்வாழ்விண்மலையின்மேவுங்கண்ணன்
மேகவண்ணனருட்கண்ணன்வியன்சிலம்பிற்

கோலமலர்ப்பைங்கொடிநின்குழலைமெய்யைக்
கொங்கைகளையங்கைகளையிதழைச்சொல்லை
மாலவிர்தண்டலைதளிர்மெல்லரும்புதண்பூ
வண்கனிதேன்கொடுபடைத்தமலரோனென்னே
நீலவிழிகளைக்கணையாற்சிலையானெஞ்சை
நிருமித்தானெனைவருத்துங்கருத்தாலன்றே. (௬௬)

## எண்சீர்க்கழிநெடிலாசிரியச்சந்த விருத்தம்

கருத்தினினினைத்தவையனைத்தையுமளித்தருள்கடைக்
கணினருட்கடனுழாய்
மருத்தொடைபிணைப்புனைதிருப்புயமணிபழயன்
மணிக்ககனவெற்பிரவிதாள்
அருத்தியோடிருத்தியதுளக்கருமனத்தினரடித்துணை
பிடித்தபெரியோர்
எருத்தினையனத்தினையுகைப்பவர்தமைத்தினையினத்து
ணையுநத்திலரரோ. (௬௭)

## உயிர்வருக்க நேரிசைஆசிரியப்பா

(1) அருமறைமுடிதிகழ்திருமகள்கொழுநனை
(2) ஆவினம்பூந்தளிர்மேலவிர்பாலனை
(3) இரணியனுரம்வகிர்முரணியவுகிரனை
(4) ஈடுமெடுப்புமில்பீடுடையானை
(5) உத்தமருளத்தினித்தமுளானை
(6) ஊதியவேய்ங்குழலாதியஞ்சோதியை
(7) எய்தருநற்குணத்தெய்வமணியை
(8) ஏறார்தியாதியர்பேறுபெற்றுய்ய
(9) ஐயவந்தணர்துதிசெய்யவீற்றிருக்கும்
(10) ஒளிமணிவண்ணனைத்தெளிவொடுமொருகால்
(11) ஓர்தியேலுளமேசேர்தி
(12) ஒளவியமிலாததிவ்வியவுலகே (௬௮)

### கலிநிலைவண்ணத்துறை

உலகினிலிலகியபலவகையுயிர்தொறுமொழியாமே
நிலவியநபமலையிறையவர்மறையவர்நெடுமாலார்
நலமலிமலரடியிணைகளைநலமெனநணுகாதார்
இலகொளியுறவிருவினையறவடைகிலரெழில்வீடே (௬௯)

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

எழிலிறைதுயிலுந்தானமாமலையே
யிருப்பிடம்வானமாமலையே
இலக்குமியேந்துமேந்திருநிறமே
எழிலிபோனம்மேந்திருநிறமே
கொழுந்திருக்கோதைகோலவண்டுளவே
குலவுமாங்கோலவண்டுளவே
குவலயம்பூக்குமுந்தியம்புயமே
குருந்தடுமுந்தியம்புயமே
வழங்கிடுந்திங்கண்மனத்துதிப்பதுவே
மனுமறைமனத்துதிப்பதுவே
மலரடிமுனிவர்வழுத்தவிர்ந்தனவே
மலிபுகழ்வழுத்தவிர்ந்தனவே
அழித்ததும்பொரவந்தியங்குமைவரையே
அளித்ததுந்தியங்குமைவரையே
அரிவையர்செய்பரதத்துவந்திடமே
லவன்பரதத்துவந்திடமே (௭௰)

### கட்டளைக்கலித்துறை

திடம்படுசந்தியிற்றோன்றல்கெடுதறிரிதலிலான்
உடம்படுமெய்யின்றியேயுயிரொன்றுயிரோர்மடுவிற்
படம்படுபாம்பினிலாடும்விண்சைலன்பதாம்புயமே
மடம்படுவேற்குத்துணையாமிம்மண்ணிலுமாகத்துமே (௭௧)

## பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### மடக்கு (காமமிக்ககழிபடர்கிளவி)

கத்துங்கடலமருந்திரையே
கமழ்காற்குடலமருந்திரையே
கரியநிறக்காவிக்கணமே
கணியதுறக்காவிக்கணமே

நத்தும்போதாக்குஞ்சினமே
நற்றுய்மீதாக்குஞ்சினமே
நத்தமருந்தவளவனமே
நஞ்சமருந்தவளவனமே
முத்துமணலேகரும்பனையே
மூட்டுமணலேகரும்பனையே
மோதக்கமுநீர்காணீரே
முன்னியெழுநீர்காணீரே

நித்தமுருகுவாரிலையே
நெஞ்சமுருகுவாரிலையே
நிமலைகலைமான்மருவலரே
நெடுவிண்மலைமான்மருவலரே (எஉ)

## எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியச்சந்த விருத்தம்

### (அன்னவிடுதூது)

மருவளர்திருக்கமலமலரணிந்ணிப்பயிலுமடநடையனக்
குருகுகாள்
தருவளர்வனத்துவிசிவலையிடையகப்படுமொர்தழைசிறை
மயிற்பெடையில்வேள்
உருவளர்மலர்க்கணையிலுடலுயிர்நடுக்கமுறவுளையுமென்
மனத்துயரெலாம்
திருவளர்நபச்சயிலர்மருவுமுவணக்கொடியர்திருமுனமுரைத்
திடுமினே (எங)

### எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்த விருத்தம்

(போய் பாராட்டல்)

உரைத்திடுமறைக்குலமுடித்தலமிசைப்பொலியுலப்பரு
சுடர்த்திகிரியான்
வரைத்தடமதிற்றிருநபச்சிலைநகர்க்கிறைமலைத்தலை
மலர்க்கொடியனீர்
விரைக்குழல்வணத்தெழில்கணுற்றெழுமுகிற்குலமிகுத்திடு
சமட்பினலவோ
நரைத்தெனவிளர்த்துமெலிவுற்றுவலியற்றுயர்நபத்திடை
யொளித்திடுதலே (எச)

### நேரிசையாசிரியப்பா

(பருவங்காட்டி வற்புறுத்தல்)

ஒளிமணிவண்ணனும்பர்கடம்பிரான்
அருள்பொழிகண்ணனலைகடற்றுயின்றோன்
ஆழியஞ்செல்வனரவினடித்தோன்
வானமாமலைபால்வளர்பொழிற்சிமையத்
தும்பரிலொளிப்பூங்கொம்பரனையாய்
நின்திருமுறுவலிற்பொன்றளவரும்ப
நீலவுண்கண்களினீலம்வாய்விள்ள
வேங்தெழிலங்கையிற்காந்தண்மலர்தரக்
கோலமாமேனியிற்கொன்றைபூப்பக்
கண்ணனுமண்ணனுங்கவினுற்றிருந்தெனக்
காயாவொடுபிடாக்கானிடையெழில்செய்
உடைந்தோடுவேனில்வேந்தொண்குடைகிடந்தென
விடந்தொறுமாம்பிகளெழுந்துகிளர
வேனிலென்னும்வெம்பகைவிளைத்த
வெந்துயர்தவிர்ந்தமைவினவவந்தாங்கு
மரந்தொறும்மதுவுண்வண்டினம்மருவ
தவன்றணந்தேகலாற்றவமுயல்கற்பினர்
அவன்வரத்தம்மையலங்கரித்திடுதல்போல்

தவனனுற்கரிந்ததருக்களுங்கொடிகளும்
நறுந்தளிர் தழைத்துநனிசெறிந்திலங்க
குருகுகள்பெடையொடுகுடம்பையுட்புகுதர
வாளரிமலேமுழைமன்னிவதிய
தண்கடலிப்பிதராளச்சூற்கொளப்
பொறியளிபாடப்புறவுவாய்மூட
சாதகந்தெவிட்டச்சகோரம்பசிப்பக்
கணமயிலாடக்கருங்குயில்வாடக்
குஞ்சரம்வயங்கக்குரங்குகள்தியங்க
ஆன்றலேயெடுப்பமான்றலேகவிழ
வாயல்பரக்கவெயிற்றராக்கரக்க
மணிற்கோபநிறையவிணிற்கோள்கணிறைய
குவலயங்குளிர்ப்புறக்கொங்கைகள்வெதுப்புற
வாடைவான்வளரக்கோடைகாறளர
மணந்தாருண்மகிழத்தணந்தாருண்ணெகிழக்
குரைகடல்பருகிக்குளிர்ந்துடல்கறுத்து
வரநதிபோல்யான்வானதியாவலென்
றெழுந்துவிண்படர்ந்தொளிர்யமுனேயோவென்ன
மாகமடங்கலும்வளேந்துபரவி
மரகதமணியினல்வளேந்தவானரங்கிற்
பரதநாட்டியம்பயில்பாவையராமெனக்
கவினுறவடிக்கடிகலந்துமின்னிக்
காருடன்மத்தசயம்முழங்கினவென
யாவருங்கலங்கவிரைந்திடித்தார்த்து
மின்னலாங்காதலிமிகுவிருப்போடு
கன்னவில்புயமிசைக்கமலங்குவளே
யாதியபன்னிறமலர்கொடுதொடுத்தணி
வாசிகையோவெனவானவில்லிட்டு
நீருடனுண்டநிழன்வெண்மணிகளேச்
சீரணிக்காத்திறந்தெரிந்துமிழ்ந்தெனநீர்க்
கணத்தொடுகரகக்கணத்தினேப்பெய்து
கருதரும்விரைவொடுகார்வரக்கண்டனே

மின்னவிர்நெடுவேலொன்னலர்ச்செகுத்து
வாகைமாலையோகையொடுசூடி
நால்வகைத்தானையுநாற்றிசைசூழத்
திங்கள்வெண்கவிகைதிசையெலாநிழல்செய
தரளவெண்ணகையார்சாமரமிரட்ட
விசயமாமடந்தைவியம்புயமருவ
விரிபுகழரிவைவிடாதுடனுறைய
மேவுநிற்குறித்துவிரைந்துவருகாதலர்
தேர்வரக்காண்குவையின்னே
மறுகுதலொழிமதிமதிமகிழூதியே (எரு)

நேரிசை வெண்பா

(செவிலியாற்றுததாயைத்தேற்றல்)

மதிவாண்முகத்தாய்மதிதளரனந்தம்
நுதிவாள்விழியைநொடியிற்—பதிகொணர்வல்
ஏதுமொன்றுவான்மலைமாலின்னருளாற்றேடியவன்
பாதமொன்றுற்றுயதன்றேபார் (எசு)

கட்டளைக்கலித்துறை

(இறைவியிகுளைக்கிறையருளியம்பல்)

பாரிற்பலகர்மவரமங்கைதங்குபரமனருள்
சேரிற்பகையுநட்பாமென்றிதுமெய்திருத்துளவத்
தாரின்றவன்றரப்பெற்றேன்றழலிற்றசிக்குநிலா
நீரின்றகைமையுற்றென்மெய்குளிரநிழலிட்டதே (எஎ)

கலிச்சந்தவிருத்தம்

நிழல்மேலிடுபொழில்சூழ்கபவரைமான்மரைமலரேய்
கழன்மேன்மிகுபரிவான்வரகவிமாலைகள்புனைவார்
அழன்மேனியனலர்மேலவனறியாவொருநெறிபோய்
தொழன்மேவியசுரர்வாழ்தருசுடர்வானுலகுறுவார் (எஅ

## குறளடி வஞ்சிப்பா

வாரிதிசூழ்தருமண்ணவரும்
வேரிமலர்முடிவிண்ணவரும்
மொழிகுணக்கடலாழ்முனிவரரும்
இழிவொழிதொழிலுயர்யோகிகளும்
கடிமலர்தூவிக்கழல்பணிய
இடிமுகில்போற்பல்லியந்தழங்க
மந்திரவேள்வியர்மறைமுழங்க
சந்தனம்நறுமலர்சசிகமழ
மன்றலந்தென்றல்வந்துலவ
மின்னனார்சாமரம்விழைந்திரட்ட
எழின்மிகுவிஞ்சையரிசைபாட
ஒழிவருபவந்தொலைந்துலகுய்ய
பாற்கடல்பங்கடங்கயமா
மாற்றிலாவைந்தருமாவனமா
தீர்த்தமனைத்துஞ்செலாசயமா
ஆர்த்திகொள்சுரர்விருட்சாதிகளா
வைகுந்தமேவரமங்கையதா
வைகிடப்பூமியும்மலர்மகளும்
ஆவரமடியார்க்களித்தருளுஞ்
சீவரமங்கைத்திருமகளும்
கதிரவனுந்தண்கலாநிதியும்
கதிரவிர்சாமரகன்னியரும்
கருடனும்ம்ருகண்டுவின்காதலனும்
பிருகுவுஞ்சேனைப்பெருமானும்
இருமருங்கெதிரினுமினிதிலக
இருமைமுகில்வீற்றிருந்ததென
ஏகாசனத்திலினிதமரும்
நாகாலயத்தோர்நாயகனை
நமர்காள்
பத்தியுடனேபரவுமின்
முத்திவீடெய்திமோதமுறற்பொருட்டே (௭௧)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பொருளலாதவற்றைப்பொருளெனவுணர்ந்து
புன்னெறிபற்றியேயொழுகும்
மருளினும்மாணுப்பிறப்பொழிந்தென்றும்
வைகுண்டமேவிவாழ்ந்திருப்பீர்
அருளுருவாகுந்திருமகண்மகிணனணிபொழில்
வானமலையெம்மான்
திருவடிகளையேதஞ்சமென்றடைமின்சிறப்புறுந்
திறனைவேட்பவரே (அய)

## கலிவிருத்தம்

வேட்பவையாவையும்விருப்பினலருள்
சேட்படுவிண்மலைத்தெய்வநாயகன்
தாட்பதுமங்களைச்சரணமெய்தினேன்
கேட்பதென்பிறருழைக்கிடைப்பதென்னரோ (அக

## வெண்டாழிசை

என்னையாட்கொளிமையவர்கோமான்
தன்னைவான்மலைசார்ந்துபணிவார்
முன்னைவானேர்முதல் (அஉ)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

முதன்மூவருக்குண்முதலாம்முகுந்தனன்
முருகார்துழாய்முடியினன்
புதன்மூடுகோனின்மினிமேனேடுமேவு
புயலாதிதேயர்பதியாஞ்
சிதன்மூரிநாணையுணநாணிழந்த
சிவைதாழவாழவருண்மால்
நுதன்மூதுவோர்கண்மதியான்மதித்து
நுவல்வான்மலைக்கரசனே (அங)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### (இளவேனிற்காலம்—தலைவியிரங்கல்)

அருளுறுகடைக்கணம்புயைகொழுந
னமர்ந்ததோதாத்திரியொருவி
பொருளுறுநசையாற்றனியெனைத்தள்ளிப்
போனவரறிந்திலர்போலும்
வெருளுறுத்தனலைவீசுதென்றலின்மெய்
வெந்துமாங்குயிற்குரற்கினைந்து
மருளுறுமெனதுமுலைவிழிபொன்னும்
மணிகளும்வழங்குகின்றதையே (அச)

## பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### (மேகவிடுதூது)

வழங்குதென்றலைக்கிள்ளையைக்குயிலினை
வரிவண்டைமடநெஞ்சை
வயங்குபாங்கியைமன்மதன்றேர்டரி
வயச்சின்னம்வரிவின்னாண்
பழங்கணுற்றிடத்தோற்றிடம்படையெனப்
பயமுற்றுமனம்பூவை
பயிலுமாமயில்நடைமொழிசாயலின்
பகையென்றும்பகராமல்
முழங்குமங்குனின்வரவையேநோக்கினன்
மொழியுஞ்சாதகமென்ன
முன்னுமென்றனைமுன்னுறக்காத்திட
முன்னிற்றன்முறையேயாம்
தழங்குபேரலைப்பங்கதாமரசமோர்
சார்கொள்வான்சயிலத்தான்
சரணந்தாழ்ந்தவன்றருதுளவங்கொடு
தந்தென்னையருள்வாயே (அரு)

## பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### (தலைவியிரங்கல்)

அருளினன்றிருங்குன்றெடுத்தவரார த்தென்றலங்குன்றெடார்
அரனடற்சிலையினையிறுத்தவரடர்மதன்சிலைதனையிறார்
செருவில்முன்புசெங்கதிர்மறைத்தவர்தீய்க்கும்வெண்கதிர்
மறைத்திடார்
திரண்மரந்துளைசெய்தவர்குயில்சேர்மரந்துளைசெய்திடார்
வெருவுகானவெங்கனலவித்தவர்விரகவெங்கனலவித்திடார்
விரைவாயமுதங்கொடுத்தவர்விரும்புவாயமுதங்கொடார்
திருவிளங்கியமார்பினர்வனத்தெரியலார்வரமங்கையார்
செய்யசேவகர்செய்யுமாண்மைசிரிப்பதாகவிருந்ததே (அசு)

## பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### முதிர்வேனிற்காலம். தோழிகூற்று

### (ஆற்றுத்தன்மையாற்றக்கூறல்)

இருந்ததண்கமலமலரொரீஇச்சுரும்ப
ரினமலர்ச்சோலைபுக்கிருப்ப
எழிற்புளினத்துவதிந்தகோகங்க
ளிரும்புனைப்பொதும்பரினொளிப்பப்
பெருந்தடங்களில்வாழ்மீனினம்வெதும்பிப்
பிணங்குசைவலங்களுண்மறையப்
பிடித்தெரிமுதியவேனிலோடுன்றன்
பிரிவெனுங்கனலியுங்கனற்ற
வருந்திநின்மார்பிற்பொருந்தியதுளவு
மாலையைவிரும்பிமெய்ம்மறந்து
மதுரமாம்பாலுங்கசந்துவெய்துயிர்த்து
வாய்வெரீஇமாமுலைமீது
பொருந்தியபுழுகுநானமுஞ்சாந்தும்
புனைந்தமாலையுமெரிகதுவப்
புரமெலாம்வெந்துபுலம்புபூவையினைப்
புரப்பப்பொருப்பிலச்சுதனே (அஎ)

### நேரிசை வெண்பா.

அச்சுதாநந்தவரிமுகுந்தகோவிந்த
சச்சிதாநந்ததயாநிதியே—நச்சிலார்
தந்தவர்த்தநத்தாய்வான்சைலசரண்புக்கேனை
நந்தவர்த்தநத்தாயாள்வாய் (அஅ)

### கட்டளைக்கலித்துறை

### (நாரைவிடுதூது)

வாயுந்திரையுகளுங்கானன்மேயமடக்குருகே
யாயுஞ்சிரீவரமங்கலமாநகரார்க்கெனுள்ளும்
நோயுந்தெரித்தணியந்தாமங்கேடரநோக்கிலையேல்
ஏயுந்திடநினதந்தாமமின்றென்றியம்புதியே (அகூ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இயம்புமன்னையினினியகொங்கைக்கினியேங்கியேயழாதென்னைக்
கயம்புனைந்தசெந்தாமரைமலர்புரைகழலிணைக்காட்கொண்டார்
நயம்புனைந்தருள்வரமங்கைமேவியநங்கையாம்வரமங்கைக்
குயம்புனைந்திடுதிண்புயர்விண்புவிகூறுபாம்புகழாரே (கூ0)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### கூதிர்காலம் (தலைவியிரங்கல்)

பாம்புகளென்னச்சீறிப்பகழிகளெனவிரைந்து
வாம்புவிமானப்பாய்ந்துவந்தெனைவருத்துங்கூதிர்
தீம்புனல்வான்சிலம்பன்சிலம்படிதொழுஞ்சிலம்பர்
தாம்புகுந்தியங்குதேயந்தனிலிலைபோலுமன்றே (கூக)

### கலிவிருத்தம்

அன்றளித்திடுமைவருக்காட்படா
நின்றளிர்க்கழனெஞ்சிலெண்ணேனையும்
என்றளித்திசையெய்துவையோநபக்
குன்றளிக்குமுயர்குணக்குன்றமே (கூஉ)

ஆசிரியத்தாழிசை (தலைவியிரங்கல்)

குன்றுகுடையாக்கொடுபுரந்தகோபாலர்
இன்றுநம்மூரினிலெய்திலவர்முழக்கும்
வென்றியஞ்சங்கொலிமேவாதோதோழீஇ (க)

கருவரைமத்தாக்கடல்கடைந்தகார்வண்ணர்
திருமிநம்மூரினிற்சேரிலவர்முழக்கும்
வெருவொழிசங்கொலிமேவாதோதோழீஇ (உ)

கல்லிணைப்பெண்ணுக்கடிதருளுங்காகுத்தர்
செல்வநம்மூரினிற்சேரிலவர்முழக்கும்
வில்லிடுசங்கொலிமேவாதோதோழீஇ (ந) (கூந)

நேரிசை வெண்பா

(தலைவி தலைவனிகந்தமை சாற்றல்)

தோழிநினக்கென்னைசொல்லுகேன்றேதகிரி
வாழிமையவர்கோனைவாழ்த்தியன்று—பாழியிற்செய்
ஆணைக்கஞ்சாரென்பதாரறிவாரென்றனக்காக்
கோணைக்களிறட்டகோ (கூச)

பாழி—கோயில்

கட்டளைக்கலித்துறை

(பாணனை வெகுளல்)

கோணைக்களிறட்டகோதேவநாதன்குலகிரியில்
பாணைப்பகர்ந்துபலிக்குழல் பாணபகனடுவே
யேணைப்பொருந்தியிருளிற்குமோநின்னிசையிசையா
நாணைத்தவிர்ந்ததீனுவினர்க்காமிந்நாப்பிசையே (கூரு)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

(இடைச்சியார்)

இசையுறுவேயிசையினிரைபுரந்தருளெம்பெருமானுக்கினியதாய
எழில்விண்மலைவீதியினிற்றபிரோஇதயிரோஇவென்றென்
றெவர்க்குநெஞ்சி

னசைபெருகப்பகர்ந்திடுசிற்றிடைச்சியாரே நும்மைநாடினோர்கள்
நண்ணியபேரிடைச்சியாரென்பவென்னேயென்பாலாநண்பால்வாரும்
வசைசிறிதுமில்லாமற்றோய்ததியீதென் றருளும்வந்துமேவி
மதிதருமானெய்நாழிகையிதனிலுதவுமனமகிழ்ச்சிகூர
மிசையுமோர்நவநீதம்பெறுவதற்குமிகவிருப்பம்விலைவழங்கும்
வெண்பொன்னுஞ்செம்பொன்னுமிகத்தருவேன்மேன்மையினைமேவு
வீரே (கூசா)

## பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

### வலைச்சியார்.

மேன்மையாரொருமீனமாய்முனம்
வெய்யவன்றனைவீட்டியே
வேதநான்கையுமீட்டுநல்குபு
வேதன்வேதனைமாற்றிய
கோன்மையார்வரமங்கைமேவிய
கொண்கனூர்திருநாட்டினிற்
கொன்முலைச்சியராம்வலைச்சியர்
கோலமேவியகோதைநும்
மான்மையார்தருகண்களாம்வலை
வாயவீசியென்னுவியாம்
மச்சநும்வயமாக்கொளற்கிவண்
வந்திரேற்கருப்பஞ்சிலை
நோன்மையாரவரான்மலங்குற
னேக்கிலீர்கலைகொள்கிலீர்
நுந்துமென்கவலைக்கிரங்கிலிர்
நோற்றிலீர்நலமாகவே (கூள)

### வஞ்சித்துறை.

மாகவரையார்பொன் நாகவரையார்முன்
ஏகவரையாரன் பாகவரையார்மின் (கூஅ)

## நிலைமண்டிலஆசிரியப்பா.

### வாடை (பாங்கிவிடுதூது)

ஆர்வம்பெருகியவந்தணர் துதிக்கும்
மாறனுரைத்தருண்மாமறைகளுக்கிசை
ஆறங்கங்கூறியவாலிநாடனும்
அகலிடத்துள்ளாரனைவருந்தெருளுற
அருண்மிகுவியாதனருளிச்செய்த
சூத்திரத்துட்பொருடோன்றவிரித்தருள்
பெரும்பூதூரனும்பின்னுமுலகோர்
உபயவேதாந்தமுமுணர்ந்துய்வதற்கா
திருமகள்கொழுநன்றிருவருளின்படி
யோருருவாகியுவந்தெழுந்தருளி
ஐங்கோலைவென்றுமுக்கோல்பிடித்து
முக்காலமுமுணர்முனிபட்டர்பிரான்
கருதியளித்தகலியனிராமாநுஜன்
என்னும்பெயர்கொளிருங்குணக்குன்றம்
கல்விக்கருங்கடல்கவிஞர்கள்கற்பகம்
இரவலர்க்காக்குமெழிற்காமதேனு
புரவலர்களுக்குப்புகழ்தருந்தெய்வஞ்
சீரடிபணிந்துசிவிறிவீச
வீணைவேணுமிருதங்கமுதலிய
பல்லியமிசைக்கப்பாவையர்நடிக்கப்
பொன்மலைபொருவும்நன்மணிக்கோயிலுள்
சங்குசக்கரந்தரித்தலிற்றானும்
புவனம்படைத்தலிற்பூமிசையோனும்
செங்கிடைவாநதிசேர்தலாற்சிவனும்
ஏழுமலையெறிதலிலிமையர்தலைவனும்
நாகமேய்ந்தார்தலினல்லிமையோரும்
வரம்பெற்றிடலான்மாண்பமைமுனிவரும்
செந்தண்மையுண்மையிற்செய்யவந்தணரும்

அச்சங்களைதலிலரும்புரவலரும்
மச்சங்காட்டலில்வண்பொன்வணிகரும்
சொல்லைவிளைத்தலினல்லவேளாளரும்
மருப்பங்கயமொடுமாதேரைமருவவிற்
செருப்புரிதற்கெழுசேனைத்திரளும்
போதகண்ணலிற்புகழ்தருங்கல்வியும்
குணமணிகுலவலிற்குலகவிகவிகளும்
பொருவும்பங்காமபுயமெனுமணித்தடம்
ஆஞ்சைவலமாம்பூங்குழல்பொலியச்
செந்தாமரையாந்திருமுகமலர்ந்து
குவளையாங்குலவிழிகொண்டுநோக்கி
செவ்வியவள்ளையாஞ்செவிகளாலோர்ந்தின்
அமுதமூறுங்குமுதமாம்வாயிற்
புனிதமுத்தமாம்புன்னகைபுரிந்து
சுந்தரநந்தமாங்கந்தரங்காட்டித்
தங்குகுமிழியாங்கொங்கைகடாங்கித்
திகழ்சீறலையாந்திரிவலிபடைத்து
நண்ணியசுழியாநாபிஐயவாய்ந்து
சேர்ந்திடுவஞ்சியாஞ்சிற்றிடைதுடங்க
வரமங்கையாரிஞோர்மருங்கினிலிலங்க
வீற்றிருந்தருளிவிண்மண்புரக்கும்
தெய்வநாயகனைத்திருவடிதொழாரென
ஆரஞரெய்தியாளரிமதமலை
வயப்புலிமுதலியவல்விலங்களும்
குலவியதுணையொடுங்குருளைகளோடும்
குறவரும்மருட்சிகொளக்குளிர்ந்திரண்டு
செறிந்துயர்ந்தோங்குசெழுவளந்துன்னிய
கோடுயர்வரைகள்சேர்குகைகளின்மருவி
புறவுகள்பூவையர்பூங்குழற்கூட்டகிற்
புகைதவழ்மாடம்போந்துபெடைகளைச்
சிறகாலணைத்துச்சேர்ந்துவதியக்
கார்கண்டாடிக்களைத்தயர்ந்திருந்தெனக்

கலாபஞ்சுருக்கிக்கணமயிலொடுங்க
மலர்ந்தசெங்காந்தண்மலரினைக்கண்டதை
இவர்ந்தசெந்தீயெனவெண்ணிக்குதித்தவண்
குளிர்காய்வதற்கதிற்குரங்குகைநீட்ட
இரவினிலெவருமியங்குதலிலாமையாற்
கரவினிற்செலுங்கடங்காணுதொழிய
முதிர்குளிர்பொறுதுடன்முற்றும்வெளிறிக்
கொண்டறண்டலையிற்குறுந்துளிதூற்ற
கனற்றினனென்றுகாய்கதிர்க்கடவுளை
வேனிற்காலத்துவெகுண்டவர்தாமே
கனற்றிலனென்னெனுக்கரைந்துகவல
மெய்ம்மயிர்பொடித்துவிரைந்துவாய்துடித்து
மொழிதடுமாறிமொய்ம்புநடுங்கி
மேதினியோரெலாம்வெகுண்டவர்நிசர
வடபானிமிர்ந்தவான்பனிவரைநின்
றடுபுலியாமெனவதிர்ந்துசீறி
யடிக்கும்வாடைக்கலமந்தன்றே
சிவையொடுமுடியசிற்றம்பலவனுஞ்
செந்தழலுருவன்செறிநுதற்கனற்கணன்
பொருசினவேங்கைப்புலியதளுடுத்துப்
புகர்முகமருப்புப்பொருப்புரிபோர்த்துப்
புகைந்தெரிப்பூவைப்பூங்கையிலேந்தியு
மாட்டமின்னுந்தவிர்ந்திலன்றே
அன்னதாம்வாடையெம்மண்ணலாரகலம்
அணைந்தாலன்றியிவ்வாடையிலடங்குமோ
ஆருயிரனையவாய்வளைத்தோழி
வாழிவாழிநின்மாட்சிசாலுள்ளம்
நின்னைக்காணினினைவுற்றுபசரித்
தென்னைவிசாரித்திகயமுருகி

விரைவொடுநின்னெடுமேவியென்னுயிர்
என்னையணைந்திவ்வின்னலைப்போக்கி
யினிதுவாழ்விக்குமேகுதியின்னே
கசிந்தெனைக்காத்தனின்கடமையன்றே (௬௬)

## எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியச்சந்த விருத்தம்.

அன்றினரினடர்பொறிகள்வென்றுதவமெயர்வதுயர்வன்
றெணியவடையநமர்காள்
பொன்றிகிரிதவளவளைநின்றிலகுகரகமலர்பொன்ககனகிரி
யணுகவே
மன்றுமதிகலைமருவும்நன்றிவிளைமதிமருவும்வண்டுறவில்
சரிதைமருவும்
வென்றியுயர்புகழ்மருவுமென்கமலையருண்மருவும்விஞ்சுமொரு
திருமருவுமே (௮)

வரமங்கைநாயகியார் மலரடிகளே சரணம்.

## ஸ்ரீவரமங்கைக் கலம்பகம்

முற்றிற்று.

---

## ஆக்கியோன் பெயர்

மின்னார்தடமதில்வில்லிபுத்தூர்வல்லிமென்மலர்த்தாள்
மன்னார்வமோடுவணங்குநரசிம்மன்வண்மையொடு
தென்னார்வரமங்கைவாழ்தேவநாயகன்சேவடிமேற்
பொன்னார்கலம்பகமாலைவனைந்துபுனைந்தனனே. (௧)

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

---

# குறிப்புரை.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# ஸ்ரீ வரமங்கைக் கலம்பகம்.

## (குறிப்புரை).

ஸ்ரீ வரமங்கையென்பது திருமாலின் நூற்றெட்டுத் திவ்விய தேசங்களுள் ஒன்றாக வழங்கப்பெறும் சுயம்வியக்தஸ்தலம் எட்டினு ளொன்றாகிய ஸ்தலவிசேஷமாம். இது பாண்டியநாட்டுத் திருப்பதி கள் பதினெட்டிற்குந் தெற்கெல்லையாகவிருக்கிறது.

இதனை நம்மாழ்வார் ஸ்ரீவரமங்கை நகரென்றும் மங்களாசாச னஞ் செய்தருளியிருக்கிறார். இதுவே ஸ்ரீவில்லிபுத்தூரைப் புதுவை யென்பதுபோல மரூஉவென்னுமியல்பு வழக்கின்படி வரமங்கையென் றாயிற்றென்ப. தலபுராணத்தில் தோதாத்திரியென்றும் வானுத்திரி யென்றும் ஸ்ரீவல்லிமங்கா நகரமென்றுஞ் சொல்லப்படுகிறது. சில பெரியார் வானமென்பதை ஆகாசத்தின் பெயராகக்கொண்டு ஆகாயத் துக்கும் அத்தரிக்குமுள்ள பெயர்களையெல்லா முசிதமாகச் சேர்த்து வியோமாசலம் முதலிய பெயர்களை யிதற்கு வைத்து வழங்கிவருவ தாகவுந் தெரிகிறது. அவற்றுள் வானமாமலையென்பது பிரசித்தமான பெயர். இதுவும் நம்மாழ்வாரால் மங்களாசாசனம்செய்யப்பட்ட திரு நாமம். சர்க்கார்கணக்குகளில் நாங்குனேரியென்று காணப்படுகின்றது.

ஸ்ரீ என்னுஞ்சொல் தமிழில் திரு என்று வழங்கப்பெறும். தேவர், திவ்வியதேசம், புண்ணியதீர்த்தம், பகவத் சரிதம், பாகவதர் முதலிய மகிமைப் பொருள்களுக்கு அடைமொழியாய் அவற்றின்முன் ஸ்ரீராமன், ஸ்ரீரங்கம், ஸ்ரீபத்மினீ, ஸ்ரீராமாயணம், ஸ்ரீ விஷ்ணு சித்தர் என நிற்கும். இது வரமங்கைக் கண்டமொழி. கலம்பகத் திற்குமாம்.

ஸ்ரீவரமங்கை—இதற்குப் பண்புத்தொகை நிலைத்தொடராகவா வது இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்க தொடராக வாவது பொருள் கொள்க.

வரமங்கைக்கலம்பகம் இதற்கும் 2ம் வேற்றுமை யுருபும் பயனு முடன்றொக்க தொடராகவாவது ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகவாவது பொருள்கொள்க. பின்னது பொருட்பிறிதின் கிழமைப்பொருளது. இவற்றிற்கு ஸ்ரீவரமங்கையைவிஷயமாகக்கொண்ட கலம்பகமென்பது தேர்ந்தபொருள்.

இவ்வாறு பொருள்கொள்வதற்கு "திருவாளன்திருப்பதிமேல் திருவரங்கத் தமிழ்மாலை விண்டுசித்தன் விரித்தனன்" என்னுமருளிச் செயலுக்கு "தேசியரான பெருமாளைச்சொன்னதெல்லாம் உப சர்ஜன கோடியிலேயாய் அத்தேசமேயாய்த்து இத்திருமொழிக்கு விஷயம்" என்று வியாக்கியானஞ்செய்தது வழிகாட்டியாய் இராநின்றது. [உப சர்ஜனம்—அப்பிரதானம்.]

அன்றிக்கே ஸ்ரீவரமங்கையென்பது விடாதவிலக்கணையாய்அங்கு வீற்றிருந்தருளுந் தெய்வநாயகனைக் குறித்ததென்றுங் கொள்ளலாம்.

கலம்பகமென்பது தமிழுக்குரிய தொண்ணூற்றாறு பிரபந்தங்களிலொன்று. இதற்கு இலக்கணம் ஒருபோகும், வெண்பாவும், கட்டளைக்கலித்துறையும் முதற்கவியுறுப்பாகமுதலில் வரப்புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை ஊசலென்னும் பதினெட்டுறுப்புக்களும், காலத்தால் மருவிய இடைச்சியார், பிச்சியார், கொற்றியார்முதலியனவும், இயைந்திலங்க, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், வெண்டுறை, ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை, கலிநிலைத்துறை, கலித்தாழிசை ..முதலியவற்றோடிடையிடையே வெண்பாவும், கலித்துறையும் விரவ, மடக்கு, வண்ணம், சந்தம், முதலியனவும் பொருந்த வந்தாதித் தொடையான்முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்து வரப்பாடுதலாம். இவ்வாறு பாடுங்கால், தேவர்க்குநூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கெழுபதும், வணிகர்க்கைம்பதும், வேளாளர்க்கு முப்பதுமாகப் பாடவேண்டும். இவ்விலக்கணம் பன்னிருபாட்டியல், இலக்கண விளக்கம் முதலிய நூல்களிற்கண்டது.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும் புதுவது கிளந்தயாப்பின் மேற்றே" என்னும் சூத்திரத்தில் விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத்தாம் வேண்டியவாற்றால் பலவகைச்செய்யுள்களுந்தொடர்ந்துவரத் தொடுக்கப்படும் தொடர்நிலை மேலதென்று கூறினமையால் இக்கலம்பகம், அவ்விருந்தாமெனக. இதனைப்பிற்காலத்தார் சிறு காப்பியத்துளொன்றென்பர்.

கலம்பகமென்னும் பெயருக்கு நம்பூர்வாசார்யர்கள் திருப்பள்ளி யெழுச்சியென்னுந்திவ்வியப் பிரபந்தத்திலுள்ள " கலம்பகம்புனைந்த அலங்கலந்தொடைய" லென்ற தொடருக்கு "நாநாவிதமான புட்பங் களாற்" றொடுத்த மலர்மாலை போலப் பலவகைப்பாக்களாற் புனைந்த பாமாலையைக் கலம்பகமெனப் பெயரிட்டு வழங்கினர் போலுமென வியாக்கியானஞ் செய்தருளுவர்.

கலப்பு அகம் என்ற இரண்டு சொற்கள் புணர்ந்து மெலித்தல் விகாரம் பெற்றது என்று கொண்டு புயவகுப்பு முதலிய பலவகை யுறுப்புக்களையுங் குறிக்கும் பலவகை யாப்புக்களுங் கலத்தலைத்தன்னி டத்தேயுடையது என அன்மொழித்தொகைக் காரணப்பெயராயிற் றென்றுங்கொள்ளலாம்.

இப்பெயர் "முதனூல்கருத்தன்" என்ற சூத்திரவிதிப்படி நுதலிய பொருளால் வந்தபெயராம். தன்மையான்வந்ததென்றுஞ் சொல்லலாம்.

திருப்பதியின் பெயர் ஸ்ரீவரமங்கை. (வானமாமலை), பெருமாள் பெயர் வானமாமலைப் பெருமாள், தெய்வநாயகன், தோத்திரிநாதன். நாய்ச்சியார் பெயர் ஸ்ரீவரமங்கைத்தாயார். விமானத்தின்பெயர் நந்த வர்த்தனம். புட்கரிணியின்பெயர் இந்திரபுட்கரிணி; சேற்றுத்தாமரை. கிழக்கே திருமுக மண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். ஸ்ரீதேவி, பூதேவி, சேனை முதலியார், பெரியதிருவடி, சாமர கன்னிகைகள், சந் திர சூரியர், ஏகாசனம். உரோமர், பிருகு, மார்க்கண்டர், பிரமா, இந் திரன் இவர்களுக்குப் பிரத்தியக்ஷம். ஆம்பிரவனம். மங்களாசாசனஞ் செய்தருளிய ஆழ்வார் நம்மாழ்வார்.

திருவாய்மொழியில் அஞ்சாம் பத்து, ஏழாந் திருவாய்மொழி, "நோற்றநோன்பிலேன்" முதலிய (மிக பாடல்கள்), புராணம் பிர மாண்ட புராணம், இரகசியகாண்டம்.

பிள்ளைப்பெருமாளையங்காரென்ற திவ்வியகவி அழகியமணவாள தாசரருளிச்செய்த நூற்றெட்டுத் திருப்பதியந்தாதில்

"வானோர்முதலாமரமளவாவெப்பிறப்பும்
ஆனேற்கவதியிடலாகாதோ—தேனேயும்
பூவரமங்கைபுவிமங்கைநாயகனே
சீவரமங்கையரசே" என்ற 51வது பாட்டு.

பாண்டியநாட்டுத்திருப்பதிகளிலித்திருப்பதி 11வது :

(காப்புக்கள்)

காப்பு—காத்தல். இது இங்குக்காத்தருளுங் கடவுளின் விஷய மான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர். ஆகவே கவி தாமெடுத் துக்கொண்ட நூல் இனிது முடியும்பொருட்டு ஆன்றோர் வழக்கப்படி வழிபடு கடவுளையாதல் ஏற்புடைக்கடவுளையாதல் வணங்குவதொன் றாயிற்று. இருவரையும் வணங்குதலுமாம்.

நம்மாழ்வார்

இக்காப்புச் செய்யுள் பிரபன்னஜனகூடஸ்தரான நம்மாழ்வார் விஷயமானது. இது வழிபடுகடவுளின்பாற்படும். அக்கடவுளடி யாரை வணங்குவதும் வழிபடுகடவுள் வணக்கமேயாம்.

சைவர்கள் கணேசனை முதலில் வணங்குதலை மரபாகக்கொண்டி ருப்பர். வைணவர் சேனேசரின் அம்சமாகிய ஆழ்வாரை வணங்குதலை மரபாகக்கொண்டுள்ளார்.

சீரார்ந்த—சார்ந்தனனே

சேர்ந்தருளி, மேய் ஆர்ந்த பாற்கரன் என்னுள் உவந்துவந்து சார்ந்தனனென முடிக்க.

சிந்தகம்—திருப்புளி. கடலிடையுமாம். முச்சுடர்—சோம சூரியாக்கினிகள். அகம்பேரிருளென்றது-மனத்துள்ள அஞ்ஞானந்தகாரத்தை. வாய்மொழி-திருவாய்மொழி. கதிர்-சூரியகிரணம். திருவாய்மொழியாங்கதிரென்றது உருவகம். திருவாய்மொழிப் பாடலாயிரத்தையுஞ் செங்கதிரோன் கதிராயிரமாகக் கொள்ளப்பட்டது. வகுளத்தார்-மகிழ்மலர்மாலை. பாற்கரன்—சூரியன். வகுளபாற்கரன் என விசேடித்தது. இப்பாட்டிலுள்ள வியதிரேகாலங்காரத்தை (வேற்றுமையணியை) விளக்குதற்கு உபமானமாகிய சூரியனைக்காட்டிலும் உபமேயமாகிய ஆழ்வாருக்கு விசேஷங்கூறப்பட்டிருப்பது காண்க.

"வழிபடு தெய்வ வணக்கங்கூறி மங்கல மொழி முதல் வழுவாதுரைக்கில், எடுத்துக்கொண்ட இலக்கணவிலக்கியம் இடுக்கணின்றியினிது முடியுமே" என்ற விதியின்படி இப்பாட்டில் சீரென்னுமங்கல மொழி வழுவாதெடுத்துரைக்கப்பட்டது.

"சீரெழுத்துப் பொன் பூ திருமணிநீள் திங்கள்சொல், கார்பரிதியானைகடலுலகம்—தேர்மலைமா, கங்கை நிலம்பிறவுங் காண்டகையமுன் மொழிக்கு, மங்கலமாஞ்சொல்லின்வகை"—என்ற இப்பாட்டியற்பாடலால் சீர்மங்கலமொழியாதல்காண்க.

வழுவாதுரைத்தலாவது "வகையுளிசேர்தல் வனப்பின்றுய்வைத்தல், தொகைசேர்பொருள் பலவாத் தோன்றல்—தகையில், பொருளின்மை யீறுதிரிதலேபோல்வ, தகு முதற்சீர்ச்சொற்காகுந்தப்பு"

"ஆனவெழுத்தொன்பதே ழைந்து மூன்றங், காகா வெட்டாறு நான்காதிச் சீர்க்கோ"—என்ற விதிவிலகாது பாடுதல். இம்முதன் மொழியிலிக்குற்றமொன்று மின்மையுணர்க.

இவ்விதி நூன்முகத்தன்றிப் பாயிரமுகத்துங் கொள்ளப்படும். கம்பராமாயணப்பாயிரத்து முதற்பாடன்முதற்சீரில்

உலகமென்னு மங்கல மொழி வழுவா தெடுத்துரைத்திருப்பது காண்க. சீர் என்னும் மங்கலமொழி நம்மாழ்வாரென்னுந் திருநாமத்

துக்குப் பொருந்தியிருத்தலை வரையறுத்த பாட்டியன் முதலிய நூல்களையோர்ந்துணர்க.

## ஆழ்வார்கள்.

ஆழ்வார்களென்பதற்கு எம்பெருமானது திவ்விய கல்யாணகுண கணங்களாகிய கடலிலேயாழ்ந்தீடுபடுவரென்று பொருள்கூறுப.

பொய்கை-துணையே. (2) தாள்உளத்தனவென முடிக்க. பொய்கைக் குரிசில்-பொய்கையாழ்வார். காஞ்சீபுரத்துள்ள பொற்றாமரைப்பொய்கையிலவதரித்தவராதலின் இத்திருநாமமெய்தினர். குரிசில்-ஆண்பாற் சிறப்புப்பெயர். மற்றிருவர் பேயாழ்வாரும் பூதத்தாழ்வாருமாம்.

"பேயனாயொழிந்தேனெம்பிரானுக்கே" என்கிறபடியே பகவத்பத்தி பரவசராய்ப் பேய்போல நெஞ்சழிதல், கண்சுழலல், ஆடுதல், பாடுதல், சிரித்தல் முதலியவைகளை யெப்பொழுதுஞ் செய்பவராதலாலே பேயெனத்திருநாமம்பெற்றனர். இது உவமையாகு பெயர்.

"கடல்வண்ணம்பூதம்" "மறுத்திருமார்பனவன்றன்பூதம்" என்கிறபடியே பகவத்விஷய ஞானத்தால் சத்தைபெற்றவராதலால் இத்திருநாமம்பெற்றனர். "பூசத்தாயாம்" என்றபடி சத்தையுள்ளதாயிருக்கை யென்னும் பொருள் கொண்ட 'பூ' வென்னும் வடமொழி வினையடியாகப் பிறந்தபெயர்.

மாறன்-நம்மாழ்வார். திருவவதரித்ததே தொடங்கி அழுதல், பாலுண்ணல் முதலிய செய்யாது உலக நடைக்கு மாறாகவிருந்ததனால் காரியார் மாறனென்று திருநாமமிட்டனரென்ப. வல்வினைக்கு மாறாகவிருத்தலாலும், பரமதநிரசனம்பண்ணியதனாலும், பாண்டியநாட்டிற்கதிபதியாதலாலும் வந்த திருநாமமென்றலுமொன்று.

புதுவையர்கோன்-பெரியாழ்வார். புதுவையென்னும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்து அவ்வூரிலுள்ளார்க்கு நிர்வாககராயிருக்கையாலே வந்த திருநாமம்.

மெய்யைக்கொள்ளுதலாவது-தத்வ-ஹித புருடார்த்தங்களையுள்ள வாறுணர்தல்.

தொண்டரடிப்பொடி-தொண்ட ரடிப்பொடியாழ்வார். உள்ளும்புற முமொத்துப்பகவந் முகோல்லாசார்த்த கைங்கர்யஞ்செய்யுந் தொண்ட ரது திருவடித்தூள்போலே தன்னைப்பாவித்து அந்த ஸ்ரீ வைணவர்க ளுடைய திருவடிக்கீழ்க் குற்றேவல்புரிபவரைத் தொண்டரடிப்பொடி யென்றதுவமையாகுபெயர்.

பாணன்-திருப்பாணாழ்வார். பாண்-இசைப்பாட்டு. பெரியபெரு மாள் திருவடிக்கீழே வீணையுங் கையுமாய் அவனுடைய குணகீர்த்த னஞ்செய்துகொண்டு நிரந்தரசேவை பண்ணுதலாலே வந்ததிருநாமம். இசைபாடுநராகிய வோர்பாணர் குலத்தினர்வளர்க்க வளர்ந்தவராகலில் வந்ததென்னவுமாம். வியன்-பெருமை. மழிசை-திருமழிசையாழ் வார். திருமழிசையென்னும் மகீசாரக்ஷேத்திரத்தி லவதரித்தருளியவ ராதலாலே இத்திருநாமம் வந்தது. இது இடவாகுபெயர். மய்-மை யென்பதன் போலி. இதற்குக் குற்றமென்றிங்குப் பொருள். குற்ற மாவது—காமம், வெகுளி, மயக்கம். (இவைகளை) கைக்கும்-கடியும், வஞ்சிமன்-குலசேகராழ்வார். வஞ்சியென்னும் (வஞ்சிக்களம்) திருநக ரத்துள்ளார்க்குத்தலைவராதலில் இந்தத்திருநாமம் வந்தது.

மங்கைமன்-திருமங்கையாழ்வார். மங்கையென்னும் நாட்டிற்கு இறைவராயிருந்ததனாலே வந்ததிருநாமம். கோதை-ஸ்ரீ ஆண்டாள். "பாடிக்கொடுத்தாணற் பாமாலை பூமாலை சூடிக்கொடுத்தாள்" என்கிற படியே பெரியபெருமாளுக்கு வாசிககாயிகரூபமான திருமாலைகளைச் சாத்தியருளியதனாலே வந்த திருநாமம்.

மதுரகவி-மதுரகவியாழ்வார். மதுரமான கவிகளைப்பாடுதலாலே வந்த திருநாமம். இது பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொ ழித்தொகைக்காரணப்பெயர். நாற்கவிகளுளொன்றாகிய மதுரம் என் னும் பெயரிய கவியைப்பாடுபவரென்றுமாம். அக்கவியாவது—"சொன் னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கு நடைநோக்கும் முதலிய எந்நோக்குங்காண விலக்கியமாயிருப்பதாம்.

உய்கைக்கு-பிறவிப் பெருங்கடலினின்றுங் கரையேறி உஜ்ஜீவிக்கைக்கு. உயர்நெறி-மேலான உபாயம். காட்டுதல்-தாந்தாந்திருவாய் மலர்ந்தருளிய திவ்யப் பிரபந்தங்களிலே வெளியிடுதல். இதனைச்சித்தோபாயமென்ப.

முதலாழ்வார்கண்முதல் மதுரகவியாழ்வாரீறுகச் சொல்லப்பட்ட உய்கைக்குயர்நெறி காட்டுமிவர்களுடைய திருவடிகள், எற்கு உறும் துணை-அடியேனுக்குப்பொருந்திய சகாயஞ் செய்வனவாகும். எடுத்துக்கொண்ட காரியமினிதுமுடியுமென்பது கருத்து. தாள்-பால்பகா அஃறிணைப்பெயரிங்குப்பன்மைப்பொருளது.

எம்பெருமானார்.

எம்பெருமானார்-இராமாநுஜர். இது திருமந்திரம், சரமசுலோகம் இவைகளை யுபதேசித்தருளிய திருக்கோட்டியூர் நம்பி சாத்திய திருநாமம்.

மயக்கும்—உத்தமனே (3) பூதூரில் வந்தருளுத்தமன், கோளரி, மேகம் என வினைமுடித்துக்கொள்க.

இது உருவகத்தை அங்கமாகக்கொண்ட (உல்லேகம்) பலபடபுணவணி.

மயக்கும்-தத்வஞ்ஞானமுண்டாகாதபடி மயங்கச்செய்யும். அயல் மதம் ஆம்-இதர சமயங்களாகிய. மதமா-யானை. மதம்-செருக்கு. மடங்க-தலைகுனிய. நயக்கும்-யாவரும் சரியென்று விரும்பும். நியாயம்-தர்க்கமாகிய. முழக்கு-கர்ச்சனையை. உறும்-பொருந்திய. கோளரி-சிங்கம். நாவலவர்--வாக்குவல்லவர்களாகிய சிறந்த வித்வான்களும். (உயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கியது). வியக்கும்-எவராலும் நியாயவர்த்தத்தாலே மறுக்கமுடியாததென்று அதிசயிக்கும். வைணவப்பைங்கூழ்-ஸ்ரீவைஷ்ணவசமயமாகிய செந்நெற்பயிரை, வளர்த்திடும்-மென்மேலும் விருத்தியடையச்செயும். மேகம்-முகில். உலகு-உலகத்தார், இடவாகுபெயர். உலகென்பதே உலகத்தையும் உலகத்திலுள்ளாரையும் குறிக்கு மென்ப. உய-உஜ்ஜீவிக்கும் பொருட்டே.

குளிர்பூம்பொழில்-குளிர்ந்தபூஞ்சோலைகளாற் சூழப்பட்ட. பூதூரில்-ஸ்ரீபெரும்பூதூரில். வந்தருள்-திருவவதரித்தருளிய. உத்தமன்-பரமாசிரியன். மணவாள மாமுனிவன்-வரவர முனிவன். இத் திருநாமம் ஆச்சிரமஸ்வீகாரம் பெற்றுக்கொண்டபின்பு அழகியமணவாளனது திருவுள்ளத்துக் குகந்தவரென்று ஆச்சிரம ஸ்வீகாரம் கொடுத்த ஸ்வாமிபால் சாத்தப்பட்ட திருநாமம். குணவாளராகும்—வணங்குதுமே (ச) ஆற்றொழுக்காகவே பொருளமைந்திருத்தல் காண்க.

உள்ளத்தன், அத்தன் என்பன மணவாளமாமுனிவன் என்பதற்கு அடைமொழி. மலர்ப்பாதம்-உவமைத்தொகை. முனிவன்மலர்ப் பாதம்-ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். பாதம் வணங்குதும். இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். வணங்குதும் தன்மைப்பன்மைவினைமுற்று. இதற்குநாம்என்பதுதோன்றாஎழுவாய். குணவாளராகுமெதிராசர்-சகலகல்யாண குணகணோபேதராயிருக்கிற எம்பெருமானார். தாள்மிசை-திருவடிகளிலே. தணவாக-ஒருகாலும் பிரியாத. பக்திகொண்ட உள்ளததன்-பிராவண்யத்தைக் கொண்டுள்ள திருவுள்ளத்தையுடையவன். பணம் வாள் அரவு-படத்தையு மொளியையுமுடைய ஆதிசேஷனாகிய, அணைநின்று-பரியங்கத்திநின்று. உற்று-(பாலகனாக) கோஷ்டிக்கெழுந்தருளி. கேட்க-சிரவணஞ்செய்யும்படி. மாறன்மறைப்பொருள் பணித்த-ஆழ்வாரருளிச்செய்த திரமிட வேதார்த்தமாகிய ஈடு முப்பத்தாறாயிரத்தை. பணித்த-ஆனந்திக்கும்படி உபந்யாசம் செய்த. அத்தன்-ஸ்வாமி.

ஆசார்யன்.

ஆசார்யன்-ஸ்ரீ உ.ப. வே. கோயிற்கந்தாடை ஸ்ரீரங்காசார்ய அண்ணன் ஸ்வாமி. நந்தா திருவடியே-(ரு) திருவடி, சுடர், துணை, மாவிகை என முடிக்க. இப்பாட்டு (உல்லேகம்) பலபடப்புணைவணி.

நந்தா-(சோமசூரியாக்கினிகளாலும்) கெடாத. மனவிருள்-அஞ்ஞானந்தகாரத்தை. மாற்றும்-ஓடச்செய்யும். பொலஞ்சுடர்-அழகிய பாற்கரன். நன்மைஉற-எல்லா நலங்களும் கிடைக்கும்படி. வந்து ஆதரிக்கும்-எழுந்தருளி உபகரித்தருள்கின்ற. தனித்துணை-ஒப்பற்ற ஆத

ரவு. உத்தமாங்கம்-தலை. அந்தாது-அழகிய மகரந்தம். இவர்தல்-விளங்கல். மாலிகை-மாலை. செந்தாமரைக்கண் உவமைத்தொகை. அருள்வடிவாம் என்பதைச் செந்தாமரையோடன்றிக் கண்ணோடுங் கூட்டிப்பொருள்கோடலாம். முன்னது அபூதோபமை. கந்தாடையண்ணான் என்னும் பொதுப்பெயர் இங்கு எனக்குத் திருவிலச்சிட்டு மந்திரோபதேசஞ்செய்தருளிய ஸ்ரீரங்காசாரிய அண்ணன் ஸ்வாமியைக்குறித்துச்சொல்லுகின்றது.

கலைமகள்

கலைமகளென்றதுசரச்சுவதியை. இக்கலைமகளே இந்த வரமங்கை மான்மியத்தை மலைமகளிடங் கேட்டு உலகத்தாருய்யும்படி பிரசித்தியாக வெளியிட்டருளினளென புராணங்கூறுதலாலும், சூதபுராணிகர் நைமிசவன முனிவர்களுக்கு இக்கதையைச்சொல்ல ஆரம்பிக்கும்போது இந்தச் சரஸ்வதிதேவியை யுந் தியானித்துக் கொண்டு சொன்னரென்று அப்புராணமே கூறுதலாலும்.

ஸ்ரீ உப. வே. வானமாமலை ஸ்வாமி நியமனப்படி இக் கலம்பகத்தைச்செய்ய ஆரம்பித்து, கலம்பகத்தின் பெருமையையும் அடியேனறிவின் சிறுமை நோக்கி நெஞ்சங் கொஞ்சந் தளர்ந் தயர்வுறும்பொழுது "படிகநிறமும் பவளச்செவ்வாயும் கடிகமழ் செந்தாமரைபோற் கையும்" உடையராய் என்னுள்ளேவந்து தோன்றிஅபயப்பிரதானஞ் செய்தருளியதினலும் வாக்தேவதையாகையாலும் உபகார ஸ்மிருதியாலும் இந்த வணக்கங்கூறப்பட்டது.

எள்ளிய—பணிவாம். (சு) நம்மதிநலம்பெறுவான் நாம் விமலையை விருப்பொடு பணிவாம் என வினை முடிவு செய்க.

மதியென்பது புத்திக்கும் சந்திரனுக்கும் பெயராதலில் அடியேனுடைய புத்தியானது சந்திரனைப்போலக் களங்கமுற்று இன்பத்தை மாத்திரந் தருந்தனக்குரிய கலைகளையெல்லாமடைந்து பின்பு கொஞ்சங்கொஞ்சமாகக்குறைந்துகொண்டே வாராமல் காமம் வெகுளி முதலிய குற்றமற்றதாய் இன்பத்தொடு அதனுடன் சேர்த்துச்சொல்லப் படுகிற அறம் பொருள் வீடென்று நாற்பயனையும் பயக்கும் சிறந்த

கலைகளையெல்லாம் பொருந்தி எக்காலத்தும்விருத்தியடைந்துவிளங்கு தலாகிய நன்மையைப்பெறும்பொருட்டு விமலையை விருப்பொடு பணிவாம் எனப் பொருள் கொள்க. இது சிலேடையணியை யங்கமாக் கொண்டு தோன்றிய வேற்றுமையணி (வியதிரேகாலங்காரம்) ஆம்.

மறு-களங்கம், குற்றம். இன்பம்-ஆநந்தம், காமம். கலை-அமை முதலிய பதினாறு கலை; வேத முதலிய பதினெண்கலை.

அவையடக்கம்.

அவையடக்கமாவது நூலாசிரியன் கேட்போராகிய கற்றோர் குழுமிய அவையில் தன்னியல்பை வெளியிட்டடங்கிப்பேசுதல்.

தாமரைமங்கை—சூடினனே. (எ) வானசயிலத்தினன் என் கவிமாலையும்—சூடினன் என்க.

தாமரை மங்கை-பெரியபிராட்டியார். தரைமங்கை-பூமிப்பிராட்டியார். தன்மருங்கு-தனது உபய பார்சுவம். சாமரைமங்கையர்-பகவதனுக்கிரகத்தைப்பெற்ற ஊர்வசி, மேனகைகள். உம் இழிவு சிறப்பும்மை. வான்சயிலன்-வானமாமலைப்பெருமாளாகிய தெய்வநாயகன். மாமறை-வேதங்களுட்சிறந்த சாமவேதம். ஆம்-அதன் சாரமாகிய. கவிமாலை-திருவாய்மொழியாகிய மாலை. தோம்-குற்றங்கள். மறையா-வெளிப்படுகின்ற. கவிமாலை-இந்தக் கலம்பகம். உம்-இழிவுச்சிறப்பு. புயம்-திருத் தோள்களிலே. சூடினன்-தானே வலியப் புனைந்து கொண்டனன்.

---

## நூல்.

நூல் போறலின் நூலென்ப. என்னை நுண்ணியவாய பலபஞ்சியின்றுனைகளாற் கைவல்மகடூஉ செயற்கை நல்ந்தோன்ற இழைபடுத்தல்போல சுகிர்ந்து பகர்ந்த சொற்பரவைகளாலுணர்வினில் வல்லோர் எதுகை மோனை முதலிய யாப்பு நடைபடக் கோத்து நூற்கப்படுதலில். நூலென்பது தந்திரமென்னும் வடமொழியின் மொழிபெயர்ப் பென்றுங் கூறுப.

### 1-வது பாட்டு

#### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

அதாவது தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புக்களும் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், பலவாறு மயங்கிவருதலாம். இது தேவரை முன்னிலைப் படுத்ததிக் கூறற்கண் வந்தது.

இப்பாட்டிற்கண் தரவிரண்டாய் வருதலும், தாழிசையாருய் வருதலும், மிகுதி அராகம், அளவடியிரண்டாய் வருதலும், அம்போதரங்கம், அளவடியெட்டாய் வருதலும், குறை முன்வந்ததன்றி அராகவுறுப்பின்வழி பின்னுந் தாழிசை வந்தது பிறழ்வு. மேற்கூறியபடி இப்பாட்டு பலவாறு மயங்கிவருதலில் மயங்கிசையெனப்பட்டது.

பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகமென்ப. (இது கொய்சகமென்றும் வழங்கப்படுகிறது) அதுபோலக் குறியவும் பெரியவும் விராயடுக்கியும் தம்முளொப்ப வடுக்கியும் செய்யப்படும் பாட்டினைக் கொச்சகமென்பது உவமையாகு பெயர்.

கலி-என்பதற்கு எழுச்சி, பொலிவு, வேகம் என்பது. பொருள்-பா. என்பதற்குச் செய்யுளென்பது பொருள். ஆதலில் பொருளினுலும், இசையினுனும், எழுச்சியும், பொலிவும், வேகமும் பெற்று வருதலில் கலிப்பா வென்ப. தரவு-அதாவது மற்றைய வுறுப்புக்களின் பொருளைத் தொடுத்துத் தந்து கலிப்பாவின் முதலுறுப்பாய் நிற்பது. "தந்துமுன்னற்றலிற்றரவே" என்பதிதனிலிக்கணம். தரவு-தருதலுடையது. தரம்-தலை. உடலுக்குத் தலைபோல இப்பாவிற்குத் தலைமையாய் நிற்றல்பற்றித் தரவெனப்பட்டதென்றலுமொன்று. ஆயின் கழுத்து என்று பொருள்படும். எருத்து என்னும் பெயருமிதற்குண்டேயெனில், அதற்கு நச்சினர்க்கினியர் உடம்புந் தலையுமென வேறுபட்டு வழங்கும் வழக்குவகையால் உடம்புக்கு முதலெருத்தாதலில் எருத்தெனப்பட்டதென்பர். இதுவும் இதனை யடுத்துவருந் தாழிசையும் அளவடிகளாகவே வருமென்ப.

முதலாவது தரவு.

திருமருவுமென்னும் முதற்சீர் திருவென்னும் மங்கலமொழியை முதலிலுடையதாய், வகையுளிசேர்தன் முதலிய ஆநந்தமில்லாததாய் ஐந்தெழுத்துள்ளதாய்ப் பொருந்தியிருத்தல் காண்க.

திரு-அழகு. மேன்மையுமாம்-திருவென்பதற்குப் பேராசிரியர் கண்டோரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமென்பர். அதாவது யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானே அக்கண்டவற்கு அப்பொருண்மேற் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு. அவற்கு அதன்மேல் விருப்புறுதல். அதனிற் சிறந்த வுருவும், ஒளியும், நலனும் பிறிதொன்றற் கெவ்வாற்றானு மில்லாமையானே.

மருமலர் - பரிமளமுடையஞ் செந்தாமரை மலர். மலர் என்பது மலர்வது மலர் என வினைமுதற் பொருள் விகுதியாகிய இ என்பது புணர்ந்து கெட்ட பெயர். இதற்குப் பூவென்பது பொருள். இப் பெயருமது. "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்று இரே வணாராத்திரியார் விசந்தோதியிருத்தலோர்க. செவ்விய - அழகிய. செங்காலனமென்றது பெரியபிராட்டியாருக் குவமையாகு பெயர் மருமருவு- இயற்கை வாசனையையுடைய. குழல்-திருக்குழற்கற்றையை யுடைய. பொழில்ஆம் - பூமிப்பிராட்டியாராகிய. வண்ணப்பசுங் கிளியும் - அழகிய பசுமையாகிய சுகமும். (உருவகம்) கார் - மேகம். மஞ்ஞை - மயில். கார்கண்ட மஞ்ஞையென மலர்ந்து உவமையணி. இது முற்றுவமமாதலுணர்க. இருமருங்கு-உபயபார்சுவம். மலர்தலை மாநிலம்-விரிந்த இடத்தையுடைய உலகத்தை. படைப்பான் - சிருட் டிக்கும்பொருட்டு. (பானீற்றுவினையெச்சம்) மலர் அயனை - கமலாசன னை பிரஹ்மாவை. தோற்றுவிக்க-உண்டாக்குதற்கு. அலர்தலையுற்று அவிர்-மலர்ந்து விளங்குகின்ற. உந்தி அரவிந்தம்- நாபீகமலம். அணி கிளர - அழகுற்று விளங்க. பொருமலை - தன்னோடெதிர்த்தமர்புரிந்த. (முட்டிகன், சாணூரன் என்னும்) மல்லர்களை. அடர்த்து-கொன்று. வெற்றிபூதெரியல்புனை உரத்து - வெற்றி மலர்மாலை சூடிய திருமார் பிலே. கருமலைமேல் செங்கதிர்போல் - நீலமலைமேல் சிவந்த கிரணங் களையுடைய சூரியன் வீற்றிருப்பதுபோல. கௌத்துவ மாமணி-

கௌஸ்துபமென்னும் பெயரிய பெருமை தங்கிய இரத்தினத்தை. புனைந்தோய் - சூடிக்கொண்டிருப்பவனே. (உவமையணி) கருமலைமேற் செங்கதிர் முரண்டொடை. கௌத்துவம்; அமிர்தமதனம் பண்ணும் பொழுது திருப்பாற்கடலினின்றுந் தோன்றிய சிவந்த காந்தியை யுடைய வோரற்புதமணி. (௧)

இரண்டாவது தரவு.

செம்பவள மணிவாயில்-சிவந்தபிரவாள மென்னுமிரத்தினத் தினம்போன்ற திருவாயிலிருந்து. சிறுமுறுவல்-மந்தகாசம். நிலவு எறிப்ப - சந்திரிகையைச் செய்ய. இவ்வடியும் முரண்டொடையின் பாற்படும்.

விம்பவளமுழுமதியில்-மண்டலாகிருதியான அழகிய பூர்ண சந்திரனைப்போல. வீறுதிருமுகம்-சிறந்த அழகியதிருமுகமண்டலம். வேந்து - அதிபதி. விகுதியின்றிவந்த உயர்திணைப் பெயர். "விகுதி யின்றியும் விளங்குமுயர்திணை". யென்ப. அரசு, அமைச்சுமுதலியவு மிது. திண்ணம்-திருடம்; நிச்சயமென்றபடி. ஸ்ரீவரமங்கை வானமாமலை நந்தவர்த்தன மென்பதத்திவ்விய தேசத்துள்ளகோயில் விமானத்தின் திருநாமம். நவமணிவிமானம்-நவரத்தினமிழைத்த விமானம். பன்னருஞ்சீர் - சொல்லுதற்கருமையான பெருமைவாய்ந்த. ஆழிசங்கில்-சுதர்சனமும் பாஞ்சசனியமும்போல. பானுமதி-சூரியசந்திரர்கள். பாடுஒளிர-இரண்டுபக்கத்தும் விளங்க. மின்னணிகொண் மேகமென-சஞ்சல சாலங்களோடுகூடிய. மேகமென-கருமுகில்போல. மேவி-விரும்பி. வீற்றிருந்தருள்வோய்-வீற்றிருந்த திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற தெய்வநாயனே இவ்விரண்டு தரவுகளிலும் காய்ச்சீராகவே வந்தனகாண்க.

முதலாவது தாழிசை.

தாழிசைதாழும்பட்ட ஓசையுடையதாய். தரவினின்றும் அடிகளின் றொகைகுறைந்து கலிப்பாவின் இரண்டாவது உறுப்பாயிருப்பது. இதனாலிது தரவிற்கும் பின்வருமுறுப்புக்களுக்கு மிடையே வருதலிடை நிலைப்பாட்டென்ற பெயரையும் பெறும்.

ஆக்குந்தொழி லழிக்குந்தொழிலெனக்கூட்டுக. அயன் அரன்-முறைநிரனிறை. ஆக்கி-படைத்து. நிலம்-உலகை. காக்குறும் நீ-பரிபாலனஞ்செய்கின்ற நீ.

நிலம் என்பது மத்திபதீபகமாயிருந்து ஆக்குமழிக்குமென்பவற் ரோடும் பொருந்திப்பொருள்படுதலுணர்க.

கூனி-மந்தரை. கைகேயி சொல்லாலென்னுது கூனி சொல்லா லென்றது அவள் சொல்வதற்கிவளே காரணமாதலில்.

காத்தற்குச் சர்வஞ்ஞத்வம், சர்வசக்தித்வம் முதலியகுண வேண் டுகையாலே தானே கைக்கொண்டருளினனென்ப.

சுகன்-சுகப்பிரமரிஷி. முன்னும்-முதலாகிய. குகன்-சிருங்கி பேரபுரத்தரசனுன ஓர்வேடன். முன்னுமுனம்-நினைப்பதற்குமுன்பே. தோழமை-நட்பு. பத்திரம்-மங்களம், பேரின்பமுமாம். பரமபதம்-ஸ்ரீ வைகுண்டம். சித்திரகூடம்-கோதாவரி நதிக்கரை யருகிலுள்ள ஒரு பருவதம். இளவல்-இளையபெருமாள் (இலக்குவன்). குடில்-பர்ண சாலை. விழைந்தனை-ஆசைப்பட்டாய். புகலிடம்-தஞ்சம். அபயதா னம்-அபயப்பிரதானம். முனை-முன்னை.- இடைக்குறை. முன்பு-அதாவது ஸ்ரீராமாவதாரகாலம். முனிபுல்-உலர்ந்த நாணற்புல். வரு ணன்-சமுத்திர ராஜன். மையகம்-அஞ்ஞானந்தகாரம் மூடிய மனம், முக்குற்றமுமுடைய மனமுமாம்.

மாண்பு-மாட்சிமை. நுவலற்பாற்றே-சொல்லத்தக்கதோ? இல்லை யென்றபடி. ஏகாரம் எதிர்மறைப்பொருளது. இத்தாழிசை யடிக ளிலுள்ள நாற்சீரும் காய்ச்சீராகவே வந்தன.

இவை நான்கும் ஈரடி அராகங்கள்.

அராகமாவது அறுதுகடுகிச்சேறல். அதாவது குறிலிணையாலா கிய நிரையசைச்சீர்களையே பெரும்பாலும் பெற்று மாத்திரை நீளுத லுமிடையே துணிதலுமின்றி கடுகுச்செல்லுமடிகளால்வருவது.

இதற்கு வர்ணித்துப்புகழ்தலாலே வண்ணகமென்றும், முடுகிச் செல்லுதலாலே முடுகியல் என்றும், சீர்கள் செறிந்து நிற்கும்படியடுக் கப்படுதலாலே அடுக்கியலென்றும் பெயர்களுண்டு. இதற்கு அடி, அளவடி முதலியன. அடிகளுக்குச்சுருக்கம் நான்கு. பெருக்கமெட்டு.

(க) சசிபதி மகவு-இந்திரன்மைந்தனுன வாலி. சரம்-பாணம். நிசி தொலை கதிர்மகன்-சூரிய குமாரனுன சுக்கிரீவன். இதில் இராவணனை வெல்ல வல்ல மகா பலசாலியான வாலியைக்கொன்று அவனுக்குத் தோற்றோடியொளிந்துகொண்டிருந்த சுக்கிரீவனைப்புரந்து தோழனுகக் கொண்டானென்கையாலே ஆச்ரதகார்யாபாதகமாகிய நான்கு குணங் களில் சர்வஞ்ஞத்வஞ்சொல்லப்பட்டது. சர்வஞ்ஞத்வமாவது விடும தறிந்து விடுகையும் பற்றுமதறிந்து பற்றுகையுமாம்.

(உ) விதி-பிரமா. விபுதர்-தேவர். உம் உயர்வு சிறப்பு. உறலருங் கதி-விலட்சண மோட்சம். கழுகு என்றது சடாயுவென்னும் பெயரிய பெரியவுடையாரை.

இதிலப்பிரமாதி தேவர்களுக்குங் கிடைத்தற்கரியவிலக்ஷண மோ க்ஷத்தை அற்பமானதிரியக்ஜாதியிலே பிறந்த பெரியவுடையாருக்குத் தந்தருளினனென்கையாலே சர்வசக்தித்துவஞ் சொல்லப்பட்டது. சர்வசக்தித்வமாவது - அநாதிகாலார்ஜிதமான பாபங்களையெல்லாம் போக்கி நித்யமுத்தரோடொருவராம்படிசேர்க்கை. அற்பமென்றது. சாதனுநுட்டானம்பண்ணுகைக்கு யோக்கியதையில்லாமையை. கழு கினை-வேற்றுமை மயக்கம்.

(ங) மொழிதருபொருள்-வியவாகாரயோக்யமான வஸ்துக்கள் அவை முழுவதும் ஏவைகளோ? அவைகள் எல்லாவற்றையும். உடைமையில்-உடைமையாகக்கொண்டிருத்தலாலே (அப்பொருள்களி டத்து) ஒழிவினை-வெறுப்பையும். விழைவினை-விருப்பையும். ஒழி-விட்டருளிய உயர்நிலையினை-மேலான தன்மையையுடையை. இத னுலே பூர்த்தி சொலப்பட்டது. அதாவது அவாப்த சமஸ்தகாமத் வம் இதனை "வேண்டுதல்வேண்டாமை"யென்பர். செந்நாப்போதார்,

(ச) எவர்களும் - அஞ்ஞர்களும் ஞானிகளும். உம் இனைத்தறி பொருண்மேல்வந்தமுற்றும்மை. அதாவது அஞ்ஞர்களும் அசக்தர்களு மாகிய பத்தசேதனர்களோடு நித்யமுத்தர்களோடு வாசியற யாவர்களு மென்றபடி. நலமுற-ஆனந்தத்தை யடையும்படி. இருமுதுகுரவரில்-பெருமை தங்கிய பிரியபரையானதாயும், ஹிதபரனுகிய தந்தையும் போல. கருதியவையருள் - பிரியமாயும் ஹிதமாயுமிருந்துள்ள சர்வா பீஷ்டங்களேயுந் தந்தருளுதற்குரிய குடார்த்தொடக்கையுடையை. இதனுல் பிராப்தி சொல்லப்பட்டது. இதுவே சர்வசேஷித்துவம்.

இவை யளவடி நான்கு வந்தன. இவை நான்கும் கருவிளஞ் சீராகவே வந்தன காண்க. இவை முழுவதுங் குற்றெழுத்தாகவே யமைந்தது ஓர்வகைச் சொல்லணி. இவற்றுள் ஐகாரமுங் குறுக்க மாகலின்.

## இரண்டாவது தாழிசை.

(க) குரக்கரசு ஆதியர் - வாநரர்க்ளுக்குத் தலைவனுன சுக்கிரீவ மகாராஜா முதலியோர். கூற்றும் - பிரீதிபூர்வகமாகச் சொன்ன வார்த் தைகளேயும். உம்மை உயர்வு சிறப்பு. அரக்கரரசு இராக்ஷசாதிபதி யான விபீஷணுழ்வான். இதில் மகாராஜர் முதலியோர்களுடைய வார்த்தைகளேயு மங்கீகரியாது விபீஷணுழ்வானுக் கபயப்பிரதானஞ் செய்தருளித் தமது சமீபத்தில் மிகவும் அந்தரங்கனுக அங்கீகரித் தருளின னென்கையாலே ஆச்ரயணசௌகர்யாபாதகமாகிய நான்கு குணங்களுள் வாத்சல்யஞ் சொல்லப்பட்டது.

அதாவது ஈன்ற கன்றினிடத்தில் தாய்ப்பசு வைத்திருக்கும் அன்பு போன்ற அன்பினை யடியார்கள்பக்கல் (சர்வேச்சுரன்) வைத் திருக்கை. அதாவது சுவடுபட்ட தரையிலே புல் தின்னுத பசு, தன் கடையாலே புறப்பட்ட கன்றினிடத்துள்ள மலங்களேத் தன்வாயாலே தழும்ப நக்கி முன்னணைக்கன்றுகளேயும் புல்லிடவந்தவர்களேயும் கொம்பாலுங் குளம்பாலு மொறுத்துத் தன் முலைப்பாலைப் பக்கத்

தணைத்தூட்டி வளர்க்குமாப்போலே, அடியார்களுடைய தோஷங்களைப் போக்கியமாகக்கொண்டு விரோதிகளைப்போக்கித் தன் கல்யாண குணங்களாலே அவர்களைத் தரிப்பிக்கையாம்.

(உ) பத்தவிலோசனமென்பது ஓர் ஆலமரம். இதனடியில் கண்ணன் ஆயர்சிறுவர்களோடு பேதமில்லாமல் ஒருவன் கொண்டு வந்த கட்டுணவை மற்றொருவருமுண்டு கூடுக்களித்திருந்தனரென்ப. 2வது பத்தவிலோசனம்-அடியார்களது கண்கள். களிக்கும்படி-ஆநந்திக்கும்படி. ஆயர்பாலரொடும்-கோபாலர்களுடனே. கூட்டுண்டு-ஒருவருணவை யொருவர் பலாத்காரமாகக் கொண்டுண்டு. திளைத்தனை-அபேதமாகக்கலந்து விளையாடினை. இதனாலே சௌசீலஞ் சொல்லப்பட்டது.

அதாவது சிறியவரோடு பெரியவன் வந்து கலந்தால் தன் பெருமை யவர் நெஞ்சிற்றோற்றாது நம் விதேயரான பந்துமித்திரர்களிலொருவரென்று தோன்றும்படியிருக்கை. இக்குணத்திற்குச் சீலம் என்று பெயர் கூறாது சௌசீலமென்றதென்னையெனில் இப்படிக் கலப்பது அவர்களுக்குக் கார்யஞ்செய்வதாக அன்றிக்கே அது தன் பேறாக நினைத்திருக்கை. சுசீலத்தின் தன்மை சௌசீல்யம்.

(ங) உலகமெலாம் நின்னுடைய-எல்லாவுலகங்களும் உன்னுடையனவாம். நீ-உடையோன்-நீஸ்வாமி எனும் முறைமை-என்று சொல்லும் கிரமம். இலக-விளங்கும்படி. இகல் கடிந்து-விரோதிகளைப் போக்கி. நலம் இழைத்து-நன்மைகளைச்செய்து. அவற்றை-அந்தச் சொத்தை. புரந்தனை-பரிபாலித்தாய். இதனால் ஸ்வாமித்வஞ் சொல்லப்பட்டது. அதாவது ஆசார்ய சமாச்ரயணத்தாலே சம்யக்ஞானத்தைப் பிறப்பித்து ப்ராப்யத்தில் உருசியைப் பிறப்பித்து பரபக்தி

பரஞ்ஞானம், பரமபக்தி இவைகளையும் பிறப்பித்து லோகப்பிராப்தியைப்பண்ணிக்கொடுத்து அனுபவஜனிதப்பிரீதிகாரிதமான நித்ய கைங்கர்யத்தை யேவிக்கொள்க.

(ச) காரியமாய்-செய்யப்பட்டயாவுமாய். காரணமாய்-திரிவித காரணமுமாகி. திரிவித காரணமாவன-சமவாயி (முதற்காரணம்) சககாரி (துணைக்காரணம்). நிமித்த காரணம்) என்பன. உபாதான காரணமென்பதும் முதற்காரணம். கரந்தெங்கும் பரந்துளரீ—ஒருவருமுணராதபடி அந்தர்யாமியிருக்கிறரீ. இதனாலே அகில செகத்சொரூபியாய் அந்தராத்மாவாய் சர்வ வியாபகனானரீ என்று சொல்லப்பட்டது. பாரிலெவருங்காண-சேதனா சேதனவி...ாகமற யாவரும் சேவிக்கும்படி. பார்த்தன்றேர் ஊர்ந்தனையே-கௌந்தேயனான அர்ச்சுனருக்கு இரதசாரதியாயிருந்தாயே. இதனாலே சௌலப்யஞ்சொல்லப்பட்டது. அதாவது-அதீந்திரியமான பரவஸ்து இந்திரியகோசரமாம்படி தன்னை யெளியனாக்கிக்கொடுக்கை. இத்தாழிசையடிகளிலுள்ள நாற்சீரும் காய்ச்சீராகவே வந்தனகாண்க.

அம்போதரங்கங்கள்.

அம்போதரங்கமாவது உயர்ந்தோங்கிப்பெருவடிவாயெழுந்து வர வரச்சுருங்கிக் கரையடைந்தொடுங்கு நீர்த்திரை போல முன்னர் நாற்சீரடியாய் உயர்ந்தோங்கிப் பின்னர் முச்சீரடியாயதனிற் சுருங்கி அதன் பின்னர் இருசீரடியாய் அதனினுஞ் சுருங்கி முடிவது.

நாற்சீர் கொண்ட இரண்டாய், இரண்டும் நாற்சீர்கொண்ட அடி ஒன்றாய், நான்கும் முச்சீர்கொண்டஅடி ஒன்றாய் எட்டும். இருசீர் கொண்ட அடி ஒன்றாய்ப் பதினாறும் வருவதே சிறப்புடைய அம்போதரங்கமாம். சிறுபான்மை முச்சீரோரடியாய் நான்கு வருதலும்; இருசீர் ஓரடியாய் எட்டுவருதலுமுண்டு. சிறுபான்மைக்குக் கூறிய படியே இப்பாட்டியற்றப்பட்டிருக்கிறது.

நாற்சீரடியிரண்டடிகளைப் பேரெண் என்றும், நாற்சீரோரடி நான்கினையனவெண் என்றும், முச்சீரோரடிகளை இடையெண் என்றும், இருசீரோரடிகளைச் சிற்றெண் எனவுங் கூறுவர்.

## பேரெண்.

(1) சங்கொடு கையினை-பாஞ்சனிய சுதர்சனங்களைத் தரித்த திருக்கைகளையுடையவனே. மங்குலே. மெய்யினை-நீருண்டகரிய மேகத்தையொத்த திருமேனியையுடையவனே.

(2) அன்றுடநெய்யினை-கிருஷ்ணவதாரத்தில் திருஆய்ப்பாடியிலுள்ளார் கிருகங்களிலிருக்கிற பாலொடு நெய்யையுமுண்டருளினவனே. குன்றலில். மொய்யினை-குறைதலில்லாத பேரன்பினையுடைய கஜேந்திரனென்னும் யானையையுடையாய். மொய்-யானை. இவை நாற்சீர் ஈரடியால்வந்தமையால் பேரெண்ணும். நாற்சீரோரடியாய்வரும் அளவெண் இங்கு கூறப்படவில்லை.

## இடையெண்.

(க) விரை. மிலைந்தனை-வாசனை பரிமளிக்கின்ற திருத்துழாய் மாலையைச்சூடினாய். துளவம்மாலைக்கு கருவியாகுபெயர்.

(2) குவகுள் மலைந்தனை-கோபாவேசங்கொண்டெதிர்ந்த குவலயாபீடமென்றும் யானையைப் பொருதுகொன்றனை.

(ங) தரையிவர்ந்தனை-பூமியுலுள்ளார் யாவருங் கொண்டாடும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே வடபத்ர சயனரென்னுந் திருநாமத்தோடும் பிரகாசிக்கின்றாய். (திருவரங்கமன்னனாரென்றுந் திருநாமத்தோடும்) தரை-எல்லாரும் என்னும் பயன்படவந்த இடவாகு பெயர்.

(ச) தருவரின்கவர்ந்தனை-இராவணாதி யிராக்கதர்களின் உயிரைக்கொள்ளை கொண்டனை. உறவி-உயிர். இவை நான்கும் முச்சீரோரடியாய் வந்தமையிலிடையெண்.

## (சிற்றெண்)

(க) மறையறைந்தனை-பிரமாவுக்கு அம்சரூபியாகவும் அயக்கிரீவ ரூபியாகவும் சேவைசாதித்து வேதங்களையெல்லாம் உபதேசித்தருளினாய்.

(2) பொறைநிறைந்தனே-க்ஷமாவென்னுந்திவ்விய குணத்தாலே பரிபூர்ணனாயிருக்கின்றாய். இயல்பினாலே நிகழ்கால மிறந்த காலமாயிற்று. அல்லது பூமியைக்குறிக்கும் பொறையென்னும் பெயர் இடவாகுபெயராய் அதன்மேலுள்ள சராசரமனைத்தையுங் குறிப்பதாகக் கொண்டு அவையெல்லாவற்றிலும் ஒழிவறநிறைந்துள்ளாயெனவும் பொருள் கூறலாம்.

(3) வரையெடுத்தனே-கோவர்த்தனமென்னுமலையை, கோபாலர்களையும், கோக்களையும் இந்திரனேவலின்படி பொழியு மழையினாலுற்றுன்பமுறாதபடி காப்பதற்காகக்குடையாகக் கையிற்கொண்டருளினாய். அல்லது கமடவடிவாய் அமுதமதனகாலத்தில் மந்தரமலை கடலின் மூழ்காதபடி முதுகிலே தாங்கியருளினாயென்றுங் கூறலாம்.

(ச) திரைதடுத்தனே-கடலிலே வானரவீரர்களைக் கொண்டு சேதுபந்தனஞ் செய்தருளினாய். திரைகடலுக்குச் சினையாகுபெயர். ஏவுதற்கருத்தா-இது.

(ரு) நிறைகொழித்தனே-எங்கணு நிரந்தரமாக நிறைந்துறையுமியல்பினை. இரணியனெற்றுந்தூணத்தினின்று நரசிங்கரூபியா யவதரித்துயாவருக்குந்தெரியும்படிசெய்தனே. அல்லது, நிறை-நியாயங்களை. வேதம் முதலிய சாஸ்திரங்களாலே யாவருமுணர்ந்துய்யும்படி வெளிப்படுத்தியருளினாயென்றுமாம்.

(சூ) குறையொழித்தனே-"குறையொன்றுமில்லாத கோவிந்தா" வென்று கூவிக்காரியங்கொள்ளும்படிஅவாப்தசமஸ்தகாமனாக எழுந்தருளியிருக்கிறாய். அடியார்களுக்கு நேருங்குறைகளைப்போக்கியருளுகிறாய். நிகழ்காலத்தாலே வியவகரிக்கவேண்டியமுக்காலத்தினுமொத்து நிகழும் வினையை இறந்தகாலத்தாற் கூறியது விரைவிற் செய்தருளுகிறானென்னுந் துணிவுபற்றி.

(எ) நிரைபுரந்தனே-பசுக்கூட்டங்களை அசுரர்களால் வருமாபத்துக்களைப்போக்கி மேய்த்துக் காப்பாற்றினாய்.

(அ) தரைகரந்தனே-பூமியைப்பிரளயாபத்திலே இரட்சித்தருளுகைக்காக திருவயிற்றிலொளித்து வைத்தருளினாய். தராவென்னும் ஆவிறையாயிற்று.

இவையெட்டும் இருசீரோரடியாய் வந்தமையில் சிற்றெண் என்னும் பெயர் பெற்றது. இப்பாட்டில் சிறுபான்மைவருமென்ற இலக்கணப்படி முச்சீரோரடி நான்கும், இருசீரோரடியெட்டும் வந்தன காண்க.

தனிச்சொல்.

அதாவது தனியே சொல்லப்படுமொருசீராய்ப் பொருணிரம்பி விட்டிசைத்துப்பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னே நிற்பது. விட்டிசை, கூன், தனிநிலையென்னும் பெயருமிதற்குண்டு.

எனவாங்கு-என்றிப்படி இஃதோரசைநிலை.

சுரிதகம்.

அதாவது தனிச்சொல்லுக்குப்பின் அகவற்பா, வெண்பாவென்னும் இரண்டனுள் ஏதாவதுஒன்று கலிப்பாவினிறுதியுறுப்பாய்நின்று முடிவது. நலிந்து சுரிக்கப்படுவதென்பதிதன் பொருள். வடநூலார் இதனை ஸ்வரிதகம் என்ப. இது சுரிதகமெனத் தற்பவமாயிற்று "சுரிந்திறுதலிற் சுரிதகம்" என்பாருமுளர். அடக்கியல், போக்கியல் வாரம், வைப்பு, என்றுமிதற்குப் பெயருண்டு.

(க—உ) முழங்குகின்ற கடலிற்காந்த சோமுகாசுரனைக்கொன்று வேதங்களைக்கொண்டுவந்து பழையபடி பிரமாவுக்குக் கொடுத்தருளிய மீனவுருவனே.

(ந—ச) தன்னைச்சரணாகதிபண்ணிய தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுத்தருளுவதற்காகமதனஞ்செய்யும் மந்தரமலையை வகித்த கூர்ம சொரூபனே.

(ரு·சு) பூமியைப்பெயர்த்துக்கொண்டு கடலுக்குள்ளொளித்த இரணியாக்கனைக்கொன்று பூமியைக்கோட்டிலேந்திவந்து பழையபடி நிலைபெறச்செய்த பரிசுத்தமான வராகவடிவனே.

(எ-அ) இரணியனுடைய மார்பையும் அகங்காரத்தோடு எதிர்த்துப் போர்புரிந்த உருத்திராம்சமான சரபமென்னுமெண்காற்

புள்ளினுடலையும் பெருமை பெற்ற நகங்களாலே பிளந்த நரசிம்மச் சொரூபனே.

(கூ-ய) சிவந்த திருவடிகள் கன்றும்படி மகாபலிசக்கிரவர்த்தியிடம் நடந்துபோய் மூன்றடி மண்ணையிரந்த காளமேகத்தை யொத்த வாமன வடிவனே. மேகம்-பிரதியுபகாரங்கருதாது தருதற்கும் திருமேனி நிறத்துக்குமுவமை.

(யக-யஉ) துர்ப்புத்தியை யுடையார்களாகிய கொடுங்கோன் மன்னரை இருபத்தொருதலைமுறைவரை மழுப்படையினாலேஅழித்த கோபமிக்க பரசுராமனென்னுந் திருநாமமுடையானே.

(யங-யச) நன்மைபயக்குந் தருமங்களெல்லாந் தழைத்தோங்கி இவ்வுலகமுஜ்ஜீவிக்கும்படி இலங்கைபாழாகப்படைதொடுத்தபெருமை தங்கிய விஜயகோதண்டபாணியாகிய தாசரதியே. நலம்-தருமத்துக்குக்காரியவாகுபெயர்.

(யரு-யசு) அளவில்லாத அஞ்சாமையையுடைய அசுராம்சரான அரசர்களையழித்து உலகத்தையளிப்பதற்காக அழகியகையிலே அலாயுதத்தையேந்திய சங்கம் போன்ற வெண்மையான திருமேனியையுடையானே.

(யஎ-யஅ) தன்னையே பரமாத்மாவென்று தெளிந்து சகலருமுஜ்ஜீவிக்கும்படி கேட்ட மாத்திரத்தானே பிறவிக்கேதுகன்மங்களையெல்லாம் போக்கியருளுகின்ற ஸ்ரீபகவத் கீதாசாஸ்திரத்தை அர்ச்சுனனுக்குத்தேர்த்தட்டிலிருந்து வித்தாரமாகப்பொருள் விரித்துபதேசித்தருளிய ஸ்ரீகிருஷ்ணனே.

(யகூ-உய) துட்ட நிக்கிரகஞ்செய்து சிட்டபரிபாலனஞ்செய்த கற்கிவடிவமுடையவனே.

(உக-உஉ) எல்லாராலுங்கொண்டாடப்படுகின்றவனே யடியேங்களையடிமை கொண்டருள வேண்டுமென்று சிறப்புடையார்களாகிய முனிவர்களும் யோகிகளுந் துதிக்கின்ற தெய்வநாயகனே.

(உங) வாழ்வாயாக வாழ்வாயாக ஸ்ரீயப்பதியே வாழ்வாயாக.

(உச—உஎ) பூவடிவு—செந்தாமரை மலர்வண்ணம். தகவு—தகுதி, விதிப்படி. வினையேன்—பாபியாகியநான். வேண்டிடும்—பிரார்த்திக்கும். மெய்வரம்—நிலைமையான வரம். யாதெனில் என்னவென்றால்.

(உஅ—உகூ) (எப்பொழுதும்) ஒருபடியாய் நிற்கின்ற தன்னுடையதல்லாததைத்தன்னுடையதாகவும் ஆன்மா அல்லாத சரீரத்தை ஆன்மாவாகவும் நினைக்கின்ற அந்யதாஞ்ஞானமும், அதற்கனுகுணமான பரத்திரவியாபகாரம் முதலிய துர்நடத்தைகளும், குற்றமென்பன எவைகளோ அவைகளெல்லாம் கூட்டங்கூடிக்கொண்டிருக்கும் மல மூத்திராதிகளாகிய அசுத்த பதார்த்தங்களைக் கொண்டுள்ள உடலுமாகிய இவைகளை.

இனி—நின்னையடைந்த பின்பு. உன்னாலல்லது செல்லாதென்றிருந்தபின்பு என்றுமாம். யான்உறாமல்—அடியேனடையாதபடி. நின் இணையடிகளுக்கே—உன்னுடைய உபயசரணாரவிந்தங்களுக்கே. தொண்டுசெய் ஆக்கி—அடிமைசெய்கின்ற அடியார்க்கடியனாகச் செய்து. தொல்லைவினைகளைப்போக்கி—சஞ்சிதமும், அநப்யுபகதமென்னும் பிராரப்தமுமாகிய பூர்வ கன்மங்களையொழித்து. குற்றேவல்கொண்டு—அடிமைகொண்டு. அருள்கூர் என்பது ஏ—கிருபை தழையவேண்டுமென்பதேயாம்.

### இருவிகற்ப நேரிசைவெண்பா.

இருவிகற்பமாவது முதலிரண்டடியோரெதுகைத்தாயும் பின்னிரண்டடியோரெதுகைத்தாயும் வருவது. நேர் என்பதற்குத் தலைமை, தகுதியென்றும், இசையென்பதற்கு ஓசை, சொல் என்றும் பொருளுண்மையில் தக்க ஓசையும், தக்கசொற்களும் வருதல்பற்றி நேரிசையெனப்பட்டது.

வெண்பா வெண்மை நிறத்தினது இயல்புபோன்ற இயல்பைத் தன்னிடத்து முடைமையி விப்பெயர்த்தாயிற்று. இது ஒப்பினாலாகிய பெயர். இயல்பாவது வெண்ணிறம் வேறொருநிறத்தொடுகலந்தபின் கேடுறல் போல இது வெண்டளையின்றிப்பிறதளை விரவியவழி இசைகெடுதலாம்.

இரண்டாம் பாட்டு.

(இ-ள்.) வரமங்கைக்கொண்டலை—ஸ்ரீவரமங்கலநகரில் வீற்றிருந்த திருக்கோலமாயெழுந்தருளியிருக்கிற மேகவண்ணனாகிய தெய்வநாயகனை. (கொண்டல் உவமையாகுபெயர்) பதுமாதனத்தன்—திருமாமகள் தனதடங்களிலமர்ந்திருப்பவனென்றும், பதும ஆதனத்தன்—கமலாசனனான பிரமதேவனுக்கும், மதுமாதன்-வசந்தகாலத்திற்குரியவனாகியமன்மதனுக்கும், அத்தன்-தந்தையாயிருப்பவனென்றும், வனத்தன்—திருத்துழாய்மாலையை யுடையவனென்றும். விதுமான்—சந்திரனைச் சிரோபூஷணமாகக் கொண்டிருப்பவனாகிய சிவபெருமானது. சிரம்—பிரமகபாலத்தை. அங்கைக்கொண்டு-அழகிய கையிலேதாங்கி. அலை-பலிக்காக ஊர்தோறும் அலைந்து திரிதலாகிய. நோய்-துன்பத்தை. தீர்த்தவனென்றும்- போக்கியருளியவனென்றும். சொல்வார்-உரைப்பார்கள் தத்வஞ்ஞானிகள் எ-று வனத்தன் என்பதை வல்நத்தன் எனப்பிரித்து வலிமையான பாஞ்சசனியமென்னும் சங்கத்தை யுடையவனென்றும் பொருள் கூறலாம். இங்கு தமிழ் நூலார் வழக்கின்படி முக்காலத்தினு மொத்தியல் பொருளை எதிர்காலமாகச்சொல்லப்பட்டது.

இவ்வெண்பா நாற்சீர் முச்சீர் நடுவே தனிச்சீர் நாற்சீர் முச்சீர் பெற்று நாள் என்னும் வாய்பாட்டால் முடிந்தது.

கட்டளைக் கலித்துறை.

கட்டளை-அளவு நேரசை முதலாகத்தொடங்குமடிகளுக்கு எழுத்துப்பதினாறென்றும், நிரையசை முதலாகத்தொடங்குமடிகளுக்கு எழுத்துப் பதினேழென்றும் கட்டளைபெற்று வருதலாலும், துறை தாழிசை, விருத்தம் என்னும்பாவினம்மூன்றுள் இப்பாட்டுக் கலிப்பாவின் இனமாகிய துறையாதலாலும் கட்டளைக்கலித்துறையெனப் பெயர் பெற்றது. இதற்கிலக்கணம், "அடியடிதோறுமைஞ்சீராகி, முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது, கடையொரு சீரும் விளங்காயாகிக் கட்டளைக்கலித்துறை கலிக்குமென்ப" "நேர்பதினாறே நிரைபதினேழென்றோதினர் புலவ ருயர்கலித்துறைக்கே" என்பனவாம். கடையொருசீரும் விளங்காயாகி எனவிதந்தோதலால் முதற்

சீர் நான்கும் பெரும்பாலும் இயற்சீர்களேயாகவும் சிறுபான்மை அவற்றோடு தேமாங்காய்ச்சீரும், புளிமாங்காய்ச்சீரும் விரவியும் வரப் பெறுமெனவும் வரப்பெறுமிவைகளுள்ளும் குறினெடினிரையசையா விற்ற இயற் சீரும், நெடில்நேரசையாலிற்ற காய்ச்சீரும்மருவாதென் றும், அங்ஙனமுமன்றி அம்முதற்சீர் நான்கனுள் கருவிளங்காய் கூவிளங்காய்ச் சீர்கள் வந்துபொருந்துமாயின் எழுத்துக்கள் மேற் கூறிய அளவின்மிக்குச் செய்யுளின்பங் கெடுமெனவும், நெடில்நேர சைச்சீரை நடுவேயுடைய மாங்காய்ச்சீர் சிறப்பிலதாய் ஓரடியுளொன் றருகிவரு மென்றும் அடியிறுதியில் வருதற்குரிய விளங்காய்ச்சீருள் நெடினேரசையாலிற்ற காய்ச்சீரும் வருமென்றுங்கொள்க. பின்னும் ஈற்றுச்சீர்களாகிய விளங்காய்ச்சீர்களிரண்டில் கூவிளங்காய்ச்சீர்க்குப் பதிலாகஅதனோ டொருபுடையொத்தனவாகிய தேமாங்கனி தேமாந் தண்பூச்சீர்களும் கருவிளங்காய்ச்சீர்க்குப் பதிலாக அதனோடொரு புடையொத்தனவாகிய புளிமாங்கனி, புளிமாந்தண்பூச்சீர்களுஞ் சிறு பான்மை வருமெனவுங் கொள்க. சிலர் "ஒற்றளபாய்விடினேரல காம்" எனவே அளகெழாதவழி ஒற்றுக்கள்சீருந்தளையுஞ் சிதையில லகுபெறு வெனக்கொண்டு வெண்பா, கட்டளைக்கலித்துறை முதலிய வற்றிலே சீர்தளை சிதைவுழி இருகுறிற்கு நடுநின்ற ஒற்றெழுத்துக் களை இவ்விருகுறிலுமிணைந்து நிரையசையாதல் வேண்டி நீக்கியல கிடுவர்.

இவ்வாறு கொள்வதற்குப் பின்னுமாதாரமாக, "சொல்லாரும் வல்லினமெல்லினமோடிடை தோன்றுமொற்று, நில்லாது நேர் நேர் நிரையென்றுரைப்பர் கிரம்பிய நூல், கல்லாத மாந்தர்கடேமாங்கனி யென்பர் கற்றுணர்ந்த, நல்லாரனைவருங் கூவிளங்காயென்று நாட்டு வரே." என்றவிதியையுங் காட்டுவர்.

ஆயினும் "வண்டுண்டுழாய்ப் பெருமான் மதுசூதனன்றாமோ தரன்" என்றும், "முற்றேறுழுது மலருகற்றூரெம்பிரான் நம்பி யாரூரனே" என்றும் சொல்லப்படும், திருவிருத்தம், தொண் டர் திருவந்தாதி கட்டளைக் கலித்துறையடிகளிலே வந்திருக்கிற "தாமோதரன்" "ஆரூரனே" என்ற ஐந்தாஞ்சீர்களில் முற்கூறிய விதியின்படி ஒற்றெழுத்துச் சீர்கொள்ள முடியாமையோர்ந்துணர்க.

முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது என்றதினாலே கடையொருசீரும் நிரைமுதலாகவந்த கட்டளைக்கலித்துறைகளிலே வெண்டளை பிழைத்துவருமெனக் கொள்க.

கட்டளைக்கலித்துறை திலகக்கலித்துறையென்றும், கோவைக் கலித்துறையென்றுமிரு வகைப்படும். மேற்கூறிய இலக்கணமுடையனயாவும் திலதக்கலித்துறையேயாம்.

கோவைக்கலித்துறையாவது ஈற்றடி மூன்றாஞ்சீர்ச் சொல் பக்குவிட்டு முதற்சீரோடொன்றி ஒழுகிய ஓசைத்தாய்வரும். இரண்டாஞ் சீர் நாலாஞ்சீர்களும் ஓசைபிரிந்தொழுகின் மிக்கச்சிறப்புடையதென்பர்.

இக்கட்டளைக்கலித்துறைக்கு விருத்தம்மென்றும் ஆன்றோரால் வழங்கப்படுகிறது. இதற்குக் காரிகையென்றும் பெயருமுண்டு. இங்குக் கூறப்பட்டவிலக்கண முறையானே இக் கலம்பகத்துவரும் கட்டளைக்கலித்துறையின்னவாறு வந்திருக்கின்றன வென்றோர்ந்துணர்க. இதுவரை கூறியவை மற்றொன்று விரித்தலே யென்று மனநாணுகின்றது. அமைதியாகக்கொள்ள. (2)

மூன்றாம் பாட்டு.

ஓராயிரந்த உய்குவீரே (௩)

இ-ள். ஓர் ஆய்-மூன்றுதாய்மார்களிலொரு சிறியதாயாகிய கைகேயி. அந்த-அங்குள்ள. மிடைகான்-மரமடைந்த காட்டில். சென்று இரு என்ன-போய்ப் (பதினான்கு வருடம்) இருப்பாயாக. என்ன-என்று சொல்ல. செல்-தட்டாது உடனே போன. உம்பர்க்கிறை-(தோதாத்திரி நாதனாகிய) தெய்வ நாயகனது. சீர்-சிறந்த கலியாண குணங்களை. ஆயிர்-ஆராய்கின்றீரில்லை. அந்தம் இல் பேரின்ப் வீட்டினில்-அளவில்லாத பேரனந்தத்தையுடையஅந்தாமத்தினில். சேர்த்தருளும்-அடைவித்தருளும். பேர்ஆயிரந்தமில்-சகத்திரநாமங்களில். ஒன்றேனும்-ஒருதிருநாமத்தையாயினும். அன்போடு-பிரீதியோடு. பேசுகிலீர்-சொல்லுகிலீரில்லை. ஊராய்-ஊர்தோறும். இரந்து-யாசகஞ்செய்து. அமிழ்த்துக்கு-வயிற்றுச் சோற்றுக்காக. உழல்வீர்-சுற்றிச்சுற்றியலைகின்றவர்களே. எங்ஙன்-எவ்வாறு. உய்குவீர்-உஜ்ஜீவிப்பீர்கள். (௩)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

"ஐயொருசீர்நிறைதருபாதநெடிலடியாம்" என்றும்

"மிக்கபாதங்கழிநெடிலே" என்றும் சொல்லுபவாதலில் இப் பாட்டிலொவ்வோரடியிலும் ஆறுசீர் வருதலாலே அறுசீர்க்கழிநெடிலடியென்று விசேடிக்கப்பட்டது. சீரும், பொருளும், இசையும், நுண்மையவாகப்பெற்று ஆசிரியர் அறிவித்தல்போலப்பொருள்களை யறிவித்து நிற்றலில் ஆசிரியப்பாவென்றும், அப்பாவின் இனமாகிய தாழிசை, துறை, விருத்தமென்னும் மூன்றிலிது விருத்தமாகலில், ஆசிரியவிருத்த மெனப்பட்டது. இவ்விலக்கணத்தை மேல்வரும் ஆசிரியவிருத்தத்திற்கெல்லாங் கொள்க.

(இ-ள்) குவிதனத்தாராய் இருந்தும்-குவித்து வைத்திருக்கிற பொருளையுடையவர்களாயிருந்தும். மாக்கள்-மிருகங்களைப் போலப் பகுத்தறிவில்லாதவர். பாடிய விதனத்து-கவிபாடி யோர்பிரயோஜனமும் ,பெறுத துக்கத்திலுலே. ஆராய்வு இன்றி-உணர்ச்சியொழிந்து. துங்க இதன் நத்து-மேலான நன்மையை விரும்புகிற. ஆரா அன்பால-பேரன்பினலோ. உய்ய அருள்-உஜ்ஜீவிக்கும்படி கிருபை செய்யவேணும். கமலப்பூவின்-செந்தாமரை மலரில் வீற்றிருந்தருளும் பெரியபிராட்டியார். புவி-பூமிப்பிராட்டியார்-தனத்தார்-திருமுலைத்தடங்களிலணிந்து கொண்டிருக்கிற திருமாலைகளினது. மன்றல் கமழ்-வாசனை பரிமளிக்கின்ற. புயத்தாய்-திருத்தோள்களை யுடையவனே. வரமங்கை-ஸ்ரீ வரமங்கையென்னுமதிவ்ய தேசத்தில் வீற்றிருந்தருள்கின்ற. புனித-பரிசுத்தனே. மாலே-அடியார்களைக் காப்பாற்றுவதில், மிகுந்த பிரேமத்தையுடையவனே. நீ உய்யவருள்-எனமுடிக்க. (௪)

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரியச் சந்த விருத்தம்.

இதன் இலக்கணம் 4வதுபாட்டிற் சொல்லப்பட்டது.

இதன் சந்தக்குறிப்பு தனதனதனத் தனன தனதனதனத் தனன தனதனதனத் தனனா.

புனிதருணயக்கு வியப்படையவே. (ரு)

(இ-ள்) புனிதர் உள்நயக்கும் உஞற்றிலன்-சித்தபரிசுத்தியை யுடைய பாகவதர்கள் திருவுள்ளமுவந்தருளும் ஒருகாரியமும் செய் கிலன். மெய்கொளேன்-வாய்மைமையையே வழங்கும் இரகசியார்த்தங் களைப் பெரியோர்களிடம் வழிபாடியற்றிச் சிரவணஞ்செய்கிலேன். துனிதரு-கருதினேன்-எப்பொழுதும் துன்பத்தையே விளைவிக்குஞ் செல்வத்திலும் இளப்பருவமுடைய மாதர்களுடைய தனதடங்களிலு மின்பமுளதென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். கனிதருநத் திலன்-உருகிய நெஞ்சத்துடனுன்னை ஒரு சிறியகாலவளவுகூட விரும் பினேனில்லை. ககனசயிலத்தலைவ-வியோமாத்திரி நாதனே. உய்கதி-அடியேன் உஜ்ஜீவிக்கும்வழி. நினைக்கடைக்கணருளே-தேவருடைய கிருபாகடாக்ஷமேயாம். ஏ-பிரிநிலை. (ஆதலாலே) எவர்-யவே-யாவ ரும். இறும்பூதெய்தும்படி இனிதருளி-நன்ருகக்கடாக்ஷித்து. நற் புகழ்கொள்-இதுவரை நீயடைந்துள்ள கீர்த்தியைக்காட்டிலும் மேலா னதான கீர்த்தியையடைவாயாக. (ரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச் சந்த விருத்தம்.

சந்தக்குறிப்பு.

தனத் தத்த தானதன தனத் தத்த தானதன தனத் தத்த தானதன தனத் தத்த தானதன்ன.

(பா) வியப்புற்ற நாக நகமே (சு)

(இள்) வியப்பு உற்ற-இறும்பூதெய்திய. (இறும்பூது எய்தற்குக் காரணம்) தனதிருப்பீடமாகிய சத்தியலோகத்தில் திடீரெனத் தோன்றியது. போதன்-கமலாசனனுகிய பிரமன். அரி-அடியார் களின் பாபங்களைப் போக்கியருள்பவனுகிய திருவிக்கிரம மூர்த்தி யினது. எழில் பற்பபாதமென-அழகிய திருவடித் தாமரையென்று (சங்க சக்கிராதிலாஞ்சனங்களாலே) நிச்சயித்து. மிகப்பத்தியோடு-அத்தியந்த பக்தியுடனே. கழுநீர் - திருமஞ்சனஞ் செய்த தீர்த் தத்தை. பெயப்பெற்ற-தரிக்கத்தக்க பாக்கியத்தைக்கொண்ட. வேணி-சடாமகுடத்தையுடைய பரமசிவனும். அவன் இடத்து உற்ற-அப்

பெருமானது இடது பாகத்திற் பொருந்திவர்த்திக்கிற. ஏணி-மான் பிணையினது கண்போலுங் கண்களையுடைய பார்வதியும் ஆகிய இவர்களது. துதிபெற-தோத்திரத்தை அங்கிகரித்தருளுவதற்காக. சக்கரபாணி-சுதர்சனத்தைவகித்த திருக்கையையுடைய தெய்வநாயகன். உறையூர்-வீற்றிருந்தருளுந் திவ்யதேசம். நயப்பு உற்ற-மேம்பாடடைய அடைந்த. நாகர் நகர்-தேவர்களின் நகரமாகிய அமராபதி. இதற்கு-இந்த ஸ்ரீ வரமங்கல நகரத்திற்கு. ஒப்பாகுமோ-இணையாகுமோ. இல் என-ஒருகாலுமில்லையென்று. நகைத்திட்டதோவென-பரிகாசஞ் செய்து பற்களெல்லாம் வெளியேதோன்றும்படி சிரித்ததோவெனும்படி. மிள் ஆர்-ஒளி நிரம்பிய. பொன் சயப்பாதகை-அழகிய வெற்றிக்கொடிகள். பொலி-விளங்குகின்ற. பொருப்புஒத்த-மலைகளைப்போன்ற. மாடம் மலி-திருமாளிகைகள் நிரம்பியுள்ள. திருப்பெற்ற-கல்வி செல்வமென்னும் இருவகைச் செல்வத்தையுமுடைய. நாக நகமே - வானமாமலையேயாம். கொடிகள் ஆகாயத்தை யளாவி விளங்குகின்றதைத் தேவர் நகரமாகிய அமராபதியைப் பார்த்துச் சிரிக்கிறதாகச் சம்பவித்திருத்தலாலே தற்குறிப்பேற்ற (உத்பிரேக்ஷாலங்காரம்) அணி. (௬)

நேரிசை வெண்பா—திருவடிவகுப்பு.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

திருவடி வகுப்பு ஆவது பாட்டுடைத் தலைவனது திருவடிகளின் சிறப்புக்களைக் கூறுவது.

(பா) நகமடர் திருத்தாள் (எ) ..

தாள் நடந்த; நடித்த, அளந்த, சேர்ந்த என்க.

நகம்-மரம்-மலையுமாம். நாகம் - காளிங்கனென்னும் சர்ப்பம். ஜெகம்-உலகம். சுகமலி-இன்பமிக்க. தோதாத்திரியார் - ஸ்ரீவரமங்கையில் வீற்றிருந்தருள்பவரும். திருத்து - (சேதனர்களைத் தன் கிருபையாலும், புருஷகாரத்தாலும் சீர்திருந்தச் செய்கின்ற. ஆள்வினை-முயற்சியை. ஆர்ந்தார்-பொருந்தியவராகிய. மா-பெரியபிரா

ட்டியாரையும், தாத்திரியார்-பூமிப்பிராட்டியாரையு முடையவராகிய தெய்வ நாயகனது திருத்தாள். எ-று (எ)

கட்டளைக் கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) திருத்திய ரிதென்னே (அ)

அலைந்து, மலைந்து, தொண்டு, வினை செய்து, அடைவீர்,

வான்மலை மாலையெண்ணீர் இது என்னே-என்க.

திருத்தியருக்கும் பொருள்- (எவ்வளவுமிகுதியாயிருந்தாலும்) மன திற்குத் திருப்தியைக் கெடுக்குஞ்செல்வம். தீயவஞ்சக்கருத்தியர்-கொடுமையான வஞ்சக நெஞ்சையுடையவர். அருத்தியர் உக்கும் வினை-விருப்பமுடையவர்களும் பயப்படும்படியான செய்கை. இரந்து கேட்பவர் மனமிற்றுப் போகும்படியான காரியமென்றுமாம். அடைவீர்-அடைகின்றவர்களே நீர். இருத்திய-சகல சம்பத் சமிர்த்தியையுடைய. ருக்கும-பொன்மயமான. வான்மலை மாலை-வானுத்திரியில் வீற்றிருந்தருளுந் தெய்வ நாயகனை. எண்ணீர்-தியானிக்கின்றீரில்லை. இது என்னே-இது என்ன மூடத்தனம். எ-று. (அ)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரியச் சந்த விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

சந்தக்குறிப்பு.

தந்ததன தந்ததன, தந்ததன தந்ததன, தந்ததன தந்ததன
தந்ததன தந்த தனனு.

குருகு-ஓர் நீர்ப்பறவை; நாரையுமாம். குருகுவிடு தூதாவது-தலைவனைப்பிரிந்து வருந்துந்தலைவி தலைவனிடத்துத் தன்னிலையைச் சொல்லும்படி நாரையென்னு நீர் வாழ்பறவையைத் தூது செல்ல வேண்டுதல். இத்துறை ஐந்திணைக்கோவையில் களவியலில் ஒரு வழித்தணத்தலென்னும் கிளவித்தொகை ஏழில் ஒன்றாகிய சென்

றுழிக்கலங்கலின் விரிபன்னிரண்டில் சென்றேன் நீடவிற் காமமிகக் கழிபடர்கிளவியாம். அதாவது தலைவன் மாலைக்காலத்தளவும் வாராது காலம் நீட்டித்தலால் காமமிக்குப் பக்கத்துள்ள கடல். கானல், பொழில் விலங்கு புள் முதலியவற்றை நோக்கிச் சிறப்பச் சிந்தித்துத் தலைவிசொல்லுஞ் சொல்லாம்.

(பா) என் கண்மிக சொலுந்தொழுதரோ. (கூ)

வெண்குருகுகாள் வன்கொடுமை யென்செயலை விண்சயில வம் புரியர் பொன் செவிசொலுமெனமுடிக்க.

(இ-ள்) அழல-கோபிக்க. வன்கண்-கொடுமை. புன்கண்-நோய்; துன்பமுமாம். வன்கொடுமை யென்-வன்மையான பொல்லாங்கை யுடையேனது. மின்குலவு—ஒளி தழைத்த. பொன் என்றது இங்கு வெண்பொன்னாகிய வெள்ளியை. சிறைய - வெள்ளியைப் போலும் வெண்மையான இறகுகளையுடைய. பொன்செவி—அழகிய திருக்காது கள். தொழுது—வணங்கி. தொழுதுசொலும் என்றதனாலே தொழுது சொல்வதற்கு இடமுங் காலமும் பார்க்கவேண்டுமென்று நியதி யில்லை யென்க. (கூ)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) தொழுங்குல வணங்கிமாதோ (ய)

தோதாத்திரி நாயகனே. உம்பர்கோனே மனத்திடைக்கண்டேன் (கண்டு) வணங்கி மகிழ்கொண்டேன். துயர்விண்டேன் என முடிக்க.

(இ-ள்) தொழுங்குல வேதியரென்றது உரோமச மகாமுனி வரை. அம்முனிவருக்கே வைகுண்டத்திலிருந்து அண்டமுழுதும் அநந்த கோடி சூரியர்கள் ஒரே காலத்திலுத்தது போல தேஜோ ரூபியாய் எழுந்தருளினரென்று அந்தத்தலபுராணம் புகலுதலாலே. உம்பர்கோன்—தெய்வ நாயகன் என்பதன் பரியாயபதம். மழுங்கு மனம்—கூர்மையற்றபுத்தி. துயர் என்றது பிறவித்துயரை எ-று (ய)

வண்ணம் எடுத்த சந்தமிடையிடுரூதுறல்.

தானந்த தானதன தானந்த தானதன தானந்த தானதன
தததத்தத தனந்தன.

புயவகுப்பு-பிரபந்தத் தலைவனது திருத்தோள்களைப் பலபடியாக வர்ணித்துத் துதித்தல்.

(பா) மாதங்கனுதியர்——கொற்றப்புயங்களே.

உம்பர் நாதனது கொற்றப்புயங்கள் ஒவ்வோரடியினது எட்டாவது சீர்தோறுமுள்ள முதப்பத்தொரு பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்களுக்கும் எழுவாயாயிருத்தல் காண்க.

(இ-ள்.) மாதங்கன் - அயிராவதமென்னும் யானையினையுடைய தேவேந்திரன். ஆதியர் என்றது முப்பத்துமுக்கோடி தேவர்களை. ஆதங்கம் - மனவருத்தம். அதாவது துர்வாசமுனிவரது சாபத்தாலே வந்தது. மாஅம்புராசி - கருங்கடல். வரை - மந்தரபருவதம். (க)

முதலடி.

மாமைந்தனுன் - பெருமை தங்கிய பிரகலாதாழ்வார். நலியோன்-பல வகையாகத் துன்பப்படுத்தியவனுகிய இரணியகசிபு. விந்தநாகம்-விந்தியபருவதம். தனுது உகிர்—நரசிம்மரூபத்தைக்கொண்ட தனது நகம். நட்டு-உள்ளே செலுத்தி.

(2) மாமங்கையார் - பெரியபிராட்டியாரின் அம்சமாகிய ஜானகியாரது. நுதலை-புருவத்தை. இது எயுங்கொலொ-இது ஒப்புஆகுமோவென்று. மாது அங்கனுர் சிலை - உமாதேவியாரை யோர்பாகத்திற் கொண்டவனது பினுகமென்னும் வில்லை.

(3) வாய் - சீதாசமேதனுய் மிதிலாநகரத்திலிருந்து அயோத்தியாபுரிக்கு எழுந்தருளுமிடைவழியிலே. தந்த - இதனை நாணேற்றுகவென்று கொடுத்த. வார்சிலையில்-நீண்டவில்லிலே. எவுவொன்றைவிடு-ஒரு பாணத்தை விடுத்து. எதிர்வாதஞ் செய்தோன் - எதிர்வழக்குச்

சொன்னவனுன பரசுராமனுடைய. செய்அறம்-செவ்விய தருமங்களை. முற்ற-முழுமையும். கவர்ந்தன-அப்பாணத்திற்கு இரையாக அபகரித்தன. (௪)

இரண்டாமடி.

ஏதங்களே புரிய - கெடுதிகளையே விளைப்பதற்காக. மேல்உந்து - தன்மேலேவிய. மால்கரியின் - மதமயக்கத்தையுடைய குவலயாபீடமென்னும் யானையினது. ஏர் ஒன்று கோடுகள் - அழகுபொருந்திய கொம்புகளை. திருக்கி-முறுக்கி. (௧)

ஈரம் கொளாத - இரக்கத்தை நெஞ்சிற்றரியாத. மலர்-முட்டிகன் சாணூரனென்னு மல்லர்களது. பேரங்கமாமலையை - பெரிய உடலமாகிய வரையை (உருவகம்). ஈர் என்று எஞ-ஓர் கருப்பங்கழிபோன்றதென்றலக்ஷியமாக நினைத்து. ஈர் - கரும்பு; பேன்முட்டையுமாம். கருமை, பருமை யென்னும் பண்படியாகக் கார்பார் என்னும் பெயர்கள் வருவனபோல இருமையென்னும் பண்படியாகக்கார்என்றுவந்தது போலும். இருமை-பெருமை. கரும்புக்குப் பெருமையாவது திரிலோகவிஜயியாகிய சித்தசனுக்கு வில்லாயிருக்கும் பெருமை. எவரும் விரும்பும் இனிய இரசத்தையுடைத்தாயிருக்கையுமாம். ஈரமென்னும் பெயரும் கரும்புக்கிலக்கியங்களிற் காணப்படுகின்றதினுலே எப்பொழுதும் ஈரமுடையது ஈரம் என வினைமுதற் பொருண்மை விகுதியாகிய இகரம் புணர்ந்து கெட்டதென்றுங் கொள்ளலாம். அழகு என்னும் பொருளதாகிய ஈரமென்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய்க் கரும்பை யுணர்த்தியது. ஈறுகெட்டு வழங்குகின்றதென்றுங் கொள்ளலாம்.

(2) ஈடு-ஒப்பு. குருகு-பகாசுரன். ஏசு-இழிக்கப்படும் பொருள்களை; முதனிலைத் தொழிலாகுபெயர். உண்ட-உண்கின்ற. ஏர்-அழகு. ஆயர்மகளார் என்றது நப்பின்னைப்பிராட்டியாரை. எருதுஎழ் என்றது தாரகாசுரனது யுத்தத்திலே மடிந்த காலநேமி யென்னும் அசுரனது புத்திரர்களெழுவரும் ஆயர்பாடியிலுள்ள கும்பனென்னுங் கோபாலனுடைய கொட்டத்துள்ள கோக்களிடத்துப்பிறந்த காளைகளேழை. (௪)

கும்பனது வேண்டுகோட்கிணங்கி அந்த அசுராவேசமுள்ள ஏழெருதுகளையு மடர்த்து ஸ்ரீ கண்ணபிரான் நப்பின்னைப்பிராட்டி யாரை மணம் புரிந்துகொண்டனனென்பது. (ஸ்ரீபாகவதம்)

மூன்றாமடி.

சீதம் - குளிர்ச்சி. இதுமலருக்கடை. தம்பி என்றது பரதாழ்வானை. நோவு ஒழிசெய இது பாதுகத்துக்கடை. தேசு ஒன்று-காந்தி பொருந்திய. இது இடைப்பிறவரல். நோவு - தன் தாயினது சொல்லாலே தாசரதி தானாளுதற்குரிய இராஜ்யத்தை இழந்து தாமரைத் தாள்கனோவ ஜானகியோடுந் தண்டகாரண்ணியஞ் சார்ந்தனனே என்றதனாற் சேர்ந்த துன்பம். (க)

என்று - சூரியன். தேரொன்றிலேறியவனாகிய என்று என்க. மாமதலை-அச்சூரியனது சிறந்த புத்திரனாகிய சுக்கிரீவன். சீர்விஞ்ச-சிறப்பதிகரிக்கும்படி. (உ)

தேம்-பரிமள மிகுந்த சந்தனக்கலவையை. பண்பாகுபெயர். உந்து-சமர்ப்பித்த. நந்த-கெடும்படி. அந்தமான்முலை - அந்த அழகிய பிணை போலும் விழியினையுடையாளது தனதடங்களை. திளைத்து - மருவி. பிறங்கின-விளங்கின. (ங)

தேன்உந்து-மகரந்தத்தைப் பெருக்குகின்ற. தார்-மாலை. விசயன்றேரிவுளி-அர்ச்சுனனது தேரிற்பூட்டியகுதிரைகள். சேண்-ஆகாயத்து விளங்குகிற. இந்துநேர்உற - சந்திரனைப்போலப் பிரகாசிக்கும்படி. மினிக்கி - தேய்த்து அழுக்குப்போக்கி. (ச)

நான்காமடி.

கோது அங்கு அடா - குற்றமதாமுள்ள அவ்விடத்துச் சேராத. இடையர் மாமங்கைமார் - பொதுவியர்கள். கேழ்மன்றலார்களபம் - சிறந்த பரிமள நிறைந்த சந்தனக்கலவை. (க)

கோ விண்குலாமலரும் - பூமியிலும் சுவர்க்கத்திலும் விளங்குகின்ற புஷ்பங்களையும். குருகூரன் சொல்லான வேதங்களாமலரும் -

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய சாமவேதசாரமான திருவாய்மொழியாகிய பாமாலையையும் ஒக்க—கூட. (உ)

கோலஞ்செய்-திருக்கைகளுக்கு அழகைச்செய்கின்ற. ஆழிவளை-சங்கசக்கரங்கள். மேல் ஒன்றலால் - திருக்கைகளுக்கு மேலே தங்கியிருத்தலில். ஒளிர்செய் - பிரகாசத்தை விளக்கின்ற. கோள்தங்கு-சூரியனும் சந்திரனுந் தங்கியிருக்கிற. மால்வரைகளொத்து-மேலான உதயகிரியும், அத்தமனகிரியையும்போல—(தற்குறிப்பு). (௩)

கோவிந்தனும் - மாகமலை - வியோமாத்திரியில். மேவு-வீற்றிருந்தருள்கின்ற. தயாவுததி-கருணைசாகரனுமாகிய. கூறு-யாவருந் துதிக்கும். உம்பர்நாதனது - தேவநாயகனது. கொற்றப்புயங்களே-வெற்றிபெற்ற திருத்தோள்கள் எ-று. (௰௧)

நேரிசை வெண்பா.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

பூவைவிடுதூது.

எட்டாம் பாட்டிற் சொன்ன விலக்கணமே இதற்கும். ஆனால் இது பக்கத்துள்ள பொழிலிலுள்ள கிள்ளையைத் தூதுவிடுவது.

(பா) (௰௨) புயங்கநகநாகமனையான்—சேர்ந்து. (௰௨)

சுவாகதமே நீ, புயங்கநகநாகமனையானாகிய நாகமலையான் முயங்க அவன்பாற் தூதுசொல்லச்செல் (அவ்வெம்பெருமான்) சுவாகதமேயென்று (இங்கு) சேர்ந்து அருளும். (௰௨)

(இ-ள்.) புயம் - திருத்தோள்கள். கநகநாகம் அனையான்-சுவர்ணமயமான மகாமேருவை யொத்தவனும். பொற்பு ஆர்ந்து-அழகுநிறைந்து. வயங்கு - விளங்குகின்ற. அநகம் - நிர்மலமான. நாகமலையான் - வானத்திரீசனுமாகிய் தெய்வநாயகன். முயங்க-என்னைவந்தணையும்படி. சுவாகதமே-கிள்ளையே நீ, தூதுசொல்ல அவன்பாற் செல். சுவாகதமேயென்று (உன்னைக் கண்டவுடன் உன் வரவு நல்வரவாகுக வென்று வரவேற்றுபசரித்து) சேர்ந்து - உன்னுடன் இங்குவந்து. அருளும் கிருபை செய்யும். (௰௨)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன் சொல்லப்பட்டது.

(பா) (௰௩) சேராதவரையரை—ஒரு விலையே. (௰௩)

அரையல் நெஞ்சே சேண்சயிலன் தவர் ஐயர் ஐ தெய்வநாயகன் சேவடியை யோராதவரை துன்பு ஒரு விலை என்க.

(இ-ள்) சேராத அரையரை - தன்னைச்சேர்ந்த பாண்டவர்களுடன் பகைத்த துரியோதனாதியரை. மாய்ப்பதற்கு - ஒவ்வொருவராக அழிக்கும்பொருட்டு. திகிரிகொண்டு - சக்கரப்படையினாலே. தேர் ஆதவரை - ஒற்றைச் சக்கரம் பூண்ட தேரையுடைய சூரியனை. அரை நொடிக்குள் - அரைக்கணத்தளவிலே. மறை-மறைத்தருளிய. சேண் சயிலன் - வானுத்திரீசனும். சீர் ஆ - சிறப்பாகிய. தவர்-முனிவர்களுக்கும். ஐயர் - தேவர்களுக்கும். ஐ - தலைவனுமாகிய. தெய்வநாயகன் - தேவநாதனது. சேவடியை - செவ்விய பாதங்களை. ஓராதவரை - தியானியாத பரியந்தம். துன்பு ஒரு விலை-பிறவித்துன்பத்தை யொழியாய் (ஓர்ந்த கணத்திலொழிப்பாய்) (௰௩)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) பொருமலைவென்றானும்—வான்மலைநின்றானே. (௰௪)

பொருமலைவென்றானும் முதலிய 15-ம் எவன் அவன் வான்மலை நின்றானே என்க.

(க) எதிர்த்துப் போர்புரிந்த மல்லர்களைச் செயித்தவனும், (உ) திருவேங்கடமென்னும் திருமலையிலே நின்ற திருக்கோலமாய் யெழுந்தருளியிருக்கிறவனும், (௩) ஞானசொரூபியாயெங்கும் வியாபித்துள்ளவனும், (ச) வேதங்களி னுட்பொருளா யவற்றிற் றங்குகின்றவனும், (ரு) பெரிய மந்தரவரையைக் கடல்கடையும் மத்தாகவுடையவனும், (சு) கருங்கடலையொத்த கரியதிருமேனியை யுடையவனும், (எ)

சொர்ண பீதாம்பரத்தையுடையவனும், (அ) மேன்மையையுடையவனும், (௯) மற்றெல்லாக்கல்யாணகுணகணங்களுள்ளும் கிருபாகுணமே மேலிட்டிருப்பவனும், (௰) செய்யவளாகிய திருமகளை விரும்பியவனும் அல்லது திருமகளாராலே விரும்பப்பட்டவனும், (௰௧) சத்தியபாமைக்காகத் தேவலோகத்திலுள்ள கற்பகப்பூஞ்சோலையை அவளது கொல்லைத் தோட்டத்திற் கொணர்ந்து நட்டவனும், (௰௨) குவலயாபீடமென்னும் யானையைக் கொன்றவனும், (௰௩) வருணனிடத்தில் கடலிலணைகட்டுதற் கனுமதி கேட்டவனும், (௰௪) கிருபைதுளிக்குமின்சொல்லையுடையவனும், (௰௫) மயக்கமும் சலிப்புமில்லாதவனும், (௰௬) வானுத்திரியில் வீற்றிருந்தருள்பவனே எ-று. (௰௪)

கலித்தாழிசை.

இது கலிப்பாவின் இனம் மூன்றிலொன்று. இதனிலக்கணம் இரண்டுமுதலிய பலவடிகளாலீற்றடிமிக்கு ஏனையடிதம்முளளவொத்து நிற்பத் தனித்தேனும், ஒரு பொருண்மேல் மூன்றடுக்கியேனும் வருவது. இது முதன்மூன்றடி நாற்சீராய் இடைமடக்காய் ஏனையடி எண்சீராய் மிக்குவந்தது. அம்மனை அதாவது மூன்று பெண்கள் கூடி அம்மானையென்னும் ஓர் விளையாட்டைப் புரியும்பொழுது பிரபந்தத்தலைவன் றன்மையினை ஆக்ஷேப சமாதான பூர்வகமாகச் சிறப்பித்துக் கூறுவது.

(பா) வான்மலை—— அம்மானை. (௰௫)

ஆற்றொழுககாகவே பொருள்கொள்க.

(இ-ள்.) வான்மலை - வானமாமலை. வையகத்தை - பூமியை. மால் மழையில் - கருமேகம்போல. தண்ணளியால் - கிருபையினலே. வாழ்விக்கும் - இரட்சிப்பான். வாழ்விக்குமாயின் (ஆக்ஷேபம்). பசியன் - பெரும்பசியையுடையவன். பால்அனம்போல - தன்னிடம் கிடைத்த உணவினைப்போல. ஏன் ஏற்று உண்டான்-எதற்காகக் கையால் வாங்கியருந்தினன். கையில் எடுத்துண்டருளியதும் (சமாதானம்). பாலனமேல்-பிரளய வெள்ளத்து அழியாது காப்பாற்றியதென்றல். இயம்புவது என் - குற்றங்கூறுவதெதற்கு. (௰௫)

## நேரிசை வெண்பா.

இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) அங்கமலங்களை——சேர்ந்து. (மசு)

நேர்ஆய் நெஞ்சே தோதாத்திரியைச்சேர்ந்து துங்கமலர் மாதாத் திரியை வலமிடங்கொள் மாயவனை அங்கமலங்களை நேர் அங்கிரிகளைத் தொழுது இ அங்கமலம் களை என்க.

(இ-ள்.) நேர் ஆய் நெஞ்சே - நேர்மையான மார்க்கங்களையே ஆராய்கின்ற வென்மனமே. தோதாத்திரியைச்சேர்ந்து - வானமாமலை யை யடைந்து. துங்கமலர்மா-மேலான செந்தாமரைமலரில் வீற்றிருந் தருளும் பெரியபிராட்டியாரையும். தாத்திரியை-பூமிப்பிராட்டியாரை யும் வலம் இடம் கொள் - வலதுபக்கத்தும் இடதுபக்கத்தும் வைத் துள்ள. மாயவனை - விசித்திரகுண சேஷ்டிதனுகிய தெய்வநாயகனது. (வேற்றுமை மயக்கம்) அம்கமலங்களை நேர் - அழகிய செந்தாமரை மலர்களை யொத்த. அங்கிரிகளை-திருவடிகளை. தொழுது-துதித்து இ அங்கமலம் - இந்தச் சரீரமாகிய அழுக்கை. களை - போக்குவாய். (மசு)

## பதினுன்கு சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

சந்தக்குழிப்பு.

தானதனதானதனதானதனதானதனதானதனதந்ததனனு.

தவமாவது பகவத் பிராப்திக்கு விரோதியான சரீரசம்பந்தாதி களை யறுத்து எம்பெருமானை யடையவிரும்பி "தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையு, மென்னுமிவையே நுகர்ந்துடலந் தாம் வருந்தித், துன்னுமிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன், மன்னுமழல் நுகர்ந்தும் வண்டடத்தினுட்கிடந்தும், இன்னதோர் தன்மையராய்" என்கிறபடியே மனம் பொறிவழிபோகாது நிற்றற் பொருட்டு (நீர்பருகியும்) (காற்று நுகர்ந்தும்) காய் கனி கிழங்கு சருகு முதலியவைகளைத் தின்றும் கோடைகாலத்தில் பஞ்சாக்னி

மத்தியிலும், மாரிகாலத்தும் பனிக்காலத்தும் உடலிற்பாசியேறும்படி நீர்நிலையினிடையிலும் நின்று அவற்றால் வரும் துன்பங்களைப் பொறுத்து உடலையொறுத்து நோன்பிழைத்தல். இவ்வாறு வருந்தவேண்டா, யான் சொல்லுகிறபடி செய்து உஜ்ஜீவியுங்களென்று பரோபதேசஞ் செய்வதாகும்.

(பா) சேரவரிதாம்——கடுகவே. (மஎ)

மேவி, அயின்று, ஓரீஇ, நிலா, புரியும், மாதவமது ஏதுஅவம். அகோ தவமயர்ந்து உழலுவீர் மேவி, வானவர்கோன் அடியை இறைஞ்சுமின் அவண்சார முடியாதெனில் இருந்து, எனு வோதும் இயலாதெனின் அனுன் அடியை மேவக்கடுகநிலையும்.

(இ-ள்.) அடவி - காடு. அவை - இலை முதலிய அந்தப்பொருள் களையும். ஓரீஇ - உண்ணுதொழித்து. தீரம் - தைரியம். சேயதரை - செவ்விய பூமியிலே. ஒன்றிட-பொருந்தும்படி. நிலா-நின்று. கோரம்-குரூரம். மிகவே-மிகும்படி. புரியும்-செய்யும். மா-பெருமை தங்கிய. தவம் அது ஏது - தவத்தினுல் யாது பிரயோஜநம். அவம் - வீணே. அகோ-ஐயோ; இரக்கக் குறிப்பிடைச்சொல். தவமயர்ந்து-வேண்டிய வேண்டியாங் கெய்தலாமென மிகவுமயங்கி உழலுவீர் - வருந்துகின்றவர்களே. (நீங்கள்) கோசயிலமாநகரமேவி - வானமாமலை யென்னும் பெருமை தங்கிய திருநகரியை யடைந்து. அவிர் - அங்கு வீற்றிருந்த திருக்கோலமாக விளங்குகிற. வானவர்கள்கோன் - தெய்வநாயகன். அடி-திருவடிகளை. இறைஞ்சுமின்-வணங்குங்கள். அவண்சார முடியாதெனில் - அத்திவ்யதேசத்திற்குப்போக வன்மையில்லையானுல். ஆர்வமொடு - பிரீதி பூர்வகமாக. நும்சார்பினில் இருந்து - உங்களுடைய இருப்பிடத்திலேயேயிருந்து. வரதா - சர்வாபீஷ்ட பலப்பிரதனே. தாமரசுலோசன - புண்டரீகாக்ஷனே. தயாசலதி - கிருபாசமுத்திரமே. தாசரதி - தசரதநந்தனனே. தானவபுசங்க கருடா - அசுரர்களாகிய பாம்புகளுக்கு உவணன் போன்றவனே (உருவகம்). வீரவசுதேவ குமரா - வீரத்தையுடைய வாசுதேவனே, விமல-நிர்மலச்சொரூபியே. கேசவ - பிரமருத்திரர்களைத் தன் திருமேனியில் வைத்திரட்சிக்கின்றவனே. கவிசபுசரஞ்சன - வானரர்களுட் சிறந்தவனுகிய சிறியதிரு

வடியினது தோளுக்கினிமையானவனே. என - என்று. வீறுபெற - உத்துங்கமாக-ஓதும், உச்சரியுங்கள். இயலாதெனின் - அதுவும் முடியாதென்றால். அனன் அடியை-அந்தத் தெய்வநாயகனது திருவடிகளை. மேவ-அடைய. கடுக-விரைவில். நினையும்-எண்ணுங்கள் எ-று. (௰எ)

இத்தவம் பெரியதிருமொழி ௩-வது பத்து உ-வது திருமொழி உ-வது பாட்டாகிய "காயோடு நீடுகனியுண்டு வீசுகடுங்கானுகர்ந்து நெடுங்காலமைந்து, தீயோடு நின்று தவஞ்செய்யவேண்டா திருமார் பனைச் சிந்தையுள்வைத்துமென்பீர், வாயோது வேதமல்கின்ற தொல் சீர்மறையாளர் நாளுமுறையால் வளர்த்த, தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்திருச்சித்திரகூடஞ்சென்று சேர்மின்களே" என்றதை யடியொற்றியது.

(கட்டளைக்கலிப்பா) மடக்கு.

முதற்கண் மாச்சீர் பெற்று நாற்சீரான் வந்தது அரையாகவும், அஃது இரண்டடி கொண்டது ஓரடியாகவும், அவ்வடி நான்கு வந்து நேரசை முதலாகிய அரையடிக்கு ஒற்றொழித்தெழுத்துப் பன்னொன்றும், நிரையசை முதலாகிய அரையடிக்கு ஒற்றொழித்தெழுத்துப் பன்னிரண்டுமுளதாக அளவுபடுத்தப்பட்டிருப்பதாலே கட்டளைக் கலிப்பாவெனப்பட்டது. இதுவும் கட்டளைக்கலித்துறைபோல தொல்காப்பியர் காலத்துப்பின் பயின்று வருவதுபோலும். இப்பாட்டு நேரசை முதலாகவந்து அரையடி பதினொரு எழுத்தால் வந்திருப்பது காண்க.

மடக்கு-வந்தமொழியே மடங்கிவருவது; இப்பாட்டிலடிதோறும் தனித்தனியே இறுதிமுற்றும் மடங்கி வருதல் காண்க.

(பா) வேயன் மார்பிருப்பாள்—வானத்திகிரியே. (௰அ)

வேயன் மார்பிருப்பாள், வேயன் மேய்த்தது, வேயன் அளந்தது, வேயன் தளிர்க்கை கொண்டது, வேயன் தீயச்சுட்டது, வேயன் சிதைத்தது, வேயன் மேயதேம், வேயன் மேவிடம் இன்னின்னதெனப் பொருள்கொள்க.

(இ-ள்.) வேயன் - ஆயர்பாடியிற் பசு மேய்ப்பதற்காகக் கையி லேந்திய மூங்கிற்கோலையுடையவன், அல்லது புல்லாங்குழலையுடையவனாகிய ஸ்ரீ கிருஷ்ணன். தெய்வநாயகனை ஸ்ரீ கிருஷ்ணனென்றது அபேதாத்யவசாயம்? மார்பில் கொண்டாள்-திருமார்பில் வைத்திருப்பவள். திருப்பாவையே-திருமகளே யாம். மேய்த்தது - புன்மேய்த்து நீரூட்டி வளர்த்தது. வனம்-பிருந்தாவனத்திலே. திருப்பு-திரும்பிய. ஆவையே-பசுக்களையே. இது ஜாதியொருமை. தாய்-தாவி-அளந்தது. அமர் - பொருந்திய. மண்தலத்தையே - பூதலத்தையே. தளிர்க்கை கொண்டது - மாந்தளிர்போன்ற திருக்கைகளிலேந்தியது. (பலராமாவதாரத்திலே) அமர்மண்டு - சண்டையில் போர்க்களத்தில் நெருங்கி (ப்பகைவரை யழிக்கின்ற) அலத்தையே - கலப்பையையே யாம், தீய-வேகும்படி. சுட்டது-தகித்தது. ஒரு-ஒப்பற்ற. தரங்கத்தையே- அலைகளோடுகூடிய கடலையேயாம். (இது சினையாகுபெயர்) சிதைத்தது-பொருதழித்தது. நிருதர்-இராக்கதரது. அங்கத்தையே-உடல்களையேயாம். மேயதேம் - விரும்பிய திவ்யதேசம். பொன்கவான் - அழகிய மத்தியப்பிரதேசத்தையுடைய. அத்திகிரியே - காஞ்சிபுரமே யாம். மேவிடம் - வீற்றிருந்தருளும் இடம். துங்க - மேன்மையான. வானத்திகிரியே - வானமாமலையே யாம் எ-று. (௰அ)

வஞ்சி விருத்தம்.

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாம்.

(பா) துங்கவான்மலை——என்பவே. (௰கூ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) துங்கவான்மலை - உயர்ந்த வானமாமலையில் வீற்றிருந்தருளும். செங்கண்மால் - சிவந்த திருக்கண்களையுடைய தெய்வநாயகனது. பங்கயப்பதம் பாடினார் - தாமரைமலர்போன்ற திருவடிகளை யன்போடு பாடியவர்கள். அங்கண்வானத்தவர்தொழ - அழகிய இடமகன்ற பரமாகாசவாசிகளான நித்யமுத்தர்கள் கொண்டாட. எங்கும் வாழ்குவர்-எங்குந்திருவருள்பெற்றின்புறுவர். என்ப - என்று சொல்லுவர் பெரியர்.

(௰கூ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

சந்தக்குழிப்பு.

தந்ததன தன தனன - தந்ததன தன தனன - தந்ததன தன தன தா.

தந்ததன தனன தன - தந்ததன தனன தன தந்ததன தனன தன தனு.

(பா) என்றுமதி——தணளிதிகழவே. (உ௰)

விண்சயிலபுரமதி லுவந்தருளினொடு மருவுவார் எனையும் தண் ணளிதிகழப் பிரியமுட னடிமைகொண்டன ரென்க.

(இ-ள்.) என்று - சூரியன். மதி-சந்திரன். உடுநிரைகள்-நக்ஷத் திரக்கூட்டங்கள். என்றுமதி-என்று மதிக்கத்தக்க. அணிமணியில்- (அநேக நிறங்களையுடைய) அழகிய இரத்தினங்களினாலே. இந்திரவில் என ஒளிரும்-வானவில்லைப்போல் வயங்குகின்ற. மாமன்று-பெருமை பொருந்திய சபைகளையும், மதில்களையுடைய - கோட்டை மதில்களையு முடைய. விண்சயிலபுரமதி லுவந்தருளினொடு மருவுவார்-வானமாமலை யென்னுந் திருநகரியிற் றிருவுளமுகந்து கிருபையோடு வீற்றிருந் தருளுந் தெய்வநாயகர் (கருத்தா). ஒன்றும் அதிதவளவளை - பொருந் திய மிக்கதாவள்ளியம் பொருந்திய பாஞ்சசனியமென்னும் சங்கமும். செந்திகிரி-செம்மையான சுதர்சனமென்னுஞ் சக்கரமும். நிலவுகரர்- விளங்குகின்ற கையையுடையவர். உந்தியினி லயனை யருள்வோர் - நாபீகமலத்திலே பிரம்மாவைப் படைத்தவர். இவ்விரண்டையும் மருவுவார்க் கடைமொழியாகக்கொள்க. குன்றுமதி மருவுமெனையும்— அற்ப புத்தியையுடைய என்னையும். தண்ணளிதிகழ - தமது பரம கிருபை யெங்கும் பிரகாசிக்கும்படி. பிரியமுடன் - பிரீதியோடும். அடிமை கொண்டனர் - ஆட்கொண்டருளினர் எ-று. (உ௰)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

மடக்கு.

வந்தமொழியே மடங்கி வருவதாகிய ஓர் சொல்லணியாம்.

## வறும்புனங்கண்டு வருந்தல்.

இதற்குத் தலைவன் வறுங்களம்நாடி மறுகலென்றும் பெயருண்டு. அதாவது தலைவியில்லாத தினைப்புனத்தை நோக்கித் தலைவனிரங்கல். இத்துறை பகற் குறியிடையீடென்னுங் கிளவியில் கலக்கமென்னும் பிரிவிலுள்ளது. இடையீடு - தடை. "விலக்கல் சேறல் கலக்க மென்றாங், கிகப்பின் மூவகைததேபகற்குறியீடு" என்பதனாலறிக. இது ஏழாநாட் செய்தியென்ப.

(பா) திகழுமஞ்சக்கர——இன்றழையே. (உக)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) திகழும் - விளங்கும். அம்-அழகிய. சக்கராயுதத்தை யுடையவர். சேர்ந்தார்-தம்மையடைந்தார். அஞ்ச-பிரிவினாற் பயப்படும் படி. கரப்பு - ஒளித்தலை. அடையார் - பொருந்தார். சேர் - சேர்ந்த. வான்பொருப்பு-வானமாமலையின் பக்கத்துள்ள புனங்களில். அமரும்- பொருந்தியிருக்கின்ற. தினையே - ஏனலே. தெவிட்டாத-உவட்டாத. மருந்தினை - அமுதம்போல் வாளாகிய தலைவியை. தீர்ந்தேன் - விட்டு விட்டேன். புகழும் - கொண்டாடும். தளிர்-மாந்துளிர்களை. கோது- மூக்காற் கிழிக்கின்ற. அம்சுகமே-அழகிய கிள்ளையே. புகலும்-சொல் லும். கணப்பொழுது-ஒரு நொடிப்பொழுது. அஞ்சு உகமே - ஐந்து யுகம்போல் விருத்தியடைகின்றதே. புனத்துக்கு-தினைப்புனத்துக்கு. அணியாம்-அழகாயிருக்கிற. கணியாரே-வேங்கைமரங்களே. (தலைவி யிருந்தவிடமாதலில் கணியாரேயென்று உயர்த்தி விளிக்கின்றான்) போந்து இங்கு கடைக்கணியாரே - இங்கு வந்து கடாக்ஷிக்க மாட் டாரே; ஏ வினா. அகழும் குழி அவிரும் - கவலைக்கிழங்கெடுக்கத் தோண்டிய பள்ளங்களில் நிறைந்துவிளங்குகின்ற. தேனே-மகரந்தமே. அழகு இங்கு ஒழிய் - என்னது அழகுபோல்வாளாகிய தலைவி இவ்விடம் விட்டு நீங்க. இருந்தேனே - இன்னும் உயிரோடிருக்கின்றேனே. அகவும் கரியகணமயிலே - ஆடுகின்ற கருமையாகிய கூட்டமாகிய கேகயபட்சிகளே. அரியபெரியகண் அம்அயிலே - அருமையும் பெரு மையுமுடைய கண்கள் அழகிய வேலாயுதம் போன்று விளங்குமே.

நிகழும் - இடையறுதொழுகுகின்ற. பொருவு இல-ஒப்பற்ற. அருவிகளே - நிர்ச்சரங்களே. பொருவில் அருவிகள் - போர் செய்தற்குரிய கருப்புவில்லையேந்திய அரூபியாகிய மன்மதனார். நேர்வார் என்னோடு போர்புரிகின்றார். ஒரு மன்மதனைப் பலராக மதித்தது வருத்த மிகுதியால் வந்த மருட்சி. இகழ்ச்சிக் குறிப்புமாம். (நிராயுதபாணியாயிருக்கிற ஒரு அபலையோடு வில்லாளி போர்செய்தலால்.) நிகர் இல் அசோகத்தின் தழையே - ஒப்பில்லாத அசோகமரத்தினது இலைகளே. நீண்ட சோகத்து இன்று - யான் மிக்க துன்பத்தை யடைந்திருக்கிற விப்பொழுது. அழையே - என்னுருயிர்போல்வானை யழைப்பாய் என்றவாறு. (உக)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணமும் முன்னே சொல்லப்பட்டது.

இப்பாட்டில் விளங்காய்ச்சீரும் விளச்சீருமாகவந்த எண்சீர்களும் வழியெதுகை பெற்றே வந்தது காண்க.

(பா) இன்பமுறமலியினும்——விழியுமே. (உஉ)

அடியேன் எக்காலத்தும் வரமங்கையார் தாள்களும் தோள்களும் சதனமும் வதனமும் மொழியும் விழியும் மறவியுறுவனோ என முடிக்க.

(இ-ள்.) இன்பம் - சுகம் உறமலியினும் - நனிபெருகினாலும். துன்பம் - வருத்தம். அறநலியினும் - மிகவருத்தினாலும். இளைஞர் - யௌவநவனிதையர் அல்லது தேசாந்தரகதரான புத்திரர் முதலியோர். எனைமருவினும் - என்னைவந்து சேர்ந்தாலும். இளைஞர் - தாய்தந்தையர் முதலிய பந்துக்கள். எனையொருவினும் - என்னைத் தள்ளிவிட்டாலும். வன்பகை - கொடிய பகைஞர். இணங்கினும் - நட்பினரானாலும். அன்பர்கள் - நேசர்கள். பிணங்கினும் - விரோதம் கொண்டாலும். மன்பிறவி பெறினும் - பெருமைபெற்ற எந்தப் பிறப்பைப் பெற்றாலும். அன்பர் - அடியாரிடத்து. அத்தியந்தம் - பிரீதியையுடையவரும். தரம் - பாஞ்சசன்யமென்னுஞ் சங்கத்தை. அங்கையார் - அழகிய கையிற்கொண்ட

வரும். முன்பர் - யாவருக்கும் முதன்மையானவருமாகிய. வரமங்கையார் - ஸ்ரீவரமங்கையில் வீற்றிருந்தருளுகின்ற தெய்வநாயகனது. அணியவிரு-அழகு விளங்கும். தாள்களும் - இரண்டு திருவடிகளையும். திணிய-திண்ணியவைகளான. இருதோள்களும்-இரண்டு புயங்களையும். பொன் - பெரியபிராட்டியார். பழகு - பயில்கின்ற. சதனமும் - வாசஸ்தானமான திருமார்பையும். முன்பு-முதன்மையான. அழகுவதனமும் - அழகிய திருமுகமண்டலத்தையும். பொருள்பொழியும் - பரம புருஷார்த்த தத்துவங்களைச் சுருங்கச் சொல்லி விளக்குவிக்கின்ற. மொழியும் - கீதாசார சரமசுலோகத்தையும். ஏர் - அழகிய. அருள் - கருணை. வழியும் - பெருகுகின்ற. விழியும் - திருக்கண்களையும். அடியேன்-தாசபூதனான நான். மறவியுறுவனோ - மறதியை யடைவேனோ. ஒருகாலத்தும் அடையமாட்டேன் எ-று. (உஉ)

நேரிசை வெண்பா.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(ஆற்ருத்தன்மை யாற்றக்கூறல்).

அதாவது தலைமகளது ஆற்ருத்தன்மையை ஆற்றுதல் வேண்டுமெனத் தோழி தலைவனுக்குக் கூறுதல். இது வரைவுகடாதலின்கண் உள்ளது. இது 15-வது நாட் செய்திகளிலொன்று. இது குறிப்பினல் வரைவுகடாயது.

(பா) விழிநீரிறைக்கும்——தயைசெய். (உ௩)

செல் நிகரும் அங்க மான், விழிநீரிறைக்கும், விழும், அழும், எழுந்து, என் மொழி நீர் இறைக்குமொழியும் எழில்மாடச்சென்னி கருமங்குல் தவழ்சேண்மலை செலுமெனும் நீ தயைசெய் என முடிக்க.

(இ-ள்) செல்நிகரும்அங்க - காளமேகத்தையொத்த திருமேனியையுடையவனே. மான் - மான்விழிபோலும்மருண்ட பார்வையையுடைய தலைவி. (உவமையாகுபெயர்) விழிநீரிறைக்கும் - நின்பிரிவாற்ருது வருந்துங்கால் பெருகுங்கண்ணீரைக் கைகளா லிறைக்கின்ருள். விழும் - நிற்கமுடியாது கால்சோர்ந்து விழுகின்ருள். அழும் - அழு

கின்றாள். எழுந்து-(என்னைப்பார்த்து). என் மொழி-யான்சொல்லும் வார்த்தைகளை. நீர் - நீங்கள். (தாயாதலின் கௌரவித்துப் பேசுகிறாள் மயங்கிக் கூறுகிறாளாகவுமாம்.) இறைக்கு - என் தலைவராகிய தெய்வ நாயகனுக்கு. மொழியும்-சொல்லும். எழின்மாடச்சென்னி-அழகிய மாளிகைகளின் சிகரங்களிலே. மங்குல் - மேகம். தவழ் - சஞ்சரிக்கும் சேண்மலை - வானுத்திரிக்கு. செலும் - போங்கள். எனும் - என்று சொல்லுவாள். நீ தயைசெய் - அருள்புரிய வேண்டும். (உந)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) செய்யவனுகதம்—மகிழ்ந்தொன்றினனே. (உச)

சேண்சயிலத்துய்யவன் அனுகதத்து ஆகதனைய் மகிழ்ந்தொன்றி னன் என முடிக்க. தந்தம்பறித்தோன், தடங்கீண்டவன் வினைமுதலி னடைமொழிகள்.

(இ-ள்) செய்ய - வயல்களிலுள்ள. வல்நாகுஅது - வலியசங்கம். அங்கு-அவ்விடத்தில். ஈன்-பெற்ற. முத்து ஒளிதிகழ்-முத்துக்களின் நிலவினாலே விளங்குகின்ற. சேண்சயிலத்துய்யவன் - வானமாமலையி லெழுந்தருளியிருக்கிற புனிதனும். நாகதந்தம்-குவலயாபீடமென்னும் யானையினது கொம்புகளை. பரித்தோன் - திருகிப்பிடுங்கியவனும். திருத்தொண்டனுக்கா - சிறந்தபக்தனாகிய பிரஹலாதனுக்காக. வெய்ய வன்-குரூரனாகிய இரணியனது. ஆகதடம்-மார்பாகிய மலை. பக-பிளவு படும்படி. கீண்டவன் - பிளந்தவனுமாகிய தெய்வநாயகன். வேண்டு - விரும்புகின்ற. அடியேன்-தாசபூதன். உய்ய-உஜ்ஜீவிக்க. அனுகதத்து- இருதயகமலத்திலே. ஆகதனை - எழுந்தருளியவனை. மகிழ்ந்து- சந்தோஷித்தனாய். ஒன்றினன் - நிலையாக வீற்றிருக்கின்றனன் எ-று. (உச)

கலிவிருத்தம்.

அதாவது நாற்சீரடி நான்கு வருவதாகும். இதில் ஒவ்வோரடி யிலும், முதற்சீரும், நான்காஞ்சீரும் கூவிளமும், இரண்டாஞ்சீர் தேமாவும் மூன்றாஞ்சீர் தேமாங்காயுமாய் வந்திருப்பது காண்க.

(பா) ஒன்றுகேள்——சித்தமே. (உரு)

ஒன்றுகேள் - இல்லையேல் உன்றன் சீர்முற்றுஞ் சென்றதாம். சித்தமென முடிக்க.

(இ-ள்.) குணக்குன்றம் — உருவகம். ஒண்விண்மாவெற்பில் — ஒள்ளிய வானமாமலையில் வீற்றிருந்தருள்கின்ற. கொண்டலே-மேகம் போன்ற ஔதார்யத்தையும் தேககாந்தியையுமுடையவனே. இன்று-இப்பொழுது. தாழ் என்னை - அடிபணியு மென்னை. ஆட்கொள்க - அடிமைகொண்டருளவேணும். இல்லையேல்-அவ்வாறு செய்தருளாமற் போனால். உன்தன் சீர்முற்றும் - தேவரீருக்கு இதற்கு முன்னிருந்த கிருபாநிதி, தீனதயாளுவென்பது முதலிய சிறப்புப்பெயர்களெல்லாம். சென்றதாகும் - போய்விடும். சித்தம் - நிச்சயம். (உரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன் சொல்லப்பட்டது.

இருளையிரங்கல்.

இதனிலக்கணம் உ௩-வது பாட்டிற் சொல்லப்பட்டிருக்கிறது.

(பா) சித்தசனம் பரவை—செங்கண்மாலே. (உசு)

செங்கண்மாலே மயில்நின் மோகவலை சிக்கினள் ஆள் என்க.

(இ-ள்.) சித்தசன் - மன்மதனது. அம்பு-பாணங்கள். அரவை யிணையா - பாம்பைப்போல. சீறி - இரைந்துகொண்டு. உடல்நுழைய - உடம்பிற்புக. தியங்கி-மயங்கி. தவித்து-இளைத்து. அசனம்-உண்ணு முணவை. பரவையிடைவிடுதூதர் - சுந்தரமூர்த்தி பரவைநாய்ச்சியா ரிடத்துக்கு அனுப்பிய தூதராகிய சிவபெருமானது. அமுதம் என்றாள் - உணவாகிய விஷமென்று சொல்லுகிறாள். (அத்தலைவியினது) சோதித்தசனம்-பிரகாசமான தந்தபந்திகள். வியன்முத்தம்-பெருமை பொருந்திய முத்துக்களின் வரிசையாம். பரவை-கடல். இணைவிழி-இரண்டு கண்களாகும். மயில் - இத்தன்மையளாகிய மயில்போலுஞ்

சாயலையுடையாளாகிய தலைவி. நின்மோகவலை - நினது மோகமாகிய வலையில் அகப்பட்டுக்கொண்டாள். சித்தசனம் - சித்தரெனும் தேவ கணங்கள். பரவு-துதிக்கின்ற. ஐ இயை-அழகு பொருந்திய. வரமங்கை - ஸ்ரீவரமங்கையில் வீற்றிருந்தருள்கின்ற. திகிரியங்கை - சக்கர பாணியாகிய. செங்கண்மாலே - செவந்த திருக்கண்களையுடைய தெய்வ நாயகனே எ-று. (உகூ)

(மருட்பா).

அதாவது முன் வெண்பாவந்து பின் அகவலாய் ஒரு செய்யுள் வருவது. பார்ப்பனக்குமரனும் அரசகன்னிகையும் மயங்கிக்கூடி வாழ்தல்போல வெண்பாவும், அகவற்பாவும் மயங்கிக்கூடி நிற்றலால் மருட்பாவெனப் பெயர் பெற்றது. இருபாவினடிகளைச் சமநிலை மருட்பாவென்றும், ஏற்றிழிவாக வருவதை வியநிலைமருட்பாவென்றும் சொல்லுவர். இம்மருட்பா புறநிலைவாழ்த்து, வாயுறைவாழ்த்து, செவியறிவுறீஉ, கைக்கிளையென்னும் பொருள்களின் வரும். இப்பாட்டுச் சமநிலை மருட்பாவாகும். கைக்கிளை, தெளிதல், (துணிவு) ஒரு தலைவனும், தலைவியும், விதிவழியாலோரிடத் தெதிர்ப்பட்டுழிக் காம நுகர்ச்சி காரணமாக அவர்களுள் ஒருவரிடத்துண்டாகும் சிற்றுறவு. கை-சிறுமை. கிளை-உறவு. இதனை ஒருதலைக் காமமென்ப. இது காட்சி, ஐயம், துணிவு முதலிய ஒன்பது வகைப்படும். இது ஆண்பாற் கைக்கிளை; துணிவு என்னுந் துறைபற்றி வந்தது. துணிவாவது தமியளாய் நிற்கின்ற தலைமகளைக்கண்ட தலைமகள் இம்மகள் தெய்வப்பெண்ணோ மானிடமாதோ வென்றையுற்று, கண்ணிமைத்தலானும், வனைந்துள்ள மாலைகளில் வண்டுமொய்த்திருத்தலாலும், தெய்வப்பெண்ணல்லள் மானிடமாதேயெனத் தெளிதல். கண்ணிமைத்தலும், வண்டுமொய்த்தலும், தலைவனிடத்து நிகழும் ஐயமகற்றுங் கருவியாகுமென்பதனைப் பின்வருஞ் சூத்திரத்தானுணர்க. "எழுதியவல்லியுந் தொழில்புனைகலனும், வாடியமலருங் கூடியவண்டும், நடைபயிலடியும் புடைபெயர் கண்ணும், அச்சமும் பிறவுமவள் பானிகழுங், கச்சமிலையங்கடிவனவாகும். இதில் பிறவுமென்றது வேர்த்தலையும், நிழல் தோன்றுதலையுமாம்.

(பா) செங்கண்——பூக்கொடியே. (உஎ)

நல்நெஞ்சே! நங்கண்மயக்குமிவர், கண்மலரிமைக்கும், கோதை வண்டிவரும், இங்கிவற்றால் வரமங்கைநாதர் வரையில் குறிஞ்சிபடர் பூக்கொடியே.

(இ-ள்.) நல்நெஞ்சே - நல்ல மனமே. நம்கண் மயக்கும் இவர் - நமது கண்களைத் தெய்வப்பெண்ணோவென்று மயங்கச்செய்யும் இப் பெண்மகளார். செம்மை கண்மலர் இமைக்கும் - செவ்வையாகிய மலர் போன்ற கண்கள் புடைபெயரும். தேன்கோதை வண்டு இவரும் - வாசனை பொருந்திய அல்லது தேன் பெருகுகின்ற மலர்மாலைகளில் மதுகரங்கள் மொய்த்து விளங்கும். இங்கு - இவ்விடத்து. இவற்றால் - இவ்விரண்டு காரணங்களாலே. வரமங்கைநாதர்வரையில் - ஸ்ரீவரமங் கைக்கு நிர்வாககராகிய தெய்வநாயகரது மலையிலுள்ள. பரவு அம் குறிஞ்சி - பரந்த அழகிய குறிஞ்சி நிலத்திலே. படர் - சஞ்சரிக்கின்ற. பூக்கொடியே - பூமியிலுள்ள மானிடமடந்தையரே யாம். பூக்கொடி யென்பதற்கு புட்பவல்லியென்னும் பொருளுண்மையில் அதற்கேற்ப செம்மைகள் மலர் இமைக்கும் - சிவந்த மகரந்தங்களைக் கொண்ட புட் பங்கள் விளங்குகின்றன. தேங்கு ஓதைவண்டு இவரும் - நிறைந்த ரீங்காரத்தொனியோடுகூடிய வண்டுகள் மொய்த்து விளங்குகின்றன. இங்கு இவற்றால் இங்குள்ள இத்தன்மையினாலே வரமங்கைநாதர்வரையில் பரவு அங்குறிஞ்சி மரத்திலே படர்ந்துள்ள புட்பலதையே யாகு மெனப் பொருள்படுதலு முணரத்தக்கது. (உஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

வண்டுவிடுதூது.

தலைவனைப்பிரிந்த தலைவி தன்பக்கத்துப் பூஞ்சோலையிலுள்ள வண்டுகளைக் குறித்துத் தன் காதல்நோயைத் தலைமகனுக்குச் சொல் லும்படி தூதுவிடுத்தல்.

(பா) பூத்தேன்மேல்——செல்லுவீரே. (உஅ)

வண்டினங்காள் நும்மைப்போன்றவராகிய மாத்தேவுக் கென்னிலைமை சொல்லுவீர் செல்லுவீர் என முடிக்க.

(இ-ள்.) வண்டினங்காள் - மதுகரங்களே. பூத்தேன் மேலாசையுள்ளார் - (நீங்கள் பூவிலுள்ள தேனினிடத்தில் பிரியமுடையீர் அதுபோல) தலைவரும் செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் தேன்போலுமினிய பெரியபிராட்டியாரிடத்தில் வியாமோகத்தையுடையவர். பூவை மருவும் விருப்பர் - (நீங்கள் புட்பங்களையணையும் ஆசையையுடையீர்) (தலைவரும்) பூமிப்பிராட்டியாரை யணையும் பிரீதியையுடையார். புளினம் மேவும் தேத்தே வந்து உவந்து இருப்பார் - (நீங்கள் பட்சிஜாலங்கள் தங்குமிடமாகிய சோலை தடாகம் முதலிய விடங்களிலே வந்து சந்தோஷமாக இருப்பீர்கள்) (தலைவரும்) காவேரிநதியின் மத்யப்பிரதேசத்துள்ள சைகதப்பரப்பின் இடையே விளங்குகின்ற ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திலே வந்து ஆநந்தமாக அறிதுயிலமர்ந்தருளுவார். சேருமன்பராகத்தும் திளைத்துவாழ்வார்—(நீங்கள் பொருந்திய பெருமை பெற்ற மகரந்தப்பொடியிலும் அழுந்தி வாழ்வீர்கள்) (தலைவரும்) தன்னை யடைந்த அடியார்களுள்ளத்திலும் கலந்து சந்தோஷமாக வீற்றிருந்தருளுவர். காத்தேறல்வரைவதற்கா வான்வரையின்மேலிருப்பார்-(நீங்கள் கானகத்துள்ள மதுவைக் கொள்வதற்காகப் பெரிய மலைகளின் மீதிருப்பீர்கள். (தலைவரும்) காத்து-அடியார்களைரட்சித்து. ஏறு அல் - அவர்கள் மனதில் பிரகிருதி சம்பந்தத்தாலே நாடோறும் விருத்தியடைகின்ற அஞ்ஞானந்தகாரத்தை. வரைவதற்கா - போக்குவதற்காக. வான்வரையின்மேல் இருப்பார் - (நீங்கள் பெரியமூங்கிலின் மேலிருப்பீர்கள்) (தலைவர்) வானுசலத்தின்மேல் வீற்றிருந்தருளுவர். (ஆதலாலே) நும்மைக்கடுப்பார் - உங்களுக்கு ஒப்பாகவே விளங்குகின்றார். (நும்மைப்போன்றவராயிருத்தலில்) நிரிம்ம்யராம் மாத்தேவுக்கு-பெருமை பொருந்திய தலைவராகிய தெய்வநாயகருக்கு. என்நிலைமை-எனது தன்மையை. சொல்லுவீர்-சொல்லுங்கள். செல்லுவீர்-அந்த வானமாமலைக்குச் செல்லுங்கள் (எ-று.)

சேருமன்பராகத்தும் என்பதன் உம்மை எச்சவும்மையாதலில் (நீங்கள் தேன்பெருக்கி லழுந்துவதுமன்றியென்றும்) தலைவர் சகல

திவ்யதேசங்களிலுந் திருக்கோவில்கொண் டெழுந்தருளியிருப்பது மன்றி யென்றும் பொருள் கொள்க.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னமே சொல்லப்பட்டதாயினும் ஒவ்வோரடியினும் இரண்டு நான்கு ஆறு எட்டாவது சீர்கள் கூவிளமாகவும் ஒன்று ஐந்தாவது சீர்கள் கூவிளங்காயாகவும், மூன்று ஏழாவது சீர்கள் கருவிளங்காயாகவும் வருதல் இப்பாட்டிலோர் விசேடம்.

(பாணனைமுனிதல்).

தலைமகளை வரைந்தெய்திய தலைமகன் நாடோறும் பாலையே யுண்ணுமொருவன் இடையிலே புளிங்காடியையுமுண்டு அப்பாலினினிமையை நன்கறிந்தாற்போலத் தலைமகளினிமையை யறியும்பொருட்டுப் பரத்தையிடஞ்சென்று இன்பம் நுகர்ந்து மீண்டுவந்து வாயிலினின்று உள்ளே செல்லப் பெறுனுய்த் தலைமகளினது துனியைத் தீர்த்து வாயில் வேண்டும்படி பாணனெருவனையனுப்ப அப்பாணனும் இனிய பாடல்களைப் பாடிக்கொண்டு தலைமகளிடஞ்சென்று தலைவர் உன்னிடத்து நீங்காத பேரன்பினையுடையாரென்று புனைந்துரைத்து அவளது ஊடலைத் தீர்க்கமுயல அப்பாணனை நோக்கித் தலைமகள் வெகுண்டு கூறுதல். பாணர் சங்கீதம்பாடிப் புகழ்பவர். (இவர்களைப் புலையர் வகுப்பைச் சேர்ந்தவரென்ப).

(பா) வீரநேமி——சாலனே. (உகூ)

ஏகபாண சாரமேய சாலனே நீ என்னிடம் வந்து வீணையோடு மிவ்வீணையு மிசைப்பது சாரமோ பரத்தை மேவுவீடுசேரு என முடிக்க.

(இ-ள்.) வீரநேமி - வீரமேவிய சுதர்சன மென்னுஞ் சக்கரப் படையை. அங்கையார் - அழகிய கையிலுடையவராகிய தெய்வ நாயகரது. வியோமவெற்பில் - வானத்திரியி லெழுந்தருளியிருக்கிற. வேதியர் - மறையாளர்களாகிய ஸ்ரீ வைணவர்களது. வேதகீதம் - சாம வேத கானம். ஏயகாதில் - பொருந்திய செவிகளில். வேறு கீதம் -

மற்றைய வரிப்பாடல்கள். ஏயுமோ - செல்லுமோ (ஒருக்காலுஞ் செல்லாது). நாரதாதியோரும்-வீணை வாசிப்பதில் மிகவுஞ் சிறந்தவரென்று கொண்டாடப்படுகிற நாரதமகாரிஷி முதலியோரும். நாரின் - அன்போடு. நாடு - தியானிக்கின்ற. பாதபாணர் - திருவடிகளையுடைய திருப்பாணாழ்வாருடைய. ஞானசாரமான - முக்கியமான தத்துவஞ் ஞானத்தை விளக்கும். பாடல்-பாசுரங்களை. நாளும்-எப்பொழுதும். ஓதும்-பாராயணஞ்செய்யும். வீறுளேம்-சிறப்பைப்பெற்றிருக்கிறோம். கூரமான - கொடுமையாகிய. பஞ்சபாணர்கூட - அரவிந்த முதலிய ஐந்து கணையுடைய மன்மதன்கூட. இவண்கூட - இங்குவர. அஞ்சினர் - பயந்து வாராதிருக்கிறார். ஏகபாண - ஒரு பாணனே. (இவண்) நெஞ்சு கூசலின்றி - மனங்கூசாமல் மேவினாய். சாரமேய - நாயனையானே. வீணையோடு - வீணை யிசைத்தலோடு. வீணையும் - இந்த வீணான வார்த்தைகளையும். இசைப்பது - சொல்வது. சாரமோ - இனிமையாகுமோ? ஆகாது. ஆதலாலே, சாலனே - சாலக்காரனே. பரத்தைமேவு வீடுசேரு-பொதுமகள் குடியிருக்கும் கிரகத்தையடை. என் இவ்வாறு நரகவேதுவான பொய்யைப்பேசி ஜீவனஞ் செய்கின்றாய். இதைவிட்டு, பரத்தைமேவு - பராத்பரனாகிய தெய்வநாயகனை விரும்பு. வீடுசேரு - இப்பாழுடலை யொழித்து மோக்ஷ லோகத்தை அடைந்தடிமை செய்வாயாக. (உகூ)

பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(சம்பிரதம்).

இந்திரஜாலம் முதலிய ஜாலவித்தையில் வல்லவர்கள் தமது மேன்மையைத் தாமே சிறப்பித்துக் கூறுவது சம்பிரதம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

(பா) சாலமல——விடுவமே. (௩௰)

நரம், உட்கொள்வோம், மறைவோம், நிலவிடப்பண்ணுவோம், கொள்வோம், நாட்டுவோம், உந்தியிடுவோம், மாற்றுவோம், கொக்

காப்பணிப்போம், ஆக்குவோம், சமைப்போம் இவை யத்தனையும் வித்தையோ (இல்லை) தேவநாதன் திருவடிபடா முடியுடையவவரையும் முன்விடுவனேயென முடிக்க.

(இ-ள்.) சாலமல - மாயவித்தையல்ல. எழுகடலை யொருகைக் கொண்டு உட்கொள்வோம் - சப்தசமுத்திரங்களையு மொருகையாலெடுத்துக் குடித்து விடுவோம். (எழுகடலையை) யென்றும் பொருள்படுதலுணர்க. தாரணியை யேந்திமறைவோம்-பூமண்டலத்தை யெடுத்துத் தாங்கிக்கொண்டு மறைந்துவிடுவோம். (தார்அணியை - தார் என்னும் பெயரிய ஓராபரணத்தை) தரையில் இரவியை நின்று நிலவு இடப் பண்ணுவோம் - இப்பூமியிலே சூரியனை நிலையாகவிருந்து தனக்குரிய வெயிலை மறைத்துக்கொண்டுச் சந்திரிகையை வீசச்செய்வோம். (இரவியை-மலைகளை. நின்றுநிலவிட - நிலைபெற்று விளங்க) சசியினை-சந்திரனை. விளக்கா - கிரகதீபமாக. கொள்வோம் - உபயோகிப்போம். (சசியினை-கற்பூரத்தை. விளக்கா-தீபமாக; தீபமாவது திருவாராதனத்துச்செய்யுமோ ருபசாரம்) பாலவிழியினனை - நெற்றிக்கண்ணனன பரமசிவனை. நகு - விளங்குகின்ற. தாணுவென - தம்பமென்னும்படி. நாட்டுவோம் - பூமியில் பதித்து விடுவோம். (தாணுவென்னும் பெயரினையுடையவனென்று உறுதியாகச் செய்வோம்). பங்கயனை - பிரம்மாவை. உந்தியிடுவோம் - காட்டாற்றில் போட்டுவிடுவோம்; தள்ளிவிடுவோம் என்றுமாம். உந்தியிடுவோம் - பகவானது நாபீகமலத்தில் சேர்ந்து வீற்றிருக்கச் செய்வோம். பகர்ந்த தும்பிகளை மாதங்கமா மாற்றுவோம் - சொல்லுகின்ற வண்டுகளை மத்தகஜங்களாக மாற்றிவிடுவோம். (தும்பிகளை-யானைகளை என்றுமாம்.) பரியைக் கொக்காப் பணிப்போம் - குதிரைகளைப் பகமென்னும் பட்சியாகச் செய்வோம். (கொக்கு-குதிரையுமாம்.) தாலமதனை-பனைமரத்தை அல்லது பூமியை. புவனம் ஆக்குவோம் - பூமியாகச் செய்வோம் அல்லது ஜலமாகச்செய்வோம். தாலம்-பூமி - புவனம்-பூமி) முளரியைத்தகனனுகச் சமைப்போம்-தாமரையை அக்கினியாக மாற்றிவிடுவோம். முளரி-அக்கினியுமாம். சாற்றுமிவை யத்தனையும்வித்தையோ- சொன்னவிவைகளெல்லாமொருசிறந்தவித்தையாகுமோ ஆகாது. வரமங்கைதன்னிலும்-ஸ்ரீவரமங்கையென்னுந் திவ்யதேசத்திலும். என்னுளத்தும்-எனது இரு

தயகமலத்தினும். ஆலம் அவிர் கண்டனோடும் - விடம் விளங்குகின்ற கழுத்தினையுடைய பரமசிவனோடும். அண்டர்-இந்திராதி தேவர்கள். தொழ-துதிக்க. வீற்றிருந்தருள்தரும் - வீற்றிருந்த திருக்கோலமாக எழுந்தருளியிருந்து ரட்சிக்கின்ற. தேவநாதன் - தெய்வநாயகன். அன்று - திரிவிக்கிரமாவதாரகாலத்தில். உலகு அளந்த - மண்ணையும் விண்ணையுமளவிட்ட. திருவடிபடா - திருவடிகள் பரிசியாத. முடியுடைய அவரையும்-சிரசினையுடையவர்களையும். முன்விடுவன்-உங்கள் முன் கொண்டுவந்து நிறுத்துவன் எ-று. தெய்வநாயகனது திருவடிகள் படாத முடியுடையோர் எவ்வுலகத்துமில்லையாதலில் அவர்களையுமினித்தேடி முன்னே கொணர்ந்துவிடுவமெனச் சம்பிரதாயமாக அருமை யறிவித்தபடி. (௫௰)

பதினறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(கொற்றியார்).

இவர் ஆவார் திருமண்காப்பு முதலிய ஸ்ரீ வைணவ சின்னங்களைத் தரித்து துர்க்காதேவியை யுபாசித்துக்கொண்டு ஊர்தோறும் ஐயமெடுத்துண்ணும் ஒருவகைச் சாதியார். கொற்றி - துர்க்கை. இவரை உபாசிக்கின்றவராதலிற் கொற்றியாரெனப்படுவர்.

(பா) விட்டிலங்கு——அருளுமின்னே. (௫க)

(மின்னே கொற்றியாரே யருளுமென முடிக்க).

(இ-ள்.) விட்டுஇலங்குமணி - விட்டுவிட்டு விளங்குகின்ற இரத்தினங்களழுத்திய. மாடம்-திருமாளிகைகளையுடைய. வரமங்கைக்கு வேந்தர் - ஸ்ரீவரமங்கையென்னுந் திவ்யதேசத்துக்கு நிர்வாஹகரும். வார்சிலையினல் - நீண்ட கோதண்டமென்னும் வில்லினாலே. இலங்கை செற்ற - இலங்கா நகரத்துள்ள இராவணாதி இராக்கதரை யழித்த. வெற்றியார் - செயசீலரது. புகழ்பாடும்-கீர்த்தியைத் துதித்துப் பாடுகின்ற. பெற்றியார்ந்த-தன்மை வாய்ந்த. வெண்பிறைநேர் - வெள்ளிய

32278

பிறைச்சந்திரனுக்குச் சமானமான. நெற்றியார்-நெற்றியைப் பொருந்திய கொற்றியாரே. கட்டெழிலாழி கரம்புனைந்து - மிக்க அழகு வாய்ந்த சங்கசக்கரங்களைக் கையில் தாரணஞ்செய்துகொண்டு; அல்லது வளையல்களையும்மோதிரங்களையும் கையிலணிந்துகொண்டு. கவின் அழகிய-துளசிமாலை - துளசிமணிமாலையையும், திருத்துழாய் மாலையையும். மணிமாலை - பதுமமணிமாலையையும், இரத்தினாபரணங்களையும். உரம்வளைந்து - மார்பிலணிந்துகொண்டு. கருணைமிகு - தயைமிகுந்த. மால்போன்றீர் - தெய்வநாயகனை யொத்திருக்கின்றீர். (ஆதலாலே) கலங்கும் என்னை - மனக்கலக்கமுற்ற வென்னை. கடைக்கண்ணால் நோக்கி - அபாங்கத்தாலே கடாக்ஷித்து. மாலாக்கிவிட்டீர் - நெடுமாலாக்கிவிட்டீர். மிக்க மோகத்தை யடையச்செய்தீர். திட்டமதனோடு - மிக்க திருடத்தையுடைய மன்மதனுடனே. வேதனையும்-பிரம்மாவையும். பெற்றேன் - தந்தேன். திட்டுஅமதனோடு (பிரிந்தோர் யாவருந் திட்டுகின்ற அந்த மன்மதனாலே! இக்கு ஒடுருபு. "தொடியோடு தொடிவக்குண்ட" என்றாற்போலக் கருவிப்பொருளது. வேதனையும் - துன்பத்தையும். பெற்றேன் - அடைந்தேன். சீர்கொள் நுமக்குத் துணையா - சிறப்பைக்கொண்டிருக்கிற உமக்குச் சமானமாக அல்லது (துணைவனாக) செயவிரும்பில் - பண்ண இச்சித்தால். செய்யவேண்டியவை-இயற்றவேண்டியவை. சிலவுண்டு-சிலவிருக்கின்றன. அவற்றைச் செப்புகிறேன்-அவைகளைச் சொல்லுகிறேன். திருச்செவி சாய்த்தருளல்வேண்டும்-கேட்டருளவேண்டும். இட்டமுடன்-உள்ளன்போடும் இடுக்கண்உறும் - துன்பமடைகின்ற. என்னைநோக்கி - என்னிலைமையறிந்து. இட்டிடைநுடங்க-நுண்ணியமருங்குலொசிய. வந்து-கிட்டி. ஆம்கருடனோடும் - வாகனமாகிய கருடனுடனே. ஏய - பொருந்திய அரவணையும் - அநந்த பரியங்கத்தையும். நும் - உமது. பால் இன்ப வாரிதியும் - இன்பத்தை விளைவிக்கும் பாற்கடலையும். இனிது உவந்து தந்தருளநும் - நன்றாகக் களித்துக் கொடுத்தருளவேணும். வந்தாங்கு எழுந்தருளியதுபோல். அருள்தன்னோடும் - தண்ணளியுடனே. ஏய - மார்போடு மார்பு பொருந்தும்படி. அரவணையும் - ஆதரவுடனே தழுவும். நும்பால் இன்பவாரிதியும் - உம்மிடம் உள்ள சுகசாகரத்தையும். (இன்பவாரிதி யென்பதற்கு இன்பத்துக்கு ஹேதுவான சமுத்திரம்போன்ற கடிபுரோ பாகத்தையும். வாரிதி—கடிபுரோ பாகத்திற்

குவமையாகு பெயர். இனிது வந்து தந்தருளுமென்றும் பொருள் கொள்க. இன்னே—இப்பொழுதே. மின்னே—உவமையாகு பெயர்; கொற்றியார்க் கடைமொழியாகக்கொள்க.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இப்பாட்டி லொவ்வோரடியிலும் முதற்சீர் தேமாவாகவும், இறுதிச்சீர் புளிமாங்காயாகவும் மற்றைய நான்கு சீரும் விளமாகவும் வருதல் காண்க.

(பா) இன்னலென்பவை——குறையொன்றே. (கூஉ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ—ள்.) இன்னல்—துன்பம். இருவினையேற்கு—மகா பாபியாகிய வெனக்கு. இது—துன்பங்களைப் பொறுத்தல். தகவேகாண்—தகுதி யேயாகும். பின்னை—ஆனால். ஆற்றொணாது—என்னால் சகிக்கமுடியாத துன்பம். எதுவெனில்—யாதென்றால். விண்மலைப்பெரும—வானமாமலை யில் வீற்றிருந்தருள்கின்ற தெய்வநாயகனே. நிற்குரியான்—உனக் கடிமையாகிய வொருவன். துன்னும் என் இடர் — சரணாகதனாகிய எனது துன்பங்களை. ஏன் தீர்த்திலன்—ஏன் போக்கவில்லை. என— என்று. நினை—உன்னை. சொல்லிடும்—சொல்லும். குறையொன்றே— குறையொன்றுதான் எ-று. (கூஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதி லொவ்வோரடியிலும் 4, 8—வது சீர்கள் தேமாவாகவும், மற்றவையெல்லாங் காய்ச்சீராகவும் வருதல் காண்க.

(பா) குறையொன்று——மகிழ்ந்தனையே. (கூகூ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ—ள்.) நெடுங்கால்—அநேக காலம். புணை—தெப்பம். அளைந்து— அடைந்து. இறையும்—சிறிதும். வயங்கும்—விளங்கும். பொறை— பொறுமை. இலக்குஆம்—தகுதியாகிய. பொருளை—ஒரு சேதனனை. கூடி—அடைந்து. (கூகூ)

## நேரிசை வெண்பா.

### ஆற்ருத்தன்மை யாற்றக்கூறல்.

இவற்றின் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) மகிழ்ந்தணைவாய்——என்னும். (நச)

தெய்வநாயகனே நீ எந்தம்மடமயிலை மகிழ்ந்தணைவாய் என்க.

(இ—ள்.) (மடமயில்) உள்ளம் நெகிழ்ந்து, அணைவாய்—பஞ்சணையிலே (நித்திரையுமின்றி) புகழ்விண்மலைக் கோவிந்தஎன்று குழையும்-கீர்த்திவாய்ந்த வியோமாத்திரியில் வீற்றிருந்தருளுகின்ற கோவிந்தனென்று சொல்லிக் கூவித்துவளும். கைகூப்பும் - நீ யிருக்கின்ற திக்கை நோக்கித் தெண்டஞ்சமர்ப்பிப்பாள். இந்த என்று - என்னைத் தகிக்கு மிந்தச் சூரியன். இந்துவோ - சந்திரனே (இல்லை இல்லை.) என்னும்-என்று மயங்குவாள். (ஆகையால்) எந்தம்மடமயிலை - எமது இளமைப்பருவம் உடைய மயில்போலு மங்கையை. மகிழ்ந்து அணைவாய் - உவந்து மருவவேணும் எ-று. (நச)

## கட்டளைக்கலித்துறை.

இதன் இலக்கணம் முன் சொல்லப்பட்டது.

(பா) உந்தியங்கஞ்சமனை——மாறுணையே. (நரு)

வந்து இயங்கு அஞ்சம் அனையாரைப்போல் பொழில்வாழ் இளைய மந்தி அங்கு அஞ்சு அம்மனை ஆடும் வான்மலைமால்துணை (ஆதலாலே) யாம் இனி உந்தியங்கஞ்சமனையான்படைப்பில் உறோம்; சமனையெதிரினிற் சந்திக்கினும் நெஞ்சந்தியங்கமென்க.

(இ—ள்) வந்துஇயங்கு—வந்து விளையாடுகின்ற. அஞ்சம்அனையாரைப்போல—அன்னப்பறவையைப்போலும் மெல்லிய நடையையுடைய பெண்களைப் போல. பொழில்—உய்யானத்தில். வாழ்—வாழ்கின்ற, இளையமந்தி—இளமைப்பருவமுடைய பெண்குரங்குகள். அங்கு—அப்பொழிலில். அஞ்சு அமனை—அஞ்சு அம்மனைகளைக் கையிற்கொண்டு.

ஆடும்—விளையாடுகின்ற. வான்மலைமால்—வியோமாத்திரியில் வீற்றிருந் தருள்கின்ற தெய்வநாயகன். துணை—எனக்கு ரட்சகர். ஆதலாலே, யாம்—நாம். இனி—இனிமேல். உந்தியங்கஞ்சமனையான்-பகவானுடைய நாபீகமலத்தையிருப்பிடமாகவுடைய பிரம்மாவினுடைய. படைப் பில்—சிருட்டியில். உறேம்—அகப்படோம். சமனை—யமனை. எதிரினில்—நேரே. சந்திக்கினும்—சந்தித்தாலும். நெஞ்சம்தியங்கம்—மனம் தடுமா றமாட்டோம். (எ-று).

கலிநிலைவண்ணத்துறை.

"நெடிலடிநான்காய் நிகழ்வது கலித்துறை" என்பதிதனிலக்க ணம். வண்ணக் குழிப்பு—தனதன, தனதன, தனதன, தனதன தனதான வென்பது. இப்பாட்டில் ஒவ்வோரடியிலும் முதனான்குங் கரு விளஞ் சீராகவும், ஈறு ஒன்றும் புளிமாங்காய்ச்சீராகவும் வந்தது காண்க.

(பா) துணையென—நெடுமாலே (௩௬)

திருமாலே தொழுவேன்மேல்அருண்மழையிலொரு துளியினை வீசில், இருவினையொருவிடும், எழில்வீடாமென்க.

(இ-ள்) துணையென—ஆதரவென்று. அணை-யாவரும் சரணம டையும். மலர் இணை-தாமரைமலரையொத்த. இணையடி-உபய சர ணங்களை. இணைவிழி-இரண்டுதிருக்கண்கள். அருள்மழை-உருவகம். எணை-எண்ணை (அளவை.) ஒழி-அற்ற. இருவினை-பிறவிக் கேதுவான மகா பாபங்களெல்லாம். ஒருவிடும்-நீங்கிவிடும். எழில்வீடுஆம்-அழ கிய மோட்ச உலகமும்கிட்டும். திணை-குலத்திலும். அறிவு-ஞானத் திலும். உயர்-மேலான. மறையவர்-வேதியர்கள். திகழ்-பிரசித்தி பெற்று விளங்குகின்ற. நபவரை-வியோமாசலத்தில் வீற்றிருந்தரு ளுகின்ற. நெடுமாலே-அடியார்களைப்பிறவிப்பிணியொழித்துஜ்ஜீவிக்கச் செய்வதின்மிக்க வியாமோகத்தையுடையவனே நீ. (எ-று) (௩௬)

பதினுன்குசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

சந்தக்குழிப்பு.

தானதந்ததன தானதந்ததன தானதந்ததனதானனு.

இப்பாட்டில் 1, 3, 5, 8, 10, 12-வது சீர்கள் தேமாவாகவும், 2, 4, 6, 9, 11, 13-வது சீர்கள் கூவிளங்காயாகவும், 7, 14-வது சீர்கள் விளமாகவும் வந்திருப்பது காண்க.

மதங்கு-கலம்பக வுறுப்பு 18-ல் ஒன்று. இதற்கு மதங்கமென்றும் மதங்கியாரென்றும் பெயருண்டு. மதங்கி யென்பவள் ஆடல் பாடல்களில் வல்ல பதிறுறு வயதுப் பெண். இவள் தொழில், இரண்டு கைகளிலும் வாளையேந்தி வீசிக்கொண்டு தானுஞ் சுழன்று பாடியாடுதல். இம்மாதின் ரூபலாவண்ணியாதிசயங்களைப் பார்த்து மோகித்த ஒருவன் அவளைப் பாராட்டிக் கூறுவதாகச் செய்யுள் செய்வது இதனிலக்கணம்.

(பா) மாமதங்கி——பணிகொளாசையே. (௩௭)

ஆற்ரெழுக்காகவே பொருளமைந்துளது.

(இ-ள்.) மாமதங்கி - கரியநிறமுடைய பத்திரகாளியும். உடல் ஆம்அது - சீரகாந்தியினலே. அங்கிநிகர்வான் - செந்தீயை யொத்த வனுகிய உருத்திரமூர்த்தியும் ஆகிய இவர்களது. மதம் - செருக்கு. கிலமதுஆக - சிதற. மாமதங்கயம் - பெரிய மத்தகஜங்களை. நடாவு - ஏறி நடாத்துகின்ற. மண்டலீகர் - (துட்டர்களாகிய) அநேக தேச ராஜர்கள். மாளவென்று - சாகும்படி ஜயித்து. புகழ்சூடிய - கீர்த்தியைத் தரித்த. சாமதங்கியுருவான - ஜாமதக்கினியென்னுந் திருநாமத்தையுடையவராய்த் திருவவதரித்த. எங்கள் திருமால்-எங்கள் திருமாலென்று சொல்லும்படி சௌலப்ய குணத்தைக்கொண்டுள்ள தெய்வநாயகனது. அனந்தவரை வீதியில் - சிறப்புமிக்க ஸ்ரீவரமங்கல நகரத் தெருவிலே. அனந்தம் - ஆகாசம். தாமதங்கிளருவார் மனம் - தாமத குணமிக்கார்களது நெஞ்சு. சுழல-உழலும்படி. எய்மதங்கி-வந்த மதங்கி.

(ஏய் என்பதற்கு ஏமாற்றுகின்ற எனினுமாம். உரையிது - இந்த வார்த்தையை. கேள்-கேளாய். காமதங்கம் - விருப்பத்தை விளைக்கும் சுவர்ணத்துக்கு. (இங்கு வல்லின மிரட்டியாதது செய்யுள் விகாரம்) நிகரான-சரியான. நின்தனுமுன் ஆமுனம் - உனது (அழகிய) மேனி (அல்லது வில்) முன்னே தோன்றுவதற்கு முன்னே. பின் அடையார் கள் யார் - (காமபரவசராய் வெட்கத்தைவிட்டு நின்பின்னே வராதவ ரெவர்? ஒருவருமிலர். (பின்வாங்கி யோடாதவர்கள் எவர் என்றும் பொருள்படுதலுணர்க). (அப்படியிருந்தும்) காமனும் - யாவரையு மோகிக்கச்செய்யும் மன்மதனும். தளரும் - மோகமுற்று மனந்தளரு கின்ற. வேல் இரண்டொடு - இரண்டு வேலாயுதத்துடனே (இரண்டு விழிகளும்) இருநேமியும் - இரண்டு சக்கரப்படைகளும் (இரண்டு தனங்களும்) குலவு-விளங்குகின்ற. பாலமும் - பிண்டிபாலமென்னும் ஆயுதமும். (நெற்றியையும்) ஏமம்முந்துஉன்வயமாய்-இருந்துகாத்தலில் முதன்மையான உன்வசமாகவிருந்தும். ஏனேயோ - யாதுகாரணமோ. (உன்அங்கைகளில் வாள்களைத்தாங்கி). ஏர்அரும்ப - அழகுதோன்ற. நடனம் ஆடுகின்ற விதுஎன் - நர்த்தனஞ் செய்கின்றது ஆகிய இந்தக் காரியம் யாது. ஏசில் என்பணி - குற்றமற்ற என்னிடமிருக்கின்ற. பணிகொள் - ஆபரணங்களை வாங்கிக்கொள்ள வேணுமென்னும். ஆசையே - அவாவோ. (வெளியிடவேணுமென்றபடி) ஏசில் என்பணி கொள் ஆசையே யென்பதில் குற்றமற்ற வென்னைக்குற்றேவல்கொள்ள வேணுமென்னும் பிரீதியோவென்றும் பொருள் தோன்றல் காணத் தக்கது. (௩எ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இது 1, 3, 5, 7-வது சீர்கள் தேமாவாகவும், 2, 4, 6, 8-வது சீர்கள் கூவிளமாகவும் அடிகடோறும் வந்தன காண்க.

(பா) ஆசைமேலடா——காசவாசனே. (௩அ)

ஆகாசபூதரா நீ ஆசைமேவினேன் நெஞ்சிலே கிருபாசமேதனாய் வாசமேவவா என்க.

(இ-ள்.) ஆசைமேல் - பொருளின்மீது. அடா ஆசை - தகுதியில்லாத இச்சை. மேலிடா - அதிகரித்து. ஆசைதோறும் - திக்கு விதிக்குகள்தோறும். மேய்-போய். ஆசை மேயினேன் - குற்றமுற்றவனாக ஆயினேனது. பாசம் மூடும் - நீரிற்பாசிபோல அஞ்ஞானந்தகாரத்தாலே வியாபிக்கப்பட்டிருக்கிற. ஆபாசநெஞ்சிலே - பொய்த்தோற்றத்தையுடைய (அல்லது கேட்டையுற்ற)இதயத்திலே. பாசம் ஆர் - அன்பார்ந்த - கிருபாசமேதனாய் - காருண்ணியரூபியான பெரியபிராட்டியாரோடு கூட. சநாதனா-நித்தியனே. வாசவாநுசா-உபேந்திரனே. காசுஅகல் - குற்றமற்ற. பிரகாசமேவும்-ஒளியமைந்த. ஆகாசபூதரா - வானமாமலேயே. காசவாசனே - பீதாம்பரதாரியாகிய தெய்வநாயகனே. நீ வாசமேவ-நித்யவசாம் பண்ணுதற்கு. வா - எழுந்தருளவேணும். (காசம் - பொன்). (௩அ)

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியச்சந்த விருத்தம்.

சந்தக்குழிப்பு.

தானதனந்தனா தானதனந்தனா தானதனந்தனா
தானதனந்தனா.

இதில் 1, 3, 5, 7-வது சீர்கள் தேமாவாகவும், 2, 4, 6, 8-வது சீர்கள் கருவிளங்காயாகவும் அடிதோறும் வந்துளது காண்க.

(பா) வாசநறுங்குழலார் — சீவரமங்கையனே. (௩௯)

ஸ்ரீவரமங்கையனே! நீசனேன் உன்பதம் ஆம் புணை மேய் நாடு உறல் என்றுகொலோ என முடிக்க.

(இ-ள்.) பாசம் - பந்தம். சுழி-ஆவர்த்தம். (உருவகம்) வாவி - தாவி. ஆவியும் - உடலேயன்றி உயிரும். அழல்ஆழ் - நரகத்து மூழ்குகின்ற. நீசன் எனும் தகையேன் - எல்லாப்படியாலும் இழிவுற்றவனென்று சொல்லத்தக்க யான். அன்பு இதம் ஆம் - தயையும் அதற்கநுகுணமான உரிமையையுமுடைய. உன் - உனது. தேசு அவிர்பதமாம் - ஒளிஒளிரும் திருவடிகளாகிய (அன்பும் இதமுமாகிய தேசு)

என உருவகமாக்கிப் பொருள்கொள்ளவுமமையும். வன்புணை - பலமாகிய தெப்பம்; எவற்றாலுங் கேடுறாத வலிமையையுடையது என்பது வன்மையின் பொருள். பதமாம்புணை உருவம். மேய் - மேவி. நாடு உறல் - (பிறவிப் பெருங்கடலைக் கடந்து) உனது திருநாடடைதல். என்றுகொலோ - எக்காலமோ. மேசகம் - கருமை; இது ஆகு பெயராய் மேகத்தையும், சுந்தரம் - அழகு; இது ஆகுபெயராய்த் திருமேனியையும் உணர்த்தலாலே, மேசகசுந்தரனே - நீலமேகம்போன்ற திருமேனியையுடையவனேயென்று பொருள்கொள்ளப்பட்டது. ஆசு அகல் அந்தரனே - தோன்றல், மறைதல், துன்புறுதல் முதலிய குற்றமொன்றுமில்லாமல் ஒரே தன்மையாய்ப் பரமாநந்தத்தையே விளைவிப்பதாயிருக்கிற தெளிவிசும்புடையானே. வேயிசைபங்கயனே-வேணுகானஞ்செய்தருளும் திருவாயையுந் திருக்கைகளையு முடையவனே; (பங்கயம்) வாய்கைகளுக் குவமையாகுபெயர். பூமிசை - தாமரைமலரிலே. தங்கு - வீற்றிருக்கின்ற. அயனே - சிருஷ்டி கர்த்தாவாயிருப்பவனே. மாசு அறு சந்திரனே - களங்கரகிதனாயிருக்கிற அமுதகிரணன்போலே ஆனந்தத்தை விளைவிப்பவனே. தேசுறுமந்திரனே-வாச்சியனாகிய நீ தேசாந்தரகதனாயிருந்தாலும் கிட்டிநின்றுதவுதலென்னும் பிரகாசத்தைப்பெற்றுள்ள பெரிய திருமந்திரத்தையுடையவனே. மாமரை நங்கையனே - பெருமை தங்கிய தாமரை மலரில் வீற்றிருந்தருளுகின்ற பெரியபிராட்டியாரைத் திருமார்பிலே வைத்துக்கொண்டிருப்பவனே; மரை-தாமரை; முதற்குறை. சீவரமங்கையனே-ஸ்ரீவரமங்கல நகரத்துக்கு நிர்வாகனாயிருக்கிற தெய்வநாயகனே எ-று. (௩௬)

நேரிசை வெண்பா.

இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(இறைவி இருளைக்கியம்பல்).

பிரிந்தநாள்முதல் இடைவிடாதுள்ள பெருவிருப்பாலே தோன்றும் உருவெளித்தோற்றத்தை யுண்மையாகவேயெண்ணி மகிழ்ந்து தோழியோடு சொல்லல்.

(பா) மங்குல்வரை——சொல்லைவாய். (௩௭)

மான்! மங்குல்வரை மால், மருமருந்தம்தார் தந்தார்; கொங்கு உந்து ஏர் தேர் வந்தார் வந்தாரேல், செங்கரும்பு ஆம் வில்லை வில்லை யாய் நறுக்கி மெல்ல மெல்; அம்பு ஆம் பூவில் வல்லை வல்லை என்ற சொல்லை வாய். எனப் பிரித்துப் பொருள் கொள்க.

(இ-ள்.) மான் - மான்விழிபோல மருண்ட பார்வையையுடைய தோழியே; அண்மைவிளி. மான் ஆகுபெயர். மங்குல்வரைமால் - வானமாமலையில் வீற்றிருந்தருளுகின்ற தெய்வநாயகன். மருமரும் - வாசனை மருவிய. மருவுமென்னுஞ் செய்யுமென்னெச்ச வீற்றுயிர் கெட்டது. தம்-தமது. தார்-திருத்துழாய்மாலையை. தந்தார்-கிருபை யாலே கொடுத்தருளினர். (ஆதலாலே) கொங்கு-பரிமளத்தை. உந்து-எவ்விடத்தும் வீசுகின்ற. ஏர்-அழகையுடைய. தேர்வந்தார்—தென்ற லாகிய தேரையுடைய மன்மதனார். வந்தாரேல் - (இனி வரமாட்டார்) வந்தாரெனில். (அவரது) செங்கரும்புஆம் வில்லை - செவ்விய கரும் பாகிய தனுவை. வில்லையாய்-துண்டு துண்டாக. நறுக்கி-துண்டித்து. மெல்ல மெல் - மெதுவாக மென்று தின்பாயாக. அம்புஆம் - பாணம் ஆகிய. பூ-புட்பங்களை. (ஓர் காசுக்கு) வில்-விக்கிரயஞ்செய். வல்லை-விரைவிலே. வல்லை யென்ற - சாமர்த்திய முடையவனென்னும். சொல்லை - புகழை. வாய் - அடைக எ-று. (சயி)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

உற்றது உரைத்தல்.

(2-வது நாள் இடந்தலைப்பாட்டிற் றலைவியோடு கூடிப்பிரிந்து வந்த தலைவனது வாட்டம் வினவிய பாங்கற்கு அத்தலைவன் தனக்கு வாட்டமுற்ற காரணத்தை உள்ளவாறுரைத்தல்).

(பா) சொல்லுவல்கேள்——வஞ்சித்ததே. (சக)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ-ள்.) சொல்லுவல் கேள் அன்ப—யானுற்றதை உரைக்கின்றேன் கேளாய் தோழனே. தூமணிமாடச் சுடர்ப்பிழம்பே—பரிசுத்தமான இரத்தினங்களாற் செய்த திருமாளிகைகளின் சோதியின் தொகுதிகளே. ஏகாரம் பிரிநிலே. (சூரியோதயமில்லாமலே யென்றபடி) அல்அல் உருமறச்செய்—இரவிலும் இருள் வரவொட்டாமல் வெருட்டுகின்ற (ஏழாம் வேற்றுமை யுருபும் உயர்வு சிறப்பும்மையுந் தொக்கது செய்யுள் விகாரம்) வான்மலைநாதர் தம் அங்கிரியில்—தோத்தாத்திரிநாதரது அழகிய திருவடிகளிலே (அழகிய வரையிலே). செல்லல் இல்லாமற் செலும் - ஐம்பொறி வயப்படும் அல் இல்லாமற் செல்லுகின்ற. மனம் எனும் சிந்துரத்தை – சித்த மென்னும் மத்த கஜத்தை. வல்லமை அங்கு சத்தாலே – மேட்டுப் பாங்கரிலுள்ள அழகிய தருப்பைப்புல்லினாலே. (வல்லமையுள்ள அஞ்குசமென்னும் படையினாலே) வல்—சொக்கட்டான்காய். கச்சுமாம் (சூதாடுகருவி போலழகமைந்த அல்லது ரவிக்கையணிந்த அழகிய தனதடங்களினாலே) ஒரு பிணை—ஒரு பெண்மான். (பிணைபோலு மிணைவிழிகளையுடைய மடமயில்) வஞ்சித்தது—சதிசெய்துவிட்டது. (சக)

பதினாறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

சித்து.

அதாவது இரசவாதம் முதலியவைகளிற் கைதேர்ந்த ஒரு சித்தர் தமது சாமர்த்தியத்தை ஒரு பிரபுவினிட மெடுத்துச்சொல்லி யாசித்தல் செய்ததாகச் செய்யுள் செய்தல். இரதவாதமாவது இரும்பு முதலிய தாழ்ந்த உலோகங்களை யுயர்ந்த தங்கமாக ஆக்குதல் முதலியவைகளென்றது மருந்து, ஜால மென்பனவாகும். இத்துறையை இந்நூலிற் கூறவேண்டுமென்ற இலக்கணிகளுடைய கருத்து, எம்பெருமானையு மவனடியார்களையு மடைந்தவர்கள் முன்னிருந்த தாழ்ந்த நிலைமையை விட்டு உயர்ந்த தன்மையை யடைவார்களென்பதே.

இது கலம்பக வுறுப்பு 18-ல் ஒன்று.

(பா) சித்தகணம்——வாஞ்சித்தோமே (சஉ)

URAI UNIVERSITY LIBR

(ஆற்றெழுக்காகவே பொருளமைதல் காண்க.)

(இ-ள்) சித்தகணம்–அணிமா முதலிய அட்டமா சித்தியை யடைந்த பெரியார்களது கூட்டம். எல்லாம்வல்ல சித்தர்–நான்மாடக் கூடலில் எல்லாம் வல்ல சித்தரெனப் பெயர்பூண்டு திருவிளையாடல் புரிந்த சிவபெருமான். உய்ய–உஜ்ஜீவிக்க. அருள்தழைத்த–கருணை விஞ்சிய. சித்தர்–திருவுளத்தையுடையாராகிய. சித்திதரும்–அடியார்களுக்கு அகிலாபீஷ்ட சித்திகளையும் அளித்தருளும். வான்வரை வாழ்-தோதாத்திரியில் வீற்றிருந்தருளும். செகப்பிரசித்தர்-உலகமெங்கும் வாற்சல்யாதி குணங்களாலே விளங்குகின்றவராகிய தெய்வநாயகரது. திருவருள்பெற்றிடும்-சிறந்தகருணையையடைந்த (கருணையென்றது கூடலில் கருடாரூடராய்ச்சேவை சாதித்தருளியதை) எங்கள் விண்டுசித்தர்–அடியேங்களுக்கு நிர்வாஹகரான (பெரியாழ்வாரது) விண்டுசித்தரென்னுந்திருநாமத்தையுடையவரது. பத்தரெனும்–அடியார்களென்று கொண்டாடும். சித்தரில்-சித்தர்களுடைய கூட்டத்திலே (சித்தோபாய நிட்டருக்குள்ளே) ஓர் சித்தரானேம்–ஒரு சித்தி பெற்றவராயினேம். பண்இரசவாதம்–செய்யுமிரதவாதமும். மருந்துபல–ஔடதங்கள் பலவும். நாம் தேர்வோம்–யாம் தெரிந்திருக்கின்றேம். (இவைகளைத்தெரிந்துகொள்ள விருப்பமுடையார்க்கு) பகர்வோம்-சொல்லுவோம். (நாம்செய்யும் தங்கம்) மாற்று உரையால்–உயர்ந்த மாற்றிலும் உரையிலும் (குன்றவடையாது) பார்– (நீநேரிற் சோதனை செய்து) தெரிந்துகொள். புடத்திற்கு-தாழ்ந்த உலோகங்களைப்புடம்போட்டுயர்ந்த தங்கமாகச்செய்வதற்கு. இறை இருந்தையென்றாற் போதும்–ஒரு கூடை கரியிருந்தாற் போதுமானது. (நீர் இதற்குமுன் யார் யாரிடம் போய் உமது வித்தையைக்காட்டிப் பரிசு பெற்றிருக்கின்றீரென்று கேட்கின்றாயா? கேள் சொல்லுகிறேன்) வித்தகனும்–எல்லாம் வல்லவனுகிய. கண்ணனிடம்-ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்திலே. மெய்–உண்மை. தராவை–தராவென்னும் பெயரிய உலோகத்தை. ஆடகம் ஆக்கினம்-சுவர்ணமாகச் செய்துவிட்டோம். கண்ணனிடம் எய்து அராவை–மடுவிற்குதித்தபொழுது கோபமுடன் எதிர்த்த காளிங்கனென்னும் சர்ப்பத்தை. ஆடு அகம்-நடனசாலையாக ஆக்கினம்-செய்தோம்) அப்பாவென்பது சித்தர்கள் பேச்சு. (அன்றி

யும்) விண்ணவர்க்கு—தேவர்களுக்கு. நாகத்தை—நாகமென்னும் பெயரிய உலோகத்தை. பொன்னாகச்செய்தோம்—தங்கமாகவே யமைத்து விட்டோம். நாகம்—சுவர்க்கலோகம் அது இயல்பாகவே சொர்ணமயமானது. விரும்பில்—(இரதவாதத்தால் வருமிலாபத்தை நீ யடைய) இச்சித்தாயானால். (செய்துதருகிறோம்) வங்கம்—காரீயம். தங்கம்ஆம்—சொர்ணமாகும். (விரும்பில்—நாவிகர்கள் இச்சித்தால். வங்கம்—மரக்கலங்கள். தங்கு அம் ஆம்—எப்போதுங் குறையாது தேங்கியிருக்கிற கடலிலே செல்லும்) பங்கம் இல்லை—சத்துருச் சரக்குகளாலே நாம் செய்து தரும் தங்கத்துக்கு ஒருக்காலுங் கெடுதி கிடையாது. வைத்திருக்கும் இருப்பை — நீ வைத்துக்கொண்டிருக்கிற இரும்புகளை (ஆபத்தனத்தை) இவண்—இங்கு கொணர்ந்து, ஈவாயேல்—கொடுப்பாயானால். மாட்சிபெற்ற—பெருமை பொருந்திய. ஈகையென—சுவர்ணமென்று யாவரும் மதிக்கும்படி. (ஔதார்யமென்று) வழங்குவோம்—பேதித்துத்தருவோம், சொல்லிப்புகழ்வோம். வன்மைமிகும் வேங்கையும்—(உலோகங்களையன்றி) பலம் மிகுந்த வேங்கைமரமும். மா—பெருமைபெற்ற. தங்கமாகும்—பொன்னாகும். "வேங்கை பொன்புலி மரப்பேர்" என்பது காண்க. (பலம் பொருந்திய வேங்கைப் புலியும் மத்தகஜமாகுமென்றும் பொருள்படுமாயினும் இவ்வாறு கூறல் சம்பிரதத்துக்குத் தக்கதேயன்றிச் சித்துக்குப் பொருந்தாது). மைந்த—பிள்ளாய். இன்று—இத்தினத்தில். (இத்தனை வித்தைகளுங் கற்றிருந்தும்) யாம்—நாம். பாலனத்தை—க்ஷீரான்னத்தை. விழைந்தோம்—விரும்பினோம் எ—று.

அர்த்தாந்தரம்.

(இ-ள்.) அப்பா மைந்தா—ஐயா கிரகணதாரணபடுவே. (மைந்து—வலிமை) பணி—அன்போடு வணங்கு. ரதவாதம்—பகவத் சொரூபரூப குணவிஷயமான இனிய வியவகாரமாகிய அமிர்தத்தை. அருந்து என்னும் வினைக்கேற்பவாதத்தை அமுதமாக உருவகஞ் செய்யப்பட்டது. அருந்து—செவி வாயாக வுட்கொள். பலம்—உட்கொண்டதனால் வரும் பிரயோஜநத்தை. (நாம்) — ஆசார்யாநுக்கிரகத்தாலே தெளிந்த ஞானத்தையுடைய யாம். தேர்ந்தோம் — ஞானத்தினாலே முத்தி யென்ற விஷயத்தை நன்கறிந்திருக்கிறோம். பகர்ந்திடுவோம்—

உனக்கு முபதேசிப்போம். மாற்று உரையால்—(நம் முபதேசத்தால் வரும் யதார்த்தஞ்ஞான தீபமானது) இதர மதவாதிகளுடைய வாதத் தினுலே. குறைவு உறுது—தாழ்வடைய மாட்டாது. பார்—(இவ்விஷ யத்தை) நீயே தெரிந்துகொள். புடத்திற்கு—இந்தத் தத்துவஞ்ஞான மற்றொன்றாலும் சலியாமல் நிலைபெறுதற்கு. இறை—சிறிதுபொழுது. இருந்தை ஆனல்—இருந்தாய் என்றால். போதும்—போதுமானதேயாம். இதுவரை அட்டமாசித்திகளிலே காலத்தை வறிதே கழித்து இப் போது பகவன் முகோல்லாசத்திற்கு ஹேதுவான உபதேசரூபமான சேதன பரிபாலனத்தை விரும்பினேம் (ஆத்ம சம்ரக்ஷணத்தை விரும்பினேம்) எ-று. (சஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதிலொவ்வோரடியிலும் எட்டுச்சீரும் மாவியற்சீராகவே வந்தன காண்க. இயற்சீராவது எல்லாப் பாவிலுமியலுஞ்சீர். இயலுதல்—பொருந்துதல். (இயற்கைச்சீரெனினுமாம்).

(பா) யாம் சித்தமகிழ்ந்து——கடிமாமலரே. (சங)

யாம் இடரற்றிடவும் இதமுற்றிடவும் இரவும் பகலும் சித்த மகிழ்ந்து வாஞ்சிப்பனவும் துதிசெய்வனவும் வந்திப்பனவும் தோதாத் திரியார் சுழலார் கழலாங் கடிமாமலரே யென முடிக்க.

(இ-ள்.) வளையாழியினர்-சங்குசக்கர மங்கையிற்கொண்டவரும். நாஞ்சிற்படையார்-அலாயுதத்தையுடையவரும். துளவத்தொடையார்-திருத்துழாய்மாலையை யுடையவரும், நாகக்குடையார் - கோவர்த்தன பர்வதத்தைக் குடையாகவுடையவரும். நமை ஆளுடையார் - நம்மை யடிமைகொண்டருளியவரும். காஞ்சிக்கு உரியார் - அத்திகிரிக்கதிபதி யும் ஆகிய. தோதாத்திரியார் - வானமாமலையாரது. கழல் ஆர் - வீர கண்டை தரித்த. கழல்ஆம் - திருவடிகளாகிய. கடி - வாசனைபொருந் திய. மாமலரே - செந்தாமரைமலர்களே யாம். வாஞ்சிப்பன முதலிய திரிகாணங்களின் றெழில். (சங)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் 3, 4, 7, 8-வது சீர்கள் இயற்சீர்களாகவும், மற்றயவை வெண்பா வுரிச்சீராகவும் ஒவ்வோரடியினும் வந்தன காண்க.

(மறம்).

இது கலம்பக வுறுப்புப் பதினெட்டி லொன்று.

இதனிலக்கணம்:-தமது மகளை மணம் பேசும்படி அரசரா லனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணமறுத்து அவ்வரசரை யவமதித்துப் பேசியதாகச் செய்யுள் செய்வது. புறப்பொருளிலக்கணத்தார் இதனை மகட்பாற் காஞ்சியென்னும் துறையினமாகக் கொள்வர். மகட்பாற் காஞ்சியாவது—புறப்பொருட்டிணை பன்னிரண்டனுள் காஞ்சித்திணைக்குரிய பல துறைகளிலொன்று. அதாவது—நின்மகளை எனக்கு மணஞ்செய்து தருகவென்னும் அரசனோடு மாறுபடுவது "ஏந்திழையாட்டருகென்னும், வேந்தனோடு வேறு நின்றன்று".

வெண்பா.

"அளியகழல்வேந்தரம்மாவரிவை
எளியரென்றெண்ணியுரைப்பிற்—குளியாவோ
பண்போற்கிளவியிப்பல்வளையாள்வாண்முகத்த
கண்போற்பகழிகடிது"

இது புறப்பொருள் வெண்பாமாலையிற் காட்டிய உதாரணம்.

"மணித்தாரரசன்றன்மனையைத்தூதுவன்வாய்வழியே
திணித்தாசழியச்சிதைமின்றலையையென்றீவினையைத்
துணித்தான்குருகைப்பிரான்றமிழாற்சுருதிப்பொருளைப்
பணித்தான்பணியன்றெனிற்கொள்ளுங்கொள்ளுமென்
பான்மையையே"

என்பர் சடகோபரந்தாதியிற் கம்பநாடரும்.

தெய்வநாயகனுக்கே உரியளாகிய தமது மகளை மணம் பேசும்படி ஓலை கொடுத்தனுப்பப்பட்ட அரசனது தூதன் அவ்வரசன் கட்டளைப் படி தம்மிடம் வந்து ஓலையைக் கொடுத்து மணம் பேச அம்மகட்கு ரியார் மிக்க கோபங்கொண்டு அம்மணப்பேச்சை மறுத்து அவ் வரசனைக் குறித்துப்பரிகசித்துக் கூறினரென்பதிதிற் கூறப்பட்ட விடயமாம்.

(பா) கடிபொழில்சூழ்——மருவுவாயே. (சச)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ-ள்.) கடி-வாசனை; இளமையுமாம். வரமங்கை-வானமாமலை. தேவநாதன்-தெய்வநாயகன். கறைகெழு-பகைவரி னிரத்தந்தோய்ந்து விளங்குகின்ற. பரகாலன் - திருமங்கையாழ்வார். அமைச்சர் - மந்திரி கள் (அவராவார் நீர்மேனடப்பான் முதலியோர்). அடல் - வலிமை. முடி அரசர் - கிரீடாதிபதிகளாகிய அரசர். (அழியும் அரசரென்றும் பொருள்படுதலுணர்க). மணவோலை - கலியாணவோலை. (இதற்குத் தாழம்பூவென்றும் பொருளுண்மையில்). முடி - சூடு. மணமாம் - மன்றல்நிகழும் (என்று பரிகசித்துரைக்கப்பட்டது.) மணப்பத்திரிகை யென்பதற்கு, மண் அப்பிய அந்தத்திரிகை யென்றும் பொருள்படு தலில், மடிவரகுதிரித்திடலாங்கொடுபோவென்று பரிகசித்துரைக்கப் பட்டது. மடிவரகு - மடித்தவரகு. மடி - மூடனேயென்று விளித்த தாகவுங் கொள்ளலாம். ஓலை பத்திரிகை யென்பவற்றின் பொருளறி யாது ஏதோ புலம்புகின்றனர் ஆகலின் வந்தகாரியத்தை வாய்மொழி யாகவே வழங்குவோமென்று கருதி, பெண்ணை மணம் பேசவந்தோ மென்ன, தூதரது வார்த்தையைக்கேட்ட மறவர் ஓர் நதிக்கும் பெண்ணையென்னும் பெயருண்மையில், அதற்கும் பரிகாசமாக நடு நாட்டுக்குப்போ பெண்ணை மருவிடலாமென்றனர். பெண்ணை யென் னும் நதிநடுநாட்டிலே யுளதாதலில் பரிகசித்தற் கேதுவாயிற்று.

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியச்சந்த விருத்தம்.

சந்தக்குழிப்பு.

தனதந்ததந்த தனதந்ததந்த தனதந்ததந்த தனனு.

இதில் ஒவ்வோரடியிலும் 1, 3, 5 புளிமாங்காய்ச்சீராகவும், 2, 4, 6 தேமாஞ்சீராகவும், 7 புளிமாஞ்சீராகவும் வந்தன காண்க.

(காட்சி).

அதாவது கூர்வேலிளைஞர் பற்பன்னூருயிரவர் வேட்டை விருப்பால் வெவ்வேறிடங்களிற் பிரியத் தமியனாய் வந்த தலைமகன் ஒண்ணுதன்மகளிர் பற்பன்னூருயிரவர் விளையாட்டு விருப்பால் வெவ்வேறு கருதிப் பிரியத் தமியளாய் மலர்ச்சுனையருகுள்ள மரகதமணிப்பாறையிலோர் தண்ணியமர நீழலில் மயிலாடுவதைக் கண்ணுற்று நின்ற தலைமகளைப் பான்மையாற் கண்ணுற்று இஃதென்னேயென்று வியத்தல்.

(பா) மருவொன்று——தென்றனெதிரே. (சரு)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ-ள்.) மருஒன்றுமங்குல் - வாசனை பொருந்திய மேகம். (இருவகை நறுமணமுங் கமழுங் கூந்தலையும்) சிலை - வில். (புருவங்கள்) அம்பு-கணை. (கண்கள்) இலங்கு-இவை விளங்குகின்ற. மதி-சந்திரன். (முகமும்) தங்கு - மேலே கூறிய மதியிருக்கின்ற. சங்கு - சங்கம். (கழுத்தையும்) கிளர்வேய் - விளங்குகின்ற மூங்கில். (தோள்களையும்) உருஒன்று - அம்மூங்கிலுருவத்தோடு சேர்ந்த. கஞ்சம் - செந்தாமரை மலர். (அகங்கைகளையும்) உறுஎறும்பு ஒழுங்கொடு - அமைந்த பிபீலிகாபந்தியுடன். (பிபீலாபந்தி உரோமாவலி) ஒளிரும் - பிரகாசிக்கும். தரங்கமுடனே - அலைவரிசைகளுடனே. (அலைவரிசை-வயிற்று மடிப்பு இதனைத் திரிவலியென்பர்) திரு ஒன்று கொம்பர் - அழகுவாய்ந்த ஓர் பூங்கொம்பு.(ஒரு மாதர் அரசு) தருஒன்று - கற்பகத்துக்குச்சமமான. செங்கை - செவ்விய திருக்கைகளையுடைய. வரமங்கைமஞ்சு - ஸ்ரீவரமங்கலநகரில் வீற்றிருந்தருளும் மேகவண்ணனாகிய தெய்வநாயகனது

தழைஅம்பொதும்பரிடையே - செழித்த வழகிய பூஞ்சோலையினிடையே. மகிழ்விஞ்ச - (கண்டவர் யாவருக்கும் எனக்கு என்றுமாம்) சந்தோஷம் அதிகரிக்கும்படி. இன்று-இன்றைய தினத்தில். என்றன். எதிரே - என்னுடைய முன்னே. திகழ்கின்றது - விளங்குகின்றது. (இஃது இதற்குமுன் எங்கும் எப்பொழுதுங் காணாத அற்புதக்காட்சியாம்) எ-று. (சரு)

இப்பாட்டிலுள்ள மருங்குல் முதலியவைகள் கூந்தல் முதலியவைகளுக்கு உவமையாகு பெயர்களாகும். இவ்வாறு சொல்வதை அணிநூலார் உருவக வுயர்வு நவிற்சியென்பர். (ரூபகாதிசயோகதிரலங்காரம்)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் அடிகடோறும் 4-8வதுசீர்கள் மாச்சீர்களாகவும் மற்றைய வாறுசீர்களும் காய்ச்சீர்களாகவும் வந்துளது காண்க. மடக்கு-இலக்கணமுன்சொல்லப்பட்டது. இதில் அடிகடோறும் அரையடியிறுதி முற்றும் மடக்கு; இன்னும் அடிகடோறும் அரையடியால் கார்காலத்தியல்பும் மற்றோரரையடியால் தலைவிதன்னியலுஞ்சொல்லப்படுகிறது.

கார்காலம் (தலைவி கூற்று)

அதாவது கார்காலத்தில் திரும்பிவருவதாகக் காலங்குறித்துப் பிரிந்துசென்ற தலைவன் அக்காலம் வந்தும் வாராமை, அதுவரையாற்றியிருந்த தலைவி ஆற்றாமைமிக்கு அக்காலத்தியல்புகளையுந் தன்னியல்புகளையும் கூறியிரங்குவது.

(இ-ள்) திரள்எழிலி-கூட்டமாகிய மேகங்கள். எழில் இவர-அழகு விளங்கும்படி. (எம்பெருமானது திருமேனியழகுஎன்றுமாம்) எதிர்பு-எதிரேதோன்றி. ஆர்க்கும்-முழங்கும், காலம். சேண்வரை-வானமாமலையில் வீற்றிருந்தருளும். வானாதி-தெய்வநாயகனது. (வான் இடவாகுபெயராய்த் தேவரையுணர்த்துகிறது) (ஆதிநாயகன்) வரவு-வருகையை எதிர்பார்க்குங்காலம். கரளம்என-விடமென்றுசொல்லும்படி, வில்லைக்கொண்டு-கருநிறமுடையதாய். அப்பெய்யும்-மழையைப் பொழியும், காலம். காமன்-மதன். அங்கைவில்லைக்கொண்டு-அழகிய

கரும்புவில்லினுலே. அம்பு எய்யும்-கணைகளையேவும், காலம். புரள-கரை புரளும்படி. எழு-பெருகிவருகின்ற. வாரி-மலை வெள்ளம். மணி-அங்குள்ள அரதனங்களை. வாரிவரு-அள்ளிக்கொண்டு வரும் காலம். புலம்பும்-அழுகின்ற. என்கண்வாரி-என்னுடைய கண்ணீர். மணி-மண்ணி-கழுவியதனுலே. வார்-தனகஞ்சுகம். இவரும்-விளங்கும். காலம். தரளநகையார்-முத்துமாலைகளையணிந்திருக்கிற (முத்தவரிசையையொத்த தந்தங்களையுடைய) அயன்மாதரது. நகையில்-அவமதிச்சிரிப்பைப்போல. தளவு-முல்லைக்கொடிகள். அலர்ஏய்காலம்-மலர்களைப் பொருந்தியிருக்கும் காலம். தாயரும்-நற்றுய் செவிலித்தாய் முதலியவர்களும், தாதியும்-உயிர்த்தோழியும். பகையில்-பகைவர்போல. தள-அநாதரவு செய்யும்படி. அலர்-பலரறிந்து தூற்றும்பழி. ஏய்-வரும், காலம் (எ-று). (சசு)

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

இதில் 1-3-5-6வது சீர்கள் விளச்சீர்களும், 2-4-7வது சீர்கள் மாச்சீர்களுமாய் ஒவ்வோரடியிலும் வந்துள்ளன காண்க. இப்பாட்டில் அடிதோறும் முதலில் வந்த சொல்லையே மறுபடியும் மடக்கியிருத்தல் ஓர் வியப்பு. இவ்வாறு வருவதனை (அநுப்பிராசமென்பர்).

(செவிலி நற்றுய்க்கறத்தொடு நிற்றல்)

செவிலி-தாயின்தோழி. நற்றுய்-சொந்தத்தாய். அறத்தொடு நிற்றல்-களவை முறையே வெளிப்படுத்திநிற்றல்; முறை-கிரமம். தலைவி பாங்கிக்கறத்தொடு நிற்றல், பாங்கி செவிலிக்கறத்தொடு நிற்றல், செவிலி நற்றுய்க்கறத்தொடு நிற்றல், நற்றுய் தந்தை தனையர்க் கறத்தொடு நிற்றல். அறத்தொடு நிற்றலென்பதற்குப் பொருள்-முறையே களவைவெளிப்படுத்தலென்பது வேறெவ்விடத்திற்குமாகாது. இவ்விடத்திற்கு மாத்திரம் ஆகுமென்ப. இது. அகப்பொருணூலாரால் ஏற்படுத்தப்பட்ட பெயரெனக்கொள்க. அறத்தொடுநிலை முன்னிலைமொழியென்றும், முன்னிலைப்புறமொழியென்றும், இருவகைப் படும். இச்செய்யுள் முன்னற்கூறியதாம்.

(பா) காலனைக்கால——பதியெனத்திருவே (சஎ)

திருவே! பாலமதிநுதல்விண்சயிலபாலனைமதியில் பதியெனப் பதித்தனளெனமுடித்துரைக்க.

(இ-ள்) காலனை-காலங்கருதியுயிர் கவருமியமனையும். காலகண்டனை- (அக்காலனையுங் காலாலுதைத்த) ஆலகாலவிடத்தையருந்தியத னற்கறுத்துள்ள கழுத்தினையுடையகண்ணுதலையும். கண்ட-படைத்த. கமலனை-பதுமாசனனான பிரமாவை நாபியிலுடையவனும். கமல மேல்-பிரளயவெள்ளத்தில். துயில்கொள்-பாலகனாயேழுலகுண்டுறங்கு கின்ற. ஆலனை-ஆலிளந்தளிரையுடையவனும். (ஆல், தளிருக்கு ஆகு பெயர்) ஆலஅரவனை-விடத்தோடுகூடிய திருவனந்தாழ்வானைப்பரியங் கமாகவுடையவனும். அரவஅலையனை-முழக்கத்தையுடைய திருப்பாற் கடலையறிதுயிலமருமிடமாகக்கொண்டருளியவனும். அலையனையகருங் கோலனை-இருளையொத்த கரியதிருமேனியையுடைய ஞானப்பிரானும். (கோலம் வராகம்) கோலக்குழையனை-அழகிய திருக்குண்டலங்களைத் தரித்தவனும். குழைவில் குழகனை-வளைந்த சாரங்கமென்னுந் தனுவைக்கொண்ட நித்ய யௌவனமுடையவனுமாகிய. குழக-அழகினை யுடைய. (குழகு, அழகு, யௌவனம்) விண்சயில பாலனை-வானமாமலையில் வீற்றிருந்தருள்கின்ற சர்வரக்ஷகனை. பாலமதிநுதல்-பிறைச் சந்திரனையொத்த நெற்றியுடைய நம்மகள். (மதிநுதல்-அன்மொழித் தொகைக் காரணப்பெயர்) மதியில்-தனது மனதிலே. பதியென-பர்த்தாவென்று. பதித்தனள்-திடமாகக்கொண்டிருக்கின்றாள். (சஎ)

கட்டளைக்கலித்துறை.

இலக்கணம் முன் மொழியப்பட்டது.

தழை நயப்பு உரைத்தல்.

அதாவது பாங்கி தலைமகனுக்குத் தலைவி அதிக விருப்போடு நீ கொடுத்த தழையை ஏற்றுக்கொண்டனளென்பது. இது பாங்கியிற் கூட்டத்துள்ள அறுபத்தொரு துறையுளொன்று.

(பா) திருவார்தரு——கோற்றொடியே. (சஅ)

அன்ப! கோற்றொடி நீ தருவார் தழையை விழியிலொற்றி முலை வைத்து அணைத்து பவழத்தின் முத்தமுந் தந்தனளென்க.

(இ-ள்.) அன்ப-தலைவனே. கோற்றொடி - அழகிய வளையல்களை யணிந்த தலைவி. (கோற்றொடி அன்மொழித்தொகைக் காரணப்பெயர்) கோலம்-அழகு. கோல்-கடைக்குறை. திருஆர்-பெரியபிராட்டியார் நித்யவாசஞ் செய்தருளுகின்ற. திருமார்பன் - அழகிய வட்சத்தலத்தையுடைய தெய்வநாயகனது. விண்சிலம்பில்-வியோமாசலத்திலுள்ள. தருஆர் - விருட்சத்திலிருந்த. தழை - (நீதந்த) தழையை. (யான் கொடுக்கப் பேரன்போடு வாங்கி) விழைவு தழைய - காதல் மீக்கூர. விழியில் - கண்களிலொற்றிக்கொண்டு. மருஆர் - சந்தனக்கலவையின் பரிமளநிறைந்த. முலைவைத்து - தனதடங்களிலே வைத்து. இருகைகளாலும் - இரண்டு கரங்களாலும். மகிழ்ந்தணைத்து - உன்னை நேரிற் கண்டாங்கு வந்து கட்டிக்கொண்டு. குருஆர் - நிறம் மிகுந்த. பவளத்தின் முத்தமும் தந்தனள் - பிரவாளத்துக்குச் சமானமான அதரத்தினாலே கொஞ்சவுங் கொஞ்சினாள் எ-று. (சஅ)

நேரிசை வெண்பா.

இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

தலைவியிரங்கல்.

(33-வது நாளில் இளவேனிற்பருவத்து வருவதாகச் சொல்லிப் பொருள்வயிற்பிரிந்த தலைவன் அக்காலம் வந்தும் வாரானாகத் தலைவி வருந்தல்).

(பா) கோற்றொடியார்——செய்கோ. (சகூ)

மனமே! கோற்றொடியார் கைவிட்டார் தென்றற்கொடுவரியினேற்றெடெதிர் நிற்பாரார். பங்காம்புயர் கொங்காம்புயர் தோற்றுகிலர் என் செய்கோ என முடிக்க.

(இ-ள்) மனமே, கொற்றொடியார்-அழகிய வளையல்களையணிந்த தோழியரும். கைவிட்டார்-என்னைப் பாதுகாத்தலினின்றும் விலகி

விட்டனர். தென்றல்-மந்தமாருதமாகிய. கொடுவரியினேற்ருெடு- ஆண்புலியுடனே. எதிர்-எதிரிலே. நிற்பார் ஆர்-நிற்பவரெவர். (ஒருவருமிலர்) பங்காம்புயர்-சேற்றுத்தாமரையென்னுந்தீர்த்தத்தையுடையவரும். பதுமப்பாவை-திருமகளாராகிய. (பாவை உவமையாகு பெயர்) வரமங்கை-ஸ்ரீவரமங்கைத்தாயாரது. கொங்கை-தனதடங்களினுடைய. கொங்குஆம்-வாசனைகமழ்கின்ற. புயர்-திருத்தோள்களையுடையவருமாகிய தெய்வநாயகர். தோற்றுகிலார்-இன்னும் எழுந்தருளினரில்லை. என்செய்கோ-யாதுசெய்வேனே, தெரியவில்லை. (௯௬)

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் ஒவ்வோரடியிலும் ஆறுசீரும் கூவிளமாகவே வந்தன காண்க.

(தலைவியிரங்கல்)

இருபத்தொன்பதாவது நாளில் கார்காலத்து வருவதாகச்சொல்லியேதற்குப்பிரிந்த தலைமகன் அக்காலம் வந்தும் வாராளுகத்தலைவி தோழியரோடு சொல்லி வருந்தல்.

(பா) செய்யபங்காம்புய——குறிப்போதுமே (௯௭)

ஆற்ருெழுக்காகவே பொருள்கொள்க.

(இ-ள்.) செய்ய-செம்மையான. பங்காம்புயவரி-சேற்றுத்தாமரைக்குளம். சூழ்-சூழ்ந்துள்ள. சேண்சயிலத்தினை-வானமாமலையை. மேவியே-அடைந்து. வையமும்-பூவுலகத்துள்ளாரும். வானமும்-தேவலோகத்துள்ளவர்களும். உய்ய-உஜ்ஜீவிக்கும்படி. வாழ்-விற்றிருந்தருள்கின்ற. வண்புயலை வளம் பொருந்திய மேகவண்ணனுகிய தெய்வநாயகனை. வணங்கிலேரன்-பணியாதவர்களைப்போல. நைய-வருந்தும்படி. எனை-அபலையாகிய பார்யையை. தனிதள்ளி-தனியாய் வசிக்கும்படி விட்டுவிட்டு. இந்நாடு கடந்தவர்-சுதேசத்தை விட்டுப்பரதேசஞ்சென்ற தலைவர். நங்கைமீர்-தோழியர்களே. மைய-கருநிறமான. மழை முகில்-பருவ காலமேகம். வந்தது-வந்திருக்கிறது. (வந்தும்)

வந்திலர் - வந்தாரில்லை. (வராதகாரண மொன்றுமெனக்குத் தெரிய வில்லை) (உங்களுடைய) குறிப்பு ஓதுமின் - அபிப்பிராயத்தை அறிவி யுங்கள் எ-று. (௫௰)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இதில் ஒவ்வோரடியிலும் 1–2–5–6வது சீர்கள் காய்ச்சீராகவும் 3–4–7–8வது சீர்கள் மாச்சீர்களாகவும் வந்தன காண்க.

குறம்.

அதாவது தலைவனைப்பிரிந்து வருந்திக்கொண்டிருக்கிறதலைவியின் முன்பு உண்மையான குறி சொல்லவல்லவோர் குறத்திவந்து கைக் குறி முதலிய குறிகளைப்பார்த்து நினைத்த காரியத்தை உள்ளவாறு ரைத்ததாகச் செய்யுள் செய்வது. இது கலம்பகவுறுப்புப் பதினெட் டனுளொன்று.

(பா) குறித்தகுறி——மருவுமம்மே. (௫க)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ–ள்) அம்மே - அன்னே. (இது குறப்பேச்சு) குறித்தகுறி - நீ விரும்பிய குறியை. சொலும் - உள்ளவாறுரைக்கும். திறத்தி - சாமர்த்தியசாலியாகிய. குறத்தி-குறப்பெண். யானே-நான் மாத்திர மே. (வேறொருவரும் இப்போது இம்மலையிலில்லை) குலவு - விளங்கு கின்ற. அங்கை- (குறியும்) உள்ளங்கைக்குறியும். கொங்கைக்குறி- முலைகளின் குறியும். முகக்குறியும்-முகத்தில் குறியும். நலம் (காண்)- நன்மையாக விருக்கின்றன. (காண்-அசை) நெறித்த குழல்-நெய்த்த டர்ந்த கூந்தலையுடைய பெண்ணே. (அடையடுத்த ஆகுபெயர்) குறி த்தபொருட்குறி-நீ கருதிய வத்துவினடையாளத்தை.நினக்கு நிகழ்த் திடுவென் - உனக்கு ஒளியாமற் சொல்லுகின்றேன் (கேள்) அது - அப்பொருள். மறைவாயிருப்பதொன்று - மறைபிடத்திலுள்ளதாகும். (வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்ட பரம்பொருளாம்). நிறத்தினில் - வண்ணத்தினாலே. மங்குலை நிகர்க்கும் - நீருண்ட கரியமேகத்துக் கொப்பாகத் தோன்றும். (பின்னும்) நிறத்தினில் - அகலத்திலே.

பொன்னும்-பொன்னினையும். நிழல்-ஒளியையுடைய. மணியும்-மணியினையும். மறுவும்-இலாஞ்சனத்தையும். மருவி-பொருந்தி. வீறும்-எப்பொருளினுஞ் சிறப்புற்றிருக்கும். செறித்த - இறுக்கிக்கட்டிய. கயிற்றின் தழும்பும் - தாமத்தினலாகிய வடுவும். இடையில் உண்டு - மத்தியப்பிரதேசத்திலுள்ளதாகும். (பொன்-திருமகள்.) (மணி-கௌத்துவம்.) (மறு - ஸ்ரீவத்ஸம்.) செறித்த கயிற்றின் தழும்பென்றது யசோதை உலூகலத்தோடு பிணைத்துக் கண்ணிநுண்சிறுத்தாம்பினல் கட்டியதனலுண்டான ரேகை). சேண்மலையை மருவில் - நீ வானமாமலையை யடைந்தால். மறுவும் - (உன் கண்ணுக்குக் காணமுடியாமல் மறைந்துபோன அப்பொருள்) உன்னையணையும். (சந்தேகமில்லை) எ-று. (ருக)

நேரிசை வெண்பா.

இலக்கணம் சொல்லப்பட்டது.

முன்னிரண்டடி ஸ்ரீவரமங்கலநகரிலுள்ள திருமாளிகைகளுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குஞ் சிலேடை.

பின்னிரண்டடி திரிபென்னுஞ் சொல்லணியாம். திலதண்டுலம்போல விளங்குகின்ற சொல்லணியும் பொருளணியும் சேர்ந்து வருதலால் (சேர்வையணி) (ஸம்ஸ்ருஷ்டிரலங்காரம்) இதில் புகழத்தக்க சரித்திரத்தைப் புகழ் பொருளுக்கங்கமாகச் சொல்லுதலாலே வீறுகோளணியுமாம். (உதாத்தாலங்காரம்) சிலேடையணி வீறுகோளணிக்கங்கமாய் வருதலாலே உறுப்புறுப்பிக்கலவையணியாம். (அங்காங்கிபாவசங்கராலங்காரம்) இதில் வீறுகோளணி தன்மையாயும் சிலேடையணி அஃதின்மையாயும் வருதலில் (இவ்வணியாகவுங் கொள்ளப்பட்டது). (கலவையாவது பாலு நீரும்போலப் பேதந்தோன்ருதிருத்தல்).

அம்பொன்னிலங்களும்——சோர்வு. (ருஉ)

வரை—சார்பென முடிக்க.

(இ-ள்.) அம்பொன் இலங்கள் உம் - மிக்க அழகு வாய்ந்த திருமாளிகைகளும் (அம்பொன் ஒருபொருட் பன்மொழி). செம்பொன்

நிலம் - செவ்விய சுவர்க்கத்தை. கடுக்கும் - ஒக்கும். சீர்ஆரருள்ஆர் - பெருமையும் அருமையு மமைந்த கிருபா பரிபூர்ணர்களாயிருக்கிற. அந்தணரும்- உபயவேதாந்தார்த்த விசாரதராகிய ஸ்ரீவைணவர்களும். செம்பொன்னில் - செவ்வையான ஒழுக்கங்களையுடைய சுரகுருவைப் போல. அங்கு - அவ்விடத்து. அடுக்கும் - அவதரிக்கும் எனவுமான. சேண்மலையே-வானமாமலையே. நம்பு-முக்கியப்பிரமாணமாக ஆஸ்திக ரனைவராலும் உறுதியாகக் கொள்ளப்படுகிற. மறையின் அந்தத்து- உபநிடதங்களிலே விளங்கிக்கொண்டிருப்பவரும். மாண்அடி சேர்ந் தாரை - மாட்சிமைப்பட்ட திருவடிகளை யடைந்தவரை. தறையில் - பூமியில். (ஆவீறு ஐயாகத்திரிந்த தரையென்றும் வடசொல் தறை யெனத் தமிழ்ச்சிறப்பு எழுத்தாகத் திரிந்துளது. இவ்வாறு வருவ தற்கு விதி "பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானும்" என்றும் இலக்கணக்கொத்துச் சூத்திரத்துட் காண்க.

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) சாரங்கபாணி——மண்ணிடையே. (ருரு)

(ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க).

(இ-ள்.) சாரங்கபாணி - மானிடமேந்தியாகிய பரமசிவனுக்கும். சதுமுகன் - நான்முகனுக்கும். தந்தை - பிதாவும். தசரதன் சேய் - தயரதராஜ குமாரனும். ஸ்ரீரங்கநாயகன்-திருவரங்கராஜனும். தேவர் கள்நாதன்-தெய்வநாயகனும். திருமகள்கோன் - ஸ்ரீய:பதியும். காரங்க அண்ணல் - கருமுகிலனைய திருமேனியையுடைய சர்வரட்சகனும் ஆகிய. வியோமகிரீசன் - தோதாத்திரீந்திரனது. வாரம் - அன்பு. மற்றது வெளி. இப்பாட்டில் தந்தை சேய் என்னும் முரணும், நாயகன் முதலிய சொற்களில் அர்த்தாவிர்த்தி. தீபகவணியுமமைந்தன காண்க. (ருரு)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இதில் அடிகடோறும் 1, 3, 7, 8-வது சீர்கள் மாச்சீராகவும், மற்றையவை வெண்பா வுரிச்சீராகவும் வந்தன காண்க.

(ஊசல்.)

ஊசலாவது பிரபந்த கர்த்தா பிரபந்தத் தலைவனை நோக்கித் தேவரீர் தேவிமாரோடும் டோலோற்சவங் கண்டருள்கவென்று பிரார்த்திப்பதாகச் செய்யுள் செய்வது.

இது ஆசிரிய விருத்தத்தாலாயினும் கலித்தாழிசையாலாயினும் ஆடிரூசல், ஆடாமோவூசல், ஆடுகவூசல் என்பவற்றுள் ஏதாவ தொன்றை முடிவாகக்கொண்டுவரும். இது ஆசிரிய விருத்தம்; ஆடி ரூசல் என்பதை முடிவாகக்கொண்டது காண்க.

(பா) மண்ணிடையே——யாடிரூசல். (ருச)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்ளவேணும்.

(இ-ள்.) பரன்-சர்வேச்சுரன். மதியூசல்-புத்தியிலுள்ள சந்தேக மாகிய ஊசலாட்டத்தையை. மண்ணி - கழுவி. (நீயே பரம்பொருளென்று திடம் பிறக்கும்படி யனுக்கிரகித்து) அதுதனையே - திடாத்யவசாயத் தோடு கூடிய அந்த மனதையே. ஊசலாக்கி - ஊஞ்சற்பலகையாகச் செய்து. தண்ணளியோடு ஒண்பொறையை - தேவரீருடைய கருணை க்ஷமையென்னுங் குணங்களை. வடமாப்பூட்டி - ஊசலைச்சுங் கயிருக அதிலிணைத்து. சந்ததமும்-அநவரதமும். வரமங்கையொடும் இருந்து-ஸ்ரீவரமங்காசமேதனாய் வீற்றிருந்து. பண்அளிசேர் - இசைபாடும் வண்டர்கள் சேர்ந்துள்ள. தார்ஆட-திருத்தோண் மாலைகளசையும்படி. ஆடிரூசல் - ஆடுகவூசல். பகர் - யாவரும் துதிக்கின்ற. தேவராஜரே-தெய்வநாயகரே. ஆடிரூசல் - ஆடுக ஊசல் எ-று. (ருச)

கலிநிலைத்துறை.

(விருத்தக் கலித்துறையுமாம்).

இதில் ஈற்றுச்சீர் மாத்திரம் புளிமாங்காய்ச்சீராகவும், மற்றைய நான்கும் மாச்சீர்களாகவும் அடிகடோறும் வந்தன காண்க.

(பா) ஊசலசைக்கும்——தேவே. (ருரு)

மறைக்குட்கிளர்தேவே கேசவ விண்கோவீச உள்உழலாது வழி கூறி உன் தேசமதைத்தந்து தாசனே யருள்வாயோ என முடிக்க.

(இ-ள்.) ஊசலசைக்கும் பாசம்-ஊஞ்சலையாடச்செய்யும் சங்கிலியை. நிகர்த்து-ஒத்து. உள்-என் இதையம். உழலாது - சலிக்காமல். உன்வாச மலர்த்தாள்நேசம் - தேவரீருடைய பரிமளங்கமழும் பதும பாதங்களிலே பத்தி. நிலைக்கும் வழிகூறி - தயிலதாரையைப்போலே இடைவிடாதிருக்கும் உபாயத்தை உபதேசித்து. உன் தேசமதைத் தந்து - பிரமருத்திரேந்திராதியர்களும் அடைய விரும்பும் பரமபத நாட்டையளித்து. அருள்வாயோ - இரட்சிப்பாயோ. ஓ வினப்பொருளது. கேசவன் - பிரமருத்திரர்களைத் தந்திருமேனி வைத்துக் காப்பாற்றுமவன். மறைக்குட்கிளர்தே - வேதங்களிலே விளங்குகின்ற பல வகையான லீலைகளையுடையவன். விண்கோ ஈசன் - வானமாமலைக்கு நிர்வாஹகன் எ-று. (ருரு)

வேற்றொலிவெண்டுறை.

வெற்றொலியாவது முதலிரண்டடி ஐந்து சீராய் நீண்டு ஓரொலியாயும் பின்னிரண்டடி நாற்சீராய்க் குறுகி மற்றொரொலியாகவும் வருதல். வெண்டுறை - வெண்பாவினினம் மூன்றிலொன்று. முதலிலுள்ள ஐந்து சீர்களுள்ள அடிகளுள் முதனான்கு விளச்சீராகவும், மற்றைய ஒன்று புளிமாங்காய்ச்சீராகவும், பின்னிரண்டடிகளுள் முன்னதில் முதலது விளஞ்சீராகவும், 2-வது தேமாங்காயாகவும், 3-வது புளிமாஞ்சீராகவும், 4-வது கூவிளஞ்சீராகவும், பின்னதில் முதலதும் 2-வதும் கருவிளஞ்சீர்களாகவும், 3-வது புளிமாஞ்சீராகவும், நாலாவது தேமாங்காய்ச் சீராகவும் நியதியின்றி வந்துளது காண்க.

தலைவியிரங்கல்.

கலந்து பிரிந்த தலைவி காமதாபத்தால் வருந்த அவளைக்கண்ட தோழிமார் அத்தாபத்துக்குக் காரணமாராய்ந் துணராமல் வேனிற் காலத்தாலாகிய தாபமென்று கருதி அது தணிப்பான் சந்தனச் சேற்றை அவளுடம்பினப்பிச் சைத்யோபசாரஞ்செய்ய அது கால

தாபமன்றுதலில் கலவிக்காலத்தின்பஞ்செய்து பிரிவுக்காலத்துத் துன் பஞ்செய்யும் பொருள்களுளொன்றாகிய சந்தனக்குழம்பு விரகதாபத் தை விருத்திசெய்ய, அதனை யாற்றமாட்டாத தலைமகள் தோழியர் களை வெறுத்து வருந்தியது.

(பா) கிளரிசைவேயினர்——இகுளைமீரன்றே. (ருசு)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ-ள்.) கிளர் இசை வேயினர் - விளங்குகின்ற சப்த சுவரங்க ளோடுகூடியபுல்லாங்குழலையுடையவரும்.கிரிபோல-பருவதங்கள்போல. வளர்-பூரிக்கின்ற. இருதோளினர் - இரண்டு திருப்புயங்களையுடைய வருமாகிய. நபமலைமேயினர்-வானமாமலைப் பெருமாளுடைய. மலர் பொருதாளிணை-செந்தாமரைமலர்களை யொத்த திருவடிகளை. மருவா ரின்-அடையாதவர்கள்போல. தளர்வு உற-தளர்ச்சியுறும்படி. இள முலைமிசை-எனது இளமையான தனதடங்களிலே. சாந்தென்று- சந்தனக்குழம்பென்று சொல்லி. (வஞ்சித்து) தழலையப்பினீர்-அழற் பிழம்பை வாரிப்பூசினீர்கள். (நீங்கள்) எனது-என்னுடைய. இகுளை மீர் அன்றே-உயிர்த்தோழியர்களல்லவா? நீங்கள் செய்த உபசாரம் அழகிதாயிருந்தது. (ருசு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

இதில் அடிகடோறும் முதலைந்து சீர்கள் கூவிளங்காய்களாகவும், ஆறுவது சீர் தேமாவாகவும் இறுதிச்சீர் புளிமாகவும் வந்தன காண்க.

சந்தக்குழிப்பு.

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன தந்ததன தானதனனா.

(துறை உற்றதுரைத்தல்).

இதனிலக்கணம் 41-வது பாட்டிற் சொல்லப்பட்டது.

(பா) அன்றுலகளந்த——நெஞ்சமதுவே. (ருள)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) என்றுமதி என்றுமதி - சூரியனுஞ் சந்திரனுமென் றெண்ணத்தக்க. இசை சீர்-கீர்த்தியும் சிறப்பும். விண்சயில வண்புரியர்-வானமாமலையென்னும் வளந்தங்கிய திருநகரத்தையுடைய தெய்வநாயகனது. தண்டலையில்-மாஞ்சோலையிலே. நன்றுபடர்-நன்றாகப் படர்ந்திருக்கிற. பொன்கொடியில்-அழகிய அல்லது பொன்மயமான வல்லியிலே. ஒன்று-பொருந்தியிருக்கிற. மலர் ஒன்று அதில்-ஒரு தாமரைமலரிலே. இரண்டு வரிவண்டு உளன - இரண்டு புள்ளிகளையுடைய அல்லது இசைப்பாடலைப் பாடுகின்ற வண்டுகளிருக்கின்றன. அவை-அவ்வண்டுகள். நெஞ்சமது-மனமாகிய மகரந்தத்தை. உண்ட-உட்கொண்டன. (41-வது பாட்டில் தலைவியின் தனத்தினாற் சலித்தேன் என்றான்; இதில் கண்களாற் கலங்கினே னென்றான் பதபங்கயம் உருவகம். என்று ... மருங்கர்-மயக்கவணி. மற்றைய வாக்கியம் சுருங்கச்சொல்லணி. அதாவது அடைமொழி யொப்புமையாற்றலால் அல்பொருட் செய்திதோன்றப் புகழ்பொருட்செய்தியைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சமாசோக்தி யலங்காரமென்பர். தண்டியாசிரியர் இதற்கு ஒட்டணியென்று பெயர் கூறி "கருதிய பொருடொகுத்தது புலப்படுத்தற், கொத்ததொன் றுரைப்பி னஃதொட்டென மொழிப" என்பர். மற்றுஞ்சிலர் உவமப்போலி, உள்ளுறையுவமம் பிறிது மொழிதல், நுவலாநுவற்சியென இவ்வணிக்குப் பல பெயர் கூறுவர். சரச்சுவதீ கண்டாபரண நூலார் உபமானத்தாலே உபமேயத்தை யறியும்படி சொல்லுத லிவ்வலங்காரமென்ப. (ருஎ)

ஆசிரியத்துறை.

நான்கடியாய் ஈற்றயலொழித்த மூன்றடிகளுமறு சீருடையனவாய், ஈற்றயலடி ஐந்து சீருடையதாய்க் குறைந்து, இடைமடக்காது வந்தது. இதற்குச் சீர்வரையில்லை. இது ஆசிரியப்பாவினினத் தொன்று.

இரவுவரல்விலக்கல்.

அதாவது இயற்கைப் புணர்ச்சியை யெய்திய தலைவன் பின்பு தலைவியின் றோழியி னுதவியைக்கொண்டு தலைவியைப் பகலிலு மிரவிலும் களவுநெறியால் ஏகாந்தத்தில் சந்தித்துவரு நாளிலொரு

நாள் தோழி அவ்வொழுக்கத்தையே விரும்பிய தலைமகனுக்கு அவன் வரும் வழியினருமையையும் அது கருதித் தாங்கள் பயப்படுதலையும் கூறி நீ எப்பொழுது மெவ்விடத்தும் நெஞ்சஞ்சாது வரும் தேகபலம் ஆயுதபலம் தந்திரம் முதலியவற்றை யுடையையானாலும் நிசியில் நின் வரவெங்கட்குத் துன்பத்தை விளைவிக்கும். ஆதலிலிங்கு இவ்விருளில் வரற்பாலையல்லை என விலக்குதல். ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவியென்று மித்துறைக்குப் பெயர் கூறுவர். இத்துறையின் மெய்ப்பாடு அச்சம். பயன் வெளிப்படையாக வந்து மணஞ்செய்து கொள்ளுதலை வற்புறுத்தல். இதனானே "புணர்தல் நறுங்குறிஞ்சி" என்றபடி மலையும் மலையைச் சார்ந்த நிலனும் புணர்ச்சிக்குரிய திணையென்பதும் "குறிஞ்சி கூதிர்யாமமென்மனார் புலவர்" என்றபடி பெரும்பொழுதிற் சரத்காலமும் சிறுபொழுதில் நள்ளிரவும் முன்பனியும் (இது சிறந்ததன்று.) குறிஞ்சிக்குரிய காலமென்பதும் அறிக.

"கூதிர்யாமம் முன்பனியென்றிவை யோதிய குறிஞ்சிக்குரிய வாகும்"

(பா) நெஞ்சிலெம்முள்ளி——மன்னவனே. (ருஅ)

மன்னவனே நீ கல்லதர் நெஞ்சில் எம்முள்ளி நிசிவரில் தீமையைப்போல நின்கணைக்கு குஞ்சரம் வேங்கையஞ்சினும் அரமங்கையர்க் கஞ்சுதும் வாரலென முடிக்க.

(இ-ள்.) எம் உள்ளி-எங்களை நினைத்து. கல்லதர்-பருக்கைக்கற்கள் செறிந்த மலைச்சாரல்வழி. விண்குன்றர்-வியோமாத்திரிநாதர். மஞ்சு-அழகு, வன்மையுமாம். அரமங்கையர்-வனதேவதைகள். அஞ்சுதும்-பயப்படுவோம். வாரல்-வரற்க. எதிர்மறைவியங்கோள். (ருஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் அடிகடோறும் முதலைந்து சீர்களும் விளங்காய்ச்சீர்களாகவும் மற்றைய விரண்டும் ஆசிரிய வுரிச்சீரில் மாச்சீராகவும் வந்தன காண்க.

(பா) மன்னவர்கள்——திடமரோ. (ருகூ

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) மருவலர் - பகைவர். இன்னல் - துன்பம். இழைத்து-செய்து. வகிரினும்-பிளந்தாலும். பொன்னவிரிருஞ் சடையர்-பொன்னைப்போல விளங்குகின்ற சடாமகுடத்தையுடைய பரமசிவன். பன்-யாவராலுங் கொண்டாடப்பெற்ற. நபநகத்துஉறு - வியோமாத்திரியில் வீற்றிருந்தருள்கின்ற. பரம்பொருளையன்றி-தெய்வநாயகனையல்லாமல். அடிபரவுகிலன் - பாதங்களில் வணங்கமாட்டேன். இது திடம் - இது நிச்சயம். அரோ-அசை. "முதலையையுறிற்சினையைக்கண்ணுறும்" இல் என்னும் இடப் பொருளுண்மை விரித்துப் பொருள்கொள்ளப் பட்டது. (இதனால் அநங்யசரணத்துவஞ் சொல்லப்பட்டது). பின்னிரண்டடிகளாலே சர்வலோக சரண்யத்துவமும் சௌலப்பியமும், சுவாமித்துவமும் சொல்லப்பட்டது. (௫௯)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் அடிகடோறும் 1, 2, 3, 4, 7, 8, 9, 10-வது சீர்கள் வெண்பா வுரிச்சீர்களாகவும், 5, 6, 11, 12-வது சீர்கள் மாச்சீர்களாகவும் இருப்பது காண்க.

பிச்சியார்.

அதாவது சிவச்சின்னங்களைத் தரித்துத் தெருவிற் பிச்சைக்கு வருகிற பெண்ணொருத்தியைக்கண்டு காமுகனொருவன் தன் காதலை வெளியிட்டு முன்னிலைப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள் செய்வது. பித்தன் என்பது சிவபெருமான் பெயராதலில் அது மொழியிடைப் போலியாய்ப் பிச்சனென்றாதலில் இப்பெயரின் பெண்பாலான பிச்சியென்பது சிவச்சின்னம் பூண்ட பெண்ணை யுணர்த்தும். இது கலம்பக வுறுப்புப் பதினெட்டனுள் சேராதாயினும் பிச்சியார் கொற்றியார் முதலிய வுறுப்புக்களைக் காலத்தான் மருவி வந்ததென்பர் இலக்கண விளக்க நூலார்.

(பா) திடம்படு——உசிதஞ்சூழே. (௬௰)

ஆற்றெழுக்காகவே பொருளமைந்தது காண்க.

(இ-ள்.) திடம்படு நெஞ்சு - இளகாத மனம். செங்கற்பொடிக் கூறை-காவிவத்திரம். மருங்கு அசைத்து-இடையிலணிந்து. செய்ய மேனி திகழ்தர - சிவப்பான உடம்பில் விளங்கும்படி. வெண்ணீறணிந்து - திருநீற்றை யணிந்து. (செய்யமேனி வெண்ணீறு:முரண்) திரிசூலம்-முக்கவட்டுச்சூலம். கபாலம்-மண்டையோடு. ஒளிர்வான் இரவி எய்தி-விளங்கும் வானமாமலையை யடைந்து. பொனபூமி இரு சுடர் - பெரியபிராட்டியார் பூமிப்பிராட்டியார் சூரிய சந்திரர்கள். கமஞ்சூன்மஞ்சு - நீரைப்பருகிக் கருத்து மழைபெய்யும் தருணத்தது ஆகிய மேகம். இருந்தது என்ன - வீற்றிருந்தாற் போன்ற. (அபூதோபமை) தனிமுதல் - ஆதிகாரண வஸ்துவாகிய தெய்வநாயகனை. சவிய-ஒளியடைந்துள்ள. நவிய-மானையிடக்கரந்தேந்திய. பிச்சர் போன்றீர்-பித்தராகிய சிவபெருமானைப் போன்றிருக்கிறீர். (செய்யமேனி, வெண்ணீறு, திரிசூல கபால தாரணம், ஊர்தோறுஞ்சென்று பிச்சையெடுத் துண்ணல் சிவனுக்கு மிவளுக்குமுள்ள பொதுத்தன்மை; உவமையணி) (இதனுமேல) உடம்படுவீர் என்றெண்ணிப் பின்னடைந்தேன்-என்னுடைய உடலை யொழித்துவிடுவீரோவென்று முன்னுறுது பின் சென்றென் (என் கருத்துக்கிசைவீரென்று பின்னே வந்தேன்) உளம் உருக மூரலுற்றீர்-(அவன் சங்காரகாலத்துக் கண்டோர் நெஞ்சம் பயந்துருகும்படி புன்னகை புரிவதுபோல) நீருமென்னுளம் ஆசையாலுருகும்படி புன்னகை புரிந்தீர்) உம் திருக்கால் நோக்கி-உம்முடைய கடைக்கண்ணுமேல பார்த்து. எய்வேளையும் - எனமேற் பாணப்பிரயோகஞ்செய்யும் மன்மதனையும். உம்மைக்குக் கருத்து, பிச்சரைப் போலத் தன்மேற் பாணப்பிரயோகம் செய்யும் வேளை யொறுத்தல் போலாது என்மேற் பாணப்பிரயோகஞ்செய்யும் வேளையும். இவ்வேளையில்-இந்தச் சமயத்தில். ஒறுத்தல்-தண்டித்தல். உசிதம்-தகுதியாகும். சூழ்-ஆலோசித்து. (அவ்வாறு) செய்யவேணும் எ-று. (சூ)

(கொச்சகம்) மடக்கு.

அடிகடோறு நாற்சீருங் கூவிளங்காயாக வந்தன காண்க. அடிகடோறு மரையடி மடக்காக வந்ததும் காண்க.

(தன்றுயர் தலைவர்க்குணர்த்தல் வேண்டல்).

அதாவது தலைவி தன் துயரைத் தலைவர்க்குணர்த்தல் வேண்டு மெனப் பாங்கியொடு கூறுநிற்றல்.

(பா) சூழுமுலகம்படை——தாத்திரியே. (சுக)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) சூழும்-ஆராயத்தக்க. உலகம்-பதினான்குலகங்களையும் (படைத்தவரும்.) தோற்றும் - இலங்கைக்கு முன்னே காணப்பட்ட இலகு அம்பு - விளங்குங்கடலை. (அம்பு ஆகுபெயர்) அணைகட்டிய வரும். ஏழுமரன் - சுக்கிரீவன் காட்டிய சப்த சாலவிருட்சங்களையும். (மரன்மொழி யிறுதிப்போலி) எய் - ஒரே பாணத்தினாலே யெய்து துளை செய்த. திடத்தார் - தைர்யமுடையவரும். ஏயும் - தன்னைவந் தடைந்த. அரன் - சிவபெருமான். எய்து - சேர்ந்து தங்கியிருக்கின்ற. இடத்தார் - வாமபாகத்தையுடையவரும். வீழும்-பிரளய மகார்ணவத் திலே தமக்கிருப்பிடமாக விரும்பிய. வனப்பு - அழகினையுடைய. ஆல் அடையார் - வடபத்திரத்தை யுடையவருமாகிய தெய்வநாயகர். மீட்டென்மனப்பாலடையார் - திரும்பவு மெனது மனதில் அடை யார் (கனவிலுந் தோன்றுதொளித்தார்.) (அவர் எங்குளாரெனிற்கேள்) வாழிடம் - அந்நாயகர் வீற்றிருந்தருளுமிடம். தோதாத்திரியே-வான மாமலையே யாம். எய்தாத்திரியே - எனனைக்குறித்து உடலுமுளமு மெலிகின்ற. தாத்திரியே - (எனக்குப் பிரியமானவைகளை யெல்லா முதவியுற்றிடத் துதவுதலாலே பிரிபரையாகிய் நற்றாயைப்போன்ற தோழியே. (உவமையாகுபெயர்) வாழ்வு - (அவளது அதீனத்திலேயே யிருக்கிற) என்னுடைய வாழ்க்கையை. உரை - (விரிவாய் வேளை பார்த்து) விளம்பு. எய்தாத்திரி யென்பதற்கு - என்னிலைமை யெல்லா முணர்ந்ததாயே என்றும் பொருள் கூறலாம். எய்த்தல் - அறித லானது எ-று. (சுக)

(கலித்துறை).

அதாவது ஐஞ்சீரடி நான்கு வருவதாகும்.

இதனிலக்கணம் முன்னுஞ் சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் 1, 3-வது சீர்கள் கூவிளமாகவும், 2, 4வது சீர்கள் தேமாவாகவும், ஐந்தாவது சீர் புளிமாங்காயாகவும் வந்துளது காண்க.

தலைவி மறுத்தல்: அதாவது பாங்கியிது மழைக்காலமன்று. இது மறையவர் வேள்விப்புகை. நீ சொல்வது வம்பென்றதை மறுத்துத் தலைவி உண்மையான கார்காலமே யென்றும், அதற்கு அடையாளமாக இன்னின்ன பொருள்கள் தோன்றியிருத்தலைப் பாரென்றும் கூறு நிற்றலாம்.

(பா) எய்திலரென்னே——மலைமீதே. (சுஉ)

எழின்மானே! நெய்திகழ்வேள்வி மொய்புகையென்னில் நிழன் மின்னும் பெய்மழையும் வில்லுமுறுமோ? பினும்பீலிமை மயிலாலுங் கொல்? விண வெற்பார் மலைமீதே. (ஆதலில் இது மழைக்காலமே) என்னுயிரன்னாரென்னேயின்னு மெய்திலரென முடிக்க.

(இ-ள்.) எழில் மானே - அழகிய மான்விழிபோல மருண்ட பார்வையுடைய தோழீஇ. (இது - ஆகாயத்திற் றோன்றுமிது) நெய் திகழ்வேள்வி மொய்புகையென்னில் - மறையவர் மந்திரத்தால் வகுத்த ஆச்சியாகுதியாலே விளங்குகின்ற யாக குண்டத்திலிருந்து ஆகாயத்து வந்து நிறைந்துள்ள தூமமாகில். (அதில்) நிழன்மின்னும் - காந்தியையுடைய மின்னல்களும். பெய்மழையும்-பெய்துகொண்டிருக்கும் வருஷமும். வில்லும் - இந்திரதனுவும். உறுமோ - பொருந்தியிருக்குமோ ? (ஒருகாலத்துங்கண்டதில்லை) பினும் - இதுவுமல்லாமல். விண்வெற்பார் மலைமீதே - வியோமாத்திரீசரது திருமலையிலே. பிலிமைம்மயில்-தோகைகளையுடைய கருநிறமான மயில்கள். ஆலுங்கொல்- நடிக்குமோ?நடிக்காது. (ஆதலிலிது கார்காலமே) (கார்காலம் வருமுன் வருவேனென்று சொல்லிப் பிரிந்த) என் உயிர் அன்னார் - எனது

பிராணநாதர். (இன்னும்-இதுகாறும்). எய்திலர்-எழுந்தருளினரில்லை. என்னே - வராததற்குக் காரணம் யாதோ ? (ஒன்று மெனக்குத் தோன்றவில்லை) எ-று. (௬௨)

(கலிவிருத்தம்).

(நாற்சீரடி நான்கு வருவது).

இதில் அடிகடோறும் முதன் மூன்று சீர்கள் கூவிளங்காய்ச் சீர்களாகவும் நாலாவது சீர் தேமாவாகவும் வருதலறிக.

(தலைவியிரங்கல்).

அதாவது கூதிர்ப்பருவத்து வருவதாகச் சொல்லிக் காவற்குப் பிரிந்த தலைவன் வாரானாகத் தலைவி வாடைபொறாது வருந்தல்.

(பா) மீதிலகு——அளியதாமே. (௬௩)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) மீது இலகு சோதிமதி வீசுதழலாலும் - ஆகாயத்தில் விளங்குகின்ற காந்தியையுடைய சந்திரன் மோதுகின்ற நிலவாகிய நெருப்பினாலும், தழல்போன்ற நிலவைத் தழலென்றது ஆகுபெயர். கூதிரென ஓதிடு கொடுங்கடுவினாலும்-குளிரென்று சொல்லுங்கொடிய விடத்தினாலும். பாதியுயிராகும் - அரையுயிராயிருக்கிற. என் உபாதி அறியாத - என்னுடைய சங்கடத்தைத் தெரிந்துகொள்ளாத. ஆதி - சர்வலோக நாயகராகிய தெய்வநாயகரது. அளியும்-கிருபையும். அளியது ஆமே-கிருபையென்னும் பெயருடையதாகுமோ ஆகாது. (ஏகாரத்திற்கு எதிர்மறைப்பொருள்) வன்கண்மையா மென்றவாறு. (௬௩)

பதினாறு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் ஒவ்வோரடியில் 1–2–5–6–9–10–13–14-வது சீர்கள் வெண்பா வுரிச்சீர்களாகவும், 3–4–7–8–11–12–15–16 மாச்சீர்களாகவும் வந்தன காண்க.

களி—இது 18 உறுப்பிலொன்று.

களியாவது—கட்குடியர்கள் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள்செய்வது. இதில் குந்தி, ஆம்பல், மாவி, மதுரை, முண்டகம், மாதவம், கள், சாவி, மேதை, மந்திரம் இவைகள் மதுவின் பெயராத லில் இப்புகழ்பொருளை யுணர்த்துஞ்சொற்களால் குறித்தற்குத் தகுதி யாகிய பொருள் கூறப்படுகிறது. ஆதலாலிது குறிநிலையணியின்பாற் படும். (இதனை வடநூலார் முத்திராலங்கார மென்பர்.

(பா) அளிதழையும்——தேர்ந்துய்வீரே. (கூச)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) அளிதழையும்-வண்டுகள் மொய்த்திருக்கும். கட்கடை யில்-கள்ளுக்கடையிலே. நோக்கி - பரிவோடு பார்த்து. குந்தியளித்த கள் வார்த்த. மைந்தர் ஐவரையும் - ஆண்பிள்ளைக ளைந்துபேர்களையும். அமரில் - அக்கட்கடையிலுண்டான சண்டையிலே. ஓம்பி-துணையாய் நின்று காப்பாற்றி. அன்று - அக்காலத்து. இடங்கர்வாய்ப்படும் - மிடாவிலுள்ள. ஆம்பலை-கள்ளை. அளித்திட்டு - விலையில்லாமலூற்றி. அரனயன் ஆதியர்க்கு- அயன் அரன் என்னும் பெயர்களையுடையவர் முதலிய அடியார்களுக்கு. இறும்பூது அடை - களிப்புண்டாகும்படி பண்ணி. களிதழையும்-களிப்பை மிகச்செய்யும். விப்பி முதலியவற்றை யேற்றுத் திரியாத பிறவினைப்பொருளது இங்கு தழையுமென்பது. உரைகல, கர்ஷபாஷாண மென்பனவு மிப்பொருளவாம். மாவிதனை- கள்ளை. களஞ்செறித்திட்டு - கண்டமட்டுங்குடித்து. (அதனாலே) கவின்மதுரை ஆர்பவர்கட்கு - அழகிய கட்குடியர்களுக்கு. ஒரு வேந் தாகி - ஒப்பற்ற தலைவனாய். கமழ்தரும் முண்டகவிருப்பார் தமை - மணம் வீசுகின்ற கள்ளிலே விருப்பமுடையவர்களையே. தனக்கு காதலன்-குமாரனுகவும். காதலி-மனைவியாகவும். மருகி-மகன் மனைவி யாகவும். கொண்ட-வைத்துக்கொண்ட. ஒளிதழையும்-புகழ் மிகுந்த. வானமலை-வானமாமலையிலிருக்கிற. மாதவன்றன்-பழையாராது. உபய வடிகளை - மேன்மைபெற்ற வடித்தெடுத்த கள்ளை. (வடி யென்னும் பெயரிய கள்ளை யென் னுமாம்). தினமும் உட்கொண்டு உய்ந்த - நாடோ

றுங்குடித்துப் பிழைத்த. உண்மையுறு - மனதில் மயக்கம் மிகுந்த. களியேம்யாம் - குடியர்கள் நாங்கள். உரிமை மக்காள் - எனக்குச் சொந்தமான பிள்ளைகளே. உரைக்குதும் - கட்குடியர்களுடைய பெருமைகளைச் சொல்லுகிறோம். சாலியின் - கள்ளினாலே. வசிட்டன் - வசிட்ட மகாமுனிவன். உயர்வை யுற்றான் - முனிவர்களுட் சிறந்தவனானன். மேதையாலே - கள்ளினாலே. மறையவர்கள் - வேதியர்கள். சுரர்களிலும் - கடலிடத்துண்டான சுரையென்று பெயரிய மதுவைப் பானம்பண்ணிய தேவர்களைக்காட்டிலும். சிறப்பு உற்றார் - மேன்மையையடைந்தார்கள். சிறப்பு - மோட்சாநந்தமென்பது. இதே-இக்கட்குடியேயாம். ஏ-பிரிநிலைப்பொருளது. மோக்ஷமென்று வேறொன்றில்லையென்று வற்புறுத்தியது. சிறப்பு என்பது-மோக்ஷமென்னும் பொருளைத் தருமோவெனில், திருக்குறளில் அறன் வலியுறுத்தலென்னும் அதிகாரத்தில் "சிறப்பீனுஞ் செல்வமுமீனும், அறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு" என்பதற்குப் பரிமேலழகியார் எல்லாப்பேற்றினும் வீடுபேறு சிறந்ததாதலில் வீடு சிறப்பெனச் சொல்லப்பட்டதென்றார். சிறப்புஎன்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய் பரமபதத்தையுணர்த்திற்று. ஆல் - ஆகையாலே. தேசுமிகும்-மகத்துவம் மிகுந்த. சான்றோர்கள்-சான்றார்கள். (இவர்கள் கள் விற்குமோர் சாதியார்) செவியின் நல்கும்-நன்றாக வாக்குகின்ற. திருமந்திரத்தைத் தேர்ந்து - மேன்மையான கள்ளைக்குடித்து. உய்வீர் - உஜ்ஜீவியுங்கள் எ-று.

இதன் சுவாபதேசார்த்தம் வருமாறு.

(இ-ள்.) அளிதழையும் - கருணை தழைக்கின்ற. கட்கடையின் - கடைக்கண்களாலே. நோக்கி-கடாக்ஷித்து. குந்திஅளித்த மைந்தர்ஐவரையும்-பாண்டுவின்மனைவியாகிய பிரதையென்பாள்பெற்ற பாண்டவர் ஐவர்களையும். அமரில்-பாரதயுத்தத்தில். ஓம்பி-அழியாமற்காப்பாற்றி அன்று-பூர்வகாலத்திலே. இடங்கர் வாய்ப்படும் - முதலைவாயினகப்பட்டுக்கதறின. ஆம்பலை- கஜேந்திரனை. அளித்திட்டு - அத்துன்பத்தைப் போக்கிரக்ஷித்து. அயனரனாதியர்க்கு இறும்பூது அடையச்செய்து - பிரமருத்திராதியர்களுக்கு மிகுந்த ஆநந்தமுண்டாகும்படி பண்ணி. களிதழையும் மாலிதனை - செருக்கு மிக்க மாலியென்னு மரக்கனை. களஞ்செறித்து-யுத்தகளத்திலே கொன்று. கவின் மதுரையார் பவர்கட்கு -

அழகிய வடமதுரைமா நகரத்துள்ளார்க்கு. ஒரு வேந்தாகி - ஒப்பற்ற மன்னவனாகி. கமழ்தரு - பரிமளிக்கின்ற. முண்டக இருப்பார்தமை- செந்தாமரை வெண்டாமரை மலர்களை இருப்பிடமாகக் கொண்டிருக்கும் பிரமா, பெரியபிராட்டியார், சரஸ்வதியாகிய இவர்களை முறையே, காதலன் காதலி மருகிகளாககொண்ட - மகன், மனைவி, மருமகளாகச் செய்துகொண்ட. ஒளிதழையும் - கீர்த்தி அல்லது காந்தி மிகுந்த. வானமலை மாதவன்றன் - வானமாமலையி லெழுந்தருளியிருக்கிற ஸ்ரீய:பதியான தெய்வநாயகனது. உபயஅடிகளை-இரண்டு திருவடிகளையும். தினமும் உட்கொண்டு அநவரதமும் தியானித்து. உய்ந்த-உஜ்ஜீவித்த. உண்மையுறு - வாய்மை வாய்ந்த. களியே யாம் - ஆநந்தமுடையேம் நாங்கள். உரிமை மக்காள் - மோட்சாபேட்சையுடைய பாலர்களே. மேதையாலே - பெரிய திருமந்திரார்த்தஞ்ஞானத்தாலே. சாலியின் வசிட்டன் - அருந்ததிகாந்தனான வசிட்டபகவான். உயர்வையுற்றான்- ஸ்ரீவைணவர்களுட் சிறந்தவனானான். தெளிதழையும் - ஆசார்ய பரிசர்யைகளாலே தெளிவு மிகுந்த. மறையவர்கள்-வேதியர்களும். மேதையாலே—அந்தப் பெரியதிருமந்திரார்த்தஞ்ஞானத்தாலே. சுரர்களிலும்- தேவர்களிலும். சிறப்பு உற்றார்-மேன்மையை யடைந்தார்கள். சிறப்பு- எம்பெருமானை யடைதற்குரிய மேலான உபாயம். இதே - இந்த மந்திரார்த்தஞ்ஞானமே. ஆல்-ஆகையாலே. தேசுமிகும்-குலங் கல்வி யறிவு ஒழுக்கங்களாலே ஒளிதழைந்த. சான்றோர்கள் - ஆசார்யவர்யர்கள். செவியில் நல்கும் - காதிலுபதேசிக்கும். திறங்கொள் - தன்மைவாய்ந்த. திருமந்திரத்தை - திருவட்டாக்ஷரத்தை. தேர்ந்து - சிரவண மனன நிதித்தியாசனாதிகளாலே யதனுட்பொருளுணர்ந்து. உய்வீர் - உஜ்ஜீவியுங்கள் எ-று. (சுச)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதிலடிகடோறும் ஆசிரியவுரிச்சீரெட்டு வந்தன காண்க.

(தன்னுட்கையாறெய்திடுங்கிளவி)

அதாவது தலைவி தனக்கு நேர்ந்த துன்பத்தையாற்றாமையாலே பிறிதொன்றன்மேலேற்றிச்சொல்வது. இப்படிச்சொல்வதன் பயன், களவுப்புணர்ச்சியொழுக்கத்திலே நின்று சிறைப்புறத்தானாகிய தலை

வன் கேட்டு விரைவில் வெளிப்படையாக வந்து மணஞ்செய்து கூடுவ னென்பது. இத்துறை தோழி கூற்ருக வருவதுமுண்டு.

(பா) வீரநேமி——போலுமே (௬௫)

(ஆற்ருெழுக்காகவே பொருள் கொள்க)

(இ-ள்) வீரநேமி வலங்கொண்ட கொண்டலின் - வீரத்தைப் பொருந்திய சுதர்சனமென்னுந் திருவாழியாழ்வானை வலக்கரத்துக் கொண்ட மேகவண்ணணுகிய தெய்வநாயகனது. விளங்கு விண்மலை-பிரகாசிக்கின்ற தோதாத்திரியை. சூழ்ந்திடும் - வளைந்துகொண்டிருக்கிற. மாம்பொழில்-ஆம்பிராரண்ணியத்திலே. சேர்-சேர்ந்துள்ள. முலைப்பூங் கொடிகாள்-அழகிய முல்லைக்கொடிகளே. முலை இடைக்குறை விகாரம். "முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ" எனக்கலித்தொகையிலும்; "பயிற்சியும் வனமுலைப்பாலே" என அழகர் கலம்பகத்தும் "முலைக்கொடியாரலர் தூற்றவே" திருவேங்கடக் கலம்பகத்திலும், "முலையேயணிந்த முகிழ்நகையி" ரென மதுரைக்கலம்பகத்திலும், இவ்வாறு வருதல் காண்க. எனைச்சிவணவே-எனைப்போலவே. சிறுகாலின் அலைகின்றீர். (நான் எனது சிறியகாலினலே நாயகன் வரும் வழியைப்பார்த்து அடிக்கடியலைகின்றேன்) நீர் மந்தமாருதத்தாலே அலைகிறீர். (நான்) கூரம் ஆம்-கொடுமையாகிய. அலர்கொண்டு-பழியையடைந்து. கண்ணீரினை-கண்ஜலத்தைக் கொட்டுகிறேன். நீர் கூர - மிகவும் அலர்கொண்டு மலர்களையுடையீராகி கண்ணீரினை—மகரந்ததாரையை. கொட்டினீர் - பெருக்குகிறீர். (நான்) அணிவண்டு வீழ்ந்திட - தரித்த வளையல்கள் நழுவிவிழ. போரஆகம் மெலியலுற்றேன். மிகவும் உடன்மெலிவுற்றிருக்கிறேன். (நீர்) அணிவண்டு வீழ்ந்திட-அணியணியாக வண்டுகள் வந்து மொய்க்க. போர-மிகவும். வாக - அழகிய. மெலியல் - மென்மைத்தன்மையை. உற்றீர்-அடைந்திருக்கிறீர். (ஆதலாலே) (நான்) பிரிபொற்பர் ஆகம்-என்னைப்பிரிந்த அழகிய நாயகரது மார்பை, விரும்பினேன். (நீர்) பிரி - கீழே சிந்திய. பொன் - பொன்னிறமான. பராகம் - மகரந்தத்தை. விரும்பினீர் போலும்-இச்சித்தீர் போன்றீர் எ-று. (௬௫)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் 1–2–5–6-வது சீர்கள் வெண்பா வுரிச்சீர்களாகவும், 3–4–7–8-வது சீர்கள் மாச்சீர்களாவு மடிகடோறும் வந்தன.

நீடுநினைந்திரங்கல்.

அதாவது தலைவன் தலைவியின் கலவியெய்தாது கால நீட்டித் தலை நினைந்து அத்தலைவியை முன்னிலைப்படுத்தி விதியை நொந்து வருந்தலாம்.

(பா) மேலவர்வாழ்——கருத்தாலன்றே. (சுசு)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) மேலவர்வாழ்-குலங்கல்வி யறிவொழுக்கம் முதலியவை களின் மேன்மையுற்றவர்களாகிய ஸ்ரீவைணவர்கள் வாசஞ்செய்தரு ளும். விண்மலையின்-வானமாமலையென்னும் ஸ்ரீவரமங்கல நகரத்திலே. மேவும் கண்ணன்-திருவுள்ளமுவந்து வீற்றிருந்தருளும் ஸ்ரீக்கிருஷ்ண னென்னுந் திருநாமத்தையுடையவனும். மேகவண்ணன் - நீருண்ட கரியமேகம்போன்ற திருமேனி யழகுடையவனும். அருட்கண்ணன்- கருணைபொழியுந் திருக்கண்களையுடையவனுமாகிய தெய்வநாயகனது. வியன்சிலம்பில் - பெருமை பொருந்திய வரையிலே. கோலம் மலர்ப் பைங்கொடி - அழகிய புட்பங்களையுடைய பசுமையான வல்லியை யனையாய். நின்குழலை-உனது கூந்தலையும். மெய்யை - மேனியையும். கொங்கைகளை-தனங்களையும். அங்கைகளை-அகங்கைகளையும். இதழை- அதரத்தையும். சொல்லை - மொழியையும். (முறையே) மால் அவிர் தண்டலை - மேகங்கள் படிந்து விளங்குகின்ற பூஞ்சோலையினாலும். தளிர் - மாந்தளிர் அசோகந் தளிர்களாலும். மெல்அரும்பு - மேன்மை யான கோங்கமுகுளங்களாலும். தண்பூ - குளிர்ந்த செங்காந்தண் மலர் களாலும். வண்கனி - அழகிய கொவ்வைக்கனியினாலும். தேன்கொடு- பூந்தேனினாலும். படைத்த - சிருட்டித்த. மலரோன்-தாமரைமலரில் வீற்றிருப்பவனாகிய பிரம்மா. நீலவிழிகளை - உன்னுடையமையார் கருங்கண்களை. கணையால் - அம்பினாலும். நெஞ்சை - உனது மனதை.

சிலையான் - கல்வினுலும். என்னே நிருமித்தான் - எதற்காகப் படைத்தான். என்னை வருத்தும் கருத்தால்அன்றே-ஊழ்வினைப்படி என்னைத் துன்புறச்செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயத்தினுலல்லவா எ-று' கால நீடித்தலால் தளர்ந்து கலங்குவதை யருட்கண்ணுற் பார்த்து மனமிளகாததினுலே இவ்வாறுரைத்தானென்க. காரிகையார் கண்களில் நோய்தருநோக்கும் அந்நோய்க்கு மருந்தனைய நோக்குமுளவாதலாலும், அருளுக்குண்டாகுமேல் வாய்ச்சொற்களாற் சிறிதும் பயனில்லாமையாலும் இவ்வாறுரைத்தா னென்றுமாம். "இருநோக்கிவளுண்கணுள்ள தொரு நோக்கு, நோய் நோக்கொன் றந்நோய் மருந்து" "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கில் வாய்ச்சொற்க, ளென்ன பயனுமில" என்ப தெய்வப்புலமையார். (கூகூ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

இதில் அடிகடோறும் முதலாறு சீர்களுங் கருவிளமாகவும் ஈற்றுச்சீரொன்றும் குறினெடிலிணைந்த நிரையே சீராகவும் எதுகைத்தொடையாகவும் வந்தன காண்க.

சந்தக்குழிப்பு.

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனா.

(பா) கருத்தினினினைத்தவை——நத்திலரரோ. (கூஎ)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்). கடைக்கணின்—கடைக்கண்ணையுடைய. அருட்கடல்—கருணையில் கடலையொத்தவனும். திருப்புய—திருத்தோள்களையுடைய. (திருநிறத்தில்) மணிப்புயல் — அழகிய முகிலையனையவனும். மணி—இரத்தினமயமான. ககனவெற்பில்—வானமாமலையில். இரவி—சூரியனை நிகர்த்தவனுமாகிய தெய்வநாயகனது. தாள்-திருவடிகளை. அருத்தியொடிருத்திய-அன்புடனெழுந்தருளியிருக்கச்செய்த. துளக்குஅறு-சஞ்சலமில்லாத. மனத்தினர்—திருவுள்ளத்தையுடைய ஸ்ரீ பாகவதோத்தமர்களது. அடித்துணை—திருவடிகளிரண்டையும். பிடித்துள—தஞ்சமாகப்

பற்றிய. நலோர்—சாத்விகர்கள். எருத்தினை அனத்தினை உகைப்பவர் தமை—இடபவாகனத்தையேறி நடத்துகின்ற தாமத குணத்தவனான சங்கரனையும், அன்னவாகனத்தையிவர்ந்து செலுத்துகின்ற இராசச குணத்தவனான நான்முகனையும். தினையின் அத்துணையும்—தினையளவு கூட. (அதாவது அற்பகாலமாவது) நத்திலர்—க்ஷுத்திர புருடார்த்தாபேக்ஷையுடையவர்களாய் விரும்பமாட்டார்கள். அரோ—அசை எ—று. (சுஎ)

உயிர்வருக்கமோனை நேரிசை யாசிரியப்பா.

உயிர்வருக்கமாவது—அகரமுதல் ஔகார வீறுகவிருக்கிற பன்னிரண்டெழுத்துக்கள். மோனை—அடிகடோறும் முதலின் முறையே மோனையாக வருதல். நேரிசையாசிரியப்பாவாவது எல்லா வடிகளும் நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் வருவது.

(பா) அருமறை——திவ்விய உலகே. (சுஅ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) (1) அருமையான வேதாந்தங்களிலே விளங்குகின்ற ஸ்ரீயப்பதியும், (2) பிரளயார்ணவத்திலே ஆலமரத்தினிளமையான அழகிய கிசலயத்திலே பிரகாசித்துக்கொண்டிருந்த பாலகனானவனும், (3) இரணிய கசிபுவினது மார்பைப்பிளந்த வலியநகங்களையுடையவனும், (4) ஒத்தாரு மிக்காருமில்லாத பெருமையையுடையவனும், (5) சாத்விக குணத்தையுடைய அடியார்களினிதயகமலத்தி விடைவிடாதெழுந்தருளியிருப்பவனும், (6) (கோக்களும், கோபிகைகளும் களிக்கும்படி) இசைத்தருளிய புல்லாங்குழலையுடைய ஜகத்காரண வஸ்துவான தேஜோரூபியாயிருப்பவனும், (7) பிறரால‌டைதற்கரிய குணகணங்களோடு கூடிய தெய்வத்தன்மை பொருந்திய சிந்தாமணியை யனையவனும், (8) இடபவாகனத்தையுடைய சங்கரன் முதலிய தேவர்கள் தமது இஷ்டசித்தியையெய்தி யுஜ்ஜீவிக்க. ஐய அந்தணர்—அழகிய வேதாந்த பாரங்கதர்கள். துதிசெய்ய—பல்லாண்டு பாடவும். வீற்றிருக்கும்—வீற்றிருந்தருளும். ஒளிமணிவண்ணனை—காந்தியையுடைய நீலரத்தினத்தை யொத்த திருமேனி யொளியை

யுடையவனுமான தெய்வநாயகனை. தெளிவொடும்—தேற்றத்தோடும். (அதாவது நிச்சந்தேகமாய்) ஒருகால்—ஒருதடவை. ஓர்தியேல்—தியானிப்பாயானால். உளமே—என் மனமே. ஒளவியம் இலாத—பிரகிருதி சம்பந்தமான பொருமை முதலிய துர்க்குணங்களென்று நடையாடாத. திவ்விய உலகு—தேஜோமயமான திருமாமணிமண்டபத்தை. சேர்தி—அடைந்தாநந்திப்பாய் எ—று. (சுஅ)

(கலிநிலைவண்ணத்துறை).

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் முதனான்கு சீர்களும் கருவிளமாகவும், இறுதிச்சீரொன்றும் புளிமாங்காயாகவும் வந்துளது காண்க.

வண்ணக்குழிப்பு.

தனதன தனதன தனதன தனதன தனதான.

(பா) உலகினில்——வீடே. (சுகூ)

நபமலையிறைவர் மலரடியிணைகளை நலமென நணுகாதார் இருவினையற இலகொளியுற எழில்வீடு அடைகிலர் என்க.

(இ-ள்.) உலகினில் இலகிய—பலவகை யுலகத்திலுந் தோன்றிய. உயிர்தொறும் — சேதனசேதனாத்மகமாக ஜீவராசிகடோறும். ஒழியாமே — தவறாமல்—நிலவிய—அந்தராத்மாவாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற. நெடுமாலார்—(அடியார்களை ஸம்ரக்ஷிக்கும் விஷயத்திலே) மிக்க வியாமோகத்தையுடையவரும். மறையவர்—வேதங்களாலே பிரதிபாதிக்கப்பட்டவருமாகிய. நபமலையிறைவர்—வியோமாத்திரியில் வீற்றிருந்தருளும் தெய்வநாயகனாது. மலரடியிணைகளை—உபயசரணாரவிந்தங்களையே. நலமென—சித்தோபாயமென்று. நணுகாதார்—அடையாதவர்கள். இருவினையற — போயபிழையும் புகுதருவாநின்ற பிழையும் தீயினிற்றூசாக. இலகு ஒளி உற—இருசுடர்க்குமேகாத அஞ்ஞானாந்தகாரத்தைப்போக்கி விளங்கும் ஞானச்சுடர் உதயஞ்செய்ய. எழில் வீடு—விலக்ஷண மோக்ஷத்தை. அடைகிலர்—சாதனாந்தரங்களாலே சுலபமாக அடையமாட்டார்கள் எ—று. நணுகினர் அடைவார்—அருத்தாபத்தி. (சுகூ)

பதினுன்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் அடிகடோறுமுள்ள பதினுன்கு சீர்களும் ஆசிரிய வுரிச் சீராகவே வந்துள காண்க.

(பா) எழிலிறை——பரதத்துவந்திடமே. (எம)

பெரும்பாலும் ஆற்றெழுக்காகவே பொருள்படும்.

(இ-ள்.) எழில் இறை - அழகிய தெய்வநாயகன். துயிலும் தானம் - அறிதுயிலமர்ந்தருளுமிடம். ஆம் அலேயே - அழகிய திருப் பாற்கடலே யாம். ஆம் - அம் என்பதனீட்டம். (அம்-அழகு) அலே சினையாகுபெயர். ஆம்-பாங்கான என்றுமாம். இருப்பிடம்-வீற்றிருந் தருளுந்தலம். வானமாமலேயே - வியோமாத்திரியேயாம். ஏந்து இரும் நிறம்-மிக விசாலமான திருமார்பு. இலக்குமியேந்தும்-பெரியபிராட்டி யாரை வகிக்கும். மேம்திருநிறம் - யாவரும் விரும்பும் அழகிய திரு மேனியின் காந்தி. மேவும் என்னும் பெயரெச்சம் ஈற்றுயிர் மெய் கெட்டுவந்தது. திரு - அழகு. இது திருமேனிக்குப் பண்பாகு பெயர். எழிலிபோன்ம்-நீலமேகத்தைப்போலும். போலும் என்னும் செய்யு மென்முற்றிலிருக்கிற ஈற்றுயிர் கெட்டு அவ்வுகரமிருந்தலகரம் னகர மாகத்திரிந்து போன்மென வந்துளது. கொழும் திருக்கோதை - செழுமையான சிறந்த திருமாலே. கோலவண்துளவே - அழகிய வளம் பொருந்திய திருத்துழாயே யாம். குலவு ஆங்கு - விளங்குமத் திரு மாலேயிலே. ஒலவண்டு உள - முழங்கும் பிரமரகணங்களிருக்கின்றன. உந்தியம்புயம் - நாபீகமலம். குவலயம் பூக்கும் - கற்பந்தோறும் பூமி முதலிய உலகங்களேப் படையாநிற்கும். அம்புயம் - அழகிய திருத் தோள்கள். குருந்து உந்தி அடும் - கஞ்சனு லேவப்பட்ட அசுராவேச மான குருந்தவிருட்சத்தைக் காலால்மிதித்துத் தள்ளியழிக்கும். வழங் கிடும் திங்கள் மனத்து உதிப்பதுவே - உலகத் துதித்து விளங்கும் சந்திரன் திருவுள்ளத்துத் தோன்றுவதேயாகும். உந்தியுலகம் பூத்த லும் திருவுள்ளம் சந்திரனேத் தருவதும் கற்பந்தோறு மிடையறுது செய்வதாதலில் எதிர்காலத்தாற் சொல்லப்பட்டது. மலர் அடி - தாம ரைப்பூவைப்போலும் திருவடிகள். முனிவர் - யோகிகளது. வழுத்து-

துதிகளோடு. அவிர்ந்தன - விளங்குவதாகும். மலி புகழ் - நிரம்பிய கீர்த்தியோ. வழுதவிர்ந்தன - குற்றமற்றன. அழித்ததும்-சங்கரித்ததும். பொரவந்து இயங்கும் - போர்புரிதற்கு வந்தெதிர்த்த. மைவரையே - அஞ்சனுத்திரி போன்ற குவலயாபீடமென்னும் கஞ்சனுடைய யானையையே. அளித்ததும் - சம்ரட்சித்ததும். தியங்கும் - ஆசிரியர் முதலியவர்களையும் பந்துக்களையுங்கொன்று நாம் மேற்கண்ட சபதத்தை எங்ஙனம்நிறைவேற்றுகின்றதென்று மனங்கலங்கும். இவரையே- பாண்டவரைவர்களையே. அரிவையர்செய் - (பிரமோபதேசத்தாலே ஆம்பிரவனத்து வந்து தபத்திற் சித்திபெற்று சாமரகன்னிகைகள் நடித்த. பரதத்து - பரத சாஸ்திரக்கிரக கிரமம் தவருத நடனத்திலே. உவந்திடு - திருவுள்ள முவந்தருளிய. அமேலவன் - மேலே காட்டிய குணசேஷ்டிதங்களோடு கூடிய தெய்வநாயகனே. பரதத்துவம் - சர்வேச்சுரன். திடம் - நிச்சயம் எ-று. (எய)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) திடம்படுசந்தியில்——மாகத்துமே. (எக)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) திடம்படுசந்தியில்-(சேதனுசேதனங்களான சகல வஸ்துக்களிலு மந்தராத்மாவாய் ஒழிவற நிறைந்து நிற்றலென்னுஞ்) சம்பந்தத்தாலே. தோன்றல் கெடுதல் திரிதலிலான்-இல்லாததொன்று தோன்றுதலும், இருப்பதொன்று அழிதலும், உள்ளதிலொன்று திரிந்தொன்றுதலும் இல்லாதவனும். உடம்படுமெய்யின்றியே - உடன்படுத்துதற்கு வரற்பாலதாகிய உடலொன்றுமில்லாமலே. உயிர் ஒன்று உயிர்-ஆத்மாவுக்கும் ஆத்மாவாய் வியாபித்திருப்பவனுமாகிய. விண்சயிலன் - தோதாத்திரிநாதனுகிய தெய்வநாயகனது. பதாம்புயமே - திருவடித்தாமரைகளே. மடம்படுவேற்கு - அறிவிலியாகிய வெனக்கு இம்மண்ணினும் இந்தப் பூவுலகத்திலும், மாகத்தினும் வானுலகத்தினும். துணையாம் - இரட்சகமாகும் எ - று. (எக)

பன்னிரு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மடக்கு.

(காமமிக்க கழிபடர் கிளவி).

இதில் அடிகடோறும் 1–2–4–5–7–8–10–11-வது சீர்கள் ஆசிரிய வுரிச்சீர்களாகவும், 3–6–9–12-வது சீர்கள் வெண்பா வுரிச்சீர்களாகவும் வந்துள காண்க.

மடக்கு அடிகடோறும் அரையடிகள் ஒரு நிகரான மடக்காகவும், மற்றை யரையடிகள் ஒரு நிகரான மடக்காகவும் வந்திருப்பன காண்க.

காமமிக்ககழிபடர்கிளவி.

அதாவது காம மிகுதியாலே தாங்கமுடியாமல் வருந்துகின்ற தலைவி கழிக்கரையிலுள்ள பொருள்களை முன்னிலைப்படுத்தி அவைகளைக்கேட்குநபோலக் கருதித் தமதாற்றுமையைச் சொல்லுஞ் சொல்லாம்.

(பா) கத்துங்கடல்——மருவலரே. (எஉ)

ஆற்றெழுக்காகவே பொருள் கூறவேணும்.

(இ-ள்.) கத்தும் கடல்அமரும் திரையே-முழங்குகின்ற சமுத்திரத்திற் பொருந்தியிருக்கிற அலைகளே. கமழ்காற்கு-பரிமளிக்கின்ற தென்றலாகிய புலிக்கு. உடலம்-எனது மெய். அருந்துஇரை-உண்ணுமுணவா யிராநின்றது. கரியகிறகாவிக்கணமே - கருமையான வர்ணத்தையுடைய நீலோத்பலமலர்த் தொகுதிகளே. கணிப்பது உற - யான் நினைத்த காரியம் சித்திக்கும்படி. இக்கணமே - இந்தக் கணத்திலே. கா - காப்பாய். நத்தும் - விரும்பும். போதாக்குஞ்சினமே - நாரைக் குஞ்சுகளின் கூட்டங்களே. நற்றாய் - எனது சொந்தத்தாய். சினம் மீதாக்கும் - கோபத்தை விருத்தி செய்வாள். நத்தம் மரும் தவள அனமே - சங்கங்களிலே பொருந்திய வெண்ணிறமான அஞ்சப் பறவைகளே. வள அனம்-கிணணத்துள்ள அமுதம். அருந்த-உண்ணுகிற

தற்கு. நஞ்சம் - விஷமாயிருக்கிறது. முத்துமணலே - தரளமயமான சைகதமே. கரும்பனையே - கருநிறமான பனைமரங்களே. அணலே - எனது தலைவரே. கரும்பனை - கருப்பு வில்லையுடைய மன்மதனை முட்டும் - போருக்கேவிவிடும். மோதக்கழுநீர்காள் நீரே - வாசனை பொருந்திய செங்கழுநீர் மலர்களே நீர். முன்னி - என்னை நினையாத தலைவனை நினைத்து. அழும்நீர் - அழுகின்ற கண்ணீரை. காணீரே - பார்க்கமாட்டீர்களே. நித்தம் - தினமும். முருகு-தேன். வார்-பெருகும். இலையே - இலைகளே. நெஞ்சம் உருகுவார் இலையே - (யான்படுந் துயரத்தைக்கண்டு) மனம் இளகுவார்கள் இல்லையல்லவா ? நிமலை - இலக்குமியும். கலைமான் - சரஸ்வதியும். மருவு-வீற்றிருக்கும். அலரே - செந்தாமரைமலர்களே, வெண்டாமரைமலர்களே. நெடுவிண்மலைமால் - நீண்ட தோதாத்திரியில் வீற்றிருந்தருளும் தெய்வநாயகன். மருவலரே - என்னை வந்து சேராரோ எ-று. (எ௨)

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியச்சந்த விருத்தம்.

இதில் அடிகடோறும் 1–3-வது சீர்கள் கருவிளஞ் சீர்களாகவும், 2–4–5-வது சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களாகவும், 6-வது சீர் தேமாவாகவும், 7-வது சீர் புளிமாவாகவும் வந்தன காண்க.

சந்தக்குழிப்பு.

தனதன தனத்தனன தனதன தனத்தனன தனதனன தத்ததனனா.

(அன்னவிடுதூது).

அதாவது தலைவனைப்பிரிந்த தலைவியிரங்கல். நெய்தனிலத்துக்குரியதாதலினதிலுள்ள அன்னத்தை நோக்கி யவனுக்குத் தன்னிலைமையைச் சாற்றும்படித் தூதுவிடுத்தலாம்.

(பா) மருவளர்——உரைத்திடுமினே. (எ௩)

அனக்குருகுகாள் நபச்சயிலர் திருமுனம் என்மனத் துயரெலாமுரைத்திடுமின் என்க.

(இ-ள்.) மருவளர் திருக்கமல மலர் அணி - வாசனை மிகுகின்ற சிறந்த தாமரைமலர்களின் வரிசைகளை. நணி - பொருந்தி. பயிலும் - பழகுகின்ற. மடநடை - மந்தகமனத்தையுடைய. அனக்குருகுகாள் - அன்னப்பறவைகளே. தருவளர் வனத்துவிசி - மரங்களோங்கிவளரும் காட்டிலே கட்டப்பட்டிருந்த. வலையிடையகப்படும் - கண்ணியிலே கட்டுண்ட. தழைகின்ற-தழைந்த தோகைகளையுடைய. மயிற்பெடையில்-பெண்மயில்போல. வேள்-மன்மதனது. உருவளர்-அழகு மிகுந்த. மலர்க்கணையில் - புட்பபாணத்தாலே. உடல் உயிர் - உடம்புமுயிரும். நடுக்கம் உற - நடுங்க. உளையும் - வருந்தும். என் மனத்துயரெலாம் - மனவேதனை யனைத்தையும். மருவும்-பொருந்தும். உவணக்கொடியர்- கருட கேதனத்தையுடையவராகிய. திருவளர்-இருவகைச் செல்வமும் விருத்தியடைகின்ற. நபச்சயிலர்-தோதாத்திரிநாதரது. திருமுனம்- திருமுன்பு - (சந்நிதியிலே போய்) உரைத்திடுமின் - சொல்லுங்கள் எ-று. (எங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

இதில் அடிகடோறும் முதலாறு சீர்கள் கருவிளஞ்சீர்களாகவும் இறுதிச்சீரொன்றும் குறினெடிலிணைந்து ஒற்றடுத்தும் அடாமலும் வந்த நிரையே ஒரு சீராகவும் வந்தன காண்க.

சந்தக்குழிப்பு.

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனா.

பொய் பாராட்டல்.

அதாவது தலைவன் தலைமகள் மாட்டுள்ள அவயவவிசேடங்களை யிறப்பப்புகழ்தல். இங்கு கூந்தல் கொண்டாடப்பட்டது. (இறப்பப் புகழ்தலாவது இல்லதுமுள்ளதுஞ் சேர்த்துக்கொண்டாடுதல்),

(பா) உரைத்திடு——ஒளித்திடுதலே. (எச)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ-ள்.) உரைத்திடும் - பகவத் சொரூப ரூபகுண விபூதிகளை உள்ளவாறு சொலும். மறைக்குலமுடித்தலமிசை-வேத சமூகங்களின்

உச்சியிலே. (வேதாந்தத்திலே) பொலி-விளங்குகின்ற. உலப்பருசுடர்த் திகிரியான் - ஒருக்காலுங் குறைபடாதொளிரும் காந்தியையுடைய சுதர்சனமென்னும் திருவாழியையுடையவனாகிய. வரைத்தடமதில்-மலையை யொத்த விசாலமான மதில்களாற் சூழப்பட்ட. நபச்சிலை நகர்க்கிறை-வானமாமலை யென்னும் திருநகரத்துக் கரசனாகிய தெய்வ நாயகனது. மலைத்தலை - வெற்பிலுள்ள. மலர்க்கொடியனீர்-பூங்கொடி போன்றவரே. விரைக்குழல் - உமது இருவகை மணமுங்கொண்டுள கூந்தலினது. வணத்து எழில் - நிறத்தின் அழகை. கண்ணுற்று-பார்த்ததினாலே. எழு - உண்டாகிய. முகிற்குலம் - மேகஜாலங்கள். மிகுத்திடு சமழ்ப்பினலவோ - மிக்க வெட்கத்தினாலல்லவா? நரைத்தென-பலிதமெய்தினாற்போல. விளர்த்து - வெண்ணிறமெய்தி. மெலிவுற்று - கொஞ்சங் கொஞ்சமாகக் கரைந்து. வலியற்று - ஓடித்திரியச் சத்தியில்லாததாய். நபத்திடை - ஆகாயத்திலேயே. ஒளித்திடுதல்-மறைந்துவிடுதல் எ-று.

பருவகாலத்து ஆகாயத்துத் தோன்றிய மேகம் மழை பெய்து இயல்பாகவே வெளுத்து கூட்டங்குலைந்து வேறிடம் போகாமல் அங்கேயே இயல்பாய் மறைந்து விடுதலை தலைவியின் கூந்தலழகைக் கண்டு மிக நாணி யவ்வாறாகியதாகச் சம்பாவித்தலாலே ஏதுத்தற்குறிப்பு அணியாம். இதனை வடநூலார் ஹேதூத்பிரேக்ஷாலங்கார மென்பர். (எச)

நேரிசை யாசிரியப்பா.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

பருவங்காட்டி வற்புறுத்தல்.

அதாவது தலைவன் பிரிவாற்றாது வருந்தும் தலைவிக்குக் கார்ப் பருவம் வந்துவிட்டது கண்டனை தலைவன் றேர்வருவது மிப்பொழுதே காண்பாய் கவலற்கவெனத் தோழி தலைவியை ஆற்றுவிப்பதாம்.

(பா) ஒளிமணிவண்ணன்——மகிழுதி. (எரு)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) ஒளிமணிவண்ணன், கொம்பரனையாய் - பூங்கொம்பு போன்றவளே. நின்திருமுறுவலில் - உனது அழகிய தந்தபந்திகளைப் போல. பொன்தளவு அரும்ப-அழகிய முல்லைக்கொடிகளரும்பெடுக்க வும். நீல்உண்கணில்-கருமையான மையெழுதிய உன்கண்களைப்போல. நீலம்-நீலோத்பலம். வாய்விள்ள-மலரவும். ஏந்துஎழில்-மேலாம்அழகு. காந்தள்—செங்காந்தள். கண்ணனும் அண்ணனுமென்றது ஸ்ரீ கிருஷ் ணனையும் பலராமனையும். காயா—நீலநிறமாக இலை தெரியாது நிரந்தர மாகப் பூக்குமோர் மரம். பிடா-மேற்கண்டபடி வெண்ணிறமாகப் பூக்குமரம், ஆம்பிகள்—வெண் காளான்கள். வந்தாங்கு-வந்ததுபோல, தவன்—தலைவன். தணந்து—பிரிந்து. தவமுயல்—நோன்பினை நோற்கும், அவன்—அந்தப்பிரிந்த தலைவன், இவ்விதமான பெண்களை வாசவச் சசிகை யென்பர். என்னை—"தானும் படுக்கைத்தலனு மணியிற்கை செய்திருப்போள் வாசவச்சசிகை" (சுவைக்கொத்து) தவனனால்— சூரிய கிரணங்களாலே. நனைசெறிந்து-மலர்கள் நிறைந்து. குருகுசுள்— பட்சிகள். குடம்பை—கூடு. வாளரி-சிங்கம். மலைமுழை—மலைக் குகை. இப்பி—முத்துச் சிப்பி. தாளச்சூல் - முத்தமாகியகருவை. பொறி அளி-புள்ளிகளையுடைய வண்டுகள். புறவு—புறுக்கள். சாதகம்-மழைத் துளிகளையேயுண்ணு மோர் பறவை. சகோரம் - நிலாவிழுங்கிப்புள். அரா—பாம்பு. மணிற்கோபம்—பூமியிலே இந்திர கோபப்பூச்சிகள். விணிற் கோள்கள் - ஆகாயத்துள்ள கிரகங்கள். குவலயம்—பூமி. கொங்கை—மடவார்தன தடங்கள் (ஆலமரத்து நிழல் கிணற்று நீர் தனங்கள் முதலிய சில சீதள காலத்தில் வெப்பமாகவும், வெய்யிற் காலத்திற் சீதளமாகவுமிருக்குமென்ப) வாடை—வடகாற்று. கோடை- மேல் காற்று (கால்தளரலாவது உலகத்து வீசாதொடுங்கல்) மணந் தார்—கலந்தார். தணந்தார்—பிரிந்தவர். உண்நெகிழ்தல்-மனம் வருந்தல். வரநதி-ஆகாயகங்கை. வானதியாவன்-ஆகாயத்துப் பிரவகிக்குமோர் நதியாகக் கடவேனென்று. எழுந்து—மேல்நோக்கி. விண்படர்ந்து— ஆகாயத்திலே பிரவகித்து. ஒளிர் — விளங்கும். யமுனையோவென்ன— யமுனாநதியோ வென்னும்படி (இது தற்குறிப்பேற்றவணி) மாகம் அடங்கலும் — ஆகாயமுழுவதும். வளைந்து—பரவி (உவமை) மரகத

மணி—கலந்துமின்னி (இது பொருட்டற்குறிப்பணி) காருடன் மத்தகயம்—இடித்து (இதுவுமேற்கூறியவணியே) மின்னலாம் காதலி—(உருவகவணி) வானவில்லிட்டு (இதுவுந்தற்குறிப்பு அணியேயாம் நிழல் வெண்மணி—காந்தியுடையவெண்முத்துக்கள். கரககணம்—ஆலங் கட்டியின் தொகுதிகள், இதுவுந்தற்குறிபபேற்றவணியே. கருதரும்—மனதினுலித்தன்மையானதென்று நினைத்தற்கும் அரிய. கார்—மேகம்; வரக்கண்டனே. ஒன்னலர்ச் செகுத்து—பகைவரையழித்து. வாகை மாலே—வெற்றிமாலே. ஓகை—உவகை. காதலர்—நாயகரது, தேர் வரக் காண்குவை. மறுகுதலொழிமதி – மனக்கலக்கத்தை விட்டொழி. மதிமுன்னிலேயசை) மதிமகிழுதி—மனமகிழ்வாயென்றவாறு. (எரு)

நேரிசை வெண்பா.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

செவிலியாற்ருத்தாயைத் தேற்றல்.

(வெளி)

(பா) மதிவாண்முதத்தாய்——தாயதன்ரேபார் (எசு)

மதிவாள் முகத்தாய், மதிதளரல் ஏதமொன்ரு வான்மலேமாலின் னருளால் நுதிவாள்விழியைத் தேடி கொடியிற்பதிகொணர்வல், பார். அவன் பாதமொன்ருற்ருயதன்ரே.

(இ-ள்.) மதிவாண்முகத்தாய் -பூர்ணசந்திரன் போன்ற ஒளியை யுடைய முகத்தையுடைய தாயே. மதிதளரல் - மனம் வருந்தற்க. ஏதம் ஒன்ரு - எவ்வகைக்குற்றமு'மணுகாத. வான்மலேமாலின் அரு ளால் - வானமாமலேயில் வீற்றிருந்தருளும் தெய்வநாயகனது கிருபை யாலே. தேடி - தேடிப்பார்த்து. நுதிவாள்விழியை - கூர்மை பொருந் திய வாளாயுதம் போன்ற கண்களேயுடைய நந்தமகளே. பதிகொணர் வல் - ஊருக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன். பார் - இந்தப் பூமி. அவன்-அந்தத் தெய்வநாயகனது. பாதம் ஒன்ருல்-ஒரு திருவடியினுல். தாயதன்ரே - அளந்துகொண்டதல்லவா ? (எசு)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னமே சொல்லப்பட்டது.

இருளைக்கிறைவி யிறையருளியம்பல்.

(வெளி).

(பா) பாரிற்பகர்ப——நிழலிட்டதே. (எஎ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) பகர்ப-பெரியோர் சொல்லுவர். தழலிற்றகித்த-நெருப்புப்போலச்சுட்ட. நிழலிட்டது-குளிர்ச்சியைச் செய்தது. (எஎ)

கலிச்சந்தவிருத்தம்.

கலிவிருத்தத்தி னிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் முதன் மூன்று சீர்கள் புளிமாங்கனிகளாகவும், இறுதிச்சீர் புளிமாவாகவும் வந்தன காண்க.

சந்தக்குழிப்பு.

தனதானன தனதானன தனதானன தனனு.

(பா) நிழன்மேவிடு——வானுலகுறுவார். (எஅ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) நபுவரைமால் - தோதாத்திரியிலெழுந்தருளியிருக்கிற தெய்வநாயகன். மரைமலர் - தாமரைமலர். (முதற்குறை) கழன்மேல்-திருவடிகளின் மீது. மிகுபரிவால் - பேரன்பினலே. வரகவிமாலைகள் புனைவார் - சிலாக்கியமாகிய பாமாலைகளைச் சூட்டுகின்றவர்கள். அழன்மேனியன்-சேந்திவண்ணனுகிய நெற்றிக்கண்ணனும். அலர்மேலவன்-கமலமலரில் வீற்றிருக்கும் எண் கண்ணனும். அறியா-காணுத. ஒருநெறிபோய்-ஒப்பற்ற அர்ச்சிராதி மார்க்கத்தாலே சென்று. தொழல்

மேவிய - எக்காலமும் தொழுதலையே விரும்பிய. சுரர்வாழ் - நித்திய முத்தர்கள் வசிக்கும். சுடர்வானுலகு-தேஜோமயமானபரமபதத்தை. உறுவார் - அடைவார்கள். (எஅ)

குறளடிவஞ்சிப்பா.

அதாவது பெரும்பாலும் தன்றளையுஞ் சிறுபான்மை பிறதளையுந்தழுவிக்கொண்டு இருசீரடியாலேனும், முச்சீரடியாலேனும்மூன்று முதலிய பல வடிகளைப் பெற்றுத் தனிச் சொல்லுற்று அகவற் சுரிதகத்தால் முடிவதாம். இதிலடிகடோறும் முதற்சீர் நாலசைச்சீராகிய பொதுச் சீராகவும், இரண்டாவது சீர் மூவசைச்சீராகிய வெண்பாவுரிச்சீராகவும் வந்ததுகாண்க. ஆதலாலிது குறளடிவஞ்சிப்பா.

(பா) வாரிதி——மோதமுறற்பொருட்டே (எகூ)

(ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க)

(இ-ள்) வாரிதி—சமுத்திரம், வேரி—வாசனை, மலர் முடி-மலர் மாலையணிந்த கிரீடம். குணக்கடல். (உருவகம்) இழிவொழி-குற்ற மற்ற. தொழிலுயர்-விருத்திகளான்மேம்பட்ட. கடிமலர்-புதுமலர், வாசனை பொருந்திய மலருமாம். பல்இயம்—பலவகை வாத்தியங்கள். தழங்க—முழங்க. மந்திரம் வேள்வியர்-வேதியர் (உம்மைத் தொகை) மறை-இருவகை வேதங்களும். சந்தனம், நறுமலர், சசி (உம்மைத் தொகை) சசி-கற்பூரம், மன்றல்-வாசனை, இராட்ட-வீச, ஒழிவருபவம்-நீங்காதபிறவித் துன்பம். பாற்கடல்—திருப்பாற்கடலே. பங்கபங்கயமா—சேற்றுத்தாமரையாகவும். மாற்று இலா—குற்றமற்ற. ஐந்தரு—பாரிஜாதம் முதலிய ஐந்துதேவதருக்களே. மாவனம் ஆ-ஆம்பிரவனமாகவும், தீர்த்தம் அனைத்தும்—உலகத்துள்ள புண்ணிய தீர்த்தங்கள்யாவுமே. செலாசயம் ஆ—குளம், கூபம் முதலிய நீர் நிலைகளாகவும், ஆர்த்தி கொள்சுரர்-விருப்பத்தையுடைய •தேவர்களெல்லாம். விருட்சாதிகளா, தருசெடி கொடிகளாகவும். வைகுந்தமே—ஸ்ரீவைகுண்டலோகமே—வரமங்கையதா—ஸ்ரீவரமங்கலநகரமாகவும். வைகிட—வந்துதங்க. பூமியும்-பூமிதேவியும். மலர்மகளும்-திருமகளும். ஆவரம்-தகுதியாகிய அபீஷ்டங்களை, அடியார்க்களித்தருளும் சீவரமங்கைத்

திருமகளும். கதிரவனும்-சூரியனும். கலாநிதியும்-சந்திரனும். கதிர் அவிர்-ஒளிவீசுகின்ற. ம்ருகண்டுவின் காதலனும்-மார்க்கண்டேயனும். சேனைப்பெருமானும் - சேனைத்தலைவரும். இருமருங்கெதிரினும் - உபய பார்சுவங்களிலும் முன்புறத்திலும். இருமைமுகில் - பெருமை தங்கிய கருமேகம். ஏகாசனத்தில் - ஓரேயிருப்பிடத்தில். நாகாலயத்தோர்-தேவர்கள். நமர்காள் - நம்மவர்களே. மோதம் உறற்பொருட்டு நித்தியாநந்தத்தை யடையும்படி எ-று. (எகூ)

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னமே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறு மேழுசீர்களு மாசிரிய வுரிச்சீரானே வந்தன காண்க.

(பா) பொருளலா——வேட்பவரே. (அய)

வேட்பவரே தஞ்சமென் றடைமின் வாழ்ந்திருப்பீர்.

(இ-ள்) பொருள் அலாதவற்றை - ஆத்மா இல்லாத தேகத்தையு மதனைச்சார்ந்ததாரா புத்திராதிகளையும். பொருளென-ஆபத்திரவியமென. உணர்ந்து - அறிந்து. புன்னெறியேயொழுகும் - கெட்டவழியிலேயே நடக்கின்ற. மருளின்-அஞ்ஞானத்தாலே. ஆம் - உண்டாகுகின்ற. மாணு-பெருமையடையாத. பிறப்பொழிந்து - பிறவி தீர்ந்து. வைகுந்தமேவி - திருமாமணி மண்டபத்தை யடைந்து. வாழ்ந்திருப்பீர் - நித்ய கைங்கர்ய யுக்தராயிருப்பீர்கள். சிறப்புறுந்திறனே வேட்பவரே - மேலான பதவியையடைய விரும்பியவர்களே எ-று. (அய)

கலிவிருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் நாற்சீர்களும் ஆசிரிய வுரிச்சீராகவே வந்தன காண்க.

(பா) வேட்பவை——கிடைப்பதென்னரோ. (அக)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) வேட்பவை - விரும்பிய பொருள்களை. சேட்படுவிண் மலை - பெருமை தங்கிய வானமாமலையில் வீற்றிருந்தருளும். தாள் - பதுமம். (உருவகம்) பிறர் உழை - அயலாரிடத்தில். அரோ - அசை. (அக)

வெண்டாழிசை.

அதாவது வெண்பாவினம் மூன்றனுளொன்று. இது மூன்றடியாய் முதலிரண்டடியும் நாற்சீராயும், ஈற்றடியொன்றும் வெண்பாப் போல முச்சீராகவும் முடிவுபெற்று வேற்றுத்தளை விரவிவந்துளது காண்க.

(பா) என்னையாட்கொள்——முதல். (அஉ)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) இமையவர்கோமான்றன்னை - தெய்வநாயகனை. வான்மலை - வானமாமலை. முன்னைவானோர் - நித்யசூரிகள். முதல் - முதல்வராவர் எ-று. (அஉ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் 1-3-5 புளிமாங்காய்ச் சீர்களாகவும், 2-4-6 தேமாச்சீராகவும், 7-வது சீர் புளிமாவாகவும் வந்துளது காண்க.

(பா) முதன்மூவருக்குள்——வான்மலைக் கரசனே. (அங)

மால்——வான்மலைக்கரசனே.

(இ-ள்.) முதல்மூவர்-பிரம்ம விஷ்ணு ருத்திரர்கள். முதலாம் முதன்மையான விஷ்ணுவென்னுந் திருநாமத்தையுடைய. முகுந்தன் - இம்மை மறுமைப்பயனை யளிப்பவனும். முருகுஆர் துழாய்முடியினன் - தேன் பெருகு திருத்துழாய்மாலை சூடிய திருமுடியையுடையவனும். புதன்

மூடுகானில் - செடிகொடிகளடர்ந்த காட்டில். மினிநேடு - மின்னல் போன்ற திருமேனியையுடைய ஜானகிப்பிராட்டியாருடன். மேவு புயல் - அடைந்த மேகவண்ணனும், ஆதிதேயர்பதியாம் - தேவேந்திரனுகிய. சிதல் - கரையான். மூரிநாணேஉண - பெரியபிநாக மென்னும் வில்லின் நாணைத்தின்ன, நாண் இழந்த - திருமங்கிலிய நாணையிழந்த. சிவை - உமாதேவியார். வாழ - பழையபடி திருமங்கிலியத்தோடு வாழும்படி. அருள் - (வின்னுனே நிமிர்ந்ததனுல் துண்டிக்கப்பட்ட சிவபெருமானது தலை மறுபடி முன்போலொன்ருகும்படி) யநுக்கிரஹித்தருளியவனுமாகிய. மால் - தெய்வநாயகன். நுதல் - ஆராய்ந்தறிந்து கொள்ளும். மூதுவோர்கள் - பெரியோர்கள். மதியால்-தமது சிறந்த திருவுள்ளத்தாலே. மதித்து - கௌரவித்து. நுவல் - துதிக்கின்ற. வான்மலைக்கு அரசனே - தோதாத்திரிநாதனே யாம் எ-று. (அரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னமே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் எழு சீரும் இயற்சீராகவே வந்துள காண்க.

இளவேனிற்காலம். இரங்கல்.

சித்திரையும் வைகாசியுமாம். இதனை வசந்த இருது என்ப. இக்காலம் வருவதாகச் சொல்லிப் பொருள்மேற் பிரிந்த தலைவன் வரவு நீடத் தலைவி வருந்தல்.

(பா) அருளுறுகடைக்கண்——கின்றதையே. (அசு)

போனவர் முல்லைவிழிபொன்னும் மணிகளும் வழங்குகின்றதைக் கண்டிலர்போலு மென்க.

(இ-ள்.) அம்புயைகொழுநன் – ஐசுவரியப்பிரதையாகிய லட்சுமீ நாயகனது. தோதாத்திரி யொருவி – ஸ்ரீ வரமங்கல நகரத்தைவிட்டு. பொருள் உறுநசையால்—பொருளிலே மிகுந்த வாசையினலே. எனை—அவரையே யுயிரென நம்பியிருக்கிற என்னை. போலும்—அசை. வெரு

ளுறுத்து—மன நடுங்கச்செய்யும். அனலைவீசு—(அக்கினிச்)சுவாலையை வீசுகின்ற. தென்றலில்—மந்தமாருதமாகிய அக்கினியினாலே. மெய் வெந்து—உடல் பொசுங்கி. மாங்குயிற்கு — மாங்குயில்களின் தீங்குரலாகிய காளத்துக்கு. இனைந்து—வருந்தி. மருளுறு—மனமயங்குகின்ற. எனது முலைவிழி—எனது தனங்களும் கண்களும். பொன்னும் மணிகளும்—முறையே பொன்னையும் (தேமலையும்) முத்துக்களையும். (கண்ணீர்த்துளிகளையும்) வழங்குகின்றதை—கொடுப்பதை எ—று. (௮௪)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் 1–2–3–4–7–8–9–10-வது சீர்கள் ஆசிரியவுரிச்சீராகவும், 5–6–11–12-வது சீர்கள் வெண்பா வுரிச்சீர்களாகவும் வருவது காண்க.

(மேகவிடுதூது—வெளி).

(டா) வழங்கு தென்றலை——யருள்வாயே (௮௫)

ஆற்றொழுக்காகவே பொருள்கொள்ளலாம்.

(இ-ள்) வழங்குதென்றலை-வீசுகின்ற மந்தமாருதத்தை. கிள்ளையை-கிளியை. குயிலினை-கோகிலத்தை. பாங்கியை-தோழியை. மட நெஞ்சை-அறியாமையே யிலக்கணமான மனதை. (முறையே) மன்மதனது தேர். பரி-குதிரை. வயச்சின்னம்-சயகாளம். வரி வில் நாண்—கட்டமைந்த வில்லினது நாரி. பழங்கண் ஆற்றிட தோற்று இடம்—துன்பத்தை விளைத்தற்குப்பிறக்குமிடம். எனப்பயமுற்றுட்—என்று பயந்தும். அனம்—அன்னப்பறவையையும். பூவை—நாகணவாய்ப்புள்ளையும். பயிலும் மாமயில்—பழகியசிரியம்பீலியும், (முறையே) நடை—கமனத்துக்கும். மொழி—பேச்சுக்கும். சாயலின்—தோற்றத்திற்கும். பகையென்றுப்—விரோதிகளென்றும். பகராமல்- தூது போகச்சொல்லாமல். முழங்கும் மங்குல்—கர்ச்சிக்கின்ற மேகமே. மொழியுஞ் சாதகமென்ன—உயர்த்திச்சொல்லப்படும் சாதக பக்ஷியைப்

போல. (அநுகூலமான வார்த்தைகளையே சொல்லுமென்று எண்ணி யென்றுமாம்) நின்வரவையே நோக்கினன்—உன்னுடைய வருகையை யே யெதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். முன்னும் என்றனை—நின்னையே நினைத்துக்கொண்டிருக்குமென்னை. முன்னுற—முதலாவதாக. காத்திட முன்னிற்றல்—பாதுகாக்க எதிருன்றுதல். முறையேயாம்—பிரதியுபகாரத்தை விரும்பாத வள்ளன்மையையுடைய உனக்குத்தகுதியேயாம். (ஆகையாலே) தழங்கு—முழங்குகின்ற. பேரலை—பெரிய அலைகளையுடைய. பங்கதாமரசம்—சேற்றுத்தாமரையேரியை. ஓர் சார்கொள்—வாமபார்சுவத்திலே கொண்டு விளங்குகின்ற. வான்சயிலத்தான்—தோதாத்திரிநாதனென தெய்வ நாயகனது. சரணந்தாழ்ந்து—திருவடிகளை வணங்கி. (என் இயல்பையியம்பி) அவன்றரு-அவ்வெம்பெருமான்கொடுத்தருளிய. துளவங் கொடுதந்து-திருத்துழாய் மாலை கொண்டுவந்து கொடுத்து. (என்னை) அருளாய்-கிருபை பாலிக்கவைக்வேணும் (எ-று). (அரு)

பதினுன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் பதினுன்குசீர்களும் அடிகடோறும் ஆசிரியவுரிச் சீராகவே யமைந்துள காண்க.

(தலைவிபிரங்கல்-வெளி)

(பா) அருளினன்றிடும்——இருந்ததே (அசு)

ஆற்றெழுக்காகவே பொருள்கொள்க.

(இ-ள்) 1வது கோக்களையுங் கோபாலர்களையுங் காப்பதற்குக் கோவர்த்தனகிரியையெடுத்துக் குடையாகப்பிடித்தவர், என்னைவருத்துந் தென்றற்புலிக்கிருப்பிடமாகிய மலைய மலையையெடுத்துக் கடலிலெறிதிலர்.

(2வது) ஜானகிப்பிராட்டியின் சிந்தை களிக்கும்படி சிவனது வில்லையொடித்தவர், யான்மகிழும்படி என்னையடர்க்கின்றமன்மதனது கருப்பஞ்சிலையையொடித்திலர்.

(3வது) முற்காலத்து யுத்தகளத்திலே தன்னையடைந்தஅருச்சுனனைக்காப்பதற்காகச் சூரியனை மறைத்தவர், மன்மதனது யுத்தகளத்திலே அணைந்த என்னைக்காப்பதற்குச் சந்திரனை மறைத்திலர்.

(4வது) காதலனாகிய சுக்ரீவனைச் சஞ்சலந் தீர்க்கும்பொருட்டுத் திண்மையாகிய சாலவிருட்சங்களைத் துளைத்தொழித்தவர், காதலியாகிய எனது சஞ்சலத்தைப் போக்குதற்கு மன்மதனது காகளமிருந்து கூப்பிடு மாமரங்களைத் துளைத்தொழித்திலர்.

(5வது) கோபாலர்களெல்லாம் நடுநடுங்கும்படி வளைந்துகொண்ட தாவாக்கினியை யவர்கண்மகிழும்படி தணித்தவர், யான்மகிழும்படி என் மனத்தெழுந்த விரகவெங்கனலைத்தணித்திலர்.

(6வது) கடலைக்கடைந்து அமுதமெடுத்து ஆர்த்தர்களான தேவர்களுக்குக் கொடுத்து அவர்களைக்காப்பாற்றியவர், ஆர்த்தியையுற்ற எனக்கு விரும்புகின்ற அதராமிருதத்தைத்தந்து என்னைக் காக்கிலர்.

திருவிளங்கிய மார்பினர்—திருமகளைப்பிரியாத மார்பினையுடையவரும். வனத்தெரியலார்-திருத்துழாய் மாலையணிந்த திருத்தோள்களையுடையவரும். வரமங்கையார் செய்ய சேவகர் - ஸ்ரீவரமங்கை நாய்ச்சியாரது அழகிய நாயகனுமாகிய தெய்வநாயகர். செய்யும் - செய்தருளும். ஆண்மை-பராக்கிரமம். சிரிப்பதாக - (யாவருங்கண்டு) பரிகசித்து நகைக்கத்தக்கதாக. இருந்தது-இருக்கிறது என-று. (அகூ)

பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் பதினான்கு சீரும் ஆசிரிய வுரிச்சீராகவே வந்தன காண்க.

முதிர்வேனிற்காலம். ஆனியுமாடியும். (கிரீஷ்மருது)

தோழி கூற்று.

(ஆற்ருத்தன்மையாற்றக்கூறல்).

தலைவியின் ஆற்ருத்தன்மையை யாற்றுதல் செய்யும்படி தோழி தலைவனுக்குக் கூறுதல்.

(பா) இருந்ததண்——அச்சுதனே. (அஎ)

அச்சுதனே சுரும்பர்புக்கிருப்ப, கோகம் ஒளிப்ப, மீனினம் மறைய, பிடித்தெரி முதிய வேனிலோடு கனலியுங்கனற்ற வருந்தி, விரும்பி, மறந்து, கசந்து, வெய்துயிர்த்து, வாய்வெரீஇ, பொருந்திய மாலையும் எரிகதுவ, புரமெலாம் வெந்து புலப்பு பூவையினைப் புர.

(இ-ள்.) ஒரீஇ-விட்டு. சுரும்பரினம்-வண்டுக்கூட்டம். புளினம்-மணற்குன்று. கோகம்-சக்கரவாகப்புள். புன்னைப்பொதும்பர்-புன்னை வனம். பிணங்கு-நெருங்கிய. சைவலம் - பாசிக்கொத்துகள். கனலி-நெருப்பு. கனற்ற-சுட. வாய்வெரீஇ=வாய்வெருவி-பயந்து கூப்பிட்டு. புழுகு-புனுகு. நானம்-கத்தூரி. சாந்து-சந்தனம். எரிகதுவ-தீப்பற்றிக் கொள்ள. புரம்எலாம் - உடன் முழுவதும். பூவையினை - நாகணவாய்ப் புள்ளின் மொழிபோலும் இனிய மொழியினையுடைய தலைவியை. புர-காப்பாற்று.நபபொருப்பில்-வியோமாசலத்தில்(வீற்றிருந்தருளும்.) அச்சுதனே - அடியார்களைக் கைநழுவவிடாத தெய்வநாயகனே எ-று. (அஎ)

நேரிசை வெண்பா.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(பா) அச்சுதாநந்த——யாள்வாய். (அஅ)

வான்சைல! சரண்புக்கேனையாள்வாய்.

(இ-ள்.) அச்சுதா - (அடியடைந்தவர்களை)க் கை நழுவ விடாதவனே. (அழிவில்லாதவனே யென்றுமாம்) அநந்த - முடிவில்லாத.

(எல்லையில்லாத) குணகணங்களையுடையவனே. அரி - பாபங்களைப் போக்குபவனே. மகாப் பிரளயகாலத்து எல்லாவற்றையுமுருவொழித் தொருவனுயிருப்பவனே. முகுந்த - இம்மை மறுமைப்பயன்களையெல் லாமினிதருள்பவனே. சச்சிதாநந்த-தத்துவஞ்ஞாநாநந்தச்சொரூபியே. தயாநிதியே - கருணைக்கிருப்பிடமானவனே. நச்சிலார் - உள்ளன்பிலா தார். தந்த-கொடுத்த. அர்த்தம்-எப்பொருளையும். நத்தாய்-விரும்பிக் கொள்ளாதவனே. வான்சயில - வியோமாத்திரியில் வீற்றிருந்தருள் பவனே. நந்தவர்த்தநத்தாய் - (அவ்வியோமாத்திரி நியமத்துள்ள நந்த வர்த்தநமென்னும் திவ்விய விமானத்தை யுடையவனே. சரண்புக் கேனை - சரணம் புகுந்த அடியேனை. ஆள்வாய் - அடிமைகொண்டருள வேணும் எ-று. (அஅ)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

(நாரைவிடுதூது).

அதாவது ஒருவழித்தணந்த தலைவன் மாலைக்காலம் வரையும் வராமல் வரவு நீட்டித்தலால் காமமிகுந்து கழிக்கரையிலுள்ள நாரைப் பறவையோ டிரங்கிக் கூறுதல்.

(பா) வாயுந்திரை—— இயப்புதியே. (அகூ)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) வாயுந்திரையுகளுங் கானல்மேயமடக்குருகே - புணரி யிற்பொருந்திய அலைகள்வந்து மோதுகின்ற புன்னையங்கானல் (அல்லது கைதையங்கானலிலே) வசிக்கின்ற இளமைப்பருவமுடைய நாரைப்பறவைகளே. ஆயும் நகராற்கு-முனிவர்களும் யோகிகளுமெக் காலமுந் தியானிக்கின்ற ஸ்ரீவரமங்கையில் வீற்றிருந்தருளுந் தெய்வ நாயகனுக்கு. என் உள்ளும் - எனது மனோபீஷ்டத்தையும். நோயும்- அது கிட்டாமையாலே வந்துள்ள வருத்தத்தையும். தெரித்து - விண் ணப்பஞ்செய்து. அணிஅந்தாமங்கேள் - அவர் வருமளவுமாற்றியிருத் தற்குத் திருத்தோள்களிற் புனைந்தருளிய திருமாலையைக் கொடுக்கும்

படி கேளாய். தரநோக்கிலேயேல் - (அம்மாலையை) தந்தருளுவதற்குத் திருவுள்ளமில்லையானுல். இன்று - இப்பொழுதே. நினது அந்தாயம்- நினது அழகிய பரமபதத்தை. ஏயும்-அடைவாள். திடம்-இது நிச்சு யம். என்று இயம்புதி - என்று சொல்லாய் எ-று. (அகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் முதலைந்து சீர்களு மாசிரியவுரிச்சீராகவு மீற்றுச்சீரொன்றுங் காய்ச்சீராகவும் வந்தது காண்க.

புகழார் கழலிணைக்கு எனையாட்கொண்டாரென முடிக்க.

(இ-ள்.) கயம்புனைந்த-தடாகங்களை யலங்கரிக்கின்ற. மலர்புரை- பூவைப்போன்ற. நயம்புனைந்தருள் - அடியார்களின் குற்றங்களையெல் லாந் தெரியவொட்டாமன் மறைத்து அவர்களினிடமுள்ள குணங்களை ஒன்றுபத்தாகக் கற்பித்துச்சொல்லி யருள்கின்ற. வரமங்கைமேவிய- ஸ்ரீவரமங்கலநகரத் தெழுந்தருளியிருக்கிற. நங்கையாம் - குணபரி பூர்ணையான. வரமங்கை - ஸ்ரீவரமங்கைத்தாயாரது. குயம்புனைந்திடு திண்புயர் - தனதடங்களாலே யலங்கரிக்கப்பட்ட (தனதடங்களை யலங் கரிக்கின்ற) திண்ணிய திருத்தோள்களை யுடையவராகிய. விண்புவி கூறு - விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருங் கொண்டாடுகின்ற. பாம்புகழார் - பரவிய கீர்த்தியையுடைய தெய்வநாயகர் எ-று. (கூ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதில் அடிகடோறு மாறுசீர்களும் ஆசிரிய வுரிச்சீராகவே வந்தன காண்க.

(சரத்திருது) கூதிர்காலம்: ஐப்பசியுங் கார்த்திகையும்.

தலைவியிரங்கல் — நாடு காவற்குப்பிரிந்த நாயகன் வருவதாகச் சொன்ன கூதிர்காலம் வந்தும் வாராமை மனம் வருந்தல்.

(பா) பாம்புகள்——போலுமன்றே. (கூக)

ஆற்றெழுக்காகவே பொருள் கொள்ளலாம்.

(இ-ள்.) பகழிகள் - பாணங்கள். வாம்புலி - பாயும் புலி. வாவும் என்பதில் வு என்னும் பெயரெச்ச வீற்றுயிர் மெய் கெட்டது. மான - ஒப்ப. தீம்புனல் - மதுரமான தீர்த்தங்களையுடைய. வான்சிலம்பன் - தோதாத்திரிநாதனது. சிலம்பு அடி - நூபுரமணிந்த திருவடிகளை. தொழும் - துதிக்கும் (வணங்கும்). சிலம்பர் - மலைநாட்டையுடைய தலைவர். தாம் புகுந்து - நாடு காத்தற்குத் தாமே சென்று. இயங்கும் - சஞ்சரிக்கும். தேயந்தன்னில் - நாட்டினிடத்தே. இலை - இல்லைப் போலும். அன்று ஏ அசைகள். (௬௧)

கலி விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் முதற்சீரொன்றுமாத்திரம் தேமாஞ் சீராகவும் மற்றைய மூன்றும் கூவிளஞ்சீர்களாகவும் வந்தன காண்க.

(பா) அன்றளித்திடு——குன்றமே. (௬௨)

குணக்குன்றமேநீ எண்ணேனையும் என்றளித்து இசையெய்து வையோ வெனமுடிக்க.

(இ-ள்.) அன்று - சிருட்டிகாலத்தில். அளித்திடும்-நிர்ஹேதுக பரமகிருபையாலே உய்யுமாறு வந்து தந்தருளிய. ஐவருக்கு-ஐம்புலன் களாகிய பெரியவர்களுக்கு. (குறிப்புமொழி) ஆட்பட்டா - அடிமைப் பட்டு. நின்-உனது. தளிர்க்கழல்-மாந்தளிர்போன்ற மெல்லிய (சிவந்த) திருவடிகளை. நெஞ்சில்-மனதில். எண்ணேனையும் - நினையாத என்னை யும். என்று - எப்பொழுது. அளித்து - இரட்சித்து. இசை எய்து வையோ - கீர்த்தியை யடைவாயோ. நபக்குன்று - வானமாமலையை. அளிக்கும்-பரிபாலித்தருளும். குணக்குன்றமே - உத்தமகுணத்திலே உயர்ந்த மலைபோன்றவனே எ-று. (௬௨)

ஆசிரியத்தாழிசை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

ஆனுலிது ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தது. இதில் ஒவ்வோரடுக்கிலும் முதலடி மூன்றிலும், முதலிரண்டு சீர்கள் ஆசிரிய வுரிச்சீராகவும், மூன்ருஞ் சீர்கள் கருவிளங்காய்களாகவும், நாலாவது சீர்கள் தேமாங்காயாகவும், இரண்டாவது அடிகளில் மூன்ருவது சீர்கள் கூவிளங்காய்களாகவும், நாலாவது சீர்கள் புளிமாவாகவும், மூன்ருவது அடிகளில் மூன்ருவது சீர்கள் தேமாங்காயாகவும், நாலாவது சீர்கள் தேமாச்சீர்களாகவும் வந்தன காண்க.

(தலைவியிரங்கல்).

அதாவது துணைவயிற் பிரிந்த தலைவன் வினைமுற்றி மீண்டமை யுணர்த்திய தோழிக்குத் தலைவியாற்ருதிரங்கிக் கூறுதல்.

(பா) குன்றுகுடையா——தோழீஇ. (கூ௩)

ஆற்ரெழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) குன்றுகுடையாக்கொடு — கோவர்த்தன பர்வதத்தைக் குடையாகக்கொண்டு. புரந்த - கோக்களையும் கோபாலர்களையுங் காப்பாற்றிய. கோபாலர்-தெய்வநாயகர். இன்று - இப்பொழுது. நம்மூரினில் - நம் நகரத்திற்கு. எய்தில் - வினைமுற்றி மீண்டுவந்தால். அவர் முழக்கும் - அவர் தொனிக்கின்ற. வென்றியஞ்சங்கொலி- விசயசங்கத்தொனி. மேவாதோ - நம் காதுகளிற் புகாதோ. கருவரை - பெரிய மநதரமலையை மத்தா-மத்தாகக்கொண்டு. கடல் கடைந்த - சமுத்திர மதனஞ் செய்தருளிய. கார்வண்ணர் - நீருண்ட கரியமேகத்தின் றன்மைவாய்ந்த தெய்வநாயகர். திரும்-வினைமுற்றிமீண்டு. நம்மூரினில் சேரில்-நம் நகரத்துக்குவந்தால். அவர்முழக்கும், வெருவுஒழி - அன்பர்கள் அச்சத்தைப் போக்குகின்ற, சங்கொலிமேவாதோ தோழீஇ. கல்வினை-கருங்கல்லை. பெண்ணு-அகலிகையென்னு மணங்காக. கடிது அருளும்-விரைவிற் செய்தருளிய. காகுத்தர் - ககுத்த வம்சோத்பவரான தெய்வநாயகர், செல்வம் நம்மூரினில் - செல்வம் பொருந்திய நகரத்திற்கு. சேரில் - வினைமுற்றி மீண்டுவந்தால். அவர் முழக்கும், வில்விடு-ஒளிவீசுகின்ற, சங்கொலிமேவாதோ தோழீஇ எ-று. (கூ௩)

நேரிசை வெண்பா.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

தலைவி தலைவனிகந்தமை சாற்றல்.

அதாவது இறைவியிருளையைக்குறித்து இறைவன் தெய்வங் காட்டித் தெளித்தமையைக் கடந்துவிட்டனரென்று மனம் வருந்திக் கூறுதல்.

(பா) தோழி——களிறட்டகோ. (கூச)

என்றனக்காக்கோணைக்களிறட்டகோ தோதகிரிவாழ் இமையவர் கோனை வாழ்த்தி யன்று பாழியிற்செய் ஆணைக்கு அஞ்சாரென்பதா ரறிவார்? தோழி நினக்கு என்னை சொல்லுகேனென முடித்துக் கொள்க.

(இ-ள்.) என்றனக்கா - (மதயானையைக்கண்டு வெருண்டு ஓடிய) என்னிமித்தம். கோணைக்களிறு - அந்தத் தீங்கிழைக்கும் ஆண் யானையை. (வலிய யானையை யென்றுமாம்) அட்ட-சங்கரித்த. கோ-தலைவர். தோதகிரி-வானமாமலை. இமையவர்கோன்-தெய்வநாயகனது. பாழியினில் - கோயிலுக்கு முன்னே. அன்று - அக்காலத்து. செய்-செய்த. ஆணைக்கு-உறுதிமொழிக்கு. அஞ்சாரென்பது-பயப்படாமற் சொன்னசொல் தவறிவிடுவாரென்பதை. யாரறிவார்-எவர் தாம் அறிய வல்லவர். (ஒருவருமிலர்) தோழி - பாங்கியே. நினக்கு - உனக்கு. என்னை சொல்லுகேன் - யாது சொல்வேன். (ஒன்றுந்தோன்றவில்லை) எ-று. (கூச)

கட்டளைக்கலித்துறை.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

பாணனை வெகுளல்.

இதனிலக்கணமும் முன்னே சொல்லப்பட்டது.

(பா) கோணைக்களிறு——நரப்பிசையே. (கூரு)

ஆற்றொழுக்காகவே பொருள்கொள்க.

(இ-ள்.) கோணைக்களிறு - கொடிய குவலயாபீடமென்னும் மத யானையை. அட்டகோ - சங்கரித்த இறையவனாகிய. தேவநாதன் - தெய்வநாயகனது. குலகிரியில் - சிறந்த தோதாத்திரியிலே. பாணைப் பகர்ந்து-வீணையிசைத்து. பலிக்கு-பிச்சைக்கு. உழல் - ஊர்தோறுஞ் சென்று திரிந்துகொண்டிருக்கிற, பாணனே. நின்இசை-உனதுவீணா கானம். இசையா - (நான்மறை யந்தணர்நவிலும் வேதகானத்தைக் கேட்ட எங்கள் செவிகளுக்கு) தகாததாம். (ஏனெனில்) பகல் நடுவே - நடுப்பகலிலே. இருள் - அந்தகாரம். ஏணைப் பொருந்தி-வலிமையை யடைந்து. நிற்குமோ-தங்குமோ. (ஒருகாலும் தங்காது) (இது வேற்றுப்பொருள்வைப்பணி - அர்த்தாந்தர நியாசாலங்காரம்) பின்னை யாருக்கிசையுமெனில், நாணைத்தவிர்ந்த - (பெண்களுக்குரிய நால்வகைக் குணங்களுட் சிறந்ததாகிய) நாணத்தை விட்ட. தனுவினர்க்கு - சரீரத்தையுடைய பொதுமகளிர்க்கு. இந்நரப்பிசை - இவ்வீணாகானம். ஆம் - தகுதியாம். (இதில் இந்நரப்பு - இந்த நாணி. நாணைத்தவிர்ந்த - நாணில்லாத. தனுவினர்க்கு - வில்லையுடையவருக்கு. ஆம் - சேரும். இசை அதிற்பூட்டென்றும் தொனிபாற் பொருள் படுதல் காண்க) (கூரு)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இடைச்சியார்.

அதாவது தெருவிலே தயிர்விற்றுக்கொண்டு திரிகிற இடைச்சியை நோக்கிக் காதல் கொண்ட காமுகனொருவன் தனது விருப்பத்தை வெளிப்படுத்தி யவளை முன்னிலையாக்கி மொழிந்ததாகச் செய்யுள் செய்வது. இதில் சிலேடையணிசிறந்து விளங்குதல் காண்க.

(பா) இசையுறுவேயிசையின்—மேவுவீரே. (கூகூ)

(இ-ள்) இசையுறு-பொருத்தமான. வேயிசையின்-வேணுகானத்தினாலே, நிரைபுரந்தருள்-பசுக்கூட்டங்களைப் பரிபாலித்தருளும், எம்பெருமானுக்கு தெய்வநாயனுடைய திருவுள்ளத்துக்கு. இனிய தாய - பாங்காயிருக்கிற, எழில்-அழகிய, விண்மலை வீதியினில்-ஸ்ரீவரமங்கலநகர்த் திருவீதியிலே. தயிரோஓ தயிரோஓ வென்றென்று-தயி

ரோதயிரென்று பலதடவைசொல்லி. எவர்க்குப்நெஞ்சில்நசைபெருக-யாவருக்கு மனதிளாவல் மிகும்படி. பகர்ந்திடு-விற்றிடுகின்ற. சிற்றிடைச்சியாரே-சிறிய விடையையுடைய பெண்ணே. நும்மை நாடினோர்கள்-நும்மைப் பார்த்தறிந்தவர்கள், (உம்மை விருப்பின வர்கள்) (உமக்கு) பேர் இடைச்சியாரென்பர்- (உமது இயற் பேர் தெரியாததினாலே) ஜாதியைப்பற்றி இடைச்சியாரென்று சொல்லுகின்றனர். என்னே-யாதுமது பெயர். என்பால் ஆ நண்பால்வாரும், எனக்கு (வேற்றுமை மயக்கம்) பசுவினின்று கறந்த பாலை ஊற்றும். ஆ நண்பால் - நீக்கப் பொருளதாகிய ஐந்தாம் வேற்றுமைத் தொகை. நண்பால்-வினைத்தொகை. வசை சிறிதும் இல்லாமல் தோய் ததியீதென்று அருளும் - குற்றமில்லாம லுறைந்துள்ள தயிரிதுவென்று சொல்லிக்கொடும். வந்து மேவி-விருப்பமொடுவந்து. மதிதரும் ஆன்நெய் நாழிகையிதனிலுதவும்-புத்தியை விருத்திசெய்கின்ற பசுவினெய் ஒருபடி கையிலே கொடும். மனமகிழ்-மனமுவக்கும்படி, மிசையும்-உண்ணத்தக்க. நவநீதம்—வெண்ணெயை. பெறுவதற்கு-வாங்குகிறதற்கு. மிக விருப்பம்—நிரம்ப ஆசை. விலை வழங்கும்—அதன் கிரையத்தைச் சொல்லும் (சொன்னால்-சொன்னபடி.) வெண் பொன்னும் செம்பொன்னும்-வெள்ளி நாணயங்களையும், தங்க நாணயங்களையும், மிகத் தருவேன்-நீர் கேட்பதற்கதிகமாகவே கொடுக்கின்றேன். மேன்மையினை மேவுவீரே-கௌரவத்தைப் பெற்று காலானடந்து திரிந்து வருந்தாமல் வாழ்வுற்றிருப்பீரென்றவாறு.

(உட்பொருள்)

என்பால் நண்பால்வாருங்-என்னிடத்து உள்ளன்போடு வந்து சேரும். வசைசிறுதுமில்லாமல் தோய்ததியீதென்றருளும்-பிறர் சிறிதுங்குற்றங்கூறுதபடி உன்னையணையுங்காலமின்னதென்று வெளிப் படையாகச் சொல்லவேணும். வந்துமேவி - தென்றற்றேரிலேறிக் கொண்டு. மதிதருமான்-மனோபுவாகியமகான். எய்நாழிகையிதனில் புஷ்பபாணங்களைப் பிரயோகிக்குமிச்சமயத்தில். உதவும்-தயைசெய்ய வேணும். மனமகிழ்ச்சிகூர - உள்ளக்களிப்புறும்படி. மிசையும்-அநுபவிக்கும்-ஓர் நவநீதம். ஒப்பற்ற புதிய பாக்கியத்தை. பெறுவதற்கு மிக

விருப்பம்-அடைவதற்கு அதிக ஆசை. விலைவழங்கும் வெண்பொன்னும் செம்பென்னும்-ஒளியை வீசுகின்ற வெள்ளிக் குவியல்களையும் பொற்குவியல்களையும். மிகத்தருவேம்-வெறுக்கும்படி கொடுப்பேன். மேன்மையினை மேவுவீர்-தயிர்க்காரியென்னு மிழிவொழிந்து இல்லக் கிழத்தியெனும்படி பெருமையைப் பெறுவீர். எ-று வ. அசை (௬௬)

பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இதன் இலக்கணம் முன்னே சொல்லப்பட்டது. இதில் 1–3–5–8–10–12-வது சீர்கள் தேமாவாகவும் 2–4–6–7–9–11–13 14-வது சீர்கள் கூவிளமாகவு மடிகடோறும் வந்தன காண்க.

வலைச்சியார்.

அதாவது மீன்விற்கும் வலையர் மகளாரைக் கண்டு காமுற்ற ஒருவன் அவளை முன்னிலைப் படுத்தித் தன்னுட் குறிப்புணர்த்தியதாகச் செய்யுள் செய்வது.

(பா) மேன்மையார் —— நலமாகவே. (௬௭)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்) மேன்மையார் - பெருமை பொருந்திய. ஒரு மீனமாய்-ஒப்பற்ற மச்சரூபியாய். முனம்-முற்காலத்து. வெய்யவன்றனை-கொடியவனாகிய சோமுகாசுரனை. வீட்டியே-சங்கரித்து. வேதம் நான்கையும் மீட்டு - அவனபகரித்துக்கொண்டுபோன இருக்கு, யஜுசு, சாமம், அதர்வணமென்று பெயர் கொண்ட நான்கு வேதங்களையு மவனிடமிருந்து கிரகித்து. நல்குபு-கொடுத்து. வேதன்-பிரமனது. வேதனை மாற்றிய - துன்பத்தை யொழித்த. கோன்மையார் - சர்வேச்சுரனாயிருத்தலைப் பொருந்தியவராகிய. வரமங்கை மேவிய கொண்கனார்-ஸ்ரீவரமங்கை நாய்ச்சியாரிடத்தில் வியாமோகத்தைக்கொண்ட (அல்லது ஸ்ரீவரமங்கை நாயகியாராலே விரும்பப்பட்ட) தெய்வநாயகரது. திருநாட்டினில் - திவ்யதேசத்திலே. கொள் - பெருமை பொருந்திய. முலைச்சியர் ஆம் - தனதடங்களை யுடையவராகிய. வலைச்சியர் கோல

மேவிய - மீன் விற்கும் வலேயர் மகளிரது வேடத்தைப் பூண்ட. கோதை - பூமாலேபோல்பவளே. நும் - உமது. மான்மை ஆர் - பெருமையையும் கருமையையும் பொருந்திய. கண்கள் ஆம் வலே - கண்களோடு கூடிய வலேயை. (கண்களாகிய வலேயை) வாயவிசி - அகப்படும்படி யெறிந்து. என் ஆவி ஆம் - எனது வாவியிலுண்டாகிய (எனதுயிராகிய, மச்சம்—மீன்களே—(மீனே) நும்வயமாக்கொளற்கு— உம்மிடஞ் சேரும்படி பிடித்துக்கொள்வதற்கு (உமக்குச் சுவாதீனமாகச் செய்துகொள்வதற்கு) இவண்வந்திரேல்—இங்கே வந்தீரேயானுல். கருப்பஞ்சிலே—சினேயுற்ற பஞ்சிலே யென்னும் மீன்களும். நோன்மையார்—வலிமை தங்கிய அவரால்—அந்தவரான் மீன்களும், மலங்கு—மலங்கு என்னும் மீன்களும். உறல்—பொருந்தியிருத்தலே. நோக்கிலிர்—பார்க்கின்றீரில்லே. கலே—சுறுமீன்களேயும். கொள்கிலீர்— பிடிக்கின்றீரில்லே. நுங்கும்—புசிக்கத்தக்க. மெல்—மெதுவான. கவலேக்கு—கவலேயென்னும் மீன்களுக்கும். இரங்கலீர்—நாம் கவனிக்காமையாலே தப்பியோடிக்கொண்டிருக்கின்றனவே யென்று மனம் வருந்துகின்றீரில்லே. (ஆதலாலே) நலமாக நோற்றிலீர் போலும்— காரிய சித்தியாகும்படியான நல்ல தவத்தைச் செய்திலீர்போலும். (எ-று) கருப் பஞ்சிலே நோன்மையாரவரால் மலங்குறல் நோக்கிலீர்— கரும்புவில்லே யேந்திய பராக்கிரமசாலியாரான அந்த மன்மதனுராலே யான் கலங்குதலேக் கடாட்சிக்கின்றீரில்லே. கலே கொள்கிலீர் — (நீர் என் மீது கருணே வைத்திருக்கிறீ ரென்பதற் கடையாளமாக) யானன்புடன் கொடுக்கும் மேகலேயை (சிறந்த ஆடையை) பெற்றுக்கொள்கின்றீரில்லே. நுங்கும் என் கவலேக்கு—என்னே யுயிரோடு விழுங்கும் சிந்தாகுலத்தைப்பார்த்து. இரங்கிலிர்—உள்ள முருகுகின்றீரில்லே. (ஆதலாலே) நலம் ஆக நொற்றிலீர்போலும்- (இம்மையி லின்பமெய்துதற்கு முன் பிறப்பிற்றவமுஞற்றிலீர் போலும்.) (கூஎ)

(வஞ்சித்துறை)

அதாவது இருசீரடி நான்கு தனித்துவருவது. இதில் முதற்சீர்கூவிளங்காயாகவும் இரண்டாவதுசீர் தேமாவாகவுமடிகடோறும் வந்தன காண்க.

(பா) மாகவரை——யார்மின். (கூ௭)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்) மாகவரையார் - தோதாத்திரிநாதராகிய - பொன்நாகம் அரையார் முன்-சுவர்ண பீதாம்பரத்தையணிந்த திருவரையையுடையாரது சந்நிதியிலே. ஏக-எய்தின்.(பரவசராக எய்தினும் என்றபடி) "சொற்றிரியினும் பொருடிரியா வினைக்குறை" என்ற விதியால் செயின் என்னும்வாய்ப்பாட்டுவினையெச்சம் செயவெனத் திரிந்திருக்கிறது. ஆதலில், ஏக-என்பதற்கு ஏகின் எனப் பொருள்கொள்ளப்பட்டது. வரையார் - தள்ளாதாட்கொண்டருளுவர். (ஆதலின்) அன்பு ஆகு அவரை - அடைந்தாரை ஆட்கொள்வதி லவாவுடைய அந்தத் தெய்வநாயகரை. ஆர்மின் - அடைமின் எ-று. அன்பாகவவரை யென்பது அன்பாகவரையென ஈறுதொக்கதாகக்கொண்டு பத்தியோடு பணிமினென்றும் பொருள் கூறலாம். இது அத்துணை சிறப்புறுமை அறிக. (கூ௮)

நிலைமண்டில ஆசிரியப்பா.

அதாவது எல்லாவடிகளும் அளவொத்த நாற்சீரடிகளாகவே வருவது.

வாடை: இது ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய கூதிர்காலத்து (சரத்திருது) வடதிசையிலிருந்து தென்றிசைநோக்கிச் சீறியடிக்குங் காற்று. தலைமகன் நாடுகாவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூதிர்ப்பருவங்கண்டு வருந்துதல். (பாங்கிவிடுதூது) வருந்திய தலைவிக்காறுதல் கூறிய பாங்கியை நோக்கி இவ்வாடை ஆற்றற்தக்கதன்று. அன்பரை அழைத்து வருகவென்த் தூதுவிடுத்தது.

(பா) ஆர்வம்——நின்கடமையன்றே. (கூ௯)

ஆலிநாடனும், பெரும்பூதூரனும் உலகோருணர்ந் துய்வதற்கா அருளின்படி ஆகி உவந்து எழுந்தருளி வென்று பிடித்து கலியன் இராமாநுஜன் என்னும் பெயர்கொள் குணக்குன்றம் கல்விக்கடல், கவிஞர்கள் கற்பகம், காமதேனு, தெய்வம் சீரடிபணிந்து சிவிறிவீச, இசைக்க, நடிக்க, கோயிலுள் தாலும்—கவிகளும் பொருவும் பங்காம்

புயமெனு மணித்தடம், குழல்பொலிய, முகமலர்ந்து, நோக்கி ஓர்ந்து, புரிந்து, இசைந்து, தாங்கி, படைத்து, வாய்ந்து, நுடங்க, வரமங்கை யாரின் ஓர் மருங்கினில் இலங்க, (இதனை நடிக்க வென்பதனோ டொட்டுக.) வீற்றிருந்தருளி, புரக்கும் தெய்வநாயகனை, திருவடி தொழாரென ஆர் அனுர் எய்தியென முடிக்க. வல்விலங்குகளும், மருவ, வதிய, ஒடுங்க, நீட்ட, ஒழிய, தூற்ற, கவல, நிகர, அதிர்ந்து, சீறி, அடிக்கும் வாடைக்கலமந்தன்றோ செந்தழலுருவன், நுதற் கண்ணன் உடுத்து, போர்த்து ஏந்தியும், ஆட்டம் இன்னுந் தவிர்ந்தி லன்றே. அன்னதாம் வாடை அண்ணலாரகலமணைந்தாலன்றி இவ் வாடையிலடங்குமோ, தோழீஇ, நின்னைக்காணில் நினைவுற்றுப சரித்து, விசாரித்து, உருகி, மேவி, அணைந்து, போக்கி, வாழ்விக்கும், இன்னே ஏகுதி.

(இ-ள்.) ஆர்வம் - சார்புபற்றாத பேரன்பு. மாறன் - குருகைப் பிரான். மாமறை-பெருமைபெற்ற வேதங்கள். (அவை திருவிருத்தம், திருஆசிரியம், திருவாய்மொழி, திருவந்தாதி யாம்). இசை - பொருந் திய. ஆறங்கம்-சடங்கம். (அவை சிறியதிருமடல், பெரியதிருமடல், திருவெழுகூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்ட கம், பெரியதிருமொழி யாம்). ஆலிநாடன் - கலியனும், அகலிடம். பூமி. தெருள்உற - உணர்வடைய. சூத்திரம் - பிரம்ம சூத்திரம். உட் பொருள் - உண்மைப்பொருள். தோன்ற - விசதமாக விளங்கும்படி. விரித்தருள் - ஸ்ரீபாஷ்யத்தைச் செய்தருளிய. பெரும்பூதூரனும் - இராமாநுஜனும். பின்னும் - மறுபடியும். உலகோர் - சேதநர்கள். உபயவேதாந்தமும் ஸம்ஸ்கிருதம், திராவிட மென்னும் இரண்டு வகைப்பட்ட உபநிடதப்பொருள்களையும். உணர்ந்து-உபதேச பூர்வக மாகத் தெளிந்து. உய்வதற்கா - உஜ்ஜீவிப்பதற்காக. ஐங்கோல்-பஞ்ச பாணம். முக்கோல்-திரிதண்டம். முக்காலம்-திரிகாலம். பட்டர்பிரான் ஸ்வாமி - கலியன் இராமாநுஜஸ்வாமிக்கு ஆசாரியன். கருதியளித்த- ஆலோசித்துச் சாத்திய. பெயர்கொள் - கலியன் ராமாநுஜனென்னுந் திருநாமத்தை வகித்த. குணக்குன்றம், கல்விக்கருங்கடல், கவிஞர்கள் கற்பகம், இரவலர் காமதேனு, புரவலர் தெய்வம். (இவை உருவகம்) சீரடி-சிறந்த திருவடிகளை. பணிந்து-சேவித்தெழுந்து நின்று. சிவிறி

வீச-திருவாலவட்டஞ் சமர்ப்பிக்கவும். வீணை - யாழ். வேணு-புல்லாங் குழல். மிருதங்கம் - மத்தளம். பல்இயம் - பலவகை வாத்தியங்கள். பொன்மலை-மகாமேரு. மணிக்கோயில் - இரத்தின கசிதமான நியமம். சங்கு சக்கரம் - பாஞ்சசன்யம், சுதர்சநம். சங்கங்களும் சக்கரவாக பட்சிகளுமாம். தானும் - அவ்வெம்பெருமானும் என்றபடி. புவனம்-உலகம்; ஜலமுமாம். பூமிசையோன் - பிரம்மா. செங்கிடை - சிவந்த நெட்டிக்கொடி, சிவந்த ஜடையுமாம். வரநதி-சிறந்தநதி, கங்கையுமாம். எழுமலை-உயரப்பறந்து செல்லும்வரை, உயர்ந்து வீசும் அலைகளுமாம். எறிதல் - வீசுதல்; வெட்டுதலுமாம். இமையவர் தலைவன் - இந்திரன். நாகம் எய்ந்து ஆர்தலில் - பாம்புகள் பொருந்தியிருத்தலாலே. சுவர்க்க லோகத்துப் பொருந்தி வாழ்தலாலென்றுமாம். இமையோர் - தேவர் கள். வரம்பெற்றிடலால்-வரம்பு எற்றிடலால். மாண்பமை-மாட்சிமை தங்கிய. செந்தண்மை-செந்நிறமுங் குளிர்ச்சியும். ஜீவகாருண்யமுமாம். அசங்கு அளைதலில், அச்சங்களைதலில். புரவலர் - அரசர். மச்சம்-மீன்கள். பொன்மச்சமுமாம். பொன்வணிகரும்—பொன்விலைஞரும். சொல்—நெல்—கீர்த்தியுமாம். மருபங்கயம்—வாசனையுடைய தாமரை. மருப்பு அம்கயம் — கோடுகளையுடைய அழகிய யானைகளுமாம். மா தேரை—கரிய தவளைகளை — குதிரைகளையும் தேர்களையு மென்றுமாம். செருப்புரிதற்கு—போர் செய்வதற்கு. போதம்—தோணி; ஞானமுமாம். குணம் மணி—நற்குணங்களையுடைய இரத்தினங்கள், செறிவு முதலிய குணங்களும் உவமை முதலிய அலங்காரங்களுமாம். பங்காம்புயம்—சேற்றுத்தாமரைக்குளம். (மணி—அழகு. தடம்—குளம்.) சைவலம்—பாசிக்கொத்து. ஆம்—ஆகிய. குழல்—கூந்தல். (உருவகம்) பின்வரு வனவுமிது. செவ்விய—அழகிய. குமுதம்—செவ்வாம்பல். புனிதமுத் தம்—வெண்மையாகிய முத்துக்கள். புன்னகை—மந்தகாசம். சுந்தரம்—அழகு. நந்தம்—சங்கம். கந்தரம்—கழுத்து. சிறலை—சிறிய அலைகள். திரிவலி—வயிற்று மடிப்பு. நண்ணிய—பொருந்திய. சுழி—ஆவர்த்தம். நாபி—கொப்பூழ். வஞ்சி—வஞ்சிக்கொடி. நுடங்க—ஒல்க. வரமங்கை யாரின் — ஸ்ரீவரமங்கைத்தாயாரைப்போல. ஓர் மருங்கில்—ஒரு பார் சுவத்தில். ஆர்அஞர்—மிக்க துன்பம். ஆளரி—சிங்கம். மதமலை—யானை. வயப்புலி—வெற்றியையுடைய வேங்கை. வல்விலங்கு—வலிய மிருகங்கள்.

குருளை—குட்டி. கலாபம்—தோகை. கடம்—வழி. தண்டலையில்—சோலைகளில். கனற்றினன்—சுட்டனன். கதிர்க்கடவுள்—சூரியன். மொய்ம்பு—தோள். அலமந்தன்றே — கலங்கியல்லவா. சிவை — உமாதேவியார். சிற்றம்பலவனுஞ் செந்தழலுருவன்—நடேசன். புலிஅதள்-புலித்தோல். புகர்முகம்—புள்ளியையு முகத்தையும். மருப்பு—கொம்புகளையுமுடைய. பொருப்பு—மலையை யொத்த யானையினது. மழுவை—மழுப்படையை. ஆட்டம்—உடனடுக்கம் (நடனம்). அன்னதாம்—அப்படிப்பட்டதாகிய. வாடை—வாடைக்காற்றினுலாகிய துன்பம். எம் அண்ணலார்—எமது தலைவரது. அகலம்—மார்பை. அணைந்தாலன்றி—சேர்ந்தாலல்லாமல். இ ஆடையில்—இந்தப் போர்வையினுலே. அடங்குமோ—மடங்குமோ. (மடங்காது) ஆர் உயிரனைய—அருமையான உயிரை யொத்த. ஆய் வளை—ஆராய்ந்தணிந்த வளையல்களையுடைய. மாட்சிசால் — பெருமை மிகுந்த. நினைவுற்று — பூர்வ ஞாபகமெய்தி. உபசரித்து — உபசாரஞ் சொல்லி. என்னை விசாரித்து — என்னுடைய க்ஷேமத்தையும் வினவி. இதயம் உருகி—உள்ள நெகிழ்ந்து. விரைவொடு—வேகமாக. நின்னொடு மேவி — உன்னோடு வந்து. என் உயிர் — என் பிராணநாதர். என்னை யணைந்து—என்னை மருவி. இ இன்னலைப்போக்கி — இத்துன்பத்தை யொழித்து, இனிது வாழ்விக்கும். இன்னே—இப்பொழுதே. ஏகுதி—அவரிடஞ் செல்லாய் எ-று. (௬௬)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இதில் அடிகடோறும் முதலைந்து சீர்கள் வெண்பா வுரிச்சீராகிய காய்ச்சீர்களாகவும், ஆறு ஏழாவது சீர்களாய மற்றைய இரண்டும் புளிமாஞ்சீர்களாகவும் வந்தன காண்க.

(சந்தக்குழிப்பு).

தந்ததன தனனதன தந்ததன தனனதன தந்ததன தனனதனனா.

(பா) அன்றினரின்——திருமருவுமே. (௬௭)

ஆற்றொழுக்காகவே பொருள் கொள்க.

(இ-ள்.) அன்றினரின் – பகைவரைப்போல. அடர் – வருத்து கின்ற. பொறிகள் வென்று–பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து. தவம் அயர்வது – தவம் புரிவது. எணிய அடைய – எண்ணிய எண்ணியாங் கெய்த. உயர்வு அன்று–சிறந்ததல்ல. நமர்காள் நம்மவர்களே. பொன் திகிரி–அழகிய சக்கிரம். தவளவளை - வெண்மையான சங்கம். நின் றிலகு–தங்கிவிளங்குகின்ற. கரகமலர்–திருக்கைகளாகிய செந்தாமரை மலர்களையுடையவராகிய தெய்வநாயகரது. பொன்ககனகிரியணுகவே–அழகிய வானமாமலையை யடைந்தவுடனே. மன்றுமதி–சபையிலுள் ளோர்கள் மெச்சும்படியான. கலைமருவும் – கலைஞ்ஞான மனைத்துஞ் சித்திக்கும். நன்றிவிளை – நன்மையை விளைக்கின்ற. மதிமருவும்–நற்புத்தியும் வரும். வண்டு உறல்இல்–குற்றமணுகாத. சரிதைமருவும்-ஒழுக்கமுமுண்டாகும். வென்றியுயர் புகழ் மருவும்–விஜயமும் சிறந்த கீர்த்தியும் உண்டாகும். மென்கமலை யருண்மருவும் – மிருதுவான செந்தாமரைமலரில் வீற்றிருந்தருளும் பெரியபிராட்டியாரது கிருபா கடாக்ஷமும் கிடைக்கும். விஞ்சும் – எவற்றினும் மேலாகிய. ஒரு–ஒப்பற்ற. திரு–மோட்ச சாம்பிராஜ்யமும் – உம்மை விகாரத்தால் தொக்கது. மருவும்–கைகூடும் எ-று. (ரு)

ஸ்ரீவரமங்கைத்தாயார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீவரமங்கைக் கலம்பகம் முற்றிற்று.

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI.

## ஆக்கியோன் பெயர்.

ஆக்கியோன் பெயரென்பது நூலாசிரியர் பெயர்.

மின்னார் தடமதில்——புனைந்தனனே.

நரசிம்மன்—தேவநாயகன் சேவடிமேல் கலம்பகமாலை வனைந்து புனைந்தனன் என முடித்துப் பொருள் கொள்க.

மின்னார் தடமதில்—ஒளி பொருந்திய விசாலமான திருமதில். மின் என்பது சினையாகுபெயராய் மேகத்தை யுணர்த்துகின்ற தென்றுகொண்டு மேகங்கள் படிந்துள்ள விசாலமான திருமதில்க ளென்றுமாம்.

வில்லிபுத்தூர் வல்லி—ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்தருளிய பூங்கொடி போன்ற கோதை சூடிக்கொடுத்தருள் நாய்ச்சியாரது. வல்லி—உவமையாகு பெயர். மலர்த்தாள்—உவமைத் தொகை. தாள்—திருவடி; வணங்கு மென்பதற்குச் செயப்படுபொருள். வணங்கு நரசிம்மன்-எழுவாய். மாலை செயப்படுபொருள். புனைந்தனன் பயனிலை.

மன்-மிகுதி. ஆர்வம்—பத்தி. தென்-அழகு. பொன்கலம்பகமாலை-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அணிநூலார் இதனை உருவக மென்பர். வனைந்து—அலங்காரமாகத் தொடுத்து; இது தன் வினை; முதல் வினையே கொண்டு முடிந்தது. புனைந்தனன்—சூட்டினனென்ற வாறு.

ஸ்ரீ:

# பிழை திருத்தம்.

| | | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| (ஸ்ரீமுகம்) | | வேஷா_ந | வெஷா_ந்த |
| (பாயிரம்) | | ஸய_ூாஷிஹி: | ஸய்யாஷிஹி: |
| பக்கம். | வரி. | | |
| 3 | 10 | கிளர | கிளரப் |
| ஷை | 18 | மென்று | மென்னு |
| 4 | 11 | சதபதி | சசிபதி |
| | 22 | பலொராடுங்கூண் டிண்டு | பலரோடுங்கூட் டுண்டு |
| 5 | 15 | தகுவரிறுறவி | தகுவரினுறவி |
| 7 | 24 | வேணியவளிடத் | வெணியவனிடத் |
| 9 | 24 | நோசெய்யொழி | நோயொழிசெய் |
| 10 | 8 | மன்றவார் | மன்றலார் |
| 11 | 8 | நாயனே | நாயகனே |
| | 24 | தேகவம | தேதவம |
| 13 | 25 | கரம | வரம |
| 14 | 319 | இருளை | இகுளை |
| 15 | 6 | லரைவதற்கா | வரைவதற்கா |
| 16 | 27 | . . . . | (நீக்கிவிடுக) |
| 17 | 11 | வயங்கு | மயங்கு |
| 18 | 7 | கினருவார் | கிளருவார் |
| | 9 | பாவமும் | பாலமும் |
| | 11 | னேகிலென் | னேசிலென் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 18 | 22 | நீடுறுலன் | நீடுறுவன் |
| 19 | 6 | யாய்ந்துக்கி | யாய்நறுக்கி |
| | 20 | யணிரதபாதம் | பணிரதவாதம் |
| | 22 | திற்சிறை | திற்கிறை |
| 20 | 6 | ருடையார் | ளுடையார் |
| 22 | 15 | பொன்றும் | பொன்னும் |
| 23 | 13 | தேவராஜரே | தேவநாயகரே |
| | 22 | தோளிவர் | தோளினர் |
| 24 | 8 | கஞ்சிறும் | கஞ்சினும் |
| 25 | 10 | வீண | வீணர் |
| 27 | 10 | கடலுழாய் | கடறுழாய் |
| | 11 | மணிபழயன் | மணிப்புயன் |
| 30 | 14 | லொளிப்பூ | லொளிர்பூ |
| 31 | 12 | வாயல் | வீயல் |
| 34 | 21 | முகுந்தனன் | முகுந்தன் |
| 36 | 9 | விரை | வீரை |
| 37 | 21 | வாம்புவி | வாம்புலி |
| 38 | 28 | தயிரோஇ தயிரோஒ | தயிரோஒ தயிரோஒ |
| 39 | 15 | கொண்களூர் | கொண்கனூர் |
| 41 | 25 | விலங்களும் | விலங்குகளும் |
| | 27 | திரண்டு | திருண்டு |
| 42 | 15 | நிசர | நிகர் |
| | 23 | பழுவை | மழுவை |
| 43 | 7 | தவமெயர்வது | தவமயர்வது |
| | 9 | தவளவனை | தவளவளை |

(குறிப்புரை)

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 14 | தணவாக | தணவாத |
| 12 | 4 | படுத்ததி | படுத்தி |
| 14 | 8 | சந்தரிகை | சந்திரிகை |
| 15 | 17 | முனிபுல் | முளிபுல் |
| | 26 | கடுகு | கடுகி |
| 16 | 22 | வியவாகார | வியவகார |
| 17 | 6 | காலத்தலே | காலத்தாலே |
| 38 | 14 | காரென்று | ஈரென்று |
| 39 | 21 | மினிக்கி | மினுக்கி |
| | 23 | குற்றமதாமுள்ள | குற்றமுள்ள |
| 44 | 10 | நிலேயும் | நினேயும் |
| 46 | 6 | பிருங்காவனம் | பிருந்தாவனம் |
| 55 | 25 | நிரிம்மயராம் | (நிர்ப்பயராய்) |
| 76 | 7 | மருங்குல் | மங்குல் |

32278

MADURAI UNIVERSITY LIBRARY
9 OCT 1967
MADURAI.